உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௩௫.] வெகுதானியஹூ ஐப்பசிமீ [பகுதி-௧௨.

Vol. 35. October—November 1938. No. 12.

ஸ்ரீ பாஸ மகாகவி இயற்றிய

## அபிஷேக நாடகம்.

௩௯௯-ஆம் பக்கத் தொடர்ச்சி.

### ஐந்தாவது அங்கம்.

இராக்கதக்கஞ்சுகி:—(அரங்கிற்புகுந்து) ஓ! இங்கே பவளங்களாலான தோரணவாயிலில் இருப்பவன் யார்?

வேறோரிராக்கதன்:—(அரங்கிற்புகுந்து) ஐய! நான் இருக்கிறேன். என்ன செய்யவேண்டும்?

கஞ்சுகி:—சென்று மகாராஜரின் உத்திரவுப்படி வித்யுஜ்ஜிஹ்வனை அழைத்துவா.

இராக்கதன்:—அப்படியே. (வெளிச்செலல்.)

கஞ்சுகி:—அரக்கர்குலத்தின் பாதுகாப்பும் உதவியும் எல்லாமிழந்து வீரபுருஷர்களையும் சாகக்கொடுத்துத் தன்னுடைய உயிருக்கும் ஐயப்படத்தக்கநிலை வந்திருக்கும் இப்போதும் மகாராஜருடைய புத்திக்குத் தெளிவுபிறக்கவில்லையே!

அவரோவென்றால்,

வஹ்னிம் ப்ராப்ய தஹ்யேஷ

ஸ்ரீணம் நக்ராகரம் ந ஸம்மதி।

ஸம்பூர்ணாம் த்ருஷ்யேத ச மூர்ச்சா

ஜாத்யா நாஸ்தி ஸாந்தி:॥

*

அசைகிற அலைகளால் மோதப்பட்ட கரையுடன்கூடினதாயும், வெளிக்கிளம்பும் முதலைகளால் கொந்தளிக்கச் செய்யப்பட்ட நீலநிறமுள்ள தண்ணீருடன்கூடினதாயும் இருக்கிற கடல் கடக்கப்பட்டதைக் கண்டிருந்தும் அவரிடம் (இராமனிடம்) தாரத்தை ஒப்புவித்துச் சமாதானம் செய்துகொள்ளுகிறாரில்லையே!

கும்பகர்ணப்ரஹஸ்தாத்யா வீரா: ஸங்க்யே நிபாதிதா:।
நிஹதா ராகவேணாத்ய ஶக்ரஜிச்சாபி நிர்கத:॥

கும்பகர்ணன் பிரஹஸ்தன் முதலான வீரர்கள் இராகவனால் இன்று கொல்லப்பட்டார்கள்; இந்திரஜித்தும் வெளியேறினான்; இப்படி இருக்கும்போதும்,

மதநவஶகதோ மஹாநயஜ்ஞம்
ஸசிவவசோऽப்யநவேக்ஷ்ய வீரமாநீ।
ரகுகுலவ்ருஷபஸ்ய தஸ்ய தேவீம்
ஜநகஸுதாம் ந ததாதி யோத்துகாம:॥

காமத்தின் வசப்பட்டுத் தானே வீரனெனச் செருக்குற்று அமைச்சர்களுடைய நல்லுரைகளையும் ஆராயாமல் போர்புரியும் விருப்பத்தினால் இரகுகுலதிலகருடைய தேவியான ஜநகநந்தினியைக் கொடுக்க மஹாராஜர் மறுக்கிறாரே!

வித்யுஜ்ஜிஹ்வன்:—(அரங்கிற் புகுந்து) ஆர்ய சௌக்கியமா?

கஞ்சுகி:—நீ சென்று மகாராஜரின் சொற்படி, இராமலக்குமணர்களுடைய தலைகள்போன்ற உருவங்களைக் கொணர்வாயாக.

வித்யுஜ்:—மகாராஜருடைய ஆணைப்படி. (வெளியே செல்லல்)

கஞ்சுகி:—நானும் மகாராஜரருகே செல்கிறேன். (வெளியேறுதல்)

விஷ்கம்பம் முடிந்தது.

சீதை:—(அரக்கிகள் சூழ அரங்கிற் புகுந்து) ஆரியபுத்திரர்வரவால் களிப்படைந்த என்மனம் இன்று கவல்கின்றது. தீயநிமித்தங்களும் காணப்படுகின்றனவே! அவ்வாறிருந்தும் இப்போது பெரியதோர் மங்களம் நிகழுமென்றும் தோன்றுகிறதே! எல்லாப்படியாலும் தேவர்கள் சாந்தியை அளிக்கவேண்டும்.

இராவணன்:—(அரங்கிற் புகுந்து)

ஏஷா விஹாய பவநம் மம ஸம்ப்ரயாதா
நாரீ நவாம்புஜரோருஹபத்மஹஸ்தா।
லங்கா யதா ஹி ஸமரே வசமாகதா மே
வைஶ்ரவணஸ்ய விஜித்ய ததா க்ருஹீதா॥

புதுத்தாமரைப்பூவைக் கையில் பிடித்தவளான இந்த மடந்தை என் இல்லத்தைவிட்டு வெளியேறிவிட்டாள். குபேரனைப் போரில்வென்று எப்பொழுது இலங்கையை அடைந்தேனோ அப்பொழுதன்றோ இவள் பிடிக்கப்பட்டாள்.

அம்ம! நில், நில், செல்லல் செல்லல். என்ன சொல்லுகிறாய்? "உன்னைவிட்டு இராமனை அடைகிறேன்" என்றா? ஆ! அழிவற்றவளே! வைசிரவணன் வீட்டில் வலிந்து பிடித்துவைக்கப்பட்டிருக்கிறாய். இராகவனைப் போரில் வதைத்து உன்னை வலிந்துகொண்டு போவேன். (தனக்குள்) இவளால் என்ன? நான் சீதையை ஏமாற்றுகிறேன். (காமவேட்கையை வெளிக்காட்டி) ஓ! மன்மதனுடைய வலிமை நிகரற்றதே! ஏனெனில்,

நித்ராம் மம நிஶி விஹந்தி நயநா
ந்யாலோக்ய ஸீதாநநம்
தத்ஸம்ஶ்லேஷஸுகாவாப்திநீ தநுஸ்தாநா
யாதா தநு: வாஞ்சிதா।
ஸஹாவம் ரமணீயவஸ்துவிஷயே
வ்யாப்நோதி பஞ்சேஷுணா
கஷ்டம் நிர்ஜிதவிஷ்டபத்ரயபுஜோ
நிர்ஜீயதே ராவண:॥

சீதையின் முகத்தைப்பார்த்து என்னுடைய கண்கள் தூக்கத்தை மறக்கின்றன; அவளைத் தழுவுதலால் அடையக்கூடிய இன்பத்தில் ஆசைகொண்டு இளைத்துப்போய் என்சரீரம் வெளுத்துவிட்டது; அழகிய பொருள்களின்விஷயத்தில் புஷ்பபாணன் (எனக்கு) வருத்தத்தைக் கொடுக்கிறான்; மூன்றுலகத்தையும்வென்ற கைகளையுடைய இராவணன் வெல்லப்படுகிறானே! கஷ்டம்!

(நெருங்கிவந்து)

வீதே! த்யஜ த்வோவிநவஸாஸநேத்ரு!
வித்தம் ஹி ோநுஷ ததம் ீீ வித்தநாயெ!।
ஸஷ்ரேண ஓீZதஸ்ய ஸீமே விநிவாதயோநம்
வெருக்ஷஸ்ய முக்ஷணயாதர தவ வித்தகாஹெழீ॥

தாமரைமிதழ்போன்ற கண்களையுடைய ஸீதே! என் மனத் துக்கரசியே! மனிதனிடம் வைத்த மனத்தை விட்டுவிடுவாயாக; இன்று போரில் என் ஆயுதத்தால் உன்னுடைய பிராணநாதன், இலக்குமணனுடன் வீழ்த்தப்படுவதைக் காண்பாயாக.

ஸீதை:-ஹாம்! இராவணன் மூடனே! மந்தரமலையைக் கைக ளால் அசைக்க நினைக்கிறுனே!

இராக்கதன்:—(அரங்கிற் புகுந்து) மகாராஜர் வென்றிபெறுக. தங்களுக்குப் பிரியஞ்செய்யவிரும்புகிறவரான குமாரரால் கொல் லப்பட்ட மனிதர்களான ராஜபுத்திரர்களின் தலைகள் இவை.

இராவணன்:—(ஸீதையை நோக்கி) அந்த மானிடர் இருவ ருடைய தலைகளையும் காண்பாயாக! காண்பாயாக!

ஸீதை:-ஹா! ஆரியபுத்திர! (என்று மூர்ச்சையடைந்து விழுதல்)

இராவணன்:—
வீதே! ஸாவம் வஸிதஜ்ய ோநுஷெZஷ்நு ததாயஷி।
அத்யைவ த்வம் விஸாலாக்ஷி! ீஹதீம் ஶ்ரியமோஷ்நுஹி॥

விசாலமான கண்களையுடைய சீதே! ஆயுள் குன்றியவனை இந்த மனிதனிடம் அன்பைத்துறந்து, இன்றே நீ மிகுந்த செல் வத்தை அடைவாயாக.

ஸீதை:—(அடையாளம் தெரிந்து) ஆ! ஆரியபுத்திர! வாசனை பொருந்திய புதுத்தாமரைகளைப்போன்றவையும் கண்கள் சுழன்ற வையுமான இரண்டு வதனங்களையும் கண்டு, பாக்கியமற்றவளான நான் மிகவும் தைர்யமுள்ளவளாயிருக்கிறேனே! ஏ! ஆரியபுத்திர ரே! துக்கசாகரத்தில் என்னைத் தள்ளிவிட்டுத் தாங்கள் எங்குச் சென்றீர்கள்? நான் சாகவில்லையே! ஒருகால் இது பொய்யாயிருக்கு மோ! நல்லோனே! எந்தக் கத்தியால் ஆரியபுத்திரருக்குத் தீங்கு விளைக்கப்பட்டதோ அதனல் என்னையும் கொன்றுவிடுவாயாக.

இராவணன்:—

𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑍀𑌭𑍂𑌤𑍇 𑌜𑌿𑌤𑌾 𑌯𑌸𑍍𑌯 𑌹𑌤𑍇 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌨𑌰𑌾𑌧𑌮𑍇 ।
𑌮𑍋𑌕𑍍𑌷𑌿𑌤𑍇𑌨 𑌸𑌹 𑌭𑍍𑌰𑌾𑌤𑍍𑌰𑌾 𑌕𑍇𑌨 𑌤𑍍𑌵𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌸𑍇 ॥

போரில் இந்திரசித்தினல் அந்த மானிடப்பயல், தம்பியான இலக்குமணனுடன் கொல்லப்பட்டது வெளிப்படையாயிருக்கும் போது, எவனுல் நீ விடுவிக்கப்படுவாய்?

(திரைக்குள்)

இராக்கதன்:—(பரபரப்புடன்) இராமனுல் இராமனுல்.

சீதை:—வெகுகாலம் வாழ்ந்திருப்பாய்.

இராக்கதன்:—மகாராஜா அருள்புரியவேண்டும், அருள்புரியவேண்டும்; நிகழ்ந்த செய்தியை உரைப்பதில் அவசரத்தால் வேறு நிலைமை கவனிக்கப்படவில்லை.

இராவணன்:—அந்த மனிதத்தவசியால் என்ன செய்யப்பட்டது? சொல், சொல்.

இராக்கதன்:—மகாராஜர் கேட்கவேண்டும்.

𑌉𑌦𑍀𑌰𑍍𑌣𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌨 𑌮𑌹𑌾𑌬𑌲𑍇𑌨
𑌸𑌂𑌕𑍍𑌰𑍋𑌶𑌂 𑌤𑌾𑌧𑌿𑌕𑌵𑍀𑌰𑍍𑌯𑌮𑌾𑌰𑍍𑌯𑌂 ।
𑌸𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍇𑌨𑌾𑌦𑍍𑌯 𑌹𑌿 𑌰𑌾𑌘𑌵𑍇𑌣
𑌵𑍍𑌯𑌸𑌸𑍍𑌯 𑌯𑌸𑍍𑌯𑍇𑌹 𑌨𑌿𑌹𑌤𑌃 𑌸𑍁𑌤𑌸𑍍𑌤𑍇 ॥

தைர்யமுள்ளவராயும், வலிமையுள்ளவராயுமிருக்கிற இராகவனுல், இலங்கேசுவரரான நீர் அவமதிக்கப்பட்டீர்; உம்முடைய குமாரன் வலிந்துகொல்லப்பட்டான்.

இராவணன்:—போரை அஞ்சின துராத்மாவே!

𑌦𑍇𑌵𑌾𑌃 𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾 𑌜𑌿𑌤𑌾 𑌯𑍇𑌨 𑌦𑍈𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌾𑌵𑌿𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌤𑌾𑌃 ।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌜𑌿𑌤𑍍 𑌸𑍋𑌽𑌪𑌿 𑌸𑌮𑌰𑍇 𑌮𑌾𑌨𑍁𑌷𑍇𑌣 𑌨𑌿𑌹𑌨𑍍𑌯𑌤𑍇 ॥

இந்திரனுடன்கூடிய தேவர்களும் எவனுல் வெல்லப்பட்டார்களோ, எவனுல் அசுரர்களும் புறமிட்டவராகச் செய்யப்பட்டார்களோ, அவ்விந்திரசித்தும் மனிதனுல் மாய்க்கப்படுவானு?

இராக்கதன்:—மகாராஜர் அருள்புரியவேண்டும். குமாரரைக் குறித்துப் பொய்கூறப்படவில்லை.

இராவணன்:—ஹா! குழந்தாய்! மேகநாத! (என்று மூர்ச்சை யடைந்து வீழ்தல்)

இராக்கதன்:—மகாராஜ! ஆறுதலை அடைவீர்களாக.

இராவணன்:—(மூர்ச்சை தெளிந்து) இப்பொழுது எல்லாக் கெடுதிகளுக்கும் காரணமாயிருக்கிற சீதையாலும், மூன்றுலகத்தையும் வென்றும் பயன்படாத செல்வத்தாலும் என்ன? ஓ! கொடியவிதியே! இன்றும், அச்சத்தால் துவண்டவனாகிறாயா?

ஜஃா நீலேவி நிஃஸ்நேஹா வத்ஸே நந்த்ரஜிதா விநா ।
கஷ்டம் கடோரஹ்ருதயோ ஜீவத்யேஷ தஶாநநஃ ॥

சிறுவனான இந்திரஜித்து இல்லாமல் இப்போது நட்பற்றவனாக ஆனேன்; கஷ்டம்! கடினமனமுடைய இந்தத் தசானனன் இன்னும் உயிருடனிருக்கிறானே! (என்று துக்கத்தால் வீழ்தல்)

இராக்கதன்:—ஆ! ஓ! அரக்கவீரர்காள்! அரசர் இந்த நிலைமையை அடைந்தபோது, உள்கட்டில் வைக்கப்பட்ட காப்பாளர்களான நீங்கள் எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

(திரைக்குள்)

ஓ! ஓ! அரக்கவீரர்களே! போர்முனையில் வெருட்டப்பட்டவர்களான பிரஹஸ்தன், நிகும்பன், கும்பகர்ணன், இவர்கள் கொல்லப்பட்டதால் கலங்கியதான போர்ச்சமுத்திரத்தைக் கண்டு புறங்காட்டிச்செல்பவர்களே! எல்லா உலகத்தையும்வென்று புகழ்பெற்றவரான இருபதுகைகளையுடைய இலங்கேசர் இங்கே இருக்கும்போது, இடைவிடாமல் இமையவர்களுடன் போர்செய்து வெற்றியடைந்தவர்களான நீங்கள் ஓடுவது உசிதமன்று.

இராவணன்:—(கேட்டுக் கோபத்துடன்) போய் மறுபடியும் செய்தி அறிந்துவா.

இராக்கதன்:—மகாராஜருடைய ஆணைப்படி. (வெளியேறி மறுபடியும்புகுந்து) மகாராஜர் வென்றிபெறுக. இந்த இராமனோவெனில்,

யந்த்ருஷ்டி நிஹிதபாணத்வாத்திக்ஷ்ரேஷ்ட்ய ஶவக்ர
ஸ்பிரணவரிவாரோ ஹாஸஸம்ஹோத்ஸ்நேத்ரஃ ।

ரணஶிரஸி ஸூதம் தேவ தயித்வா தூராஜ
ஶிவதி ஹி லங்காம் ஸநியகூலபட்டமெவ ॥

உங்களை மதியாமல் செருக்குக்கொண்டு வில்லில் அம்பைத் தொடுத்தவனைக் குரங்குக்கூட்டங்களாகிற பரிவாரங்களுடன் சிரிப்போடு மலர்ந்த கண்களுள்ளவனைப் போர்முனையில் உங்களுடைய புதல்வனை வீழ்த்தி இலங்கையை எரித்துவிடுபவன்போல் எதிர்நோக்கிவருகிறானே!

இராவணன்:—(விரைவில் கோபத்துடன் எழுந்து) அவன் எங்கே? அவன் எங்கே? (கத்தியை ஓங்கி)

வஜ்ரஹகூடஹ தட ஹெஷகரொஹயாஸ:
க்ரோயொவஹாரஸிரெஷ வியாஸ்லி த்வாஜ்।
ஸம்வ்ருத்தவஷநிதிஷா ஊஹ ஶேஷகூரஷு:
கூஷாஹ் க்வ யாஸ்யஸி கூதாவஸ! திஷ்ட திஷ்ட ॥

அயிராவதத்தைத் தலையைப்பிளந்த கடினமான நுனியுடைய தும், என் கையில் இருப்பதுமான இந்தக் கத்தி உன்னைக் கோபத்துக்குப் பலிகொடுக்கும்; இப்பொழுது உன்னைத் தேவர்கள் காக்கட்டும்; அல்பனே! தவசிப்பயலே! நிற்பாயாக நிற்பாயாக.

இராக்கதன்.—அதிக சாகஸம் செய்யவேண்டா.

சீதை:—காரணமில்லாமல் தகாததாயும் கொடியதாயும் உள்ள காரியத்தைச் செய்கிற இராவணனுக்கு விரைவில் சாவு கிட்டும்.

இராவணன்:—இவள்பொருட்டு என்னுடைய உடன்பிறந்தார்களும், புதல்வர்களும், நண்பர்களும் நாசஞ்செய்யப்பட்டார்கள்; பகைமையுடைய இவளுடைய நெஞ்சைப் பிளந்து குடர்களை வெளியில் இழுத்து, மாலையாக அணிந்து, கத்தியாகிய இடியை வீழ்த்தலால், இருமனிதர்களுடன் கூடியதான வானரக்குலங்களையெல்லாம் வதைத்துவிடுகிறேன்.

இராக்கதன்:—மகாராஜர் அருள்புரியவேண்டும். இப்பொழுது பகைவரின் வலிமையால் உண்டான இறுமாப்பை அழிப்பதை

விட்டு வீண்முயற்சி வேண்டா. மேலும், பெண்கொலை அறவே கூடாது.

இராவணன்:—ஆதலால் தேரைக் கொணர்வாயாக.

இராக்கதன்:—மகாராஜருடைய ஆணைப்படி. (வெளியேறி மறுபடியும் அரங்கிற்புகுந்து) மகாராஜர் வெற்றிபெறுக. இதோ தேர்.

இராவணன்:—(தேர்மீதேறி) ஸீதே!

𑌸𑌂𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌂 𑌸𑍁𑌰𑍌𑌘𑍈𑌶𑍍𑌚 𑌸𑍀𑌤𑍇! 𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑌿 𑌰𑌾𑌘𑌵𑌂।
𑌮𑌚𑍍𑌚𑌾𑌪𑌚𑍍𑌯𑍁𑌤𑌤𑍀𑌕𑍍𑌷𑍍𑌣𑌬𑌾𑌣𑌨𑌿𑌰𑍍𑌭𑌿𑌨𑍍𑌨𑌵𑌕𑍍𑌷𑌸𑌮𑍍॥

என் வில்லிலிருந்து எய்யப்பட்டவையான கூர்மையான அம்புகளால் பிளக்கப்பட்ட மார்புள்ளவனாகவும், தேவர்களால் சூழப்பட்டவனாகவும் இராகவனை இன்று காண்பாய்.

(பரிவாரத்துடன் இராவணன் வெளியேறுதல்)

ஸீதை:—தெய்வங்காள்! என் குலத்துக்கு ஒத்ததான நடக்கையால் நான் ஆரியபுத்திரரை அநுசரிப்பது உண்மையானால் அவருக்கு வெற்றி கிடைக்கட்டும். (வெளியேறுதல்)

ஐந்தாவது அங்கம் முற்றிற்று.

[தொடரும்.]

V. S. ராமஸ்வாமி சாஸ்த்ரி, B.A., B.L.

மதுரை.

---

ஸ்ரீ:

# புறநானூற்றுச் செய்யுட்சிறப்பு.

சங்கமருவிய நூல்களுட் புறநானூறு என்பதொன்று. அது, நல்லிசைப்புலவர் பலரால் இயற்றப்பட்ட நானூறு பாடல்கள் கொண்டதொரு தொகைநூல். அதன் செய்யுட்கள் சொன்னலமும் பொருணலமும் துன்னிய நன்னலம் வாய்ந்தனவாகும். அதற்குக் காட்டாக ஈண்டொருசெய்யுளை யெடுத்துச் சிறிது ஆராய்வோம்.

> 'நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
> மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்
> அதனால், யானுயி ரென்ப தறிகை
> வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே.'

என்பது அந்நூலின்கண் உள்ளதொரு செய்யுளாகும். இது மோசிகீரனார் என்னும் புலவரால், 'பொருண்மொழிக்காஞ்சி' என்னும் துறைக் கிலக்கியமாகச் செய்யப்பட்டது. பொருண்மொழிக்காஞ்சி யாவது,—முனிவர்கள் தாம் ஆராய்ந்துகண்டபொருளை மொழிவதாகும். இச்செய்யுள் அரசனதியல்பையும் அவனது கடமையையும் எடுத்துக்கூறுகின்றது.

'பரந்த இடத்தையுடைய இவ்வுலகம் அரசனாகிய உயிரையுடையது. அதனால், இவ்வுலகத்தார்க்கு நெல்லும் உயிரன்று: நீரும் உயிரன்று. 'யான் உயிர்' என்பதனை அறிதல், வேலால் மிக்க படையினையுடைய வேந்தனுக்குக் கடமையாகும்' என்பது இதன் பொழிப்புரை.

இனி, இப்பொருள் இச்செய்யுளில் அழகுற அமைந்திருக்குமாற்றை ஆராய்வோம்.

நெல்லும் உயிரன்று, நீரும் உயிரன்று என அவை உயிராதலை விலக்குவதனால், அவை உயிரென்பது முன்னே முடிந்ததாதல் பெறப்படும். என்னை? அன்றெனத் துணியப்பட்டதொன்றனை அன்றென விலக்குதல் கூடாமையானும், ஓராற்றான் ஆம் எனத் துணியப்பட்டதொன்றனையே பிறிதோராற்றான் அன்றென

விலக்குதல் கூடுமாகலானும் என்க. அற்றேல், நெல்லும் நீரும் உயிரின் வேறாய், உயிர்வாழ்க்கைக்குக் காரணமாய்நிற்றல் யாவரானும் அறியப்பட்டதாகலின், அவற்றை உயிரெனக்கோடல் என்னையோவெனிற் கூறுதும். உணவும் நீரும் உயிர் உடம்போடு காணப்பட்டுவருதற்கு இன்றியமையாக் காரணங்களாகுமென்ப தொருதலை. அவையிலவேல், உயிர்வாழ்க்கையிலதாம். ஆகலான், அவைதாமே உயிரென ஔபசாரிகமாகக் கூறப்படுகின்றன. இவ்வுபசாரவழக்கு உயிர்வாழ்க்கைக்கு அவற்ற தின்றியமையாமையைப் புலப்படுக்கச் சிறந்தமுறையாய்நின்றது. புலவர்கள் இத்தகைய உபசாரவழக்கால் ஒன்றனது சிறப்பை உணர்த்திச்செல்லுமாற்றைப் பண்டைத் தமிழ்நூல்களிற் பரக்கக் காணலாம். அரசனை உயிரென்றதூஉம் இவ்வழக்குப்பற்றியதே. இவ்வாற்றானே, நெல்லும் நீரும் உயிரென்றே வழங்கப்பட்டுவருவனவாதல் துணிபு. தலைமைபற்றி நெல் ஈண்டு உணவின்மேல் நின்றது.

இனி, நெல்லும் நீரும் என்றதில் வைப்புமுறைநயம் உய்த்துணரற்பாற்று.

பசி தாகம் என வழங்கும் முறைக்கேற்ப, அவற்றுள் முன்னதாகிய பசியைப்போக்கும் நெல் முன்னும், பின்னதாகிய தாகத்தைத் தணிக்கும் நீர் பின்னும் வைக்கப்பட்டன. இம்முறையானே ஆழ்வாரும் 'உண்ணுஞ்சோறு பருகுநீர்' என்றார். பசிப்பிணிதவிர்த்தல் சிறப்புடைத்தென்பதனை, 'ஆற்றுவா ராற்றல் பசியாற்றல்' (குறள்), 'அற்றா ரழிபசி தீர்த்தல்' (குறள்): என்பவற்றான் அறியலாம். 'குடிப்பிறப்பழிக்கும் விழுப்பங்கொல்லும்-பிடித்தகல்விப் பெரும்புணை விடூஉம்-நாணனிகளையும் மாணெழில் சிதைக்கும்—பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்—பசிப்பிணியென்னும் பாவி' (மணிமேகலை 11. 76–80.) என அப்பசியின்கொடுமை எடுத்துக்கூறப்படுவதனானும் அறியலாம். பசிதீர்த்தல் எனவே தாகம் தவிர்த்தல் தானேயடங்குவதுமாகும். ஆதலால், சிறப்புடைப் பொருளை முற்படக் கிளத்தல் என்னும் முறைபற்றிப் பசியை முற்கூறல் மரபு.

மற்றும், நெல்லும் நீரும் என்றது, உயிர்வாழ்க்கைக்குக் காரணமாய உணவைக்கூறி, அவ்வாறுணவாதலோடு அவ்வுணவிற்கும் காரணமாய நீரை அதனையடுத்து இடத்தான் முற்படவைத்த

வாறுமாயிற்று. நீரின்றேல் நெல்லின்றாதல் பாரித்துரைக்க வேண்டுவதன்று. அஃது துணைவுப்பொருள்களை உளவாக்கித்தருவத னோடு, தானும் உணவாமென்பதனைத் 'துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்—துப்பாயதூஉ மழை' என்னும் குறளா னும் அறியலாம். இதனானன்றே, 'மழையின்றி மாநிலத்தார்க் கில்லை' (நான்மணிக்கடிகை—48.) என்றதூஉமென்க. கைம்மாறு கருதாது தம்மாலாம் பொருளெல்லாம் வழங்குவதனோடு, தம்மை யும் பிறர்பொருட்டாக்கித் தமக்கெனவாழாப் பிறர்க்குரியாளரென உலகம்போற்ற நிலவும் வள்ளல்களுக்கு மாரி உவமையாயதூஉம் இதுபற்றியேயாம். ஆகவே, இத்தன்மையானே நெல்லினும் நீருக் கேற்றம் பெற்றாம். ஆயின், இதனைப் பிற்கூறுவதென்னையோ வெனின், ஒன்றன் இருமருங்கும் முன்னெனப்படுதற்குரியவாக லான், இஃதும் ஓராற்றான் முற்படக்கிளத்தலேயாமென்க. இது பற்றியே, இடத்தான் முற்பட வைத்தவாறென முன்னர் எழுத லாயிற்று.

இவ்வாறு நெல்லும் நீரும் உயிர்வாழ்க்கைக்குச் சிறந்துநிற்பி னும், அவற்றினும் அரசன் சிறப்புடையனாகலின், 'மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்; அதனால், நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே' என்றது உயிர்வாழ்க்கைக்குச் சிறந்த காரணங் காட்டி, விலக்கணிமுகத்தான் நெல்லையும் நீரையும் விலக்கியவாறு. இதனுள் 'மன்னனுயிர்த்தே மலர்தலையுலகம்' என்றது உலகிற்கு உயிரை உணர்த்தியவாறு. நெல்லும் நீரும் ஓராற்றான் உயிராதல் உடம்பாடாகலின், அவற்றை விலக்கியது விலக்கணியின்பாற் பட்டது. உலகமென்றது ஈண்டு உலகின்கண் உள்ளார்மேல் நின் றது. ஆயின், மலர்தலையுலகம் மன்னனுயிர்த்தாமாறென்னை யெனிற் காட்டுதும்

முன்னர்க்கூறியாங்கு, நீர் தானுமுணவாதலேயன்றி, உணவுப் பொருள்களை உளவாக்கியும் கொடுத்தலான், உலகெல்லாம் அந் நீரைத்தரும் வானினைநோக்கி வாழுமாயினும், அந் நீரானுபயனைக் குடிமக்கள் நுகர்தற்கும், அந்நீர்தான் உளதாதற்கும் காவலன் காவல் இன்றியமையாததாகும். 'வான்நோக்கிவாழும் உலகெல் லாம் மன்னவன்—கோல்நோக்கி வாழும் குடி' என்றார் வள்ளுவரும். இனி, அவ்வாறாதலை ஒருவாறுரைக்கத்தொடங்குவாம்.

அக்காவலன் நியந்தா. பிறரெல்லாரும் நியமிக்கப்படுவோர். அவர், தம்மைத் தக்கநெறியிலுய்க்கும் நியாமகனொருவனைப் பெற்றிலராயின், தாந்தாம் வேண்டியவாறே பொழுகத் தலைப்படுவர்; எளியார் வலியாரான் நலியப்பெறுவர்; பகைவர் முதலியோராற் பலவாறு துன்புறுவர்; இத்தகைய இன்னல் பலவும் எய்துவர். இவ்வாறு குழப்பம் பெருக, உயிர்வாழ்க்கையின்றாய் ஒழியும். ஆகலின், உலகம் முறைசெய்துகாப்பாற்றும் நியாமகனை இன்றியமையாதது.

மற்றும், அவ்வானின்வரும் நீர்முழுதும் வாளாகழியாது, மதகுகள் முதலியவற்றாற் பயன்படுமாறு செய்வானும், நீரினைய நெல் உலகிற்பரவுமாறு வாணிபத்தைப் பேணுவானும், பெரும்பெயலானும் பிற ஈதிகளானும் வரும் கேட்டிற்குத் தக்காங்குச் செய்து காப்பானும் அக்காவலனேயாவான். அவ்வீதிகளும், அவற்றாற் கேடுவருதலும், அவற்றை அரசன் விலக்குமாறும் 'பெரும்பொருளாற் பெட்டக்க தாகி யருங்கேட்டா — லாற்ற விளைவது நாடு' என்னுங் குறளுரையிற் பரிமேலழகர் உரைத்தவாற்றானும் உணரலாம். 'கேடாவது: மிக்கபெயல், பெயலின்மை, எலி, விட்டில், கிளி, அரசண்மை என்றிவற்றான் வருவது. "மிக்க பெய லோடுபெய லின்மையெலி விட்டில்கிளி— அக்கணர சண்மை யோ டாறு." இவற்றை வடநூலார் ஈதிகளென்ப. இவற்றுண் முன்னையவற்றதின்மை அரசனறத்தானும், பின்னையதின்மை அவன் மறத்தானும் வரும்' என்பது அவ்வுரை. இவ்வாறு குடியோம்பல் முதலிய இறைமாட்சிபலவும் திருக்குறளிற் பரக்கக் காணலாம்.

மேலும், செங்கோன்முறைமை வழுவாத மன்னவனது நாட்டின்கண்ணேயே வானும் நிலனுஞ் சீரத்தொழிற்பட்டு வளஞ்சுரக்கும் என்பது ஆன்றோர் துணிபு. இதனை, 'இயல்புளிக் கோலோச்சு மன்னவன் நாட்ட—பெயலும் விளையுளுந் தொக்கு' என்னும் குறளா னறியலாம். மன்னவன்கோல் மழைதானுளதாதற்கும் காரணமாய்நின்று, மன்னுயிரைக் காக்குமா றென்னையெனின், அம்மழை, அறநெறியின்றேல் இன்றாமாகலானும், அவ்வறநெறி உலகின்கண் நிகழுமாறு காப்பான் அம்மன்னவனாகலானு மென்ப. அரசன் காவலின்றேல் அறநெறியின்றாதலை 'மாதவர் நோன்பும் மடவார் கற்பும்—காவலன் காவ லின்றெனி னின்றால்' (மணிமே.

20. 208-9.) எனவும், 'அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதி யாய்—நின்றது மன்னவன் கோல்' (குறள்) எனவும், 'ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்-காவலன் காவா னெனின்' (குறள்) எனவும், 'தவமும் அரசியல் இல்வழி யில்லை' (நான்மணிக் கடிகை-48) எனவும் வருவனவற்றானறியலாம். அதனால், கோள் நிலைதிரிய மாரியின்றாதலையும், மன்னுயிரின்றாதலையும், 'கோன்நிலை திரிந்திடிற் கோணிலை திரியும்—கோணிலை திரிந்திடின் மாரி வறங் கூரும்—மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை' (மணிமேகலை. 7. 8. 10.) எனவரும் ஆன்றோர் வாக்கானும் அறியலாம். 'மழையின்றி மா நிலத்தார்க் கில்லை மழையும்—தவமிலா ரில்வழி யில்லை' (நான் மணிக்கடிகை. 48.) என்பது மிது. பெயலின்மையாகிய ஈதியின தின்மை அரசனறத்தான் வருவதெனப் பரிமேலழகருரைத்த தூஉம் நினைக்கத்தக்கது. இப்பெற்றியே, புறநானூற்றுரையாசிரிய ரும், ஈண்டெடுத்துக்கொண்ட செய்யுளுரையில், 'மன்னனுயிர்த் தென்ற கருத்து, உயிரைக்காக்கும் நெல்லும் நீரும் உளவாவது மன்னன்முறைசெய்து காப்பினென்றதாம்' எனக்கூறியது நோக் கத்தகும்.

இவ்வாறாதலினன்றே, அக்காவலன் உறுப்பு முதலியவற் றொப்புமையான் மக்களுள் ஒருவனாகத் தோன்றினும், முறை செய்து காப்பாற்றலான் அம்மக்களுட் பிரித்து இறையென வேறு வைக்கப்படுவானாயினான். உலகிற் கிறையாகிய கடவுள் அவனுரு வாய்நின்று உலகங் காத்தலின், அவன் இறையென்ற பெயரும் எய்துவானாயினான். 'முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்— கிறையென்று வைக்கப் படும்' என்பது வள்ளுவர்வாக்கு. இவ்வாற் றானே, மலர்தலையுலகம் மன்னனுயிர்த்தாமாறு காணப்படும்.

இங்ஙனமாதல் கொண்டு, மேல், 'யானுயிரென்பதறிகை— வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே' என அரசனது கடமைகூறப் படுகின்றது. இப்பகுதியில், சொற்பயன் உற்றுணரற்பாற்று.

'யான்' என்றது, உலகத்தாரையெல்லாம் தான் நியமித்தலின், தன்னை நியமிப்பாரில்லை யென்று அரசன் தான் வேண்டியவாறே யொழுகின், பழியும் பாவமும் பலவாமாகலான், அவ்வாறொழுகத் தகாதவனும், 'மாநிலங்கா வலனென்பான் மன்னுயிர்காக்குங் காலைத்—தானதனுக் கிடையூறு தன்னால், தன்பரிசனத்தால்—

ஊனமிகு பகைத்திறத்தால், கள்வரால், உயிர்தம்மால்— ஆனபயம் ஐந்துந்தீர்த் தரசாள்வா னல்லனே' என்றாங்கு உலகுகாவற்குரியவனாய் அதற்கேயமைந்தவனும், மற்றுமன்ன சிறப்புநிலையுடையவனுமாகிய 'யான்' என்றவாறு. இங்ஙனே, 'எனக்குத் தகவன்றால் என்பதே நோக்கி' என்னும் பழமொழிநானூற்றுச் செய்யுட்பகுதியுரையின்கண், 'செந்தமிழ்'ப் பத்திராதிபர் ஸ்ரீமத். திரு. நாராயணையங்கார்ஸ்வாமிகள், 'பிறர்செய்த குற்றங்கண்டு அவரை யொறுக்குமியல்புடைய அரசனாகிய தான் தன்னையொறுப்பார் பிறரில்லையென்று குற்றஞ்செய்தல் தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காணக்கடவ தனக்குத் தகுதியன்றென்றுநோக்கி யென்றவாறு' எனக் கூறிய பதசாரம் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

'உயிர் என்பது' என்றது, உடலைப்பற்றிநின்று அவ்வுடலின் அழிவிற்கே காரணமாகும் பிணிபோலாது, உடல்நிற்றற்குத் துணையாகும் உயிர்போலுள்ளவன் என்பதனை என்றவாறு. உயிரும் உடலும் ஒன்றற்கொன்று பற்றுக்கோடாய், ஒற்றுமைநயத்தின் ஒன்றெனத்தோன்றிநிற்பதுபோலவே, முடிவேந்தனும் குடிமக்களும் ஒருவர்க்கொருவர் பற்றுக்கோடாய், ஒற்றுமைப்பட்டுநிற்க வேண்டியநிலை இதனாற் போதரும். உயிர் உடலினின்று பயன்நுகர்தற்குத் தன் பற்றுக்கோடாகிய அவ்வுடலோம்புதல் வேண்டப்படுமாறே, உலகிற்குயிராம் வேந்தனும் உலகில் நின்று பயன்நுகர்தற்குத் தன் பற்றுக்கோடாகிய அவ்வுலகோம்புதல் இன்றியமையாததென்பதூஉம் பெறப்படும். இதனால், வேந்தன்றான் நலம்பெறுதலும் உலகின் நலத்தைப் பொறுத்ததேயாமென்பதுணரப்படும். 'அரசனும் இல்வாழ்வா னில்வழியில்' (நான்மணிக்கடிகை 48) என்பது மிது. எனவே, உயிரென்பதனையறிதலாவது, முன்னர்க் கூறியாங்கு உலகம் தன்னை இன்றியமையாதுநிற்றலையறிதலோடு, அவ்வுலகு தனக்காதாரமாய்நிற்றலையும் அறிந்து அதற்குத்தகத் தன்கடனாற்றுதலாம். 'யான் உயிர்' என்றது வேந்தன் உட்கோளைக் கவிகொண்டு கூறியவாறு.

'அறிகை' என்றது அதனருமைதோன்றநின்றது. அவ்வறிவு அரிதாமாறென்னையெனிற் கூறுதும். பெருஞ்செல்வமுற்றார், 'யாம் முற்பிறப்பிற்செய்த நல்வினையான் இப்பேறெய்தியுள்ளோம்: ஆகலின், யாம் அநுபவிக்கத்தோன்றினம்: பிறரெல்லாம் அவ்வா

றாழிலராகலின், இந்நிலையெய்திலர்' என எண்ணித் தாமின்புறுவதி லேயே கருத்துடையராய்க் காலங்கழிப்பர். அன்றியும், அவர் அச் செல்வத்தாற் களிப்பெய்திச் செய்யத்தக்கனவல்லவற்றைச்செய் தும் செய்யத்தக்கவற்றைச் செய்யாதும் கழிவர். அச்செல்வக்களிப் பும், அதனுன் அவர் செய்யவேண்டிய காரியங்களிற் சோர்ந்திருத்த லாகிய பொச்சாப்புமாகிய இவற்றியல்பெல்லாம் திருக்குறள் முதலிய நூல்களிற் காணலாம். 'சிறியரே மதிக்கு மிந்தச் செல்வம் வந் துற்ற ஞான்றே-வறியபுன் செருக்கு மூடி வாயுளோர் மூகராவர்-பறியணி செவியு ளாரும் பயிறரு செவிட ராவர்-குறிபெறு கண்ணு ளாரும் குருடராய் முடிவ ரன்றே' என்ற செய்யுளும் ஈண்டுச் சிந்திக் கத்தகும். இந்நிலை அறிவுள்ளார்க்கே கடத்தலியலும். அறிகை செய்கையளவும் செல்வதாகும்.

வேந்தன் என வாளாகூறுது வேன்மிகுதானை வேந்தன் என ஆசிரியர் விசேடித்துள்ளார். அவ்விசேடணம், விசேடப்பொருளை உட்கொண்டதாகும். அதனைச் சற்றுராய்வோம். வேன்மிகுதானை, பகைவர்முதலியோராற் குடிமக்கட்கு நலிவுண்டாகாமற் காவற் றொழிலை மேற்கொண்ட வேந்தற்கு, அக்காவற்குத் துணையா யமைந்தது. ஆகவே, அத்தானை நலிவு செய்வார்பால் தொழிற் படுத்தற்குரித்தாகும். ஆயினும், தான் உலகிற்குயிரென்பதறியா வரசன், தன்னலங் கருதிப் பிறர்நாடு முதலிய உரிமைகளைத் தனக்குரித்தாக்கற்கும், குடிமக்கள் வெருவந்தசெய்து தனக்குப் பொருள்கோடல் முதலியவற்றிற்கும் அதனைப் பயன்படுத்தல் கூடும். அவ்வழி, அக்குடிகளது காவற்பொருட்டமைந்த தானை தானே, அதனை யொழித்து அவர் கேட்டிற்காகிவிடும். அன்றியும் அரசன் தன்படைகொண்டு வெருவந்தசெய்து குடிகள்பாற் பொருள்கொள்ளாது, வாளா பொருளிரந்தானுயினும், அவர் அவன் படைவலிகண்டு வெருவந்து பொருள்கொடுப்பராதலின், ஆண்டும் அப்படையே அவர்க்கு அச்சம் தருவதாகும். இக்கருத்துப் பற்றியே, அரசன் இரப்புரையானே பொருள்வேண்டல், ஆறலைப் பான் வேல்கைக்கொண்டு, தனிவழிநின்று, ஆறுசெல்வானை 'நின்

கைப்பொருள்கொடு' வென வேண்டலோடொக்கு மென்றார் தெய்வப்புலமைத் திருவள்ளுவரும். இது, 'வேலொடு நின்றா னிடுவென் றதுபோலும்—கோலொடு நின்றா னிரவு' என்னும் குறளா னறியப்படும். ஆகவே, உலகிற்குயிராகிய வேந்தன், தன்பா லமைந்த தானையின்பயனை உணரவேண்டுமென்பது குறிப்பு. நன்மைக்கும் தீமைக்கும் ஒன்றா துணையாவதாக, அதனை நன்மை தெரிந்து அதற்குத் துணையாக்கிக் கோடலன்றே அறிஞர்செயல்.

'கடனே' என்றது, இவ்வாறறிந்தொழுகல் இவனுக்குச் சொரூபதருமமானது—வேண்டுமாயின், தனது கருணையாற் கொள்வதன்று—இவ்வறிவின் அழிவு இவனழிவே என்பது காட் டிற்று.

மற்றும், நெல்லும் நீரும் கைம்மாறுகருதாது பிறர்பொருட் டே யாகலான், அவற்றினுஞ்சிறப்புடையனுகத் துணியப்பட்ட அரசன் அவ்வாறுகவேண்டுமென்பது கூறுமையேயமைந்தது.

மேற்கூறியவாற்றான், உணவும் நீரும் உயிரைக்காப்பனவாயி னும், காவலன் காவல் அவற்றினும் இன்றியமையாத தென்ப தூஉம், அக்காவலன் அதனை உணர்ந்தொழுகல்வேண்டுமென்ப தூஉம் சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் முறையானே இச்செய் யுட்கண் அழகுற அமைந்திருக்குமாறு ஒருவாறு விளக்கப்பட்டது.

இவ்வாறே, சில்வகையெழுத்திற் பல்வகைப்பொருள் செவ் விதிற்செறிந்து விளங்குதல், இந்நூற்செய்யுட்கள் பிறவற்றுள்ளும் காணலாம்.

இங்ஙனம்,

ஜெ. நாராயணசுந்தரமையங்கார்,

தமிழ்ப்பண்டிதர்,

இராஜாஸ் ஹைஸ்கூல்,

இராமநாதபுரம்.

# யவனர்வரலாறு.

[யாழ்ப்பாணம் ஸ்ரீமான். த. இராமநாதபிள்ளை B.A., (LOND.) அவர்கள்.]

(௬௫௨-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

## இரண்டாம் மூவர் கூட்டம்.

மார்க்கஸ் அந்தோனியா கிரேக்கநாடு எகிப்து சின்னாசியா முதலிய கீழ்த்திசை ஆட்சிநாடுகளை ஆளுதற்கும் இலைப்பிடஸ் ஆபிரிக்காவை ஆளுதற்கும் ஒக்ராவியஸ் இத்தாலியா ஐபீரியா கல்லியா முதலிய நாடுகளை ஆளுதற்கும் உடன்பட்டனர். ஒக்ராவியஸ் தன் வீரருக்குப் பலமுறை நிலமளித்ததால், அவனைச் சனங்கள் வெறுத்தனர். அந்தோனியோவின் தம்பி லூசியஸ் நகரத்தாரோடு சேர்ந்து இலைப்பிடஸைத் துரத்தினான். ஒக்ராவியஸ் அவனைப் பெருசியாவிற்குச் செல்லச்செய்தான். கி. மு. 40-ம் ஆண்டு செக்ரஸ் பம்பீ கப்பற்படையினுதவியால் துறைமுகங்களில் சூறைகொண்டான். பம்பீயின் நண்பன் டொமீசியஸ் எனொபோர்பஸ் என்பான் கிரேக்கநாட்டுக் கரைகளில் ஆறலைத்தான். கீழைத்தேசங்களுக்குத் தலைவனாகி எகிப்துதேசத்திலிருந்து கிளியோப்பத்திரையின் மையலில் மயங்கிக் களித்துக் காலம் கழித்த மார்க்கஸ் அந்தோனியோ, தன் சகோதரன் இறந்தமையாலும், தன் மனைவி புல்வியா அடிக்கடி திரும்பும்படி இரந்தமையாலும், தனது நிலையை உணர்ந்து, ஒக்ராவியஸ் தனிக்கோல் நடாத்த எண்ணுகிறானென அறிந்து, இத்தாலியாநாட்டிற்குத் திரும்பினான். அந்தோனியோ, செக்ரஸ் பம்பீயோடு சேர்ந்து பிரண்டுசியத்திலிறங்கினான். புல்வியா இறந்தாளாக, ஒக்ராவியஸ் அந்தோனியோவை அழைத்துக் கொண்டாடித் தனது தங்கை ஒக்ராவியாவை மணஞ்செய்துகொடுத்து மூவர்கூட்டத்தைப் புதிதாக நாட்டினான். ஒக்ராவியஸ் தானே தனித்துப் பம்பீயோடு பொருதற்கு உடன்பட்டான். அந்தோனியோ மறுபடியும் கிளியோப்பத்திரையொடு கூடிக் களித்தான். இங்ஙனம் அந்தோனியோ அன்னமென்னடையாளொடு ஊடியுங் கூடியும் ஐம்புலவின்பம் நுகர்ந்து காலங்கழித்தமையால் உரோமர் தம் கொற்றவீரன் அந்தோனியோவை வெறுக்கத் தொடங்கினர்.

பம்பீயை ஒக்ராவியஸ் அடக்கவியலாமல் அவனுக்குச் சிசிலி சாடினியா கோர்ச்சிக்கா என்னும் தீவுகளையும் கிரேக்கநாட்டில் ஆக்கியாவையும் அளித்தான். ஆக்கியநாடு அந்தோனியோவின் ஆட்சிநாடாகையால் அந்தோனியோ உடன்படாமல் அமர்செய்ய எழுந்தான். விப்சேனியஸ் அக்கிரிப்பா படைத்தலைவனாகிப் பம்பீயை வென்றான். இலேப்பிடஸ் என்பான் தான் கப்பற்படையில் அதிகாரம் செலுத்த எண்ணி, ஒக்ராவியஸ் என்னும் தலைவனோடு பகைத்தான். ஒக்ராவியஸ், இலேப்பிடஸ் என்னும் தலைவனையும் வென்றான். அந்தோனியோ ஆர்மீனியாநாட்டோரை வென்று, அலெச்சாந்திரா நகரில் ஒரு போலிவெற்றிவிழா நடத்தி, நகர்வலஞ் செய்தான்; தனது நாடுகள் கிளியோபத்திரைக்கு உரியவையெனக் கூறினன். கி. மு. 32-ஆம் ஆண்டு அந்தோனியோவும் ஒக்ராவியஸ் தலைவனும் போர்க்கெழுந்தனர். 500 கப்பற்படையோடும் 100,000 கீழ்நாட்டுப்படையோடும் அந்தோனியோ ஒக்ராவியஸ் என்னும் தலைவனை எதிர்த்தான். ஒக்ராவியஸ் கிரேக்கநாடு சென்று அக்ரியம் என்னும் களத்தில் அந்தோனியோவை வென்றான்.

கிளியோபத்திரை கைசரையும் அந்தோனியோவையும் மயக்கியவாறு ஒக்ராவியஸ் தலைவனையும் மயக்க எண்ணினாள். அவ்வெண்ணம் கைகூடாமையால் சிறையிருத்தலினும் சாதல் நன்றெனநினைத்துத் தற்கொலைபுரிந்துகொண்டாள். தலைவி இறத்தற்கு முன்னரே அந்தோனியோ, கிளியோபத்திரை இறந்தாளென ஓர் அரவங்கேட்டு வாளில்வீழ்ந்திறந்தான். எகிப்துநாடு உரோமருக்குத் தானியமளிக்கும் நாடாகையால் ஒக்ராவியஸ் எகிப்தை அரசாளும்படி நடுப்பிரிவினன் ஒருவனை நியமித்து மேன்மக்களொருவரும் அங்குச் செல்லப்படாதெனவிதித்தான். எகிப்திலிருந்து ஆசியாவுக்குச் சென்று பம்பீயின் ஒழுங்குகள் குழம்பாதிருத்தலைக் கண்டு மாற்றங்கள் செய்யாது உரோமாபுரத்தை நோக்கினான். மேன்மக்கட்சபையோர் ஒக்ராவியஸ் தலைவனைத் தனித்தலைவனாக வணங்கிக் கொலுவிருக்கும்போதெல்லாம் கண்ணிசூடுமாறும் சிவந்த ஒலியல் அணியுமாறும் வேண்டினர். ஒக்ராவியஸ்தலைவன் பிறந்தநாளை விழாவாகக் கொண்டாடுமாறும் விதித்தனர். ஒக்ராவியஸ் வெற்றிவிழாப்பெற்று ஊர்வலம்வந்தான். ஒக்ராவியஸ்

சமாதானம் நிலைத்ததென்று யானஸ்தேவன்கோட்டைவாயிலை அடைத்தான். இங்ஙனம் யானஸ்தெய்வத்தின் வாயில் உரோமர் வரலாற்றில் மூன்றும்முறை அடைக்கப்பட்டது என்ப. ஒக்ராவியஸ் படைவீரர் ஒவ்வொருவருக்கும் 1000 பொன்கொடுத்துத் தனிக்கோலை நாட்டினன்; கோயில்களும் நூதனசாலைகளும் அமைக்க எண்ணினன்; பிற நாடுகளை ஆளும்படி தேசாதிபதிகளை அனுப்பி, கி. மு. 27-ஆம் ஆண்டு தனித்தலைமை புரிந்தான்.

இவ்வளவிற் குடியரசுக்கால வரலாறு முற்றிற்று.

---

## தனிக்கோலரசுக்காலம்.

### தனித்தலைவன் கைசர் அகஸ்தஸ்.

தனித்தலைவன் அகஸ்தஸினுடைய இயற்பெயர் ஒக்ராவியஸ் கைசர் எனப்படும். ஒக்ராவியஸ், தனித்தலைவனாகச் செங்கோல் செலுத்திய காயஸ் யூலியஸ் கைசரின் மருகனாவன். ஒக்ராவியஸ் தனித்தலைமை எய்தியபின் தன்னை வளர்த்த குடும்பத்தின் பெயராகிய கைசர் என்னும் பெயரையும் புனைந்தான். அவனுடைய ஆட்சிக்காலத்திலேயே ஒக்ராவியஸ் என்னும் பெயர் வழக்கற்றுக் கைசர் என்னும் பெயர் பிரபலமாயிற்று. ஒக்ராவியஸ் கைசரை மரியாதைக் குரியோனெனப் பொருள்படும் அகஸ்தஸ் என்னும் பெயரால் ஆசிரியர்கள் வழங்கினராதலின் அவனுடைய முழுப் பெயர் ஒக்ராவியஸ் கைசர் அகஸ்தஸ் என்பதாகும். பிற்காலங்களில் கைசர் என்னும் பதம் தனிக்கோலனாதற்கு உரியோனைச் சுட்டிற்று. அக்ரியக்களத்தில் அந்தோனியோவை வென்று தன் படைமாட்சியால் தனிக்கோலரசு செய்தமையால் அகஸ்தஸைப் படைவீரர் தலைவன் எனத் தொழுதனர். தனித்தலைவன் என்னும் பெயர் தனிக்கோலோச்சிய ஆழிவேந்தரைக் குறிக்கும்.

அகஸ்தஸ் மதிநுட்பத்தாற் புகழ்பெற்றிலனாயினும் அடக்கமுடையவனாக விளங்கினன்; சிறந்த போர்வீரன் அல்லனாயினும், தன்பகைவரை அடக்கினன்; செங்கோல் செலுத்தலிற் பயிற்சியில்லாதவனாயினும் தனிக்கோலை நாட்டினன்; எங்ஙனமாயினும்,

யூலியஸ் கைசரைப் பின்பற்றி மனமொழிமெய்களில் நிறைதவறுது முறையுணர்ந்து நேமியுருட்டினன். அகஸ்தஸ் ஆழ்ந்த அறிவில்லோனுயினும் பலநூல்களை வாசித்துணர்ந்தவன். யவனமொழியில் நனிபயின்றேனல்லனுயினும், அகஸ்தஸினுடைய உரைநடை எளியதும் இலக்கணவழுவில்லாததுமாயிருந்ததெனக் கூறப்படுகிறது. கல்விகேள்வியுடைய நேமிவேந்தனுயினும் அக்காலத்து உரோமர் யாவரையும்போல் நிமித்தநூல்களை மிகவும் அவன் நம்பினன். அகஸ்தஸ் புலன்வழிச்சென்று ஊண் உடை முதலியவற்றில் இன்பம் விழையவில்லை. அகஸ்தஸைப் பிறர்க்குதவிசெய்யும் வள்ளல் எனவும் சிலர் கூறுப. அகஸ்தஸ் குறுகியதோற்றமும் அதற்கேற்ற அமைப்பும் அழகும் பொருந்தியோனென அறிகிறேம். தேகசுகமின்மையால் அவனுடைய முகம்வெளிறியதென்பர். அகஸ்தஸ் காட்சிக்கெளியன் கடுஞ்சொல்லனல்லன், எனவும் பாராட்டப்பட்டான். அகஸ்தஸினுடைய அமைச்சர் விப்சேனியஸ் அக்கிரிப்பா என்போனும் சின்னியஸ் மசினஸ் என்போனும் அரசியலை நடத்தினர்கள்.

விப்சேனியஸ் அக்கிரிப்பா அக்கிரியக்களத்துப்போரிலும் செக்ஸ்ரஸ் பம்பீயின் போரிலும் படைத்தலைமை வகித்து உதவி செய்தான். அக்கிரிப்பா மேன்மக்கட் குலத்துதித்தோனல்லனுயினும், கோயில்களையும் இல்லங்களையும் அழகியல் நூன்முறைப்படி அமைப்பித்துச் சிற்பிகளையும் ஓவியரையும் புரந்தான். அக்கிரிப்பா முதலமைச்சனுக அதிகாரஞ்செலுத்தவில் இன்பம் விழைந்தான். மசினஸ் அதிகாரஞ்செலுத்த விரும்பினேனல்லன். அவன் படைக்கலம் பயின்றேனுமல்லன்; எனினும், அரசியன் முறைகளை நன்கு உணர்ந்தோனுகையால் அகஸ்தஸ் அவனை அமைச்சனுக்கினன். மசினஸ் அகஸ்தஸினுடைய உயிர்த்துணைவனுக இருந்தான். மசினஸ் இடைப்பிரிவினனுகப் பிறந்தபோதிலும், அமைச்சனுயினன். அமைச்சனுகியபின்பும் அவன் மேன்மகனுக ஆசைப்படவில்லை; உண்டுடுத்துக் களிக்க விரும்பினனுயினும் காலமும் இடமும் அறிந்து ஒழுகினன்; கல்வியறிவுடையோனுகலின், புலவர்களை ஆதரித்தான். இத்தகைய அமைச்சருடைய வாயுறைமொழிகளைக்கேட்கும் வேந்தன் ஞாலங்கருதினும் கைகூடும்.

அகஸ்தஸ் அந்நியரோடு பொருது ஆட்சிநாடுகளைக் கூட்டுதலில் பயனில்லையென உணர்ந்து உள்ளநாடுகளைக் காத்துக் குடியோம்பிச் செங்கோல் செலுத்த முயன்றனன்.

அக்கிரிப்பா கி. மு. 28-ஆம் ஆண்டு கீழ்த்தலைவனாகி அகஸ்தஸினுடைய சகோதரியாகிய ஒக்ராவியாவின்மகள் மாசல்லாவை மணஞ்செய்துகொண்டான்; பின்பு கீழ்த்திசைநாடுகளைத் தலையெடுக்கவிடாது அடக்கி ஆண்டனன். எகிப்திய இராணி கிளியோப்பத்திரை இறந்தபின், இடைப்பிரிவினரையே தேசாதிபதிகளாக அகஸ்தஸ் அனுப்பினன். எகிப்து தானியநாடாகலின் மேன்மக்கள் எகிப்திற்குச் செல்லக்கூடாதென அறிக்கையிட்டான். மேன்மக்களை எகிப்துக்குத் தேசாதிபதிகளாக்கினல் அவர்கள் தன்னைப் பகைக்கக்கூடுமென அகஸ்தஸ் எண்ணினன்போலும். கோணிலியஸ் கல்லஸ் என்னும் ஒரு இடைப்பிரிவினனே தேசாதிபதியாக நியமிக்கப்பட்டான். கல்லஸ் இசைப்பாட்டுக்கள் இசைக்கும் வல்லோன் எனப் புகழ்பெற்றான். எகிப்திய நடுகற்கோட்டங்களில் தன்பெயரைக் கல்லஸ் பொறித்தானாக, அலெக்சாந்திரியா நகரில் கலகம் விளைந்தது. அகஸ்தஸ் கல்லஸை நீக்கிப் பெற்றோனியஸ் என்பானை நியமித்தான். அவன் அராபியவனாந்தரத்தில் திரவியம் உண்டெனக் கேள்விப்பட்டுத் தேடும்படி ஒருபடையை ஏவினன். அப்படை வனாந்தரத்தில் அழிவெய்திற்று. பின்பு பெற்றோனியஸ் எத்தியோப்பியநாட்டு அரசியோடு பொருதான். அரசி தோல்வியடைந்தபோதிலும் திறைகொடுக்க உடன்படவில்லை. தன்னுத்தரவின்றிப் போர்நடாத்தக்கூடாதென அகஸ்தஸ் தேசாதிபதிகளுக்கு அறிவித்தான்; எகிப்தியருக்கு உரோமர்குடியாகும் உரிமையை மறுத்தான்; எகிப்தியருடைய திரவியங்களை வௌவித் தன் படைவீரருக்குக் கூலிகொடுத்தான்.

கீழைத்தேயங்களை அடக்கியபின் அகஸ்தஸ் கி. மு. 29-ஆம் ஆண்டு உரோமாபுரிக்குத் திரும்பினன். அந்நாட்களில் இலெப்பிடஸ் என்பவனுடைய மகன் அகஸ்தஸ் கைசரைக் கொல்ல எண்ணினன்.

மசினஸ் அதை அறிந்து அவனைச் சிறையிட்டு அகஸ்தஸிடம் ஒப்புவித்தான். அகஸ்தஸ் அவனுக்குக் கொலைத்தண்டனை விதித்தான். அகஸ்தஸ் மேன்மக்கட்சபையை இணக்கிக்கொள்ளக்கருதி ஆட்சிநாடுகள் சிலவற்றை ஆளும்படி அவர்களை ஏவினன். மேன்மக்கள் அகஸ்தஸைத் தனிக்கோலனென வணங்கினர்கள். அகஸ்தஸ் கைசரின் வெற்றிவிழாவை மூன்றுநாள் கொண்டாடும்படி மேன்மக்கட்சபை தீர்மானித்தது. கி. மு. 27 ஆம் ஆண்டு அகஸ்தஸ் ஏழாம்முறை இணைத்தலைமையும் உரிமைக்கணக்குத்தலைமையும் பெற்றனன். கலகக்காலங்களில் படைநீதிசெலுத்துதல் வழக்கம். சாதாரண பிரமாணங்களால் கலகக்காலங்களில் தீவினையாளரை அடக்கமுடியாதாகலின் தலைவன் நினைந்தவாறு பகைவரை நீதி விசாரணையின்றித் தண்டித்தல் உண்டு. இங்ஙனம் தலைவன் சொல்லையே பிரமாணமாகக்கொள்ளாதோரைத் தலைவன் தான் நினைந்தவாறு தண்டித்தல் படைநீதியோடொக்கும். படைத்தலைவன் படைவீரனைத் தண்டிக்கும்வண்ணம் அரசாங்கத்தோர் தம் குடிகளைக் கலகமடக்குவதற்காகத் தண்டித்தல் படைநீதியாகும்.

## உண்ணாட்டரசியல்.

உரோமர் உரோமாபுரம் அமைக்கப்பட்ட ஆண்டை முதலாம் ஆண்டாக எண்ணிக் காலவரையறை செய்தனர். இலிவியஸ் அவ்வாறே தன் வரலாற்றில் ஆண்டுகளை இணைத்தலைவர்களின் பெயரால் வழங்கினர். பின்னர் மேனாட்டில் கிறீஸ்துமதம் பரவியபின் கிறீஸ்துபிறந்த ஆண்டே முதலாண்டாக எண்ணப்பட்டது. கி. மு. 27-ஆம் ஆண்டு ஒக்ராவியஸ் கைசர் தனித்தலைமைச் செங்கோலைச் செலுத்தத் தொடங்கினன். மினூசியஸ் பிளாங்கஸ் என்போன் கைசர் சமாதானத்தை நிலைநாட்டியதற்காக அகஸ்தஸ் என்னும் பட்டத்தைக் கைசர் ஒக்ராவியனுக்கு அளிக்கவேண்டுமென மேன்மக்கட்சபையில் பிரேரித்தான். இப்பெயர் கைசர் தெய்வமாகியதையும் தேசபக்தியுடையோ னென்பதையும் உணர்த்துகின்றது. தனித்தலைவனாகப் பத்தாண்டு அரசியலைநடாத்தும்படி மேன்மக்கள் கைசரை வேண்டினர். தனித்தலைவனுக்குப் படைத்தலைமை உரியதாகலின் எல்லைநாடுகள் யாவும் தனிக்கோலனுடைய

ஆட்சிநாடாயின. மேன்மக்கட்சபை இத்தாலியையும் வேறுசில நாடுகளையும் ஆளும் உரிமையைப்பெற்றது. எனினும் ஆட்சி நாட்டுத்தலைமையும் உண்ணாட்டுத்தலைமையும் தனிக்கோலனுக்கே உரியவையென வற்புறுத்தப்பட்டது. உண்ணாட்டுத்தலைமையைச் செலுத்துதற்குத் தனித்தலைமையில்லாமையால் வருந்திய அகஸ்தஸ் கீழ்மக்கட்காவலனுக்கும் உரிமை தனக்குண்டென நியம்பினன்; கி.மு. 23ல் மேன்மக்கட்சபையைக் கூட்டும் உரிமையைப் பெற்று அச் சபைக்குத் தலைமைவகித்துத் தன் பிரேரணைகளே ஏனையோரின் பிரோரணைகளுக்கு முன் பிரேரிக்கப்படுமெனச் செப்பினன். இணைத் தலைவருக்குப் பின்செல்லும் தண்டச்சேவகர் பன்னிருவர் கைசர் பின்னும் சென்றனர். தனிக்கோலனை முடிசூடா வேந்தனெனக் கூறலாம். தனிக்கோல் சிற்சில சமயங்களில் கொடுங்கோலாதல் இயல்பே. உரோமருடைய அரசியலில் வகுப்பினர்சபையும் மேன் மக்கட்சபையும் பிரமாணங்களை ஆக்கும் உரிமையுடையன. இணைத்தலைவர் (Consuls), கீழ்த்தலைவர் (Practors), கீழ்மக்கட் காவலர் (Tribunes), பொருட்கணக்கர் (Quaestors), தெருத் தலைவர் (Aediles) முதலியோர் பழைய முறைப்படியே தெரிந் தெடுக்கப்பட்டனர். தனிக்கோலர் இணைத் தலைமைப்பதவியும் உரிமைத்தலைமைப்பதவியும் (Censorship) பெற்று அரசியலை நடாத்தினார்கள். மேன்மக்கட்சபையின் உரிமைகள் குன்றத் தனிக் கோலரின் உரிமைகள் பெருகின. தனிக்கோலன் தவறிழைக்குந் தன்மையன் அல்லனாகலின் தனிக்கோலனைத் தண்டிக்கும் உரிமை ஒருவருக்கும் இல்லை. தனிக்கோலனை இறந்தபின்னரே தண்டிக்கலாம். எவ்வாறெனில் தனிக்கோலனுக்குக் கோட்டம் நிறுவாது தெய்வமாகும் உரிமையை மேன்மக்கட்சபை மறுக்க லாம். தனிக்கோலன் மரித்தபின் பிறிதோர் தனிக்கோலன் தெரிந் தெடுக்கப்படுந்துணையும் தலைவர் இல்லையெனவே கூறலாம். ஒருவன் தனிக்கோலனாதற்குப் படையின் உதவியும் மேன்மக்கட்சபையின் சம்மதமும் பெறவேண்டும். தனிக்கோலர் தம் குமாரரையேனும் சுற்றத்தாரையேனும் நண்பரையேனும் கைசராக்கி இளங்கோவுக்

குரிய உரிமைகளை அளித்துவந்தனர். தனிக்கோலர் செந்நிறப் போர்வை அணிதலும் கண்ணிசூடுதலும் வழக்கம்; ஊர்வலஞ் செய்து வெற்றிவிழாவை நடத்தும்போது செங்கோலை ஏந்திச் செல்வர். மெய்காப்பாளர் பலர் தனிக்கோலரைச் சூழ்ந்துநிற்பர். குடியரசுக்காலத்தில் யுப்பிற்றர் முதலிய தெய்வங்களின் பெயரால் நீதிமன்றத்தில் சத்தியம் செய்யப்பட்டது. தனிக்கோற்காலத்தில் கைசர் தெய்வமாகலின் தனித்தலைவன்பெயராலும் சத்தியம் செய்யப்பட்டது. தனித்தலைவன் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. மேன்மக்களைப்போல் தனிக்கோலர் குடிகளுக்கும் நண்பருக்கும் சுற்றத்தாருக்கும் காலைவரவேற்புச்செய்து கொடையளித்தனர். மேன்மக்கள் பலர் தனிக்கோலரின் நட்டாராதல் இயல்பே. அம்மேன்மக்களைத் தனிக்கோலன் முத்தமிட்டு இலச்சினை பதித்த மோதிரம் அளித்தல் உண்டு. தனிக்கோலன் தனது சிலையையும் தனது நாட்டாரின் சிலைகளையும் நாட்டுதல் வழக்கம். தனிக்கோலன் உரோமர்படைகள் யாவற்றுக்கும் தலைவன். கீழ்த்தலைவர்கள் தேசாதிபதிகள் முதலிய யாவரையும் ஏவி அரசியலை நடத்துவோன் தனித்தலைவனே. நாணயம் அச்சிடும் உரிமையும் தனிக்கோலனுக்கு உரியது. அகஸ்தஸ் தன் இலச்சினையைப் பதித்த பொன்னாணயமும் வெள்ளிநாணயமும் அச்சிட்டான்.

### மேன்மக்கட்சபை.

தனிக்கோலர் மேன்மக்களைத் தெரிந்தெடுத்து மேன்மக்கட் சபைக்கு உறுப்பினராக நியமித்தனர். அகஸ்தஸ் 400 உறுப்பினரையுடைய மேன்மக்கட்சபையைக் கூட்டினான். தனிக்கோலன் உரிமைக்கணக்கனாதலின் தான் விரும்பியோரையே அங்கத்தினராக்குவான். மேன்மக்கட்குலத்தில் பிறவாதோரையும் தனிக்கோலர் மேன்மக்கட்சபைக்கு அங்கத்தினராக்கினார்கள். படையில் சேவித்தோர் கிராமத்தலைவராகலாம்; பின்னர்ப்பொருட் கணக்கராகலாம்; பின்னர்க் கீழ்த்தலைவராகவும் தேசாதிபதிகளாகவும் தெரிந்தெடுக்கப்படலாம். அகஸ்தஸ் மேன்மக்கட்சபையைச்

சிறு கூட்டமாக வகுத்து அமைச்சர்கூட்டங்களை ஏற்படுத்தினன். மேன்மக்கட்சபை சமயப்பிரமாணங்களை ஆக்கும் உரிமையையும் ஆட்சிநாடுகள் சிலவற்றை ஆளும் உரிமையையும் உடையதாக இருந்தது. மேன்மக்கட்சபைக்கு நீதிவிசாரணைசெய்யும் உரிமை உரியதெனினும் தனிக்கோலர் தாம் நினைந்தவாறே நீதிசெலுத்தினர். தனிக்கோலர் மேன்மக்கட்சபைக்கு உரிமைகளை அளித்தும், சிலசமயங்களில் அளித்த உரிமைகளைக் கவர்ந்தும் அரசியலை நடாத்தினார்கள்.

## இடைப்பிரிவினர்.

இடைப்பிரிவினர் குடியரசுக்காலத்தில் குதிரைப்படையினராகச் சேவித்தனர். அவர்கள் மூன்றுவகுப்பினர். ஒரு வகுப்பார் இடைப்பிரிவினராதற்கு வேண்டிய பொருள் உடையராயிருந்து வாணிகஞ்செய்தனர். ஒரு வகுப்பார் குதிரைகளையுடையராய்ப் போர்ச்சேவைசெய்தனர். ஒரு வகுப்பார் அரசாங்கத்தினரிடம் குதிரைபெற்றுப் போர்ச்சேவைசெய்தனர். அகஸ்தஸ் இடைப் பிரிவிற் சேரவிரும்புவோர் குடிப்பிறந்தவராயும் பொருளுடையவராயும் இருத்தல்வேண்டுமென விதித்தனன். மேன்மக்கள் இடைப் பிரிவினராகலாம் எனவும் இடைப்பிரிவினர் மேன்மக்களாகலாம் எனவும் அகஸ்தஸ் கூறினன். குதிரைபெறும் இடைப்பிரிவினர் ஆடித்திங்கள் 15 ஆம் திகதி போர்க்கடவுளின் கோவிலிற்கூடி ஊர் வலஞ்செய்து போர்த்தேவனுக்குப் பலியிடுதல் வழக்கம். இடைப் பிரிவினருடைய இஷ்டதெய்வங்கள், கஸ்தோர் பொலக்ச் என்னும் இரட்டைத்தேவர்கள். அரசியலைச்செலுத்தும் உரிமை இடைப்பிரிவினருக்கு அளிக்கப்படவில்லை. சிவப்புக்கோடிட்ட உத்தரீயம் பொன்மோதிரம் முதலியவை இடைப்பிரிவினரின் சிறப்பணிகளாம். அகஸ்தஸ்கட்டிய கூத்துமண்டபத்தில் இடைப்பிரிவினர் 14 வரிசை பெற்றனர். அகஸ்தஸ் இடைப்பிரிவினரைச் சிறுபடைத் தலைவராகவும் நியமித்தனன். அகஸ்தஸ் நீதிவிசாரணைசெய்யும் சபைக்கு இடைப்பிரிவினரையும் அங்கத்தினராக்கினன். ஆட்சி

நாடுகளில் அரசிறைகளை இடைப்பிரிவினராகிய வணிகர், கலைவர்க ளிடம் விலைக்குவாங்கித் தாம் அரசிறைகளைக் குடிகளிடம் பெற் றனர். அகஸ்தஸ் அந்தோனியின் துணைவேண்டி அந்தோனியின் மனைவி புல்வியாவின் மகள் குளோடியாவை மணந்துகொண்டான்; மாமியுடன் கலகப்பட்டுத் தன்மனைவியைத் துறந்து ஸ்கிறிப்போனி யாவை விவாகஞ்செய்துகொண்டான். ஸ்கிறிப்போனியா இருமுறை விவாகஞ்செய்துகொண்டவளாயினும், அவளை மணந்தால் தன் பதவியை நிலைநாட்டலாமென அகஸ்தஸ் எண்ணினன். பின்பு இலிவியஸ் குளோடியஸ் என்போனுடைய விதவை லிவியாவோடு கூடிவாழ்ந்தான். அகஸ்தஸ் தன்பிள்ளைகள் இறந்தமையால் தன் மருகன் மாகேலனைக் கைசராக்கினன்; அவனுக்குத் தன்மகள் யூலியாவை மணந்துகொடுக்க எண்ணினன். அவன் இறந்தானாக, அக்கிரிப்பா யூலியாவை விவாகஞ்செய்துகொண்டான். அக்கிரிப்பா இறந்தானாக அவனுடைய பிள்ளைகள் குழந்தைகளாதலின் அகஸ் தஸ் இரைபீறியஸைத் தனிக்கோலனுதற் குரியன் என விளம்பி னன். இரைபீறியஸ் தன்மனைவியைத் துறந்து யூலியாவை மணந்து கொள்ளும்படி கட்டளையிடப்பெற்றான். யூலியா வம்பப் பரத்த ரோடு தெருவீதிகளில் அல்லும் பகலும் திரிந்தாளாக, அகஸ்தஸ் அவளை நாடுகடத்தினன்.

[தொடரும்.]

# பழனிக்கோவை.

[சOஅ-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

## 17. தளர்வகன்றுரைத்தல்.

தார்மேவு மில்லங் துறந்தாவி னன்குடிச் சண்முகர்தஞ்
சீர்மேவுஞ் சீறடி கைகூப்புஞ் செந்தமிழ்ச் செல்வனைப்போற்
பார்மே கலையுஞ் சிலம்பு மொடுக்கிப்பை யப்புகுந்திங்
கார்மேவு வாரிவ் வரையாமத் தென்னுயி ரன்னவரே. (164)

வளரிளமுலையைத் தளர்வகன்றுரைத்தது.

மெய்ப்பாடு—உவகை. பயன்—தலைமகளைக்கண்டு தோன்றிய உவகையைப் பரிக்கலாற்றாத தலைமகன் ஆற்றுதல். தலைமகளை மகிழ்வித்தலுமாம்.

## 18. மருங்கணைதல்.

தேம்புகை யூட்ட மலர்சூட்ட வஞ்சனந் தீட்டப்பெற்றும்
பாம்பணி பூட்டப் பொருளிடை வாட்ட மிராறுகையார்
மேம்பழ னிக்கொத்த கொங்கைசெம் மாந்து மெலிக்குதலாற்
கூம்பியுஞ் சார்ந்த குடிதாங்கு வாரன்ன கொள்கையதே. (165)

மிகுந்தகாதலிற் புகழ்ந்துரைத்தது.

மெய்ப்பாடு—அது. பயன்—தலைமகளைச்சார்தல்.

## 19. முகங்கண்டு மகிழ்தல்.

வேதாந்த வேதியர் வேலோர் பழனி வியன்சிலம்பிற்
சீதாம்பு தாரைப் புயல்யான் குமிழிற் றிரும்பிவள்ளைக்
காதார்ந்த சேற்கண் ணிவளோமற் றுங்கதைக் கண்டுவந்து
போதார்ந்த தேம்பொழில் வாய்கடக் காட்டும் புதுமயிலே. (166)

நகைமுகங்கண்டோன் மகிழ்வுற்றது.

மெய்ப்பாடு—அது. பயன்—நயப்புணர்த்துதல்.

### 20. பள்ளியிடத்துய்த்தல்.

யாமத் துணைவற் புணர்ந்துநம் போலுமிந் தீவரங்கள்
காமத் தலர்தலைக் கொய்யேல்பொன் னேசிவன் காதலிப்ப
வாமத் தணைந்து பழனிச்செவ் வேடிரு மாமனராப்
பாய்மெத்தை சேர்ந்தென்னப் பாங்கியொ டாயத்துட் பள்ளிகொள்ளே. ()

மணத்தகுவேந்தன் றணத்தல்கருதி
யயில்வேற்கண்ணியைத் துயிலிடத்துய்த்தது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—புறத்தாரறியாமைப் பிரிதல்.

### 21. வரவுவிலக்கல்.

கானிற் கவரியும் வெள்ளத் திடங்கருஞ் செல்கதிபோய்த்
தானிற்கு மோர்வைகல் செவ்வேள் பழனித் தளிரியலான்
மேனிற் கெளிதன் றெறிபுனத் தீயகில் வீட்டிமுகில்
வானிற் கொழும்புகை யூட்டும்வெற் பாவெம் மலைநெறியே. (168)

கமழ்மலர்க்கோதையை யமளிசேர்த்திப்
புரவலன்றன்னை வரவுவிலக்கியது.

மெய்ப்பாடு—அச்சம். பயன்—வரவுவிலக்கி வரைவுகடாதல்.

### 22. ஆற்றுதுரைத்தல்.

நீபத்தண் மார்பர் பழனிநல் லாயென் னெடுந்தவத்தாற்
சாபத் திழிந்தும் பொகுட்டே யுதித்தவ டன்னைப்பொன்னே
வீபத்தின் றங்கையென் றெண்ணியுய் வேன்வினை யேன்புனையேல்
தீபத்தழனவ னீதத்து நேயஞ் செயற்கையென்றே. (169)

வரைவுகடாய சுரிகுழற்றோழிக்கு
வேற்றூர் மன்ன னாற்றுதுரைத்தது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—நயப்புணர்த்துதல்.

### 23. இரக்கங்கூறி வரைவுகடாதல்.

விளங்குங் கதிர்வடி வேலோர் பழனிவெற் பாமதிபோற்
களங்கந் தகாதென்று வான்கலை தோற்றுக்கல் லுங்கரையத்

துளங்குங் குவளைக்கண் ணீர்காட்டுந் தோகைக்கிங் கோகையெய்த
விளங்கொம்பு வாய்வைப்ப வேண்டுநின் னூர்செல்லு மெல்லைநின்றே. (170)

மன்னன்பிரிவுழி வழிவருதுயரா
மென்னென்றறியா திரங்கியுரைத்தது.

மெய்ப்பாடு—அச்சம். பயன்—தலைமகற்கிடையூறின்மையுணர்த்தல்.

## 24. நிலவுவெளிப்பட வருந்தல்.

அரவாரம் பூண்டவ ரீன்றோர் பழனியி லன்பரைநாம்
வரவா தரிக்குமிப் போதாளுநன் னுலின் மறைந்தனுகா
யிரவான நங்கை யெமைநகை யாடுவ தென்ன வெள்கிக்
கரவா நிலாவெனும் பால்காலும் பிள்ளைக் கலைமதியே. (171)

மதியணிவிளங்குமெல் வருதமதுறுதுயர்
பதியவன்விளங்கப் பாங்கிபகர்ந்தது.

## 25. அல்லகுறியறிவித்தல்.

ஓதாத நாளி லுபாத்திய ரோத வொருகருமம்
போதாநின் றென்னவங் கென்னுற்ற தோபுன்னைச்சேக்கையெல்லாம்
பேதாய் பழனிச்செவ் வேள்செந்தி லன்னமும் பேடுங் குஞ்சும்
வாய்தான் வெருவுத லேதோ புலரி வருமட்டுமே. (172)

வில்லமர் நுதலி யல்லகுறிப்படைக்
கறைக்கதிர்வேலற்குச் சிறைப்புறத்துரைத்தது.

இனித் திணை நெய்தல்.

## 26. கடலிடைவைத்துத் துயரறிவித்தல்.

இரையா தொழிந்திவ ளுன்மக ளாமல்ல வென்பதுகண்
டுரையா யரிக்குத் துயிலீந்தும் பர்க்கமு தூட்டினையே
வரையார் பழனிச்செவ் வேளைச்செந் தூர்க்கரை வைத்திறைஞ்சித்
திரையால்வெஞ் சூரை நடுவைத் தமர்பழி தீர்கடலே. (173)

ஆங்கவற்கிறைப்புற மாகப்பாங்கி
கடன்மேல்வைத்துப் படர்துயருரைத்தது.

இவை மூன்றிற்கும் மெய்ப்பாடு—அழுகை. பயன்—அல்லகுறிப்பட்டமை தலைமகற்குணர்த்துதல்.

### 27. காமமிக்க கழிபடர்கிளவி.

பன்னிரு கையர்வை யாபுரிப் பாய்பொழில் காள்கழிகாள்
மன்னிரு வான்சுடர் சான்றுயும் பூக்களே வஞ்சித்தல்போல்
என்னிட ரேதென்கி லீரெந் துறைவர்க்கென் னேயுஞ்சொல்லீர்
துன்னுமக் கென்னிலுஞ் சுற்றங்கொல் லோபுள்ளுந் தும்பியுமே. ()

வாமமிக்க வனமுலைமெல்லிடை காமமிக்க கழிபடர்கிளவி.

### 28. காப்புச்சிறைமிக்க கையறுகிளவி.

கந்தப் பிரான்பழ னிக்கிரி மேற்சுடர் கார்த்திகைக்கிட்
டிந்தப் புரத்தரு மந்தப் புரஞ்செல்பி னெந்துறைவர்
முந்தப் புகிலவர் மோலிவெய் யோனென்று மொய்த்தகங்குற்
றுந்தப் பரவைத் திரைபோற் குரைக்குஞ் சுவானங்களே. (175)

கயல்வாழ்கண்ணி காப்புச்சிறைமிகச்
செயல்வேறின்மையிற் றெருமருகிளவி.

இவையிரண்டிற்கும் மெய்ப்பாடு—அழுகை. இச்சொற்கள் புறப்படுதலா னயர்வுயிர்ப்பாமென்பது பயன்.

### 29. ஆறுபார்த்துற்ற வச்சக்கிளவி.

வேற்றுணை யாய்ப்பழ னிக்கந்தர் தூதுவன் விண்ணவர்தங்
காற்றுணை யாப்புக் களங்காணச் சென்றெனக் காரிருட்கா
னாற்றுணை யாதிங்கு நீவரிற்சூர்க்கஞ்சு மண்டரைப்போ
லேற்றுணை யாமெய்தற் கஞ்சுவஞ் சூர்தங்கு மீர்ம்பொழிற்கே. (176)

மாறுபாய்வேலனை மாதரெதிர்வதற்
காறுபார்த்துற்ற வச்சக்கிளவி.

மெய்ப்பாடு—அச்சம். பயன்—மேலது.

### 30. தன்னுட்கையாறெய்திடுகிளவி.

குஞ்சரி கோன்வைகும் வையா புரிக்கென்னைக் கூடியநாள்
வஞ்சரிக் கானல் மடியன்றில் சான்றென்ற வம்பறியேன்
சஞ்சரி கத்திற்சென் றூர்மதிக் கேமதி சான்றென்பதா
லெஞ்சரி தங்கண்ட நீவல்லை யேற்சொல் லிளமதியே. (177)

என்னுட்பொய்த்தா ரென்னமின்னிடை
தன்னுட்கையா றெய்திடுகிளவி.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—மேலது.

### 31. நிலைகண்டுரைத்தல்.

தாமந் திவள்புய நின்னைவை யாபுரிச் சண்முகர்போல்
வாமந் திகழ்ந்தில் வரைப்பிற்கண் டாலெமர் வந்திப்பரேற்
சீமந் தினியொப்பள் வேறெண்ணிற் பத்துச் சிரன்பொருட்டால்
வேமந்த வேத வதியொப்பள் காணெங்கண் மின்கொடியே. (178)

மின்னகுவேலோய் நின்னினழிந்தனள்
நிரைவளையென்ன வரைவுகடாயது.

மெய்ப்பாடு—அச்சம். பயன்—வரைவுகடாதல்.

### 32. இரவருதுயரங் கடலோடுசேர்த்தியுரைத்தல்.

குறங்காந் தவிசமர்ந் தையற்கு மெய்யுரை கூறுஞ்செவ்வே
ளறங்காவல் கூரும் பழனியம் பூந்துறைக் கன்னமுங்கான்
றுறங்காமை மேற்கொண்டு சேர்ப்பனை யுன்னுந்தொ றுங்கலங்கிக்
கறங்காநின் றுயுனக் குந்துய ரேது கருங்கடலே. (179)

இரவருதுயரம் பரவையிற்சேர்த்துப்
புரவலனறியப் பூவைபுகன்றது.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—அயர்வுயிர்த்தல்.

### 33. அலரறிவுறுத்தல்.

நீரலர் சண்முக நன்னதி யார்பழ னிச்சிலம்பிற்
றூரலர் மார்பினெந் தண்டுறை வாநிலந் தாழ்பொருளைக்
காரலர் காட்டுமன் றேவிவள் பால்வைத்த காதல்களோ
ரூால ராய்மதன் கையல ராயம்ப லோங்கியதே. (180)

அண்ணலுன்னரு ளலராய்விளைந்தது
பண்ணிவர்மொழிக்கெனப் பாங்கிபகர்ந்தது.

இரவுக்குறிமுற்றும்.

---

### கச. ஒருவழித்தணத்தல்.

15. அகன்றணைவு கூற லாழியொடு கேட்ட
லாழியொடு புலத்த லன்னமொ டாய்த
லாழிக் குரைத்த லாழி யிழைத்தல்
சுடரொடு புலம்பல் பொழுதுகண்டு மயங்கல்

பையு ளெய்தல் பரிவுற் றுரைத்தல்
அன்னமொ டழிதல் வரவுணர்ந் துரைத்தல்
வருத்தங் கூறல் வருபதின் மூன்றுந்
திருத்திய வொருவழித் திறனு கும்மே.

1. அகன்றணைவுகூறல்.

நெடுமா தவனுங் குறுமா தவனு நிலமுவரி
தடுமாறக் கால்கைக் கடக்கிவிட் டாங்கிவ டன்மையினீ
தொடுமா தரத்தலர் தொட்டாற் பெருகும்விட் டாற்சுருங்குங்
கடுமான் மகள்கொணர் வையா புரிமன்ன கண்டுகொள்ளே. (181)

ஒள்ளிதின்வே றுபட் டொழுகப்பழியிலை
கள்ளலர்தாரோய் கண்டுகொளென்றது.

இவை யிரண்டிற்கும் மெய்ப்பாடு—அச்சம். பயன்—அலரறிவுறீஇ வரைவுகடாதல்.

2. கடலோடு வரவுகேட்டல்.

இன்னீர்க்கண் முத்தம் பரப்பிக் கலங்கி யெழுந்திரங்கு
முன்னீர்மை கண்டுன்னி மீள்வாரென் சொல்லின ரும்மையம்மைத்
தன்னீ ரடிகண்ட செவ்வேள் பழனித் தடம்புதுநீர்
வெண்ணீர் வளாவிய நன்னீரிற் பாயும் விரிகடலே. (182)

ஒருவழித்தணந்ததற் குள்ளநைந்துருகிப்
பொருதிரைக்கடற்குப் பூவைபுகன்றது.

3. கடலோடுபுலத்தல்.

தங்கொளி யாரலங் தாய்மார் வளர்ப்பச் சரவணத்திற்
பொங்கொளி யாய்வந்த நங்கோன் பழனியெம் பூந்துறைவ
ரங்கொளி யாரென் பிணைகலை கன்றொடு மள்ளிச்சென்று
ரெங்கொளி யாதுசொல் யான்கும்ப சாதனன் றீர்ங்கடலே. (183)

மெலிந்தவள்கடலொடு புலந்துகூறியது.

4. அன்னமோடாய்தல்.

நண்புனை மேவியுன் பேருட்கொண் டாலு நலமையுண்டிவ்
வொண்புனை தானலர் வாய்விள்ளு மாதலி னேதிமமே

திண்புனை வேலர் பழனிச்செவ் வேள்செந்திற் சேர்ப்பர்தமக்
கெண்புனை நெஞ்சமு மெங்குற்ற தோமற் றெனைமறந்தே. (184)

நன்னுதன்மடவர லன்னமொடாய்ந்தது.

5. தேர்வழிநோக்கிக்கூறல்.

கூராழி மாயன் மருகோர் பழனியெங் கொண்கர்சென்ற
தேராழி செல்வழி தூராதி தூர்த்திடிற் சேர்ந்தவரைச்
சாராழி யாமனைத் தோய்ந்திடக் கூவித் தடமழித்துக்
காராழி நீதிரை வீசுதற் கேசுவன் காசினிக்கே. (185)

கடலேதுறைவர் படருமளவுஞ்
சுடர்நெடுந்தேர்வழி தூரேலென்றது.

6. கூடலிழைத்தல்.

சலந்தரற் காய்ச்சக் கரங்கிறி யாங்கதைத் தாங்குகென்று
வலந்தரிக் கீந்தவர் சேயோர் பழனியில் வைத்தகன்றூர்
நலந்தரக் கூடல்சுற் றுதுறை யூர்வஞ்சி நான்றிரிந்து
புலந்தரற் றுதெய்தப் பார்தெய்வ மேயிப் புளினத்திலே. (186)

மேடலர்துறையி லேடலர்குழலி கூடலிழைத்து வாடலுற்றது.

7. சுடரோடுபுலத்தல்.

கொழுங்கதிர்க் கற்றை வலைவீசி யெய்த்துக் குடகடலில்
விழுங்கதிர்ச் செல்வவில் வேலோர் பழனிமெல் லம்புலம்ப
ரழுங்குமென் னுவிக்கு வஞ்சினக் காப்பிட் டகன்றனர்நீ
செழுங்கிளிக் கூட்டிரை போலென்னைக் காட்டினை செவ்வந்திக்கே.

குடகடற்குளிக்குஞ் சுடரொடுபுலந்தது.

8. பொழுதுகண்டிரங்கல்.

தேம்பலஞ் சிற்றிடைத் தெய்வமின் கொண்கர்வை யாபுரிச்செவ்
வாம்பலஞ் செக்க ரரிக்கணங் கங்குல்கொம் பார்த்தவன்னக்
கூம்பலவ் வான்பிறை மின்மினித் தாரகைக் கூர்துணையால்
யாம்பல மாலைப் பகைதிர வைத்தன ரெம்மவரே. (188)

மாலையங்குழலி மாலைவந்தெதிர மாலையடைந்து மறுகலுற்றது.

### 9. பறவையோடு வருந்தல்.

மெய்க்குரு வான முருகோர் பழனிமெல் லங்கழிக்கென்
கைக்குரு கேகழன் றுற்பக லேகனி காயிலைதின்
றிக்குரு வாம்வில்வி போர்க்கிரங் காத விருடியரா
மக்குரு கோவென் மனநோ யறிந்தினி யாற்றுவதே. (189)

பறவைமேல்வைத் துறுதுயருழந்து
சிறுநுதற்பேதை தேம்பலுற்றது.

### 10. பங்கயத்தோடுபரிவுற்றுரைத்தல்.

சேவலும் பூவுங்கைக் கொண்டார் பழனியிற் சேர்ப்பர்சென்று
ராவலும் யானுந் தனித்தோமிப் பூந்துறை யம்புயங்கள்
காவலுண் டோவினன் சென்று வினியென்று கைவண்டொரீஇக்
கூவலு மின்றிக் குவலய மேகவுங் கூம்பினவே. (190)

விரிமலர்த்துறையிற் பரிவுற்றுரைத்தது.

### 11. அன்னமோ டழிதல்.

செஞ்சந்தர் கந்தர் பழனியைச் சூழமித் தேயமெல்லாந்
தஞ்சங்கொடு துஞ்சச் சேவலைப் புல்கித்தன் னூர்திதுஞ்சக்
கஞ்சன் புரிந்தென் றுயிலொழித் தானிதைக் கண்டர்தமக்
கஞ்சஞ்சொல் லாதுதம் பாகர்நம் பாரென் றகத்துட்கொண்டே. ()

வழிவருதுயர மடவன்னத்தோ டழிவுற்றுரைத் தயர்கின்றது.

நெய்தற்றிணைகூறுவார் 'இரையாதொழிங்' தென்பதுதொட்டு 'நெடுமாதவ'னென்பதுகாறும் வர விப்பாட்டொன்பதும் இரங்கனிமித்தமாகக்கூறியொருவழித்தணத்தற்றுறையிடத்து 'இன்னீர்க்கண்' ணென்பதுதொட்டிதன்காறும் வர விப்பாட்டுப்பத்தும் இரங்கலே கூறுதலாற் றிணை நெய்தல்; வாட்டம் உரிப்பொருளாதலின். கைகோள்—கற்பு. மெய்ப்பாடு—அழுகை. தனதாற்றுமையானுகாதே யிவ ளிவ்வகைசொல்லியவளாயதென வவையாற்றுபவாவது பயன்.

### 12. வரவுணர்ந்துரைத்தல்.

கைவளை சோர்ந்துங்கண் டுஞ்சாதும் போய்நெடு மால்கடுப்பப்
பெய்வளை வாடல்கண் டோதிரந் தேன்பெரு நீலக்கண்ணீர்

மைவளங் காட்டி மரைவாட்டு முன்னிகர் மன்னர்வந்தால்
மொய்வளர் வேலர் பழனியைச் சூழு முழுமதியே. (192)

தணந்தவர்வரவுணர்ந் தணங்குறுமவணிலை
அறற்குழற்பாங்கி யிறைப்புறத்துரைத்தது.

மெய்ப்பாடு—அச்சம். பயன்—வரைவுகடாதல்.

### 13. வருத்தங்கூறி வரைவுகடாதல்.

பாசித்தண் ணீர்ச்சுனை பைம்புல்லின் மேடென்று பாய்ந்திளமான்
மூசித் தவிக்கும் வரையாய் பழனி முருகர் பொற்றாள்
பூசித்த தொண்டரில் வீழும் விளரும் பொருமிவிம்மு
மாசித்த மள்ளலிற் றாண்போற்றள் ளாடு மணியிழையே. (193)

முருந்துவெண்ணகை வருந்துதறோழி
யகன்றணைந்தவற் கெதிர்ந்துரைத்தது.

மெய்ப்பாடும் பயனும் அது.

'இன்னீர்க்கண்' ணென்பதுதொட் டிதன்காறும் வர விப்பன்னிரண்டும் ஒருவழித்தணத்தலை நுதலின.

ஒருவழித்தணத்தன் முற்றும்.

---

## கரு. உடன்போக்கு.

16. பருவங் கூறல் படைத்து மொழிதலொடு
மருவமர் கோதையை மகட்பேச் சுணர்த்தல்
பொன்னணி வுரைத்தல் பொருள்விலை கூறல்
அன்னமென் னடையா ளருமைகேட் டழிதல்
தளர்வறிந் துரைத்த றாழ்குழ லாட
னுளநினை வுரைத்த லுடன்கொண்டு சேறற்
கருமை யுரைத்த லாதரங் கூறன்
மருவிய தடங்கயல் வாழா ளென்றல்
பொருவறு கற்பின் புனைநல னுரைத்தல்
துணிந்தமை கூற றுணிவொடு வினாதல்
துணிவறி வித்தல் தொல்லை நாண்விடல்

துணிவெடுத் துரைத்தல் குறியிடங் கூறல்
அடிவழி நினைந்துநின் றவனுளம் வாடல்
கொடியிடை யாளைக் கொண்டுசென் றுய்த்தல்
ஓம்படுத் துரைத்தல் வழிப்படுத் துரைத்தல்
தேம்படு கோதையைத் திறலடு வேலோன்
பையக்கொண் டேகல் பயங்கெட வுரைத்தன்
மையமர் கண்ணியை வழியயர் வகற்றல்
நெறி விலக்கலொடு நெறியிடைக் கண்டவர்
செறிவெடுத் துரைத்தல் சேயிழை யாளுடன்
வழிவிளை யாடல் வழியெதிர் வருவோர்
எழினக ரணிமை யிதுவென வுரைத்தல்
நகர்காட்டலொடு நகரிடைப் புக்குப்
பதிபரி சுரைத்தல் பாங்கியைக் கிட்டி
மதிநுத லாளை வளர்த்தவள் கேட்டல்
அறத்தொடு நிற்றல் அதுகேட் டழுங்கல்
திறப்பா டுன்னிச் செவிலிகவன் றுரைத்தல்
அடிநினைந் திரங்க லதுதாய்க் குரைத்தல்
மடவரல் போக வாடி யுரைத்தல்
கிளிமொழிக் கிரங்கல் கிளர்சுடர்ப் பராதல்
அளிபெறு பருவத்திற் கவள்கவன் றுரைத்தல்
நாடத் துணிதல் நற்றாய் நயந்தவர்
கூடக் கரையெனக் கொடிக்குறி பார்த்தல்
சோதிடங் கேட்டல் சுவடுகண் டழிதல்
எதமுற் றமைகண் டிரங்கி யுரைத்தல்
வேட்ட மாதரைக் கண்டு வினுதல்
புறவொடு புலத்தல் குரவொடு வருந்தல்
திறலருர் தவத்தொடு செல்லா நின்ற
மாவிர தியரை வழியிடை வினுதல்
வேதியர் தம்மை விரும்பி வினுதல்
புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினுதல்
மணந்தரு குழலாண் மன்னிய நிலையொடு
வேங்கை பட்டது கண்டு வியத்தல்

ஆங்கவ ரியைபணி யவட்கெடுத் துரைத்தல்
மீள வுரைத்தல் மீளா தவளுக்
கூழ்முறை யிதுவென வுலகிய லுணர்த்தல்
அழுங்குதாய்க் குரைத்த லெம்பதோ டாறும்
உழுங்கொலை வேலோ னுடன்போக் காகும்.

## 1. பருவங்கூறல்.

ஈசன் புகழுங் குகவேள் பழனியி லேந்திழைக்குப்
பூசங்க ராகப்பொற் செப்பாய்வெற் பாமுலை போந்தரசன்
றேசங்கொண் டென்னப் படணைத்தல்கண் டாற்செம்பொன் சேமஞ்செய்யும்
பாசங்கள் போலக் கிழைமக ளேக்கும்வெம் பாசங்களே. (194)

பருவமுமுருவும் வருவதுகண்டவ
ளருமைகடெரிய வண்ணலுக்குரைத்தது.

மெய்ப்பாடும் பயனும் அது.

## 2. மகட்பேச்சுணர்த்தல்.

இணை தீர்த் தருண கிரியார் புகழ்தொறு மெய்திவெய்திற்
பிணை தீர்த்த வேலர் பழனிவெற் பாமகட் பேசியெமர்
மணை தீற்ற வம்பலர் வாராநிற் பார்வெள்ளம் வந்திடுமுன்
னணை தீர்த்தல் போன்மங்கைக் காமாறின் றேயொன் றகந்துணியே.

படைத்துமொழிகிளவியி னடைத்திறமுரைத்தது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—மேலது.

## 3. பொன்னணிவுரைத்தல்.

கேட்கிலை யோநன் மணமுர சார்ப்பதுங் கேளிரெல்லாம்
நாட்கலை பார்த்தொரு நாழிகை தாழ்ப்பநற் காப்பணிந்தார்
வாட்கதிர் வேலர் பழனிவெற் பாமட மானையினி
வேட்குநர் வேட்பர்கண் டாய்சுதை தூக்கும்புள் வேந்தென்னவே.

என்னினியாரோ பொன்னணிகுவரென
நன்னுதல்வரைவு மன்னற்குரைத்தது.

மெய்ப்பாடும் பயனும் அது.

[தொடரும்.]

T. K. இராமாநுஜையங்கார்,
உதவிப்பத்திராசிரியர்.

மதுரைத்தமிழ்ச்சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

ஸ்ரீ:

1938-ஆம்௵ செப்டெம்பர்௴ 25௳ (வெகுதானிய௵ புரட்டாசி௴ 9௳)

சென்னை ஹைக்கோர்ட்டு ஜட்ஜ்

ஸ்ரீ. உப. வே.

K. S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள்

மதுரைத் தமிழ்ச்சங்கத்துக்கு விஜயம்செய்தபொழுது

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் அளித்த

# வரவேற்புப்பத்திரம்.

---

I

[செந்தமிழ் உதவிப்பத்திராசிரியர் T. K. இராமாநுஜையங்கார் இயற்றியது.]

ஆசிரிய விருத்தம்.

மன்னர் மன்னன் பாராட்டும் மதிமான் உபய மறைமுடிவும்
வழுத்து நாவி னுடையபிரான் மறையோர் குலத்துக் கோதிலகன்
சென்னை நகருள் உயர்நீதி மன்றஞ் சிறக்க வீற்றிருந்து
செகத்தோர் புகழ முறைவழங்கு சீமான் கிருஷ்ண ஸ்வாமியென
மன்னு பெயரோன் ஆங்கிலத்தில் வளர்சேந் தமிழில் வடமொழியில்
வடித்துக் கொண்ட கலைக்குரிசில் வருக! வருக! மகிதலத்துத்
தென்ன னெழத் தமிழ்தழையச் செம்மல் பாண்டித் துரைநிறுவுஞ்
சீரார் மதுரைத் தமிழ்ச்சங்கம் சிறக்க வருக! வருகவே.

கலிவெண்பா.

பூதலத்தோ ருய்யப் புயல்வண்ணன் பண்டுரைத்த
வேத முதலாம் வியன்கலையும்—கீதையுடன்
வாழ்வார் குருகூர் வகுளா பரணன்முதல்
ஆழ்வார்கள் கண்ட அருமறையும்—சூழ்பொருளும்
சீதரனே நாதனெனத் தேர்ந்திவ் வுலகுய்வான்
ஆதரவால் ஆன்றோர் அருண்மறையும்—ஓதிமகிழ்
வாழ்வே விரும்பு மறையோர் குலக்கடலுள்
எழ்பார் பரவும் இளங்கதிர்போல்—வாழ்வாக
வந்தாங் கிலத்தில் வடமொழியிற் செந்தமிழில்
முந்தறிவால் நீதி முதற்றுறையால்—இந்தநிலம்
ஓதுமொழுக் கத்தால் உயர்ந்துசென்னை ஹைக்கோர்ட்டு
நீதிபதியாய் நிலவிவரு—வேதியசீர்
மல்குகிருஷ்ண ஸ்வாமி வரசுகுண நின்வரவு
நல்வர வாதுகநீ நாடோறும்—பல்வளமும்
மேவி நீடூழி வியனிலத்து வாழியநீ
மேவுதலால் இச்சங்கம் வீறுபெற்றுப்—பூவுலகில்
நல்லார் புகழ நனிவாழி யென்றெல்லாம்
வல்லான் அடிவணங்கு வாம்.

நேரிசைவெண்பா.

வாழி மதுரைத் தமிழ்ச்சங்கம் மாநிலத்தே
வாழி தமிழ்வளர்க்கும் மாண்புடையோர்—வாழிதமிழ்
வாழிகிருஷ்ண ஸ்வாமி மறையோர் குலதிலகன்
ஊழிதோ றூழி யுயர்ந்து.

## II

[ப்ருஹ்மஸ்ரீ. V. S. ராமஸ்வாமிசாஸ்திரியாரவர்கள் (B.A., B.L.) இயற்றியது.]

ஹரிஹரௌ கௌZஷ்டிம் ஷ்திருகவிருஸ
த்வத்தநா க்ருஹ்யம் ஸார்வஸ்ரேஷ்ட
வீயீவரௌ ஹர்ருர்வி தருவிரௌத
உர்ஞ்ஜிதம் தீவர்தீரௌவர்ஃ ।
கயாருஷ்த தந்ஷ்யாரயரு தா
நாயகஃ ஸாந்தராஹ்வா
விசுவாஷ்யா நீ ருஸ திவ பாரௌ
ஊராதீர்யம் பொயயஞ்ஜீ ॥
தீவ்ய த்வஷ்டிம்ஶ்ச நகரவரௌ
ஜீநநௌ நத்ராவா விவோசா
ஶம்ஹாஃ ஸாக்ஷாதூத்ரிருரவிகஃ
ஸாந்தரௌஶா உயாருஃ!
ஸஹ்யாநு ஸவர்ணாநு உயாரவவரௌந
ரம்ஜயஞம் ஹர்ணாசவ்யம்
க்ருஷ்ணாயர்ம் த்வாஉவதா ஸததம்
ஸாந்தரஃ ஸாப்ருஸளுஃ ॥
ஜீவ்யாசு த்வம் நிஜஹஸ்தவயர் திருரௌகஃ
“கரிBமழ்” பாரௌ ஶாஹரௌந
ஸஶ்ரீகஃ ஸாரயாத்ரஶம்வஸஹிதஃ
ஸௌவ்யாஸ்தஉாஃ ஶாஶ்வதீஃ ।
ஜஷ்தர உத்ருஶம்ஸரௌநஃ ஸாஉயாரௌர
ஊர்ராதிர்வ்யவாணீஉரௌய
ஹர்ட்ராரௌருஸரவிஷ்ணஹித்தஉாநிநா
விஷ்ணுஃ ஷ்தாதஸ்வாZவதாசு ॥

## III

[தமிழ்ச்சங்கக் கலாசாலையாசிரியர் திரு. சு. நல்லசிவன்பிள்ளையவர்கள்

இயற்றியது]

தென்னர் தமிழும் வடமொழியுந்
தேசம் பரவு மாங்கிலமுஞ்
சிறக்க வுணர்ந்து நடுநிலைமைத்
தெய்வம் போன்று சென்னையினில்

மன்னர் புகழும் உயர்நீதி
மன்றத் ததிப னெனவமர்ந்து
மனுநூன் முறையே முறைபுரியும்
வள்ளால் வருக! மாதவன்றாள்

தன்னை யிறைஞ்சி மகிழ்கிருஷ்ண
சாமிநாம வருக! தமிழ்
தழைக்க மதுரைத் தமிழ்ச்சங்கந்
தழைக்க வருக! சாமிஉன்றன்

நன்னர் வரவு நல்வரவாய்
நாளு மோங்கிப் பலநலனு
நல்க யாவும் வல்லபரா
னளினத் திருத்தா ணவிற்றுதுமே.

ஸ்ரீ:

# மதிப்புரை.

அகலிகைவெண்பா (வசனம் குறிப்புரையுடன் மூன்றும்பதிப்பு):– இது, ஆங்கிலமொழிப்புலமையொடு செந்தமிழ்ப்புலமையும் ஒருங்குடைய வெள்ளகால் திருவாளர் ராவ்ஸாஹிப். வே. ப. சுப்பிரமணிய முதலியாரவர்களால், பல்வேறு நூல்களிலும் கூறப்படும் அகலிகை கதையுள் வேறுபட்ட பகுதிகளை யொழித்து ஒற்றுமையான பகுதிகளை ஆதாரமாகக்கொண்டு, இந்திரகாண்டம், அகலிகைகாண்டம், கௌதமகாண்டம் என்னும் மூன்று பிரிவில் சற்றேறத்தாழ முந்நூறு வெண்பாக்களையுடையதாக இயற்றப்பெற்றது; சொற்பொருளணிநலந்தோய்ந்து கற்பவர்க்கெல்லாம் கழிமகிழ்பயப்பது; அரிய பல ஆங்கிலநூற் கருத்துக்களை இடையிடையே கொண்டு விளங்குவது; இயற்கையழகை உள்ளவாறு தெள்ளிதின் விளக்கும் பல வருணனைகளையும், அவ்வவ்வமயங்களுக் கேற்றபெற்றியான் அமைந்த மெய்ப்பாடுகளைப் புலப்படுக்கும் கதாபாத்திரங்களின் கூற்றுக்களையும் உடையது; செய்யுட்களுக்கு இன்றியமையாது வேண்டப்படும் பொருள்களைக் கீழ்க்குறிப்பிற் கொண்டது; நூனுவல்கதையினை விரிக்கும் இனியவசனப்பகுதியுடன் கூடியது.

இதனால், முதலியாரவர்களுடைய பாரகாவியமியற்றவல்ல கவித்வசக்தியும், உரையும் வசனமும் சிறக்கவெழுதும் ஆற்றலும் நன்குவிளங்கும். இந்நூல் இருபத்தைந்தாண்டுகளுக்குள் மும்முறை பதிக்கப்பட்டிருப்பதே இதன் அருமை பெருமைகளையெல்லாம் விளக்கப்போதியதாகும்.

இதனைப் பலபடியானும் சிறக்க அச்சிட்டு வெளியிட்ட தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தாருடைய தமிழ்ப்பற்றுப் பெரிதும் பாராட்டத்தக்கது.

இதன் விலை ராப்பர் பயிண்டு அணா 10. கலிக்கோ பயிண்டு ரூபா ஒன்று. வேண்டுவோர் திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தாரிடம் பெறலாம்.

தொல்காப்பியச் சொல்லதிகாரம் சேனாவரையம்:— பண்டையோர் கண்ட தண்டமிழிலக்கண நூல்களுள் தலைமைவாய்ந்துவிளங்குவது ஒல்காப்பெருமைத் தொல்காப்பியமே. அதனுள், சொல்லதிகாரத் துக்கு உரைகண்டார் பலர். அவருள்ளும் ஆனாப்புலமைச் சேனா வரையருரையே சிறந்ததென்பது புலவர் பலர்க்கும் உடம்பாடு. இத்தகைய சேனாவரையருரை பயில்வார்க் கெளிதிற் கிடைக்கும் படி ஆராய்ந்து அச்சிற்பதித்தநவினர் பலர். அப்பதிப்புக்களில் ஏடெழுதியோர் முதலியவர்களால் நேர்ந்த பிழைகள் பல. பிழை யில்லாத உரைப்பகுதிகளிலும் பொருள்விளங்காதன பல. அவற் றுள், சில முன்பு சேனாவரைய ஆராய்ச்சி என்ற தலைப்பின்கீழ்த் திருவாளர் பண்டித அ. கோபாலையரவர்களால் நம் செந்தமிழ் வாயிலாக வெளியிடப்பெற்றமை செந்தமிழ்நேயர் அறிந்த தொன்றே.

இச்சேனாவரையருரை, சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர் முதலிய புலவர்பெருமக்களிடத்துத் தாம் கேட்டறிந்தனவும், தாமே அரிதின் ஆராய்ந்துகண்டனவும் ஆகிய திருத்தங்களுடனும் உரைவிளக்கக் குறிப்புக்களுடனும் சூத்திர அகராதி, உதாரண அகராதி, விஷய அகராதி, அரும்பதவிளக்கம், பிழைதிருத்தம் முதலியவற்றுடனும் யாழ்ப்பாணத்துப் புன்னாலைக்கட்டுவன் ஸ்ரீமத். சி. கணேசையரவர்களால் இப்பொழுது நல்ல காகிதத்தில் அழகாக அச்சிட்டு வெளியிடப்பெற்றிருக்கிறது. இதனுள், ஐய ரவர்களால் செந்தமிழில் வெளியிடப்பட்ட தொல்காப்பியச்சூத்திரப் பொருளாராய்ச்சி முதலிய பல அரிய பொருளுரைகள் அநுபந்த மாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இப்பதிப்பால் திருந்திய பிழைகளும் விளங்கிய உரைப்பகுதிகளும் பல. இவ்வாறு எத்தனை பதிப்புக்கள் வெளிவரினும் அவை தமிழ்மக்களால் விரும்பி ஏற்றுக்கொள்ளத் தக்கனவே. தமிழ்பயில்வார்க்குப் பயன்படும்படி இதனை அச்சிட் டுதவியது பாராட்டத்தக்கது. இதன் விலை ரூபா ஐந்து. வேண்டு வோர் யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் தனலக்குமி புத்தகசாலையிற் பெறலாம்.

---

1. திவ்யதேசப்பாமாலை, 2. சந்திரகலாமாலை, 3. மணவாள மாமுனி ஊசல்திருநாமம், 4. கிளிக்கண்ணி:—இவை, ஸ்ரீவானமாமலைமடம் ஆஸ்தானவித்துவான் தென்றிருப்பேரை அபிநவகாளமேகம் அபிநவபிள்ளைப்பெருமாளையங்கார் என்று வழங்குகின்ற, ஸ்ரீ அநந்தகிருஷ்ணையங்காரவர்களால் இயற்றப்பெற்றவை. இவற்றுள், திவ்யதேசப்பாமாலை, திருமால் கோயில்கொண்டெழுந்தருளியுள்ள திருப்பதிகளைப் பாராட்டிப்பேசும் ஒரு பிரபந்தமாகும். சந்திரகலாமாலை என்பது திருவநந்தபுரத்து அநந்தபத்மநாபஸ்வாமிமீது 16 பாடல்களால் இயன்றதொருபிரபந்தம். ஊசற்றிருநாமம், வைணவாசாரியருள் ஒருவராகிய தணவாப்புகழ்சேர் மணவாளமாமுனிவர்விஷயமானது. கிளிக்கண்ணி என்பது கண்ணன்விஷயமானது. இவற்றுட் பயின்றுள்ள செய்யுட்கள், படிப்பார்க்கும் கேட்பார்க்கும் இனிமைபயப்பன; குறித்தபொருளைப் பொருத்தமுற விளக்குவன; கற்பனையுடனே கவிகள் பாராட்டும் பற்பல அணியும் பயின்றன; தொடையும் நடையும் தூயனவாக அமைந்துள்ளன; இடையிடையே குறிப்புரையும் உடையன. இவற்றையியற்றிய ஐயங்காரவர்களுடைய மதிநுட்பமும் கவிதாசாமார்த்தியமும் புலவர்பலரானும் பாராட்டப்பெற்றன. ஐயங்காரவர்கள் இயற்றியுள்ள மற்றைநூல்களும் வெளிவருமாறு இவற்றைத் தமிழ்மக்கள் ஆதரிப்பார்களாக. இவற்றின்விலை:—திவ்யதேசப்பாமாலை அணு 4. சந்திரகலாமாலை அணு 2. மணவாள மாமுனி ஊசல்திருநாமம் அணு 2. கிளிக்கண்ணி அணு 1.

வேண்டுவோர்: 'ஸ்ரீ அநந்தகிருஷ்ணையங்காரவர்கள், வானமாமலைமடம் ஆஸ்தானவித்வான், தென்திருப்பேரை, திருநெல்வேலி ஜில்லா' என்றவிலாசத்துக்கு எழுதிப்பெறலாம்.

ஸ்ரீ:

# சந்திரகுப்தன்.


மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் கௌரவகாரியதரிசியும்

வழக்கறிஞருமான ஸ்ரீமந்.

**N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், B.A., B.L.**

எழுதியது.



செந்தமிழ்ப்பிரசுரம்—௬௬.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை.

1938

விலை அணா ஆறு.

ஸ்ரீ:

# உரிமையுரை.

---

ஆழ்வாரருளிச்செயல்களில் ஈடுபட்ட பெரியார், வடமொழிவேதங்களில் விளங்காது மறைந்துகிடக்கும் பெரும்பேறுகளை அவ்வருளிச்செயல்களின்மூலம் தெளிந்துள்ளோமென்று நன்றிபாராட்டுகிறார். இத்தகைய பொருளுரைகள் மலிந்த நம் மொழியைக்—

தென்னன் தமிழாம் தெள்ளமு தூறப்
பின்னொரு மொழியும் பேசல் வேண்டா

என்றுரைப்பது மிகையாகாது. அவ் வரும்பெரு மொழியில் யானும் ஒரு நூலியற்ற ஆர்வமீந்த அன்புடைப் பெரியாரும் அடியேன்பக்கல் அநவரதம் அருண்மாரி பொழிபவரும் மதுரைத்தமிழ்ச்சங்கக் கலாசாலைத் தலைமையாசிரியரும் செந்தமிழ்ப் பத்திராசிரியரும் ஆன ஸ்ரீ. உப. வே. திரு. நாராயணையங்கார் ஸ்வாமிக்கு இந்நூல் உரிமையாக ஸமர்ப்பிக்கிறேன்.

N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்,

B.A., B.L.

அட்வகேட், மதுரை.

---

ஸ்ரீ:

# சந்திரகுப்தன்.

## முன்னுரை.

மாந்தர்வாழ்வு மனநிலைகளின் உயர்படிகளில் தவழ்ந்தேறி நிலையற்ற செல்வங்களில் நசைவிட்டு என்றுமழியா ஈசனடிப்படுத வில் உயர்வதேயாம், என்பது ஆன்றோர் துணிபு. அந்நெறிக்கு இடையூறுசெய்யத்தக்கனபோல் தோன்றும் அகநிலைகளையும் புறப்பொருள்களையும் அல்வழிமாற்றி நல்வழிப்படுத்த வேத முதலாகவுள்ள நூல்கள் வழிகாட்டிகளாகின்றன. அவ்வழிகளின் முயல்வார்க்கு அல்வழிப்பட்டோர் அடைந்தனவும் அடையநினைப் பனவுமாகக் காணப்படும் உலகச்செல்வங்களைக்காட்டிலும் பன் மடங்கு அதிகமான செல்வங்கள் எங்கும் என்றும் எய்துமென்பது அந்நூல்களில் காணலாம். ஒருமனிதன் உலககதியில் தன்னை ஆராய்ந்துணராமல் மற்றை உலகப்பொருள்களைமட்டும் ஆராய்ந் துணர்தல் அவமேயென்பது அறிஞரெவரும் ஒப்பமுடிந்தது. இத் தன்னுணர்வை முற்றுவித்துச் சில வைராக்கியங்களால் யோகத் தின்படிகளிலேறி ஞானத்தின் எல்லைகண்டார், இகபரசுகங்களை யடைதற்குத் தருமத்தின் வழுவாமல் நடக்க நமக்கு இட்ட வழிகளே நன்மார்க்கங்களாகும். தற்கால நாகரிகர்க்கு இன்னும் இவை அறியக்கிடக்கின்றன. இவைகளைத் திருத்தவென்று முயலுவோர் அவற்றின் சிறப்பறியாராவர். அவ்வாறியன்ற அரிய பெரிய இந்நாட்டு நாகரிக இயக்கங்களின் ஒரு சிறு காட்சியாக இந்த நாடகம் வரையப்பெற்றுளது.

இதைநோக்கும் பெரியோர் பிழைபல பொதிந்த இதன்கண் மேற்கூறியதை வற்புறுத்த ஏதேனும் ஒரு சிறுபகுதி இருப்பின் அதை ஏற்றுப் பிறவற்றைப் பொருட்படுத்தார்கள் என்பது எனது துணிவு.

N. R. கிருஷ்ணஸ்வாமி B.A., B.L.

அட்வகேட், மதுரை.

ஸ்ரீ:

# நாடக பாத்திரங்கள்.

| | |
|---|---|
| அலக்ஷயேந்திரன் | மேல்நாட்டுச்சக்கிரவர்த்தி. |
| நந்தன் | மகததேசத்தரசன். |
| புருஷோத்தமன் | பஞ்சாபகதேசத்தரசன். |
| சத்துருஜித் | புருஷோத்தமன் சேனபதி. |
| சந்திரன் | நந்தன் காமக்கிழத்தியின்புதல்வன். |
| அதிஜயன் | நந்தன் பட்டமஹிஷியின்புதல்வன். |
| சாகரன் | சந்திரனின் உயிர்நண்பன். |
| சுலோசனை | சாகரன் தங்கை. |
| யமுனை | சந்திரனுடைய செவிலித்தாய். |
| தர்மசீலன் / நிர்மலகுப்தன் | மகதநாட்டுப்பிரபுக்கள். |
| சாணக்கியன் | சந்திரன் முதலியோர்க்கு ஆசிரியர். |
| விகலன் | சுலோசனை ஆண்வேடம் பூண்டிருந்த காலத்துக் கொண்டிருந்த பெயர். |
| சித்திராங்கி | பஞ்சாபகதேசத்தரசனை புருஷோத்தமன் புதல்வி. |

சேனபதிகள், தூதர்கள், சேவகர்கள், திருடர்கள், அந்தணர்கள், வீரர்கள் முதலியோர்.

இடம்:—மகதநாட்டின் தலைநகராகிய பாடலீபுதனமும், பஞ்சாபகதேசத்தின் தலைநகராகிய தக்ஷாலயமும், பிறவும்.

ஸ்ரீ:

# சந்திரகுப்தன்.

## அங்கம்-I.

### களம்-1.

---

[பாத்திரங்கள்:—சூத்திரதாரன், நடி, அஜிஜயன், சந்திரன்.]

நடி:—[வணங்கிநிற்க.]

சூத்திரதாரன்:—மங்களங்களெல்லாம் உனக்கு உண்டாகுக.

நடி:—ஐயா! அடியேனை அழைத்தது எதுபற்றியோ?

சூத்திர:—[சபையைக்காட்டி] பெண்மணி! இச்சபையைப் பார்.

நடி:—[பலதரம் நோக்கி] நோக்குந்தோறும் என்மனம் குழைகிறது; செல்வம் கல்வி சீலம் கோலங்களில் மிகுந்த ஆடவரும் நங்கையரும் அளவிறந்தோர் திரண்ட இச்சபைக்கு நிகர் எச்சபையைக் கூறுவேன்.

சூத்திர:—உன் கண்கள் பூஞ்சோலையில் திகைத்தாடும் வண்டுகள்போல எங்கு நிலைபெறுவதென்றறியாமல் மயங்குவதே அதற்குச் சான்று.

நடி:—இத்தகைய சபையின்கண் ஏழையேனை அழைத்தது எதன்பொருட்டோ?

சூத்திர:—இச்சபையோர் மனங்குளிர ஒரு பாட்டுப் பாடவேண்டும்.

நடி:—பேதைமையுடைய பெண்ணாகிய என்வாக்கிற் பல சொற்சோர்வு பொருட்சோர்வுகள் இருக்குமே. இச்சபையோர்க்கு அது ஏற்குமா?

சூத்திர:—நீ பேதையென்றே அவர்கள் மன்னித்துக் களிகூருவார்கள்.

நடி:—

நல்லறங் காத்துத் தீமை நலிவுறச் செகுத்து மாந்தர்க்
கில்லறத் துதவி யேனை நிலைகளிற் சிறப்பு முற்றிப்
பல்லர சுருவ மாகிப் படிபுரந் தளிக்கும் பெற்றிச்
சொல்லுயர் சுருதித் தேவத் தூயவன் சரணம் சேர்வாம்.

சூத்திர:—இப்பாடல் யாரியற்றியது? அரசையும் தெய்வத்தையும் துதிக்கும் ஒரு பாடலாயிருக்கிறதே?

நடி:— இது, கூட்டூர்க் கருந்தேவரென்னும் என்னன்பரொருவர் இயற்றியது.

சூத்திர:—அங்ஙனமாயிற் சரி. இச்சபையோரை மகிழ்விக்க நாம் என்ன செய்யலாம்?

நடி:—என்னன்பர் எழுதிய நாடகமும் ஒன்றுளது.

சூத்திர:—அப்படியானால் அதை நடித்துக்காட்டுவோம்.

நடி:—அதை நடிக்கலாம்; ஆனால் முத்தமிழ்க் கல்வியின் முற்றிய இச்சபையோருக்குப் பிழைபலபொதிந்த என் நடிப்பு இனிக்குமோ? என்ற கவலையும், நீங்கள் பணித்ததைச் செய்யவேண்டுமென்ற ஆவலும் [ஒரு மான் நுழைய அதன் இருபுறங்களிலிருந்து அதிஜயனும் சந்திரனும் அம்பெய்கிறார்கள்; மான் ஓடிவருகிறது.] அதிஜயன் அம்பும் சந்திரன் வாளியும் அம் மானை வருத்துவதுபோல் என் மனத்தை வருத்துகின்றனவே.

அதிஜயன்:—அரசிளங்குமரர் விளையாடும் வனத்தில் யாரடா வேடப்பயல்?

சந்திரன்:—யான் வேடனல்லேன்; ஒரு நாடன்தான். இப்பொழுது நாமிருவரும் காடராதலின், யான் நூறுதண்டதூரம் தூரத்தி யெய்யும் இம்மானின்மேல் நீ எங்ஙனம் வாளிதூவத் துணிந்தனை?

அதிஜயன்:—என்னெதிர்ப்படும் மானை யான் அடிக்கத்தான் அடிப்பேன்.

சந்திரன்:—அக்குற்றத்திற்காக யான் உன்மேல் வாளிதொடுப்பேன்.

[இருவரும் பொருதல்.]

சந்திரன்:— (அதிஜயனை வீழ்த்திவிட்டு நெருங்கி உற்றுநோக்கி) ஆ! ஆ! நம் சக்கரவர்த்தியின் குமாரரல்லரோ? அப்பொழுதே அரசிளங்குமாரரென்றனரே! மானைத்துரத்திவந்தவேகத்திலும், அவர் அம்பாலடித்த கோபத்திலும், அது தப்பியோடின துயரத்திலும் அவருரைத்தது என்மனதிற் பதியாதுபோயிற்றே. பெரும் பாவத்திற்கும் அவதூறுக்கும் ஆளானேனே. நம் அரசருக்கு ஒரே புதல்வராகிய இவரைக் கொன்ற பாவத்துக்கு ஆளாவேனோ? [கிட்டிப்போய்த் தொட்டுப்பார்த்து] இன்னும் உயிர் இருக்கிறது. இவர் இறப்பின் இவ்வம்பே நம்மைக் காட்டிக்கொடுத்துவிடும். அதைப் பிடுங்கியெடுப்பின் உதிரவாரி பெருகி உடனே இவர் உயிர்மாய்வர். பல்கோடி பிரஜைகளில் ஒருவனாகிய யான் இறப்பினும், அரசர்மரபை அழித்தல்கூடாது. என் மனமறிய அப்பாபத்துக்கு ஆளாகேன். [உள்ளே குதிரைச்சத்தம்] ஏதோ குதிரைச்சத்தம் கேட்கிறது. நாம் ஓடியொளித்தலே உத்தமம். [பதறிக்கொண்டுசெல்லுதல்.]

---

## அங்கம்-1.

### களம்—2.

நந்தன் கொலுவிருக்கை.

[பாத்திரங்கள்:—அமைச்சர், சேனைபதிகள், சேவகர்.]

சேவகன்:—[தொழுது] அரசே அங்கதேசத்தரசர் ஐந்துகோடிபொன்னோடு அடிவணங்கக் காத்திருக்கிறார்.

நந்தன்:—வரவிடு.

அங்கன்:—[வந்து வணங்கிக் காணிக்கைவைத்து,] கப்பம் கடைவாயிலி லிருக்கின்றது.

நந்தன்:—[ஓர் அமைச்சனை நோக்கி] அங்கர்திறையை அரும் பொருட்சாலையிற் சேர்த்து அவருக்கு அநங்கவிலாசத்தில் விடுதி யமைக்க. [அங்கனைநோக்கி] அங்கரே! உம் நாடு வளமிகுந்து வாழ்வுடையதாயிருக்கிறதா? செங்கோன்மாறுது பரிபாலிக்கப் பெறுகிறதா? பசுக்கள் பாலை மிகுத்துச்சொரிகின்றனவா? பிரஜைகள் புருஷாயுசு உயிர்வாழ்கிறார்களா? நாற்பாற்குலத்தாரும் தத்தந் தொழிலைப் பிறழாது செய்துவருகிறார்களா? மாதம் மும்மாரி பெய்கிறதா? அந்தணரை அன்புடன் ஆதரிக்கின்றீரா?

அங்கன்:—மீனினம் மிளிரும் வானிடையொளிரும் முழுமதியென எம்போன்ற சிற்றரசர் புடைசூழ விளங்கும் புண்ணியனே! மதியின் ஆழிக்குள்ள கறையுமின்றிச் சக்கரநடாத்தும் சத்தியனே! கரையற்ற செல்வக்கடலே! கடலின்விரிந்த மனத்தனே!

நின், கழற்படு முடியெக் காவலர் நாடோ
அழற்படு தீமைக் கணுகிட மாகும்!
எம், செங்கோற் சீர்த்தி செல்வநின் பணியை
மங்கா தாற்றும் மரபின தன்றே!
மனுமுறை தவறு மாண்பினவன்றே
வினைசெயற் குந்தும் வீரநின் பணிதாம்!
வேத மோதும் வேதியர் குரலாற்
காத நின்றே கடுவினை யகலும்!
வேள்வியின் முற்றி விரிகடற் கல்விக்
கேள்வியர் பல்லோர் கெழுமுநா டுனதே!
அறத்திற னோம்பி மறத்திறன் செகுக்கும்
திறத்துறை தேர்ந்த தேவனீ யன்றே!
பீடார் செல்வத் தேந்தல் நின்னாட்டில்
கேடா தெய்தும் நிதிக்குவை யெல்லாம்!
கங்கையின் நன்னீர் பொங்கிவந் தெய்த
மங்கள மகிழ்ச்சி மலியும்நின் னாட்டே!
ஆவிளங் கன்றுக ளகந்தொறுந் துள்ளும்;
தூவி யன்னம் துறைதொறும் உலவும்;
அந்தணர் மறவர் வணிகரே முதலோர்
தந்தொழில் மாறாத் தகைமையிற் சேர்ந்தார்;

வளமிகும் வயலில்; மறுகிடை வணிகம்;
கலைபல தெருவிற் கதமமர்க் களத்தே;
வாரிநீர் வற்றிச் சோரினும் கொன்மூ
மாரிநீர் மாறு மாண்புடைத் துன்கண்;
கோயிலிற் பரவும் குலக்கட வுளினும்
வாயில்வந் தெய்தும் வறிஞரே மேலென்
றுயினும் மிக்க அளியின ராகிப்
போயவர் இன்னல் போக்குவர் மனையோர்;
அந்தண ரோம்ப லறங்களிற் சீர்த்ததென்
றெந்தைநின் னாட்டில் எளியரும் தொடர்வர்;
கோவியற் றருமம் கோடாச் செங்கோல்
ஓவியத் துருவநின் னுள்ளக மறிந்தெம்
ஆவியிற் பெரிதா யறத்திற னுற்றன்
மேவினம் யாமே; வாழ்கநின் ஆழி!

நந்தன்:—அங்கரே! உம்முடைய இனிமையான மொழிகள் என் மனத்தை மிகவும் மகிழ்விக்கின்றன. இடனறிந்துதவிக் கடனறிந் திறுக்கும் உம்போன்றவருதவியுடைய எனக்கும் என் நாட்டுக்கும் சிறிதும் குறையுண்டோ? [சேவகன் வணங்கிநிற்க] சேவகா! என்ன விசேஷம்?

சேவகன்:—அரசே! யாரோ அயல்நாட்டுவேந்தன்றூதராம். வாயிலிற் காத்திருக்கிறார்கள்.

நந்தன்:—உள்ளே வரட்டும்.

[அலக்ஷியேந்திரன்தூதர்கள் உள்ளேவருதல்.]

தூதர்தலைவன்:—'வெற்றிவேந்தே வாழ்கநின் ஆழி'

நந்தன்:—தூதரே! உம்மை வரவிடுத்தவர் யாவர்? நீர் வந்த காரியமென்ன?

தூ-த:—காலையிற் கீழ்த்திசைக்கடலின் இருளைத் தொலைத்துப் பகலின் குருத்துச்சிறிதுசிறிதாய் மேலெழ அகன்ற வானிற் கார்மேகமெங்கும் செக்கர்வீசி உலகெங்கும்பரந்த இருட்பகைவன் முதுகுகாட்டியோட மேலெழுந்து பனிப்பகை பருகி, இரவில்

இருட்பகைவன் கொடுங்கோலின்கீழ்த் துன்புற்றுவருந்திய தன் அருமைக்குடிகளை முழுதும் காண ஆவலுற்றான்போல் வான்வழியே தன் ஆழியைச் செலுத்திநடந்து, பகைவன் தீச்செயல்களைப் பளிச்செனவிளக்கிக்காட்டி, அன்புடனெழுந்து தன்னை ஆதரித்து நல்வரவுகூறும் அளவிறந்த மக்களைத் தன் ஆயிரம் கரத்தாலும் கைவந்து மாலையில் மேற்றிசைக்கடலிற் பொதிந்த தன் பாசறையடையும் பரிதிக்கெதிராய்,

'மேற்றிசைக் கடலில் மிகைபட விளங்கும்
ஒலிம்பஸ் மலையில் நலம்பெற வசிக்கும்
ஜ்யூபிட ரென்னும் வியாபகத் தெய்வம்
அலக்ஷயேந் திரப்பே ரரசரிற் சிங்கமாய்ப்
பார சீகப் பகையறத் தொலைத்து
நாகரிகமெனும் நல்விளக் கெடுத்துக்
கீர்த்திச் செக்கர் கெழுமிமுன் செல்ல
ஆர்த்தெ ழுந்துபல் லரசரை யடக்கிப்
பொய்ம்மலி தெய்வம் போற்றலின் மயங்கி
நைவுறு மாந்தர் நலனடைந் துய்யப்
பூமியின் மேற்றன் புரவியை நடத்தித்
தீமைசே ராட்சித் திறனறத் துணித்துத்
தன்வலி தெரிந்து சரணடை மாந்தர்க்
கின்ன லெய்தா திமையெனக் காத்துப்
படியினிற் பாதி கடிதினில் வென்றுபின்
இடியொலி மாறா விமய மெய்திப்
பஞ்ச நதிக்கிறை தஞ்சர ணடையநின்
மேற்றிசை யெல்லையில் மிகுமிளைப் பாறி
வீற்றி ருக்குமவ் வேற்றிளஞ் சிங்கம்
மாகத நின்னை மாய்கத னுக்கிப்
பரமன் வலியும் சிரமமிக் கெய்தச்
சீனன் குழுவை வானக மேற்றிச்
சப்பன நாட்டுக் கப்புறக் கடலில்
ஓங்கி நின்றவத் தாங்கருஞ் சீர்த்திக்
குன்றிடை யெய்துங் குறிப்பின னாகித்
தன்றுணை வீரர் சலிப்பிலர் மூந்த

வாளும் வேலும் வலமிடந் தாங்கிக்
கால னிகர்ப்போர் கணக்கிலர் சுற்றச்
சுவண கிரியுந் துகளெழ வீசிக்
கவணெறி வோர்கைக் கயிறெறிந் தேக
வாளிக் கூட்டைத் தோளிற் றூங்கி
யாளி யன்னவில் லாளிகள் தொடரப்
பரிமிசை வீரர் திரைமிசைக் கலம்போற்
பொருநசை விஞ்சிப் புகைந்துமுன் செல்ல
உவந்துல கேத்தும் உருப்பல தாங்கி
நிவந்தெழு கொடிநிழல் நிரைநிரை நெருங்க
அயிலெறி பொறிகள் அளப்பில நகரப்
பயில்நட மாக்கள் பாடின ராடக்
கல்லெடு சகடம் கதித்தெரு திழுக்கப்
பகழிபெய் பண்டிகள் பற்பல படரக்
கள்ளொடு வண்டிகள் காவதம் இழையப்
புள்ளும் மாவும் புசிப்பன பலவோ
டுணவுப் பொதியெடுத் தொட்டகங் கோடியும்
பணிசெய் மாக்கள் பற்பல கோடியும்
வழிச்செல வுக்காய் வைத்துள பைம்பொன்
கழுத்திற வீர்த்திழை கர்த்தபங் கோடியும்
பம்பை பம்பும் பரிசனங் கோடியும்
கொம்ப லப்பிக் குனிப்பவர் கோடியும்
இம்ப ருலகெலா மெழுந்தென இயங்கக்
காதுவோர் மகிழ வூதுவோ ரோதையும்
தட்டினுங் கொட்டினுந் தகைந்தெழு சும்மையும்
பம்பையுங் கொம்பும் பரப்பொலி மிகையும்
இருப்புச் சட்டைகள் இடித்தெழு துழனியும்
விருப்புடன் மகிழ்வோர் சிரிப்புடன் மயங்கக்
காவல் செய்யுங் கதநாய்க் குரலும்
பாவ லாளர் பாட்டிசைக் குரலும்
பரிகனை குரலும் குரைகழற் குரலும்
விரிதிரை வேலைக் குரலென வொலிப்பப்
படமா டங்கள் பத்துநூ றாயிரம்
இடைபல நகர மெழுப்பிமுன் னிருக்க
வலக்கை வேலும் இடைக்கை வாளும்
தலைமுதற் கால்வரை தகட்டிருப் பங்கியும்

இடத்தோளிர் வாளும் ஏந்தின னாகிக்
கதித்த சொல்லன் கனலெழு கண்ணன்
மதித்த நெஞ்சன் மால்வரைத் தோளன்
ஆளியும் அரியும் அகல உதைப்பன்
கூளியும் பேயும் குலுங்க விழிப்பன்
கான்மேற் செல்லும் வான்பரி யேறிக்
கடிதினி லுன்றன் நாடடை மனத்தன்
அன்னவற் காட்செய் தின்னுயிர் காப்பாய்
மன்னவ நிற்கே மங்கள மெய்த.

நந்தன்:—[நகைத்து] தூதரே! மிகவும் அழகாய்ச்சொன்னீர். வெகு சாமர்த்தியமாய் ஒருண்மையைக்கூட மறைத்திருக்கிறீர். பாஞ்சாலன் உங்களைச்சரணடைந்தது உண்மைதானோ! நம் நாட்டுத் தூதர்கள் வேறுவிதம் சொன்னார்கள். உங்களரசன் தனக்குள்ள யுத்தசாமர்த்தியமுழுமையுங்காட்டியும் அவனை வெல்லமுடியாமல் இரவில் அவன் படையாளரும் சேனைத்தலைவரும் தூங்கும்பொழுது முன்புறம் தாக்கவலியற்றவனாய்த் திருடன்போல் ஒருவருமறியாமல் ஆற்றைக்கடந்து பின்புறம் தாக்கினனாம்! எங்கள் தேசத்தில் இத்தகைய யுத்தம் மகா பாபயுத்தமாகும். அங்ஙனம் செய்தோரை க்ஷத்திரியஜாதியைவிட்டு விலக்கிவைப்போம். அவரோடு உணவும் அருந்தோம். இன்புறும்வாழ்வினும் எதிர்சென்றுதவோம். அவர் மரபே தீமரபாய்ச் சிதைந்தழியும். மேலும், உங்கள் அரசன் தனக்குப் போர்வலி மிகுந்துளதென்று தானே யுத்தசந்ததனைய்க் கிளம்பி, அமைதிபெற்று மகிழ்ச்சியோடு வாழ்ந்த அநேகம் ராஜ்யங்களை அதர்மயுத்தபரம்பரையாற் சீர்குலைத்து நிரபராதிகளான அளவிறந்த மாந்தரையழித்துப் பயிர்களின் விளைவைக் கெடுத்து, உயிர்களின்வாழ்வைத்தொலைத்து, ஜயபேரி அடிக்கின்றனன் போலும்! எங்கள்மரபிலோ இது மகாபாபிகளின் கருமமாகும். கப்பங்கொடாத சிற்றரசர்மேலும் நாட்டைக்கவர்ந்த மாற்றார் மேலும் பசுவைக்கவர்ந்த பகைவர்மேலும் பகையளித்துதவும் தகைமையோர்மேலும் இத்தகைய மற்றுஞ்சில குற்றஞ்செய்தோர் மேலுந்தான் நாங்கள் போர்புரியலாம். அப்போருக்குக் காலமும் களமும் இடமும் நடுவெளியும் குறிப்பிடல்வேண்டும். படையொத்த பகைஞரே பொரற்குரியர். வில்லெடுத்த வீரர் வாளெடுத்தோர்

மேல் எய்யார். இருவரும் மல்லரைக்கொல்லார். வாகனமூர்வாரும் அங்ஙனமே. குதிரைவீரர் காலாளைக் காதார்; கரியினர் பரியினரை மோதார்; தேரோர் தேரோரைத்தவிர மற்றியாரையும் பாரார்; அர்த்தரதரும் மகாரதரும் அதிரதரும் தத்தமக்கொத்த தகைமைசால் தேரினரையேஎதிர்த்துப்பொருவர்.மேற்படுதகைமையர் கீழ்ப்படுகிழமையர் தம்மேற் போர்தொடர்ந் தூறுசெய்யத்தொடங்கினலன்றித் தாம் முதலில் அவர்மேற் போர்தொடங்கார். இருவர் எதிர்த்தபோரில் இளைத்தவர்க்குதவியாகப் பொருவது கடனன்று. மறைநீதிவழுவாதுற்ற புறநாடழித்தல் மகாபாதகமாகும். இவ்விதி பிறழ்ந்துகொல்பவர் வீரசொர்க்கம்பெறுது கொலைக்குற்றத்துக்கு ஆளாவர். இத்தகையவிதிகளிற் சிறிது பிறழ்ந்து கௌரவரை வென்றதனலன்றோ பஞ்சபாண்டவரும் படிபுரக்காதழிந்தனர்; கண்ணன்காத்த மண்ணும் கடல்கொண்டொழிந்தது. தம்முயிரினும் பெரிதாய்த் தர்மத்தைப் பாதுகாத்து மன்னுயிரைப்பேணி உலகளிக்கும் அரசனொருவன்மாட்டு உங்கள்தலைவன் பாபயுத்தஞ் செய்து படையழித்தமையின் அவ்வளவு கொலைக்குற்றத்துக்கும் அவன் ஆளாய்க் கூட்டியபடையும் ஈட்டியபொருளும் சிதைந்து, வலியும் வாணளும் குறைந்து, சீரும் செருக்கும் இழப்பனென்றறிமின். மறப்போரால் வென்று கைக்கொண்ட நாடுகளைச் சற்றேனும் ஆண்டனுபவித்த மன்னரைக் கண்டிலம். அத்தகையோர் வெற்றியோடு மீண்டவுடன் கூற்றுவன்முகத்திற்றுன் விழிப்பர்; அவர், அழியாநரகிடை அநந்தகாலம் வருந்துவர். இத்தகைய போர்புரியும் மன்னன் உங்கள் தேசத்து வியாபகத்தெய்வமென்னின் உங்கள்மதத்தின்பெருமை நன்குவிளங்குகிறது. நீவிரோ இவ்விந்து தேசத்திற்கு நாகரிகவிளக்கெடுத்துவந்தீர்! அவ்விளக்கைச் சிந்துநதிக்கரைவந்தபின் பார்த்திரா? அந்நதிக்கரையில் வீசும் காற்றில் அஃது அவிந்துபோயிருத்தல்வேண்டும். இல்லையாயின் பரிதிமுன் மின்மினிபோல் ஒளியின்றிக் கருத்திருக்கும். இருப்புச்சட்டையும் வில்லும் வேலும் வாளும் உடையீராதலின், கயிற்றிற்கட்டிய கல்லுண்டையராய் எதிர்ப்படுமிருகத் தெறிந்ததைக்கொன்று,

பச்சையாய்த் தின்று பசியாறிடும் உங்கள் அயல்நாட்டாரைக் காட்டிலும் நீங்கள் நாகரிகமுடையவரென்பதில் ஐயமில்லை. நீவிர் தோலுடையுடையீர், துணிகண்டறியீர். பாரசீகனுக்கு உதவியாய்ப் பாஞ்சாலன் அனுப்பின குதிரைவீரர்மாட்டன்றோ நீவிர் பட்டாடையும் பஞ்சுத்துணியும் முதலிற் கண்டீர். பரமரும் சீனரும் எங்களைப்போன்ற நாகரிகமுடையவர்களே. அவர்களிடத்தும் உங்கள் விளக்கு உதவாதுபோகும்; ஆதலின் உங்கள் தலைவனிடம் கடிதிற்சென்று நம் நாட்டெல்லையோடு திரும்பிச்செல்லும்படி நாம் உத்தரவிட்டதாகச்சொல்லுங்கள். அதனை அவன் மீறுவானேல் தர்மயுத்தத்துக்குச் சந்நத்தனாகச் சொல்லுங்கள். அதர்மமாய் யாதானுமோருயிரையும் கொல்லத்துணிவானாகில் யான், என்

சேனைத் தலைவரும் சினப்பெரு வீரரும்
செருக்களத் தெய்தா தொதுங்கி நிற்க
ஒற்றைக் குதிரையி னொருவா ளேந்திப்
பற்றற நீத்த பரிசன னாகி
முற்றிய வீரர் முடியச் சாடிச்
செற்றுக் களைந்தென் சினக்கன லாற்றிப்
பிணக்குவைப் பொருப்பும் நிணப்பொதி சேறும்
குருதிக் கடலும் சொரிதரு மாறும்
வீரர் நீத்த வெறும்படைக் காடும்
சேரும் களமாம் சிற்றுல கொழிய
வூளை யோதையி னுழைநரி யழைப்பக்
கூளியும் பேயுங் குனித்தக மகிழச்
சுற்றிய கழுகே கொற்றக் குடையாக்
குற்றக் கொலைஞர் குவிபிணக் குப்பைக்
கற்றஞ் சேர வறமுடி சூடி
வெற்றித் தாரொடு மீண்டென் னகரம்
போர்த்த வுடையிற் பொலிகுரு திப்புனல்
கீர்த்திச் செக்கர் கிளர்ந்த தொப்பப்
பானிற வெள்ளைப் பரியின் மேனி
பஞ்சி யூட்டிய தென்னப் பொலிய
வஞ்சகர் வாழ்வை வதைப்ப னென்றும்
விஞ்சிய தோள்வலி வீரற் குரைமின்.

தூ-த:—உங்களுடைய யுத்ததர்மமெல்லாம் எங்களுக்கு மிகுந்த நகைப்பையுண்டாக்குகின்றன. யுத்தத்திற்கூடத் தர்மமா? தோள் வலிமிகுந்தவர் குறைந்தவரைத் தம் வலியால் அடக்குதல்தானே யுத்தம்? இதில் வெற்றியொழிய வேறெதிலும் கருத்துள்ளவன் வீரனாகவேமாட்டான். தோள்வலியின்றித் தோல்வியுற்றழிபவர் எந்நாளும் தர்மநியாயத்தைப்பற்றித்தான் பேசுவார்கள். வலியுடையோர் அதற்கு இணங்குதல் மனவலியின் குறைவாகும். மேலும் ஐந்நூறுகாவதத்துக்கப்பாலுள்ள அயல்நாட்டுவேந்தராகிய எம்மரசருக்கு நும்தேச யுத்தநியாயங்கள் தெரியா. அவைகளை அநுசரிக்கவும் அவர் கடமைப்பட்டவரல்லர். இன்னும் ஒரு செய்தி சொல்லுகிறேன். பாதியுலகைவென்று தன் ஆஜ்ஞாசக்கரத்தைச் செலுத்திவந்திருக்கும் எம்மரசர் பாதிவான் கடந்து உச்சியில் விளங்கும் கதிரவன்போல் உக்கிரம் மிக்குப் பொலிகிறார். இச்சமயம் அவர்கோபத்துக் காளாகும் மன்னரெவரும், காலையில் மறையாது கலந்துநின்ற பனிபோல் இருந்த இடமும் போன இடமும் தெரியாது மறைவர். ஆதலின் நீங்கள் அவரைச் சரணடையாதமட்டில் எங்கள்தேசவழக்கப்படி நாங்கள் செய்யும் யுத்தத்திற்கு முன்னிற்கவேண்டும்.

நந்தன்:—உங்கள் தலைவன் தான் ஏதோ பாதியுலகைக் கடந்ததாக வீணெண்ணங்கொண்டு தன் சேனையையும் உயிரையும் இழக்காவண்ணம் அவனிடத்திற்போய் உடுக்க உடையும் எடுக்கப் படையுமின்றிக் காட்டிலலையும் கபவர்கள்மாட்டே அவன் உச்சியிற்றோன்றும் பரிதியாவானென்றும், சிந்துநதிதான் அவனுலகின் கீழெல்லையென்றும், அதில் அத்தமயமாய்த் திரும்பும்படிக்கும் நான்சொன்னதாகச் சொல்லுக. அந்நதி கடந்து அவன் என்னுடைந்தால் முன்சொன்னவண்ணமே செய்வேனென்றுரைமின்.

தூ-த:—அரசே! எம்மரசராணையால் யாம் இனிக் கூறுவது சிறிதே உளது. எங்கள் வெற்றியைக்குறித்துத் தெய்வந்தொழ நாங்கள் நடத்தும் உற்சவத்திற் சிலமாதங்கள் கழியும். அதன் பிறகுதான் மறுபடி போர்புரியத் தலைப்படுவோம். அதற்குள் நீர் எம்மரசரைச் சரணடையாவிடின் அவரது சினத்துக் காளாவீர்.

கங்கையின் நன்னீர் பொங்கிப் பாய்தலிற்
செந்நெலும் மரனும் செழித்து வளரவும்
சோலையும் காடும் சூழ்ந்தினி திருக்கவும்
மக்களும் மாக்களும் மகிழ்மலி வாழ்வோ
டெக்குடி யினரும் ஏத்துபு திரண்டு
வானகத் தோரும் ஈனமுற் றிரங்கப்
பல்லாற் றானும் பண்புடைத் தாகி
எல்லாச் செல்வமும் எய்துமிந் நாட்டியல்

யாங்கூற எம்மன்னர் கேட்பின் இதனை வென்றுகொள்ளாது தந் தேசத்தை ஒருக்காலும் நினையார்.

நந்தன்:—இது வீரமும் கல்வியும் மிகவும் விளையும் நாடு. இதில் மாற்றார்வலி செல்லாது. அதன்மம் இதன் எல்லையையும் அணுகாது.

[தூதர் வணங்கிச் செல்லுதல்.]

---

## அங்கம்-I.
## களம்-3.

---

இடம்:—பாடலீபுரத்தில் ஒரு பூஞ்சோலை.
பாத்திரங்கள்:—சுலோசனை, சந்திரன், சாகரன்.

சுலோசனை:—(சோலையைச் சுற்றிநோக்கி) ஆ! ஆ! ப்ரும்ம சிருஷ்டியின் மேன்மையே மேன்மை. மனிதன் கடவுளைப்போல் தானும் பிரகிருதியிலுள்ள பொருள்களைப் பலவஸ்துக்களாலும் செய்யத்துணிகிறான்; காகிதத்தாலும் மெட்டியாலும் பூக்களும், மண்ணாலும் மரத்தாலும் காய்கனி வகைகளும் செய்கிறான். இவை யெல்லாம் பேதைமையன்றோ? அவன்செய்யும் பூக்களில் வண்டு மொய்க்குமா? தேனூறுமா? வாசனையுண்டா? பழங்களில் மண முண்டா? சுவையுண்டா? காய்கள் எதற்கேனும் உதவுமா? கரைத்துப்பூசும் வர்ணங்கள் படைப்பிலுள்ள நிறங்களைச் சிறிதே னும் நிகர்க்குமா? இந்தத் தாமரைப்பூவில் நாளத்தின் பச்சை இதழடியின் வெளுப்பிலும் அவ்வெளுப்பு மேலிதழின் சிவப்பிலும்

அடங்கிமறைவது தெரிகிறதா? அவ்வவ்விடத்தில் அந்தந்தநிறம் மேம்பட்டிருப்பினும், நிறம் மயங்கும் நடுவிடங்களே மிகவும் அழகாயிருக்கின்றன. இவ்வழகும் மணமும் தேனும் இம்மலர்களுக்கு என்னபயனைத்தரும்? நாம் கண்டு மோந்து களிக்கவும் வண்டுகள் பசியாறவுமே உதவுகின்றன. மலர்களும் மதிப்படைந்து மாந்தரால் தலையில் அணியப்படுகின்றன. மணமறிந்து நிறங்கண்டு தேடிவரும் வண்டுகள் தேனுண்டு மகரந்தத்தைக் குலைத்து விட்டுக் காய்க்கு விதையிட்டுச் செல்லுகின்றன. இந்தக் காயன்றோ பூவுக்கு முடிவையுண்டாக்குகின்றது. நம்போன்ற பெண்கள் வாழ்வும் இங்ஙனமேயன்றோ? மாதர்வனப்பே மைந்தரை அவர்பாற்படுத்தி இருவரும் வலியழிந்திறக்கக் காரணமாகின்றது. உலகத்திலுள்ள சகலஜந்துக்களிலும் ஆணுக்கே வனப்புமிகுந்திருக்கவும், பெண்கள் அவைகளைத் தொடர்ந்துசெல்லவும் மனிதஜாதியில்மட்டும் மாதர்களே வனப்பின்மிகுந்தவராகின்றனர். பகுத்தறிவுள்ள மனிதனைப் பிணிக்க வனப்பெனுமிதுவே வலியுறு கயிறும். பெண்ணுலகன்றோ ஆணையும் பெண்ணையும் அழித்துத் தன்வயிற்றில் மறுசிருஷ்டி செய்கிறது. தானீன்ற காய் தனக்கே கூற்றமாய் அழிகிறது. உலகைப் படைத்துக் காத்தழிப்பதும் பெண்ணுலகுதானே? அதனாலன்றோ சக்தியைப் பெண்ணுருவாய்ச் சொல்லுகிறார்கள்? பிறப்பெனும் துன்பமும் மூப்புப் பிணி சாக்காடும் மாதரில்லையெனின் இல்லையாகுமே. உலகைப்படைத்தழிக்கும் பாபத்துக்கு ஆளாகாமல் பெண்கள் கன்னியராயிருந்து மாய்தல் மிக வுயர்வாகும். ஆனால் என்விஷயத்தில்மட்டும் சந்திரன்வனப்பும் அவர் புஜபலமுமன்றோ என்னை அவர்பாற்படுத்துகின்றன. என்மனத்தை எவ்வளவு திடப்படுத்திக்கொண்டாலும்,

மலரின் மணமும் மதுகரத் தொலியும்
மந்த மாருதமும் சந்திர னொளியும்
தாரகைக் கணமும் தயங்கு மிவ்விடம்
வீரநீ யின்மையின் வெற்றிட மாகும்.

[சந்திரன் படபடப்போடு வேகமாய் ஓடிவரச் சுலோசனை அவனைக் கண்டு மரத்தடியில் ஒதுங்கிநின்று,] ஆ! ஆ! இதென்ன ஆச்சரியம். அமர்ந்த நடையும் குளிர்ந்தகண்ணும் சிரித்தமுகமுமுடையராய் வரும் என்னருமையன்பர் இவ்வளவு படபடப்போடுவருவதற்குக் காரணமென்ன? ஏதேனும் அவர்க்குத் தீங்குநேர்ந்ததோ? [சந்திரன் அணுகக் கைகூப்பி வணங்கி,]

விற்பிடித்த கைக்நடுங்க வியர்த்தழுங்கத் திருமேனி
சொற்பிதற்ற மூச்செறியச் சுழன்றலையக் கண்ணிணையும்
பொற்பழியப் புகுந்ததென்னென் புண்ணியனே புகன்றிடுவீர்
முற்பிறவிப் பெரும்பேருய் முன்னியுமைத் தொழுமெனக்கே.

சந்திரன்:—சுலோசனு! இப்பொழுதே நான் உன்னைவிட்டுப் பிரிந்து இம் மகததேசத்தின் எல்லைகடந்து வேற்றுநாடு செல்ல வேண்டும்.

சுலோசனை:—[பதறிப் பக்கத்திலுள்ள மரத்திற் சாய்ந்து அயர்ந்து] ஐய! என்னைவிட்டு இங்ஙனம் செல்லநேர்வானேன்?

சந்திரன்:—யானெய்த மான்மேல் அம்பெய்தவன் யாரோ வேடனென்று நினைத்து மன்னன்மகனை மார்பிலெய்து வீழ்த்தி விட்டேன். அவன் ஒருக்கால் இறக்கவுங்கூடும்.

சுலோசனை:-மதியின்மிக்க மாண்புடைச்சிங்கமே! நீர் அவனைப் பரிசனங்களால் அரசர்புதல்வனென்று அறியவில்லையோ!

சந்திரன்:—அவன் தனியேநின்றெய்தான். அவன் விழுந்த வுடன் பக்கத்திற்சென்று பார்த்தபின்னரே அரசர்புதல்வனென் றறிந்து மனம்வருந்தி அவன்காப்பாளர்வருவதன்முன் வேறுவழி யாய் வந்துவிட்டேன்.

சுலோசனை:—அங்ஙனமாயின் நீர் இத்தேசத்தைவிட்டு என் ஓடவேண்டும்? அரசர்புதல்வன் இறப்பின் உம்மைச்சுட்டிக் குற் றஞ்சாட்டற்குரியார் ஒருவருமில்லையே? அவன் பிழைப்பின் நீர் எய் தது தர்மவிரோதமில்லையே? அது குற்றமாகுமா? அவனும் உம் மைத்தெரிந்து ஊறுசெய்யப்போகிருனு?

சந்திரன்:—என்னை யாரும் எளிதில் தெரிந்துகொள்ளலாம். என்னம்பில் அடையாளம் இருக்கிறதே.

சுலோசனை:—அம்பை அவர்மேல் ஏன் விட்டுவிட்டுவந்தீர்? எடுத்துவரக்கூடாதா?

சந்திரன்:—அம்பைப் பிடுங்கியெடுப்பின், குருதி குமிழியிட்டுப் பெருக அவன் உடனே இறப்பன். அங்ஙனம் அவன் இறப்பதினும் யான் இறப்பதே மேலென்று வந்தேன். எப்படியும் அரசன் என்னைத் தன்புதல்வனைக் கொல்லநினைத்த பாவியாயெண்ணிப் பகைப்பன். அரசனைப் பகைத்துக்கொண்ட குடி அந்தநாட்டில் உயிர் வாழ்தல் முடியுமா? ஆதலால் யான் போகவேவேண்டும்.

சுலோசனை:—என்னன்பினுக் கரசே! நீர் இவ்விடம்விட்டுச் செல்லுவதானால் நானும் உம்முடன்வருவதில் உமக்கொன்றும் கஷ்டமில்லையே. காடோ மலையோ நாடோ தொலையோ எவ்விடத்திலும் நான் உம்பக்கத்திலிருந்து உமக்கிதமானவற்றைச் செய்துவருவேன். மனமும் உயிரும் உம்மைப் பின்றொடர்ந்துவர வெற்றுடல் இங்கே கிடந்து மிக வருந்தித் தவிக்கும். அதையும் அழைத்துக் கொண்டுபோகலாமே.

சந்திரன்:—பேதாய்! நீ ஆராயாது பேசுகிறாய். மணமாகாத நீ ஒரு புருஷனைத் தொடர்ந்துசெல்லற் குரியையல்லை. மேலும், நீ என்னோடுவரின் ஒவ்வோரிடத்திலும் நம்மைப்பற்றி யார்? எவர்? என்று விசாரணைநிகழும். நான் தனியே செல்லின் யாரோ தனிவழிப்போக்கனென்று கவனியாது விட்டுவிடுவர். நீ உன் அருமைத் தமயனும் என் உயிர்நண்பனுமான சாகரன் பாதுகாப்பில் இருந்துவா.

சுலோசனை:—நீங்கள் செல்லும் நாடு இன்னதென்று தீர்மானித்துவிட்டீர்களா? அந்தநாட்டரசன் வலியுடையனாயிருத்தல் வேண்டுமே? இல்லையெனின் உங்களைத் திருப்பித்தரும்படிகேட்டு அவன்மேல் மகதன் போர்தொடங்குவானே.

சந்திரன்:-யான் அடையும் நாட்டை உனக்குத் தெரிவித்தால் நீ எப்படியாவது அங்கே வரத்தலைப்படுவாயாதலின் யான் செல்லும் நாட்டிற் சேர்த்தியடையின் உனக்குத் தூதனுப்பித் தெரிவிப்பேன்.

சுலோசனை:—ஆண்பிள்ளைகள் மனவுறுதியுடையோர்; தாமரையிலையில் நீர்போல் அவர்மனம் ஒன்றினும் பற்றிலாது நிற்கும். பெண்கள்மனமோ அங்ஙனமில்லை; நீரிற் சருக்கரையைப்போல அன்புபொருந்திய இடத்தில் தன்குணம் மாறி அப்பொருளின் குணத்தையேயடைந்து கரைந்துவிடும். நீர் உலகிலுள்ள பலரினும் மேம்பட்ட கீர்த்தியும் சீர்த்தியும் பெறமுயன்று அம்முயற்சியில் என்னை அடியோடு மறந்துவிடவுங்கூடும். பெண்ணாகிய எனக்கு இரவும் பகலும் உம்மை உன்னியுன்னி அகம் கரைந்து உடல்வாடுவதைத்தவிர வேறு யாதொருவிசாரமும் இல்லையே. இளையளாகிய என்னை இங்ஙனம் விட்டுவிட்டு என் மனத்தையும் உயிரையும் உடன்கொண்டு நீர் வேறுதேசம் சென்றுவிட்டால், நீர் தூதனுப்பி என்னை அழைத்துக்கொள்ளும்வரை நான் உயிர்வாழ முடியுமா? மேலும் பருவமடைந்த பெண்கள் வெகுநாள் மணமின்றியிருப்பிற் பலரும் ஏசுதற்கிடமாகுமே. இதையெல்லாம் சற்றும் உன்னாது, 'நீ இரு, நான் போய்வருகிறேன்' என்று மிகவும் எளிதாய்ச்சொல்லிவிட்டீர்களே.

சந்திரன்:—என் மனமறிந்தொழுகும் மாண்புடை மணியே! யான் உன்னை மறந்துவிடுவேனென்றும் உன்மனத்தில் தோன்ற நான் என்னபாவஞ்செய்தேனோ? மாதர்துயரம் மனத்தடங்காதெழுந்து சிதைந்தழியும். ஆடவர்க்கோவென்றால் அடிநெஞ்சில் அழுந்திக்கிடந்து ஆறாத்துன்பஞ்செய்யும். இன்றுதொட்டீராண்டு மட்டும் என்னை எதிர்பார்த்திரு. அதற்குள் யான் செய்தியனுப்பாவிடில் அதன்பின் நீ என்னைப் பார்க்கமுடியாதென்று முடிவு செய்துகொள்.

சுலோசனை:—என் சித்தத்திற்கேற்ற ரத்தினமே! இரண்டாண்டுகாறும் என் உடலைப் பேணல் இயலாது. ஓராண்டுமட்டுமே உம்மைநினைந் துருகுவேன். என் வழிபடுகடவுளை இரவும் பகலும் பூவாலும் தளிராலும் பூசித்து உமக்கு வெற்றியும் நன்மையும் தரும்படி வேண்டுவேன். அவ்வோராண்டு சென்றும் உம்மைப் பற்றி அறியாதிருப்பின் உடனே உயிர்மாய்ப்பன். இது திண்ணம். [சாகரன் வர] அதோ என் தமயன் வருகிறான்.

சந்திரன்:—ஏதோ நம் நற்றவப்பயனால் உற்றவிடத்திலுதவு தற்கு என் நண்பன் வந்தனன். நண்ப! என் அவசரம் இன்னதென்று உனக்குத் தெரியுமா?

சாகரன்:—நன்றாய்த் தெரியும். அரசிளங்குமாரனுக்கு இனிச் சற்றும் பயமில்லை. உன்னைப்பற்றி அரசன் மிகவும் கடுமையாய் விசாரித்தனனும். நீ இனிச் சிறிதும் இங்குத் தாமதியாமல் தலை மறைவாயிருப்பது நன்று.

சந்திரன்:—அங்ஙனம் செல்லும்பொருட்டே யான் உன்னிடம் விடைபெறவந்தேன். சுலோசனையைக் கண்டு கேட்டுக்கொண்டிருந்தேன். [இருவரையும் நோக்கி] எனக்கு விடையளிப்பீராக.

சாகரன்:—உன்பேரும் முத்திரையும் நம்நாடுமுழுதும் அனுப்பப்பட்டுள்ளன. நீ எங்கிருந்தாலும் பிடித்துக்கொண்டுவரும்படி அரசன் கட்டளையிட்டிருக்கிறான். ஆதலின் நீ உன் அடையாளம் பதித்த வில்லையும் உன் அம்புக்கூட்டையும் என்னிடம் வைத்து என்னுடையவைகளைக் கைக்கொண்டுசெல். யான் அவைகளை ஒளித்துவைப்பேன். என் ஆருயிர் நண்ப! உனக்கு எல்லாநன்மைகளும் உண்டாகுக. நீ சென்றவிடத்திற் செல்வமும் சீர்த்தியும் பெற்று எம் மனங்குளிர மாண்படைவாயாக.

சந்திரன்:—பெண்ணே! நான் போய்வருகிறேன்.

சுலோசனை:—ஆகா. என் தமயனுக்கு உம்மைப்போன்ற சிநேகிதர் இனி ஒருவரும் கிடைக்கமாட்டார்கள். அவர்தங்கையை மறந்தாலும் அவரை எந்நாளும் மறவாதிருப்பீராக.

சாகரன்:—[அழுதுகொண்டு] நண்ப! சென்றுவா. நீ வேறு நாட்டிற்போய் என்னை மறந்துவிடினும் யானும் இந்நகரும் உள்ளவரை நாமிருவரும் இணைபிரியாதிருந்ததை யான் மறவேன். இனி உன்னை மறுபடிகாணும் நாளே நன்னாளாகும். காலக்கழிவு செய்யாதே.

[சந்திரன் போதல்.]

சுலோசனை:—அண்ணு! உமக்கு மிகவும் அருமையான நண்பரோடு நீரும் ஏன் போகக்கூடாதோ? அவர் தனியேசென்று வருந்துவதினும் நீரும் அவருக்கு உதவியாய்ச்சென்று அவர் நம் நாட்டெல்லை தாண்டினவுடன் நீர் திரும்பிவிடலாமே?

சாகரன்:—குழந்தாய்! நம் நாட்டெல்லை நான்குதிசைகளிலும் ஐம்பதுயோசனைகள் உள்ளன. அவரை வழிவிட்டுத் திரும்பக் குறைந்தது நான்குமாதங்களாகுமே? நீ பருவமடைந்திருத்தலின் உன்னைத் தனியேவிட்டுச்செல்லல் முறையன்று.

சுலோசனை:—நானும் உடன்வருகிறேன்; நாடுகாண்செலவு (—தேசசஞ்சாரம்) மிகவுஞ்சிறந்ததென்று பெரியோர் கூறுவரன்றோ?

சாகரன்:—ஆம். ஆயின் அதற்கு இது காலமன்று. மணந்த பிறகு கணவனேடுசெல்லுதல் முறையாகும்.

சுலோசனை:—[கண்களில் நீர்ததும்ப வாய்குழறி] எனக்கு மணமே வேண்டாம். இன்னும் சிலநாள் உயிர் உடலில் தரிக்கட்டும். பிறகு பார்த்துக்கொள்ளுவோம். [போதல்.]

சாகரன்:—ஆகா! இவள் கண்களில் நீர்ததும்பியது, நாடுகாண் செலவு (—தேசசஞ்சாரம்) இவளுக்கு இயையாதென்றதனலா? இவள் மணமே வேண்டாமெனும்படிக்கும் உயிர்தரித்தலுக்கிடையூருகவும் இப்பொழுது என்னநேர்ந்தது? இவர்களுக்குள் மிக்கிருக்கும் உள்ளன்பை யான் இதுவரை அறிந்திலேன். எல்லாவற்றிற்கும் தெய்வமொன்றிருக்கிறது. அது விட்டவழி விடுகிறது. [போதல்.]

---

## அங்கம்-I.

### களம்—4.

---

இடம்:—பாடலீபுரத்தின் பக்கத்தில் ஒரு குடிசை.

பாத்திரங்கள்:—சாணக்கியனும் சந்திரனும்.

சாணக்கியன்:—[ஒரு காய்ந்தபுல்லைக் கையிலெடுத்து நெருப்பைக் கொளுத்தி எரித்துக் குவளைத்தண்ணீரிற் கரைத்துக்கொண்டு] 'பகை கடிதல்' என்றால் நமக்கு எவ்வகைத்துன்பமும் விளைவிக்கக்கூடிய

எப்பொருளும் உலகில் இல்லாமற்செய்தலாம். படைப்பிலுள்ள பொருள்கள் ஒன்றற்கொன்று முரண்பட்டுநிற்கின்றனவா? உதவியாயிருக்கின்றனவா? இந்தத் தத்துவம் மனவுணர்ச்சியைப் பொறுத்தது. அன்புசெய்யுமிடத்துப் பகைவிளையாது. பகைவிளையுமிடத்தும் அன்புசெய்யலாகாது. ஆனால் பகையென்பது ஒருபடைப்பமைதியாகுமா? அதற்கு உலகநடையிலும் ஓரிடமுண்டா? எப்படி? எதற்காக? என்னும் விஷயங்கள் பல்பெருங் கலைகளிற் கண்டறியக்கிடக்கின்றன. அருள்வடிவாகிய கடவுளுக்கும் இரக்கம் குடிகொண்டிருக்கும் முனிவருக்கும் அசுரரும் அரக்கரும் பகைவராவார்களானால் படைப்பின் தத்துவத்தில் பகைக்கு மிகவும் சிறந்ததோரிடமும் பயனும் இருக்கவேண்டுமல்லவா? ஆனால் அதன் விளைவுமட்டும் பலபடியாயுள்ளது. அது தீங்கேயன்றி நன்மை விளைப்பதில்லையென்பர்; ஆனால் தீங்குக்கும் தீங்கு விளைக்குமாதலால் நன்மை எஞ்சச்செய்யும். உடன்கடிந்தழியாப் பகை தொடர்ந்தெழுந்தொறுக்குந் தகைமைத்தன்றோ? ஆதலின் அது நேர்ந்தவிடத்து நிலையழியக்கடவது. என் காலில் இடறிய புல்லைச் சுட்டுக் கரைத்துக் குடித்தலன்றி அது எனக்கியற்றிய இடர்க்கு மாறு வேறில்லை; அதை வேரோடு கெடுத்தல் விதியேயாகும்.

சந்திரன்:—[வந்து வணங்கிநின்று நமோ குரவே நமோநம:] குருநாதரே! வணங்குகிறேன்.

சாணக்கியர்:—தீர்க்காயுஷ்மான்பவ! ஜயவிஜயீபவ! சந்திர! என்ன இவ்வளவு பதற்றம்? என்ன அவஸரம்?

சந்திரன்:—யான் அயல்நாடுகாணச் செல்லுகிறேன். தங்கள் செய்ய பங்கயப்பதங்களைச் சென்னியில் தாங்கிச் செல்ல வந்தேன். விடைதந்தருளவேண்டும்.

சாணக்கியர்:—என்ன? சட்டென்று நினைத்துக்கொண்டாய். எப்பொழுதும் வீரனாகிய நீ உலகையறியச் செல்லவேண்டியதுதான். ஆனாலும் இப்பொழுதே புறப்படுவானேன்?

சந்திரன்:—என் அவசரத்தைச் சாகரன் சொல்வான். எனக்குச் சென்றுவர விடையருளுங்கள். எனக்கு வில்லும் மல்லும் பயிற்றுவித்த ஆசிரியர்பெருமானாகிய நிர்மலகுப்தரவர்களிடம் விடைபெறப் பொழுதில்லையாதலின் அவருக்காகவும் தாங்கள் விடையளித்து அருள்புரியவேணும்.

சாணக்கியர்:—சென்றவிடமெல்லாம் சிறப்பெய்திச் செல்வர் சிகாமணியாய் விளங்க, உனக்கு ஈசன் அருள்புரிவான். எத்துறையிலும் அறத்தைக் கைவிடாதே. அது உன்னை எப்பொழுதும் காப்பாற்றும்.

[சந்திரன் செல்லுதல்.]

---

## அங்கம்-II.

### களம்-1.

---

இடம்:—சாகரன் மாளிகையில் ஓரறை.

பாத்திரங்கள்:—சாகரன், சுலோசனை, யமுனை.

[சுலோசனை, வாடினமுகத்துடன் கன்னத்திலும் தலையிலும் கை வைத்துக்கொண்டிருக்க,]

சாகரன்:—தங்காய்! சென்ற ஒருமாதகாலமாக நாடோறும் உன்னுடல் வாடி முகத்தின்களை மறைய நீ வருந்துவானேன்?

சுலோசனை:—அண்ணா! ஏதோ ஒரு தலைவலியும் சுரநோயும் என்னைப்பற்றி வருத்துகின்றனவென்று மருத்துவருரைத்து மருந்து உதவுகின்றார்களே. அம்மருந்திற் சற்றுக் குணந்தான்.

சாகரன்:—மருந்திற் சற்றும் குணமென்று எனக்குத் தோற்றவில்லையே? அதிருக்கட்டும். நீ அடிக்கடி கண்ணீர்வார்த்துத் துக்கிக்கக் கண்டிருக்கிறேன். உடலில் நகையணியாமலும் நல்லுடையுடுத்தாமலும் குழலைவாரிப் பின்னிக்கொள்ளாமலும் முகத்திற் பொட்டிடாமலும் முப்பதுநாட்கள் கழித்திருக்கின்றாய். முறுவலும் நகையும் முழுதும் மறந்தனை. இதெல்லாம் எதன் பொருட்டு?

சுலோசனை:—அண்ணு! நான் உமக்குச் சொல்லவேண்டுமா? உடல் நல்லநிலைமையிலிருந்தாலன்றோ உள்ளத்திற் களிப்பும் உடலை அழகுபண்ணிக்கொள்ள ஆசையும் முகத்தில் நகையும் ஒளியும் இருக்கும். உடம்பு பிணியால் வருத்தப்பட்டால் மனமும் குழைந்து வருந்துமன்றோ?

சாகரன்:—ஆம். நீ சொல்வது உண்மைதான். ஆயினும், உன்னிடத்தில்மட்டும் முதலில் உள்ளத்தைப்பற்றிய பிணிதான் பின்னர் உடலைத்தாக்கி ஊறுசெய்கிறதென்று எண்ணவேண்டியதாயிருக்கிறது. உடலைப்பிடித்துப் பின் மனத்தைத்தாக்கும் பிணியை மருத்துவருதவியால் விலக்கலாம். மற்றொருபிணியோ அங்ஙனம் விலகாது. உன்மட்டில் மருத்துவர்சிகாமணியான பாண்டுரங்க யோகியின்முயற்சியும் பயனற்றுப்போயிற்று. உன்முகத்திற் சற்றும் தீக்குறியின்மையால் பேய்க்குணமென்போர் பேச்சும் பொய்யாகும். ஆதலின் உன் மனநோயே உன்னை யிங்ஙனம் வருத்துகிறது. தெய்வவழிபாடும் துதியும் பூசையும் மிக்கயற்றலின் நீ ஏதோ ஒரு நன்முடிவைக்கருதி மனம்வருந்திக் கடவுளைவழிபடுகிறுயென்பது திண்ணம். என்மனத்திலுள்ளதை இயம்பவா?

சுலோசனை:—அண்ணு! கல்வியறிவுகளான் மிக்க தாங்கள் பேதையாகிய என்னைச் சோதிக்கலாமா? உங்கள் மனத்திலுள்ளது எதுவாயிருப்பினும் யான் அதைக் கேட்கவிரும்பவில்லை. யான் சொல்வதை நீர் நம்பாவிடின் அதுவும் என் காலக்கொடுமையே.

சாகரன்:—என் உயிர்நண்பனுன சந்திரன் இவ்விடம் விட்டுச் சென்றுவிட்டது என் காலக்கொடுமையன்றோ?

[சுலோசனை மூர்ச்சித்துக் கண்ணீர்பெருக விழல்.]

யமுனை:—[உள்ளே நுழைந்து சாகரன் திகைக்க] சாகரரே! இன்று நல்லசமயத்தில் வந்தேன். உமது நண்பன் எங்கேசென்றிருக்கிறுன்? இவ்வளவுநாளாக யான் அலைந்துகேட்டும் நீர் எங்கே சென்றுனே தெரியாதென்றுசொல்லிவிட்டீரே.

சாகரன்:—அம்மணீ! உம் அருமைப்புதல்வனை சந்திரன் பிரிவாற்ருது நீர் மிகவும் வருந்தி உயிர்மாய்ப்பீரென்று நான் இது காறும் உம்மிடம் உரையாதிருந்தேன். இனி ஒளிப்பது தகுதி யன்று. சீக்கிரத்தில் திரும்பிவருவதாகச் சொல்லிப் போயிருக் கிருன்.

யமுனை:—என்னிடத்தில் விடைபெற்றுக் காட்டுக்கு வேட்டையாடப்போனவன் முப்பதுநாட்களாகியும் வரவில்லையே. உம்மைக்கேட்பின் போன இடம் தெரியாதென்று இவ்வளவு நாளாய்ச் சொல்லிவந்தீர். இப்பொழுது சீக்கிரம் வந்துவிடுவா னென்று சொல்லுகிறீரே! சீக்கிரம் வரும்படியான இடத்திற்குச் சென்றிருப்பின் திரும்ப இவ்வளவுநாள் ஆவானேன்? பேதையாகிய என்னை இங்ஙனம் வருத்துவது உமக்குத் தருமமாகுமா?

சாகரன்:—நீர் சந்திரனைப்பற்றிப் படுங் கவலை எனக்கு மிகவும் ஆச்சரியத்தையுண்டாக்குகிறது. இருபத்திரண்டுவயதுடைய கட்டிளைஞனுய்க் கல்விகேள்விகளிற் சிறந்து, வில் முதலிய படைக ளிற் பயின்று, தேர்முதலான ஊர்திகளைச் செலுத்திப் பொருவ தில் வல்லோனுய்த் தோள்வலிமிகுந்து அஞ்சாத நெஞ்சுடையனுய் அனைத்துலகுமடக்கும் ஆற்றலுடையனுய் உள்ள சந்திரனைப்பற்றி இவ்வுலகில் ஒருவருமே வருந்தவேண்டியதில்லையே. வில்லிலும் மல்லினும் அவனை வெல்லவல்லோர் இவ்வுலகில் ஒருவருமில்லை. ஆயினும், பெற்றுவளர்த்த தாயாதலின் உம்முடைய மனம் தவிப் பது இயற்கையே. அறிவின்மிக்க உமக்கு நான் அதிகம் சொல்ல வேண்டா.

யமுனை:—சந்திரனைப் பிரிந்து என்கண்களிற் காணுதிருத் தலின் மனம் வருந்துவதைத்தவிர வேறு அவன் க்ஷேமத்தைக் குறித்துச் சற்றேனும் என்மனத்தில் ஐயமில்லை. அரசர் அரண் மனையில் ஐம்பதுவருஷத்துக்குமேல் சேவகம்செய்து வெற்றியினும் வீரச்செயல்களினுமே களிப்புற்று ஆண்மையும் தீரமும் திரண் டோருருவாய்ப்பிறந்து ஐந்தாண்டுநிறைவதற்குமுன்னமே அம்புக் கூடும் வில்லுமாய்க் கிளம்பித் தோட்டஞ்சுற்றித் தகளெழவோடி வேட்டந்தேடும் விறலிளங்குமரர் பலரை வளர்த்தெடுத்த எனக்கு

என்புதல்வன்வலி தெரியாதா? ஸஹவாஸவாஸனையினல் நானும் மனவலியுடையேனுதலின் நீர் சற்றும் அஞ்சாது என்னிடம் உண்மையையுரையும்.

சாகரன்:—அம்மணி! நீங்கள் முதலிற் சொல்லியபடி அரசன் சினத்துக்கு அஞ்சி நம் சந்திரன் இம்மகதநாட்டின் எல்லைகடந்து வேற்றுநாடுசெல்லநினைத்து ஓடிவிட்டான்.

யமுனை:—[கண்களில் நீர்ததும்ப] எங்குச் சென்றிருப்பான்? எங்ஙனம் இனித் திரும்பிவருவான்?

சாகரன்:—நீர் மனமஞ்சேனென்று சொல்லியதை நம்பி யான் உண்மையுரைத்தது தவறுயிற்றே! நீர் இங்ஙனம் மனந்தளர்வது சரியன்று. சந்திரனைப்போல என்னைப் பிள்ளையாக நினைத்திரும். நான் உம்மைத் தாயும் தந்தையுமாகக் கொண்டாடுகிறேன். இனி என்னகத்திலேயே இரும். அவன் எங்கேபோயிருப்பானென்று யாரால் ஊகிக்கமுடியும்? வடக்கிற் சீனனும், கிழக்கிற் பரமனும், தெற்கிற் கலிங்கனும், மேற்கிற் சிந்துநதிக்கப்பாற் சைந்தவனும் காந்தாரனும், இமயத்திற் பாஞ்சாலனும் காஸ்மீரனும் பேரரசர்களாய் ஆட்சிசெய்கிறுர்கள். அவர்களில் எவர்மாட்டும் நம் சந்திரன் பேரும் கீர்த்தியும் பெறற்குரியன். இவன்சென்றடைய இம்மன்னர்களில் எவர் நற்றவம்புரிந்திருக்கிறுரோ?

யமுனை:—என் அருமைச் சந்திரனுடன் நகமும் சதையும் போல் இடைவிடாது பழகிவந்த உமக்கு அவன் மனதில் இம்மன்னருள் யாரிடம் மிகுந்த மதிப்பென்று தெரியாதா? இவ்விடர்ப்பாடுற்ற காலத்தில் அத்தகையோரிடந்தானே அவன் சென்றிருத்தல்கூடும்.

சாகரன்:—அங்ஙனமெண்ணின் நம் நந்தரிடத்திலேதான் அவனுக்கு அளவிறந்த மதிப்பு உண்டு. ஆயினும், அஸ்தமயகிரியிலிருந்து கிளம்பிக் கிழக்குநோக்கிப் பல அரசரைவென்று வெற்றிமாலைசூடிவரும் அலக்ஷ்யேந்திரனென்னும் மகாவீரனைப்பற்றி நாங்கள் அடிக்கடி சம்பாஷித்திருக்கிறேம். இவன் அவனிடந்தான் சென்றிருப்பானென்று எனக்குத் தோற்றுகின்றது. மற்றையோரிடம் இவன் வீரச்செயல்களாற் பேரடைந்துயர இது சமயமில்லை. காந்தாரம் பாரசீகம் முதலிய நாடுகளிலிருந்துவந்த ஒற்றரும் வணிகரும் அவ்வீரன்மேன்மையை மிக உயர்த்திப்பேசுகின்றனர். அவனை நேரில் பார்க்கவேண்டுமென்ற தன்னுசையைச் சந்திரன்

பலமுறை என்னிடம் உரைத்திருக்கிருன்; ஆதலின் அங்கேதான் சென்றிருப்பானென்று நம்புகிறேன்.

யமுனை:—சாகரரே! நீர் கல்வியின் சாகரரே. உம்முடைய ஊகம் மிகவும் நேரானதே. பலமுறை என்னிடங்கூடச் சந்திரன் அவ்வலக்ஷ்யேந்திரனைப்பற்றிக் குதூகலத்தோடு பேசியிருக்கிருன். அவன் வீரச்செயல்களைச் சொல்லும்போதெல்லாம் இவன் உடல்சிலிர்த்துக் கண்கள் மலர்ந்து மீசைதுடித்துக் கைபதறித் தானே அவைகளைச் செய்பவன்போல் நடிப்பான். இவ்வளவுகாலம் இவன் அவ்வீரனைச் சேர்ந்திருப்பனு?

சாகரன்.—அவ்வீரனைச் சேர்ந்திருப்பின் சீக்கிரம் சந்திரன் நம்நாடு வருவான். அவ்வீரன் நம்மரசன்மேற் படையெடுத்து வருவதாகத் தூதர்கள் வந்து கூறிச்சென்றனரே?

யமுனை:—நம்மரசரை யெதிர்த்துப்பொர மாற்றரசரோடு சந்திரன் வருவானென்ரு நம்புகிறீர். அங்ஙனம் செய்வதைக்காட்டிலும் அவன் உயிர்மாய்தல் மேல். அவனை மாற்ருர்படையிற் போர்க்குரிய அங்கங்களோடு காணின் அவன் என்புதல்வனென்று பாராமல் யானே அவனைக் குத்திக் கொலைபுரிவேன். அங்ஙனம் அவன் வரவேமாட்டானென்று நீர் உறுதியாய்நம்பும்.

சாகரன்:—நீர் பெண். அரண்மனைச் செல்வத்தில் அளவிறந்த காலம் பழகி, மாறினமனத்தின் கூறறியாதீர். சந்திரனுக்குக் கல்வி கேள்விகளின்மேன்மையால், தன்னரசன்மேற் படையெடுத்தவரோடுசேர்ந்து பொருதல் அடாதென்று தெரியும். ஆயினும், கோபம் பாபத்துக்கஞ்சுமா? சந்திரன்கோபமோ தன்னை நந்தர் வருத்துவாரென்னும் பயத்தால் உண்டானது. அவர்க்கு அரசுரிமையுள்ளவரை இப்பயம் சந்திரனைவிட்டு மாருது. ஆதலின் இவன் மாற்ருருடன்சேர்ந்து பொருது நம் மன்னனரசுரிமையைக் குலைக்கத்தலைப்படுவது இயற்கையே.

யமுனை:—என்புதல்வன் எங்கிருப்பினும் ஈசன் அவனுக்கு நல்ல மதியைக்கொடுத்துப் பாதுகாப்பானுக. சாகரரே! நான் போய்வருகிறேன் நீர் சுகமாயிரும்.

சாகரன்:—அம்மா! அப்படியே.

[போதல்]

## அங்கம்-II.

### களம்-2.

---

இடம்:—தக்ஷாலயத்தில் ஓர் அரண்மனே.

பாத்திரம்:—சேனுதிபதி சத்ருஜித்.

சத்ருஜித்:—[தன்னறையில் உட்கார்ந்துகொண்டு] யானு பரமசிங்கத்தின்பிள்ளே? பாரசீகரைப் பலமுறை தோற்ருேடவிரட்டிப் பரதகண்டமுழுவதையும் பாதுகாத்தவர்மரபில் யான் தோன்றியது உண்மைதானு? அலக்ஷ்யேந்திரனென்னும் மிலேச்சவீரன்கையில் என்னரசன் தோல்வியுறவும் யான் உயிர்வாழ்தல் என்குலத்துக்கும் வீரத்துக்கும் அழகா? ஆகா! என்னதுக்கத்துக்காளானேன்? அக்கரையில் இருந்த சேனே ஆற்றைத்தாண்டி நேரேவருமென் றெண்ணியன்ருே யான் மகரவியூகம் வகுத்தேன். அவர் அங்ஙனம் வந்திருப்பின் அவரோடு எதிர்க்காமல் மகரத்தின் வாய்வழியே அவரை உள்ளே அனுப்பிச் சங்கிலிஜெலியாற் சக்கரவியூகமமைத்து அவ்வளவுவீரரையும் கொல்லாமற் சிறைபிடித் தடிமைப்படுத்தி யிருப்பேன். மீறிப்பொருதோர் கூறுபட்டிறப்பர். தொகுதிகள் பலவினும் திகிரியிற் பட்டோர் தப்பமுடியுமா? அழியாவாற்றலபி மன்னியுவும் திகிரித்தொகுதியிலன்ருே திறனழிந்திறந்தனன். உறங்குங்காற் பின்புறம் போர்தொடர்ந்த இச் சண்டாளர்வெற்றி எத்தனேநாள் நிலக்கும். கள்வரும் கொலேஞரும் போகும் கதியில் அவன் போவானென்பது பொய்யா? 'யதோ தர்ம ஸ்ததோ ஜயஃ' என்று வியாஸர்வாக்கும் பொய்யாகுமா? நல்லது இருக்கட்டும். [ஒருசேவகன் தொழுது ஓர் ஓலேயைக் கொடுக்க வாங்கி] இது, நம்மிறைவன் கைப்பொறியன்ருே? அவராணேயை ஆற்றுதும்; இன்றெனின் இறத்தும். [ஓலேயைப் பிரித்து] "பகைகடிவீர! நின் திருபம் பெற்ருேம். நீறிற்பொதிந்த நிறைதணற்றுண்டை ஆறின சாம்பலென் றணுகிடுவார்போல் மாற்ருர் வெற்றியின் மாழ்கிய நம்மை வலியிலரென்றெண்ணித் திறைகொடாது மறுத்த மிலேச்சமன்னரைச் சிறைபிடித்துவரவும்" [என்று படித்து] மிகுந்த சந்தோஷம். பழம் நழுவிப் பாலில் விழுந்தது. அவரை அடக்குதலேயன்றி அழிந்த சேனேக்கும் ஆளழைத்துவரலாம். [சேவகன் தொழுதுநிற்க.]

சத்ருஜித்:—சேவகா! என்ன?

சேவகன்:—வெற்றித்தெய்வமாகிய முருகக்கடவுளே மாணவ வடிவுபூண்டதுபோல் ஓரிளங்குமரர் சமுகத்தின் சமயத்தை நோக்கிக் காத்திருக்கிறார்.

சத்ருஜித்:— அவரை உள்ளே அழைத்துவா.

சேவகன்:—[சந்திரனை உள்ளே அழைத்துவந்து விட்டுப்போதல்.]

சந்திரன்:—[தொழுது] வெற்றிவீர! மல்கநின் வலிமை.

சத்ருஜித்:—பிள்ளாய்! நீ நீடூழி வாழ்க. நீ யார்? எங்கிருந்து எதன்பொருட்டு வந்தனை?

சந்திரன்:—ஆரியர்சிகாமணியே! உம்முடைய வயிற்றிற் பிறக்க யான் தவம்புரியாவிடினும் நீர் அன்புடன் அழைத்ததே என் பெரும்பேறாகும். மகதநாட்டின் தலைநகரான பாடலீபுரத்தில் ஓர் அரண்மனைத் தாதியின் அரும்புதல்வன் யான். அரசிளங்குமரன்புடையேனாதலின் அவருடன் வித்தைகள் பல பயின்றேன்; பாலடைநீர்போல் அவர்வழிப்பட்டேன். தங்களையும் புருஷோத்தமரையுங்கூடச் சமரில் வெல்லவல்ல வீரன் ஒருவன் உளனென்று கேள்வியுற்றேன். அவன் வலிகாணவந்தேன். என்னுடலில் உயிருள்ளவரை உம்முடன் நிழல்போல் தொடர்ந்து அவ்வீரன் வலியை எதிர்த்துக்காண்பேன்.

சத்ருஜித்:—எழுதோள்வீர! இச்சிறுபிராயத்தில் இவ்வளவு மனவெழுச்சியமைந்த உன்னைப்பெற்ற தாய்தந்தையர்செய்த புண்ணியம் யான் செய்திலேன். எங்களைவென்ற அலக்ஷ்யேந்திரனை நீ சாதாரணமாய் நினையாதே. அவனடைந்த வெற்றி அவனுக்கு முழுதும் தகும். மலர்ந்தகண்ணும், எழுந்ததோளும், பகிர்ந்து பல்லொளிபரவிய வாயும், நட்டுவைத்தன்ன நாசியும், காதும், பொட்டின்கட்டும், பொறிசிதர் மூச்சும், நீண்டகல் கவுளும், நெற்றிமுன்செறிவும் ஆண்டகையுருவே அவனுருவாகும். அவனுடலை நோக்கின் கட்டியதசையும் கயிறன நரம்புமாய்ப் பிரமனே பிரதாபமென்னும் உலையில் வீரமென்னும் இரும்பைக்காய்ச்சிப்

போரென்னும் சம்மட்டியாலடித்து உருட்டித்திரட்டி உருவங்க ளமைத்து வலிமையென்னும் சங்கிலியால் அவற்றைப் பிணைத்து ஈர்த்துக்கட்டி, அஞ்சாதநெஞ்சென்னும் உட்பொறியமைத்து இவ் வுலகில் அலையவிட்ட ஓர் உருவம்போல் தோன்றும். அவன் தலை யெடுத்துயர்ந்து தடக்கைவீசி இடக்கையின் ஈர்த்தடக்கலின் எறியகுதிரை துள்ளவும், கால்கள் அங்கவடியோடு மடிந்து பின் செல்லவும் சிவன்கைப்பட்ட மேருவைப்போற் சற்றுவளைந்து இடக் கையை வாருடன் குதிரையின் பிடரியினழுந்த இருத்தித் தன் உடல்வலியெல்லாம் வலக்கையில்திரட்டி வாள்கொடுகொல்லும் கோளினைநோக்கின் ஊழிக்காலத்துருத்திரனும் வளைந்தெரித்துண் ணும் வடவைக்கனலும் கடையுகக் காற்றும் ஒருருவாய்த்திரண்டு உலகழிதொழிலில் ஊக்கமொடு வினைசெய்வதொக்கும். அவன் கொல்லும் உயிரெலாம் கள்ளெனப்பருகித் தன்னுடல் மறந்து வர வர வலிமிகுந்து அடர்ந்தபோர்முனை யிடந்தாக்காதி இருளழித் தேகும் பரிதிக்கடவுளென இளைப்பென்பதே அறியாது மேற்செல் வன். அங்ஙனம் அவன்செல்லும்வழிப்பட்ட கரியும் பரியும் காலும் தேரும் இரியும்; திரியும்; பிரியும்; பேரும். இன்றேற் கரியும் மறியும் நெரியும் சரியும். ஆ! ஆ! அவன் வலிமையை என்னென்று சொல்வேன். போர்மிகுந்தாற்றும் வீரர்பலரை நேரெதிர்த்தறி யாச் சிறுவனாதலின் நீ அவனை மதித்தாயில்லை. ஆயினும், உன் உடற்றிறத்தை உற்றுநோக்கின் போர்முனைவெல்லும் சீரமைந்தது தான். உந்திய வாளியின் முந்துறு மிருப்புத் தலையெனத் தான் முற் பட்டுத் தன்சேனைபுக வாள்கொண்டு வழிவிலக்கி மாற்றார்மாட்டே கும் அலக்ஷயேந்திரனையும் நீ ஒருநாட் கண்டுகளிப்பாய். என்பக்கல் நீ பிரியாதிருப்பின் வெற்றித்திருவும் நம்மைவிட் டகலாதிருப்பள்.

சந்திரன்:—பெருந்தகாய்! அவ்வீரன்வலியை அநேகராற் கேள்வியுற்ற எனக்குச் சுத்தவீரரிற் சிங்கம்போல் விளங்கும் உம் வாயாற் கேட்டபின்பு அவனைப் போர்முகத்திற் காணவேண்டு மென்ற ஊக்கம் விரைவில் மேம்படுகிறது. உம்முடன் இடைவிடா திருக்கும் பெரும்பேறடைந்த எனக்கு இது தவறாது வாய்க்கும். அப்பொழுது கங்கைநாட்டின் ஊற்றமும் எம் ஆசிரியானுக்கிரக மும் பொய்க்காது காப்பேன். இலையாயின் உயிர்நீப்பேன்.

சத்ருஜித்:—ஏற்றிளஞ்சிங்கமே! உன் மனவுறுதியை மிகவும மெச்சுகிறேன். உன் தோள்வலியும் இங்ஙனமே மிகுந்து நீ நீடு வாழ்ந்து இப்பாரதகண்டத்திற் பகையணுகாது காத்துப் பெருங் கீர்த்திபெறக்கடவை.

சந்திரன்:—[வணங்கி] வீரர்பெருமானே! தங்கள் அநுக்கிரகப் பயனிருக்க எனக்கு அக்கீர்த்தி அமைவது அரிதன்று.

சத்ருஜித்:—நல்லது; பிள்ளாய்! நீ சுத்தவீரன்தானென்று யான் நிதானிக்க நீ வந்த சமயமே தக்கசான்று. அரசனுணையிற் போர்வந்ததென்று மகிழ்ந்து யான் பூரித்துச் சந்தோஷித்திருந்த வேளையில் நீ அப்போரேயென்னத் தோன்றினை. ஆதலின் அப் போர்க்கு நீ வரல்வேண்டும்.

சந்திரன்:—எப்போராயினும் உம்மைவிட்டகலேன்.

சத்ருஜித்:—நல்லது போவோம்.

---

## அங்கம்-II.

### களம்-3.

---

இடம்:—பாடலீபுரத்தில் ஒருகுடிசை.

யமுனை:—[வாயிற்படியில் உட்கார்ந்து பாக்கு நறுக்கிக்கொண்டு] என்னருமைச்சந்திரனைக்காணுமல் யான் எவ்வளவுநாள் இருப்பது. தானிருந்துபழகிய இடத்தையெல்லாம் வெற்றிடமாக்கி, அவனைக் கண்டுகுளிரும் என் கண்கள் ஓயாது நீரைச் சொரிந் தழவிட்டு என் அருமைக்கண்மணி எங்கு சென்றனனே? கதவென அகன்ற மார்பும், திரண்டு பருத்த கழுத்தும் ஏற்றிமிலன்னதோளும் சுற்றிச் சுழன்ற கண்ணும் என் கண்ணே! உன்னை எப்பொழுது காணப் போகிறேன். [அழுதல்.]

சுலோசனை:—[வந்து] அம்மா! ஏன் அழுகிறீர்கள்? உங்கள் குமாரரைப்பற்றிச் சொல்லக்கூடாதென்று என் தமயனர்

தீர்மானமாயிருந்தார். நாங்கள் ஏதோ உரையாடிக்கொண்டிருந்தசமயத்தில் நீங்கள் வந்தீர்கள். அதுவும் நல்ல சமயமாயிருந்து நீங்கள் விஷயத்தை முழுதும் தெரிந்துகொள்ள நேர்ந்தது. அத்தகைய மைந்தரைப்பெற்ற நீர் அவர் பிரிவாற்ருமையான் வருந்துவது இயல்பே. ஆயினும், அவர் புத்தியையும் வீரத்தையும் நோக்கின் நீர் வருந்தவேவேண்டாம்.

யமுனை:—'பெற்றவருக்குத் தெரியும் பிள்ளையருமை'. நீ சிறுபெண். ஒரேபிள்ளையாக நான் வளர்த்துவந்த சந்திரனைக்காட்டிலும், என் அன்புக்கடைபொருள் வேறென்றுண்டோ? அவனில்லாத வீடு காடாகும். அவனைக் காணுது வாழ்தலிற் சாதலே மேல்.

சுலோசனை:-உங்கள் முதிர்ந்தவயதில் லோகாநுபவத்தால் மனத்தைத் தேற்றிக்கொள்ளாமல் நீங்கள் மனங்களரக்கூடாது. அறுபதினுயிரவருஷம் தவம்புரிந்து புத்திரகாமேஷ்டிசெய்து பெற்ற பிள்ளையைக் காட்டகத்தே விட்டுக் கோசலை பதினன்குவருஷம் காலங்கழிக்கவில்லையா? அங்ஙனமே நீங்களும் பொறுமையுடனிருத்தல் நன்று. வீணே துக்கிப்பதாற் பயனில்லை. பெருக்காற்றிடை நாணல்போல விதிவழிப்படுங்கால் மனவமைதியோடும் உறுதியோடும் தாழ்ந்துபோதலே மேலான அறிவாளிகளின் இயல்பு. விதியின்செயலை வெல்ல யாராலியலும்? ஆதலின் நீர் மனதைத்தேற்றிக்கொண்டு உயிர்வாழ்ந்துவருவீராயின் உம்முடையகுமாரரை நல்லநிலைமையில் விரைவிற் கண்டுகளிப்பீர்.

யமுனை:-குழந்தாய்! உன்சிறுவயதுக்குநீ அறிவுமிகுந்தவளே. ஆயினும், சிலகாலமாய் நீ உடல்வாடி வருந்துதலேனே? மேலும், ஒருசமயம் உன்னை யான்கண்ட கோலத்தின்பொருளை அறியவிரும்புகிறேன்.

சுலோசனை:—அம்மா! என் உடலிளைத்ததிருக்கட்டும். உங்களுக்கு என்மேலுள்ள அன்பினுல் யான் தினந்தோறும் பருக்கவேண்டுமென்று நினைத்துக்கொள்ளுகிறீர்கள். அப்படிப் பருக்காதது இளைத்திருத்தல்போல் தோன்றுகிறது. மற்றைப்படி என்னை என்னகோலத்திற் கண்டீர்கள்.

யமுனை:—ஒன்றுமில்லை; அன்று சாகரன்வாயில்வெளிப்பட்டு என்மனத்தை ஊறுபடுத்தின உண்மை உன்னையும் மூர்ச்சித்து விழச்செய்வானேன்?

சுலோசனை:—[வெட்கி இடக்கையாற் கன்னத்தைப் பொத்தி மறைத்து] அது எனக்குத் தெரிந்த விஷயந்தானே! அது என்னை ஒன்றும் செய்திருக்க நியாயமில்லையே.

யமுனை:—நீ சொல்வது மிகவும் சரிதான். ஆனல் இப்பொழுது வெட்கித் திரும்பி மறுமொழிகூறியதற்கு உன்னல் நியாயம் சொல்லமுடியுமா?

சுலோசனை:—[வெட்கித் தலைகுனிந்து] ஒன்றுமில்லை. அன்று நான் மனந்தடுமாறினது, நீங்கள் வருவதை அறியாது என் அண்ணன் சொன்னது உங்கள்காதில் விழுந்துவிட்டதே; நீங்கள் மிகவும் வருந்துவீர்களே! என்கிற மனவருத்தத்தினலேயொழிய வேறில்லை.

யமுனை:—ஆமாம். அதைச்சொல்லும்பொழுது வெட்கித் தலைகுனிந்துகொண்டு சொல்வானேன்.

சுலோசனை:—முதிர்ந்த வயதுடைய நீங்கள் சிறுமியாகிய என்னைப் பரீக்ஷிக்கலாமா?

யமுனை:—யான் மகவிழந்துறும் துன்பத்தினும் மேலான துன்பத்தை நீ மனமிழந்துறுகின்றதனல் நம்மிருவர்துயரும் தீர்க்கமுயலவேண்டும்.

சுலோசனை:—என் உயிர்த்தோழர்பொருட்டு நீர் என்னசெய்யச் சொல்லினும் யான் பின்வாங்கேன்.

யமுனை:—[சுலோசனையைத் தழுவிக்கொண்டு] கற்பகக்கொடியே! யான் உலகினிற் பற்றின்றிப் பரலோகசாதனத்தைத் தேடும்பொருட்டுக் கங்கைக்கரைவழியே மேற்குநோக்கி யாத்திரைசெய்து காலங்கழிக்க நிச்சயித்தேன். இனிச் சந்திரன்வந்து என்னைத் தேடின் நீயே அவனுக்குத் தாயென அன்புவாய்ந்திருக்கக்கடவை.

என்னை நினைந்து அவன் வருந்தாது காத்தலும் உன்கடமைதான். அகத்துறு துன்புக் கமிழ்தெனு மருந்தாய்த் துயரோட்டி நலனூட்டுவதே காதலியின் கடமையன்றோ?

சுலோசனை:—நீங்கள் செல்லும் கங்காயாத்திரைக்கு யானும் வருவேன்.

யமுனை:—சந்திரன் இங்குவரின் நம்மிருவரையும் காணாது மனந்தளர்வனே.

சுலோசனை:—உங்கள் குமாரரும் மேற்குநோக்கித்தான் சென்றிருப்பர். நாம் எதிரில் சந்திக்கலாம்.

யமுனை:—அது என்ன நிச்சயம்?

சுலோசனை:—சந்தேகமில்லை.

யமுனை:—சிறுமியாகிய நீ என்னுடன் வருதல் தகுதியன்று. பொதுவிடம் பலவற்றினும் தங்கிச்செல்லும் தனியாத்திரையில் பருவப்பெண்ணான நீ உடன்வரல் தகாது.

சுலோசனை:—ஒரு சிறுவன் உம்மைத் தொடர்ந்துவரின் உமக்கு உதவியாயிருப்பானன்றோ?

யமுனை:—உன் அழகின்மிகுதியாலும் அங்கங்களின் மென்மையாலும் யாரும் எளிதில் உன்னைப் பெண்ணென்று தெரிந்துகொள்ளல்கூடும்.

சுலோசனை:—உம்மைவிட்டகலாது உமக்குப் பணிவிடைசெய்திருப்பின் என்னை யார் நெருங்கியறியப்போகிறார்கள்?

யமுனை:—உன் தமயன் மிக்க துயரத்தையடைந்து வருந்துவனே. உடன்பிறப்பின் மேம்பட்ட நண்பனும் இன்றித் தன் அருமைத்தங்கையையும் பிரிந்து அவன் எங்ஙனம் உயிர்வாழ்வன்?

சுலோசனை:—யான் இரண்டு மூன்றுமாதத்தில் திரும்பிவிடுவதாக அவருக்கு ஒரு கடிதத்தை எழுதிவைத்துவிட்டுவந்துவிடுகிறேன். அக்காலம்வரை நீங்களும் இல்லாமையால் அவர் சந்திரன் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படிக்கும் எழுதிவைக்கிறேன். அவர் அங்ஙனம் இருப்பார்.

யமுனை:—நீ சொல்வதை மறுக்க என்னாலாகாது. உன்விருப்பப்படி செய்.

சுலோசனை:—இன்றிரவே புறப்பட்டுவிடுவோம்.

யமுனை:—நீ குழந்தைத்தனமாய் என்னுடன் புறப்படுவது சரியன்றென்று என்மனத்தில் தோன்றுகின்றது.

சுலோசனை:—உமக்கு இன்னொருமகனிருப்பின் அவனை அழைத்துச்செல்லமாட்டீரா? அப்படி நினைத்துக்கொள்ளும். யான் இரவில் வருகிறேன். சன்னத்தமாயிரும். [விடைபெற்றுச் செல்லுதல்.]

## அங்கம் - III.

### களம் – 1.

இடம்:—சிந்துநதிக்கரையில் அலக்ஷயேந்திரன் படமாடம்.

பாத்திரங்கள்:—அலக்ஷயேந்திரன், புருஷோத்தமன், சேனுபதிகள், சேவகர்கள் முதலியோர்.

அலக்ஷயேந்திரன்:—புருஷோத்தமரே! நம் தூதர்கள் சொல்லியதைக் கேட்டிருந்தீரா? மகதராஜன்சொற்கள் என்மனத்தை யீட்டிபோற் குத்துகின்றன. நான் செய்யும் யுத்தத்தைப் பழித்து எனக்குத் தீங்குநேருமென்று சொல்லக்கூடிய முடிமன்னனொருவன் படிமிசை உயிர்வாழ்வனே? அவன் திறத்தை இன்றே அறிவேன்.

சேனுபதி:—பாரசீகராஜ்யமுழுவதையும் ஒருகணத்தில் வென்று கைக்கொண்ட உங்களுக்கு இது ஒரு பெரிதா?

புருஷோத்தமன்:—மகதன்பெருமையை நீங்கள் அறியீர். அவன் தேசத்தின் செழிப்பும் குடிகளின் ஊற்றமும் படைகளின் வலியும் செல்வத்தின் மிகுதியும் யாரால் அளவிடமுடியும்? அவனே ஒரு பெரிய போர்வீரன். அவன் சேனைத்தலைவரும்

நேபாளம் காந்தாரம் முதலிய மிலேச்சர்களும் முரடர்களும் வசிக்கும் தேசங்களில் நெடுநாள் போர்புரிந்து தேர்ந்தவர்கள்.

சேனபதி:—அரசே! அவர்கள் படைவலியை நம் தூதர்கள் கணக்கிட்டுவந்திருக்கிறார்கள். ஐம்பதாயிரம் தேர்களும் லக்ஷம் யானைகளும் 2 லக்ஷம் குதிரைகளும் ஐந்து லக்ஷம் காலாட்களும் இவரறிந்தமட்டில் மகதனுக்கு இருக்கின்றனவாம். இவைதவிர எல்லைக்காப்புச் சேனைகளும், கோட்டைகாக்கும்படைகளும் சிற்றரசர்படைகளும் மிகுந்திருக்கின்றனவாம். தூதர்தலைவரே! நான் சொன்னது சரிதானே?

தூதர்தலைவன்:—ஆம். அது மட்டுமேயன்றி அவன் நாட்டு வில்லாளிகளின் திறம் மிகவும் மெச்சத்தக்கது. புடைத்தெழு தோளும் துடித்தெழு மீசையும் உடையராய் அவர்கள் தம்மினும் உயர்ந்தவில்லைத் தரையில் ஊன்றி அடியை இடக்காற்பெருவிரலால் மிதித்துத் தலையை இடக்கையால் இழுத்து வளைத்து நாணினை இறுகச்சுற்றி அயின்முகக்கணைகளும் அரைமதிவாளிகளும் கோத்து, மரங்கள் கிழியவும் கற்கள் பிளக்கவும் எய்யும் வல்லமையுடையவர். இருப்புக்கவசங்களைத் தகர்த்தும் தேர்களை உடைத்தும் வீரர்களைத் தலைதுணித்தும் அவர்களம்புகள் தடையின்றி மேற்செல்லும். கதையெடுத்துப் பொருவோர்கையாற் சிதைபடாதபொருள் பிரமன்படைப்பில் ஒன்றுமில்லை. கோட்டைகளைத் தகர்க்கவும் மதில்களை யிடிக்கவும் பூமியில் சுரங்கங்கள் வைக்கவும் அளவிறந்த பொறிகள் அவர்கள் நாட்டில் உள. பகைவரை மறைந்திருந்தாவது பொறிகள்வைத்தாவது கொல்லும் வழக்கமே அவர்நாட்டில் இல்லையாதலின், அவைகளுக்கு உதவக்கூடிய ஆயுதங்களொன்றும் அவர் அறியார். துன்புற்றோர்க்குதவலும் இரந்தோர்க்களித்தலும் எளியோரை ஆதரித்தலும் ஆகிய இவற்றை உடன்பிறந்த குணங்களாக்கொண்டு அறமும் ஆண்மையும் சேர்ந்திருக்கப்பெற்றுளர். அவர் நடுவில் நான் வதிந்தநாள்களை என் ஆயுள் உள்ளவளவும் மறவேன்.

சேவகன்:—[தொழுது] அரசே! நம் படமாடவாயிலில் மகதன் தூதர்கள் காத்திருக்கிறார்கள்.

அலக்ஷயேந்திரன்:—அவர்களை உடனே உள்ளே அழைத்து வா.

தூதர்கள்:—[வணங்குதல்.]

தூதர்தலைவன்:—ஆண்டகாய்! எம்மரசன்வாழ்த்தையும் எம் வந்தனத்தையும் ஏற்பீராக.

அலக்ஷயேந்திரன்:—தூதர்களே! நல்லசமயத்தில் வந்தீர்கள். நாங்கள் உங்கள் நாட்டைப்பற்றித்தான் உரையாடிக்கொண்டிருக்கிறோம்.

தூதர்தலைவன்:—அதுவும் எங்கள் பாக்கியந்தான். எங்கள் மன்னர் கட்டளையின்படி நாங்கள் இன்றைக்கு முப்பதாம்நாள் உங்கள் மறுமொழிபெற்று எங்கள் ஊர்போய்ச் சேரவேண்டும்.

அலக்ஷயேந்திரன்:—உங்களுக்கு யான் சொல்லவேண்டிய மறுமொழி என் தூதர்களால் உம்மரசர்பக்கல் சொல்லப்பட்டதுதான்.

தூதர்தலைவன்:— அரசே! சினங்கொள்ளாதீர். தர்மத்தைச் செகுத்துப் பாபம் மேம்படாதென்பது உமக்குத் தெரியாதா? தாமரைகள் மலர்ந்து மணம் வீசவும், வண்டுகள் பாடவும், அன்னங்கள் சஞ்சரிக்கவும், மீன்கள் மிளிரவும் பக்கத்தில் மயில்கள் ஆடவும் அழகுடன் விளங்கும் பொய்கையில் ஆசையுடன் இறங்கி அதைக் கலக்கி அழகழித்துத் தானும் அங்குள்ள முதலைவாய்ப் பட்டழியும் மதயானைபோல் அறநினைந்தொழுகுமான்றோர் பலர் வதியும் எங்கள் நாட்டையும் ஊறுசெய்து நீரும் சிரழிதல் மேன்மையாகாது.

தெய்வமே பரவி மெய்வழி தெரிந்தாங்
குய்யுமா றுன்னியெக் காலும்
கைதவ மகற்றிக் களிப்புறு மனத்தோ
டைவகைப் புலன்வலி யறுத்துப்
பெய்வளைக் கையர் பெட்பினின் மயங்கா
தெய்தக விதிமுறை யாற்றி
வைவுறு முடலால் ஞான்மிக் குயர்ந்தோர்
கவிபல ருறையுநா டதுவே.

இத்தகையோர் உயிரிலும் உடலிலும் பற்றற்றமனத்தராய் வதியும்நாட்டில் நீர் வீண்போர்செய்து குற்றமற்றவர்களான எம் மரசர்குடிகளுக்குத் தீங்குவிளைக்க முயலவேண்டாவென்றும், அப்படி நீங்கள் முயன்றால் உங்களுக்கு மிகுந்த கேடுவருமென் றும் எம்மன்னர் சொல்லினர்.

அலக்ஷ்யேந்திரன்:—எனக்குக் கேடுவிளைக்க உங்களரசரால் ஆகாது. இவ்வாறுதான் பாரசிகனும் சொல்லி என்கையால் மாண்டனன். உங்கள் உபதேசம் எனக்ேகேன்.

தூதர்தலைவன்:—தர்மத்தைப் பாபம் வெல்லாதென்று நாங் கள் கூறவந்தது உபதேசமாகுமோ? எங்கள் நாட்டில் தர்மம் மலிந்திருப்பதோடு படைவலியும் மிகுந்துளது.

தூயவெண் முந்நூல் பூண்டு சுருதியின் கரைகள் கண்டு
தீயடு வேள்வி முற்றித் திரவியப் பற்று நீத்துக்
காய்சின மகற்றிக் கல்வித் துறைகடந் தறிவு முற்றி
யாயென வளிசெய் நெஞ்சத் தந்தணர்க் கரச னெந்தை.

இத்தகைய பிராமணோத்தமரின்வடிவமாய்த் தருமமே எங் கும் திரிதரும் எம் நாட்டை மாற்றரசர் வெல்லல் முடியாது. மேலும் எம்மரசன்படையினர்க் கெதிர்நிற்க உம்மாள்களால் முடியுமா?

நிழலினைச் சீறிக் கந்தை நெறித்தொடித் தீர்த்துத் தூணைக்
கழையெனச் செகுத்துக் காந்திக் கையெடுத் தலறி யோடி
மழைமத வருவி சோர வண்டினம் தொடர்ந்து செல்லப்
பொழிலிறுத் தடங்கிப் பாகின் புடைதொடர் கரிகள் சுற்ற.

எம்மன்னர் போர்க்கெழுந்து களங்கொள்ளின் உம்மவர் அவர் மாட்டுச்செல்லாது புறங்காட்டியோடுவர்.

அலக்ஷ்யேந்திரன்:—உங்கள் யானைப்படையின் திறத்தை நாம் புருஷோத்தமனுடன் செய்த போரில் அறிந்துகொண்டோம்.

தூதர்தலைவன்:—வங்காளத்தில் விலைப்படாமற் கழிபட்ட யானைகளை நீர் வெல்வதற்குப் பட்டபாடு எங்கள் நாடுமுழுதும் நகைக்கிடமாயிற்று. இன்னும் எம்முடைய மற்றைப்படைகளின் வலியையும் கேட்பீராக.

தூணியும் வில்லும் ஏந்தித் துணிவுடை மனத்த ராகி
ஆணையை யாற்றித் தத்தம் ஆருயிர் மதியா ராகி
ஆணவம் அரசர் தெய்வம் அன்புடை நாடென் றின்ன
பேணுதல் பெரிதாய் முந்தும் பெட்பினர் பெயர்ந்து செல்ல.

பால்புரை புரவி பூண்டு பகழிபெய் வீர ரேந்தி
மேலுயர் கொடியின் சீரை மாற்றல ராற்றல் துற்றக்
கால்வழிக் கால்கள் மாளப் பால்படு படைகள் சிந்தக்
கோல்கொளும் சூதன் உந்தக் கொதித்தெழும் கொடித்தேர் சுற்ற.

விரைதரு பரியின் வீரர் வேலொடு வாளும் ஏந்தித்
தரைதரு துகள் கிளப்பித் தாரகைக் கணமறைத்து
நுரைதர மோதிச் சிந்தி நூறிடும் போதில் நீவிர்
திரைதரு கடல்வாய்ப் பட்ட செய்மணற் குன்றே யாவீர்.

புருஷோத்தமன் எங்கள் சிற்றரசர்க்குக் கப்பங்கட்டும் ஒரு நாட்டுத்தலைவருக் கீடாகான். எங்கள் வில்லாளிகளின் கணைகள் உங்கள் இருப்புச் சட்டைகளைக் கிழித்துப் பாயும் வலியுள்ளன. எங்கள் தேர்வீரர் பொருதுசெல்லும் வேகத்தில் உங்களுக்குப் போர்முகந்தெரியாது தலைதடுமாறிப்போகும். எங்கள் குதிரை வீரர்க்கெதிரில் உங்கள்படைஞர், பொங்கியெழும் கடலின் அலைகளின்கீழ் நெய்தற்பயிரென இருந்தவிடந்தெரியாது மறைந்தழிவர். இதுகாறும் வெற்றியும் கீர்த்தியும் பெற்றுவந்தநீர் இனி மேற்செல்லத்துணிவீராயின் வெற்றியும் கீர்த்தியும் மகதனுக்கு விட்டுவிட்டுப் பாவமும் பழியும் மாத்திரம் சுமந்து திரும்புவீர். குறுநாட்டுவேந்தனாகிய பாஞ்சாலனையும் நாகரிகமற்ற காட்டுமக்களையும் வென்றதை வெற்றியாகக்கொண்டு மகதன்மாட்டுச் சீரழியாதீர்.

கானுறை கள்வர் தம்மைக் கடிந்ததோர் வலியைக் கொண்டு
மானிடர் எத்தும் மன்னன் மகதனை வெல்ல லாமோ
கூனுகிர்ச் சிங்கங் கொல்லும் குருளைமா னெனினு மற்றை
வானுயர் சரபத் தின்பால் வலியழிந் திறக்கு மன்றே.

அலக்ஷயேந்திரன்:—[சற்றுக்கலங்கி] சரி. நீங்கள் போய்வரலாம்.

தூதர்தலைவன்:—எங்கள் சக்கரவர்த்திக்கு நாங்கள் என்ன சொல்லுவது?

சேவகன்:—[தொழுது ஒரு ஓலையைக் கொடுக்க.]

அலக்ஷயேந்திரன் :— [அதைவாசித்துவிட்டுப் புருஷோத்தமரை நோக்கி] பாஞ்சாலரே! உம்முடைய சேனாதிபதி சத்ருஜித் நமக்கு ஒரு வீரரை அனுப்பியுள்ளார். [சேவகனைநோக்கி] சேவகா! இவ் வோலைகொணர்ந்தவரை உள்ளே வரவிடு.

சந்திரன்:—[பல சிற்றரசர்கள் பின்வரப் புகுந்து சற்றுத் தலைவணங்கிக் கைகுவித்து] அரசர்பெருமானே! என் அஞ்சலி ஏற்பீராக. என் தலைவர் சத்ருஜித்தின் ஆணைப்படி இந்நாட்டுத் தலைவர்களைப் புருஷோத்தமர்பால் சேர்ப்பிக்க வந்தேன். அது காரணமாக உம்மைக் கண்டது என் பெரும்பேறே. [புருஷோத்தமனிடம் ஒரு ஓலையைக் கொடுத்து] எம்மரசே! கப்பங்கொடாத காலந்தள்ளிவந்த இவர்களைப் பிணித்துவரும்படி தாங்கள் சேனைத்தலைவருக்கு உத்தரவு செய்திருந்தபடி இவர்களை உம்மடியிற் சேர்க்கிறேன்.

புருஷோத்தமன்:—[சிற்றரசர் தொழ ஓலையைவாசித்து] சந்திரரே! நீர் உம்முடையபெயருக்கு மாறாக இவர்களிடத்தில் சூரியனைக் காட்டிலும் வெம்மைவிளைத்ததாக உம்முடைய போர்வலியை மிகவும் மெச்சி எம் சேனைத்தலைவர் எழுதியிருக்கிறார். யானறிந்தமட்டில் அவர் ஒருவர் போர்வலியையும் மெச்சுகிற வழக்கமில்லை. அவரே இவ்வளவு புகழ்ந்துபேசத்தக்க உம்முடைய போர்வலி மிகவும் மேம்பட்டதாகவே யிருக்கவேண்டும்.

சந்திரன்:—அரசே! எம் தலைவர் என்னைப்பற்றிப் புகழ்ந்திருப்பின் அது என்னிடத்தில் அவர்வைத்திருக்கும் மிகுந்த அன்புபற்றித் தானிருக்கவேண்டும். அவருடன்சென்று அவர்பணித்ததைச் செய்ததுதவிர வேறெந்தவிதமும் யான் இந்தப்போரில் முயலவில்லை.

அலக்ஷயேந்திரன்:—தலைவன் பணித்ததையாற்றுதலே போர் வல்லார்க்கரிதென்பதும், அங்ஙனம் செய்துமுடித்தல்தான் மிகுந்தபோர்வலியென்பதும் உமக்குத் தெரியாதா! கடலின் விரிந்து உலகெலாம் வெல்லவல்ல என் சேனையில் அங்ஙனம் செய்யவல்லோர் சிலர்தாம் உளர். அவரே மேற்பதவிகளுக்குரியராய் என்பக்கலிருந்துதவுவர். ஆதலின் நீர் ஒரு பெரிய போர்வீரரே. மேலும், இவ்விளமைப்பருவத்தில் இவ்வளவுதிறம்வாய்தல் மிக அரிது. நீர் மகதநாட்டவரோ?

சந்திரன்:—ஆம். அரசே! எம் நாட்டில் அந்தணர் மறையும் வைசியர் வணிகமும் கற்பதுபோல் க்ஷத்திரியராகிய நாங்களும் இளம்பருவத்திலேயே தகுந்த ஆசிரியரிடம் தேகப்பயிற்சிசெய்து கொண்டு, பின் வில் வேல் வாள் என்னும் சிறந்த படைக்கல வகைக ளிற் பயின்று, அதன்பின் யானை குதிரைகளை நடாத்தவும் தேரூர வும் தெரிந்துகொள்வோம். எம்மூரில் பிழைப்பற்றுவந்த என் னைக் கண்டு தாங்கள் மகிழ்கிறீர்கள். என்னினும் இளமையிலேயே தாம் தனிநின்றுபொருது பெரும்படையழிக்கும்வலியுள்ள வீரர் அளவிறந்தோர் அங்கு உளர்.

அலக்ஷயேந்திரன்:—[தூதர்தலைவனைநோக்கி] இவர்கள் அரசன் தான் தனியே பொருவதாய்ச் சொன்னானன்றோ?

தூதர்தலைவன்:—ஆம் அரசே!

சந்திரன்:—அவர் அங்ஙனம் செய்யவல்லவரே. இதினும் மிகப்பெரிய சேனையையும் அங்ஙனம் பொருதழிப்பர். உங்கள் இருப்புச்சட்டைகள் அவர் வாளின்முன் மின்னலின்முன் இருள் போற் பிளவுபடும். உங்கள் ஆயுதங்களெல்லாம் அவர் வயிரகவசத் திற்பட்டுக் கல்லின்மேல் விழும் மழைத்துளிகள்போற் சிதறுண்டு பயன்படாதுபோம். அவரேயன்றி இன்னும் அளவிறந்தோர் அவ ரினும் தேகப்பயிற்சியினும் படைப்பயிற்சியினும் மிகுந்தோர் எங் கள்நாட்டில் இருக்கின்றனர்.

அலக்ஷயேந்திரன்:—அப்படியாயின் அவர்வலியை நான் காண வேண்டும்.

சந்திரன்:—போர்முனையிற் காணவேண்டுமென்று நீர் ஆவல் கொண்டால் அது நஞ்சின் சுவையறிவதுபோல் கண்டபின் நீர் உயிருடனிருக்கமுடியாது. எம்மரசரோடு நேசஞ்செய்துகொண் டால் வீரர்பயிலும் சாலைகளிற் காணலாம்.

அலக்ஷயேந்திரன்:—நீர் அச்சாலையிற் பயின்றவர்தாமோ?

சந்திரன்:—ஆம். சிலகாலம்.

அலக்ஷயேந்திரன்:—உம்மைப் பரீக்ஷிப்போம். [தூதர்களை நோக்கி] தூதர்களே! நீங்களும் நாளை இதைப் பார்த்துவிட்டுச் செல்லலாம்.

## அங்கம் - III.

### களம் - 2.

---

இடம்:—ரவிநதிக்கரையில் ஒரு சத்திரம்.

காலம்:— மாலை.

பாத்திரங்கள்:—யமுனை, விகலன், சந்திரன்தூதர் முதலியோர்.

விகலன்:—அம்மா! வெகுகாலமாய் நாம் ஒன்றும் நிச்சயமில்லாமல் பிரயாணஞ்செய்துகொண்டிருந்தால் நாம் எங்கே செல்வது?

யமுனை:—நாம் செல்லும்வழிச் சென்றுகொண்டிருந்தால் தெய்வம் விட்டவழி விடுகிறது.

விகலன்:—தெய்வம் விடும்வழியையே முழுதும் நம்பியிருந்தால் நாம் ஊரிலேயே இருந்திருக்கலாமே?

யமுனை:—அப்படிச்செய்திருந்தால் நலந்தானென்று எனக்கு இப்பொழுதுதான் தோற்றுகிறது. உன்னையாவது இவ்வளவு வருத்தத்துக்குள்ளாக்காமலிருந்திருக்கலாம்.

விகலன்:—எனக்கென்ன வருத்தம்? உங்களை உபசரிப்பது என்க்கு மேன்மேலும் உள்ளக்கிளர்ச்சியைக் கொடுக்கிறதேயொழிய வேறில்லை.

யமுனை:—உனக்கு மகிழ்ச்சியாய்த்தானிருக்கும். ஆனால் அவைகளை யேற்றுக்கொள்ள எனக்கு மனம்வரவில்லை. இவ்வளவு வருத்தத்துக்கும் பயன் எப்பொழுதுகாண்போம்?

விகலன்:—பயனைக்கண்டால் வருத்தமே மறந்துவிடும். அப்பயனையடைய நாம் இங்ஙனம் போய்க்கொண்டிருப்பது சரிதானா?

யமுனை:-நான் தினந்தோறும் நடந்து என் அருமைக்குமாரனைப் பின்விட்டுவருகிறேனே என்னவோ? எல்லாம்வல்ல ஈசனருள் எங்ஙனம் இருக்குமோ? நாம் இவ்வளவுகாலம் விசாரித்துவந்தவரை இவ்வழியில் அவன் சென்றதாகத் தெரியவில்லை.

விகலன்:—அவர் போனதை நாமறியக்கூடுமானால் வேறு யாரேனும் அறிந்து சொல்லியிருக்கமாட்டார்களா? அதனால்தான் நாம் ஒன்றும் அறியமுடியவில்லை.

யமுனை:—நீ சொல்வது சரி. ஆனால், நாம் ஆதியில் உத்தேசித்த இடம்வரை போய்த் திரும்பி நேரே ஊர்சென்றுவிட வேண்டியதுதான்.

விகலன்:—[தனக்குள்] என் அன்பர், "என்னைப்பற்றி மூன்று மாதகாலத்தில் உனக்குத் தெரிவிப்பேன். நீ சற்றும் கவலையுற வேண்டாம்" என்று சொல்லிப்போனார். அதில் பாதிக்குமேலாய் விட்டது. இனி நான் பாஞ்சாலநாட்டின் எல்லைகண்டு திரும்பி ஊர் சேர்வதற்குள் அவர்தூதன் என்னைக் காணாது திரும்பிவிடுவன். அவனையாவது நான் கண்டால் அவரைப்பற்றி நேரே அறியலாம். ஒருவேளை அவர் என்னை மறந்திருப்பாரோ? அல்லது அவர் தூதன் இதற்குள் ஊர்வந்து திரும்பியிருப்பானோ? எதற்கும் சீக்கிரம் ஊர்போய்ச்சேர்தலே நல்லது. சாகரனும் எங்கேயிருக்கிறானோ? [யமுனையைநோக்கி] அம்மா! எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்தால் நாம் இப்பொழுதே திரும்பிவிடுதல் நல்லதாகும். உம் அருமைக்குமாரர் உம்மை மறந்துவிடார். யாரையாவது அவர் உம்மை அழைத்துவரும்படி ஊருக்கனுப்பினும் அனுப்புவார். நாம் இருக்குமிடமும் அவருக்குத் தெரியாமல் நாம் இப்படியிருப்பது சரியல்ல. எதற்கும் திரும்பிவிடுவோம்.

யமுனை:—ஆனால் அப்படியே செய்யலாம். ஆயினும், எனக்கேதோ நாம் நினைத்த இடத்திற்குப் போய்த்தான் திரும்பவேண்டுமென்று மனதில் பிடிவாதமாய்த் தோன்றிக்கொண்டிருக்கிறது.

விகலன்:–[தனக்குள்] இந்தக் கிழவிகள்பிடிவாதம் பொல்லாது. இவளைப் பின்பற்றி நானும் இங்கேவந்தது தவறாய்முடிந்தது. என் ஓலையை நிராகரித்துவிட்டுச் சாகரன் ஊரைவிட்டுப் போயிருக்க மாட்டான். இந்தக் கிழவிக்குதவியாய் இவ்வளவுதூரம் வந்துவிட்டு, இவளை எங்ஙனம் விட்டுச்செல்வது? இவளோ நாம் எவ்வளவுசொன்னாலும் தன் பிடிவாதத்தை நிறைவேற்றுவாள்போலத் தோன்றுகிறாள். இப்பொழுது ஒன்றும் தோன்றவில்லை.

[இரண்டு குதிரைவீரர்கள் சத்திரத்தில்வந்திறங்கி யமுனையை அணுகுதல்.]

உத்தரன்:—பாட்டியம்மா! இங்கே ஏதேனும் சாப்பாட்டுக்கு இடமுண்டோ?

யமுனை:—இது வழிப்போக்கர்கள் தங்கும் சத்திரம். இங்கே சாப்பாட்டுக்கு ஒன்றும் ஏற்பாட்டைக் காணேம். நீங்கள் வந்ததும் மிகவும் அகாலமாயிருக்கிறதே?

உத்தரன்:—எங்கள் காரியத்தில் ஓரிடத்திலும் தாமதியாமல் போகவேண்டியது அவசியமாயிருக்கிறபடியாலும் சிலர் இந்தச் சத்திரம் சமீபத்திலிருக்கிறதென்று சொன்னதாலும் நாங்கள் அகாலத்தில் இங்கு வந்தோம். இந்தச் சத்திரத்தில் ஒருவருமில்லையோ?

யமுனை:—இங்கே ஒரு துர்முகிக்கிழவர் இருக்கிறார். அவரை எது கேட்டாலும் 'எனக்குத் தெரியாது' என்றும், இல்லையென்றும் சொல்லிக்கொண்டிருக்கிறார். அவர் சிடுசிடுப்பும் கோபமும் மனிதர்கள் சஹிக்கமாட்டார்கள்.

உத்தரன்:—இந்தச் சத்திரத்தில் யாருக்காவது சாப்பாடுண்டா?

யமுனை:—அந்த விஷயங்கள் அவரைத்தான் கேட்கவேண்டும். நாங்கள் இன்றுதான் வந்தோம். சமையல்செய்து சாப்பிட்டோம்.

உத்தரன்:—கட்டிடம் இவ்வளவு பெரியதாயிருக்கிறதே? இங்கே சாப்பாடில்லாமற்போகுமா?

சித்திரன்:—திட்டத்திலிருக்கும். வழக்கத்தில் இராது.

உத்தரன்:—உனக்கென்ன வேலை? உள்ளேபோவோம். [வாயிற்படியடைதலும்.]

காவலன்:—[கைதொழுது] சாமி எசமான்! கும்பிடரேன்.

உத்தரன்:—பாரடா! காவற்காரனா?

காவலன்:—ஆமாம்; எசமாங்களே!

உத்தரன்:—இங்கே உள்ளே யாராவது இருக்கிறார்களா?

காவலன்:—தர்மகர்த்தா எஜமான் இருக்கிறாங்க. அவக பொஞ்சாதி புள்ளே குட்டிகள் எல்லாம் அடைஞ்சுகிடக்குது.

உத்தரன்:—தர்மகர்த்தாவிடத்தில் இரண்டு வழிப்போக்கர்கள் வந்திருக்கிறார்களென்று சொல்.

காவலன்:—நீங்களே போய்ச் சொல்லலாம்.

[உத்தரனும் சித்திரனும் உள்ளே செல்லல்.]

தர்மகர்த்தா:-யாரங்கே? [என்று கேட்டுக்கொண்டு வெளியேவரல்]

உத்தரன்:—நாங்களிருவர் வழிப்போக்கர்கள்.

தர்மகர்த்தா:—வழியோடுபோகிறவர்களானல் உள்ளே உங்களுக் கென்னவேலே?

உத்தரன்:—வேலேயாய்த்தான் வந்தோம்.

தர்மகர்த்தா:—அடே! சொல்லுமே?

உத்தரன்:—இங்கே சாப்பாடு கிடைக்கக்கூடுமானல் அதற்குப் பணம் கொடுத்துவிடுகிறோம்.

தர்மகர்த்தா:—இதென்ன? சோற்றுக்கடையென்று பார்த்தீர்களோ?

உத்தரன்:—இது தர்மசத்திரந்தானேயா. இது நீர் எனக்குச் சொல்லவேண்டாம். அகாலத்தில் வந்தோமே என்று சொன்னேன்.

தர்மகர்த்தா:—அகாலத்தில் வந்தால் படுத்துக்கிடங்கள். இடமிருக்கிறது.

சித்திரன்:—இந்த அதர்மகர்த்தாவைத்தான தர்மகர்த்தா வென்று வாயில்காவலன் சொன்னன்?

தர்மகர்த்தா:—[முகம் சிவந்து கோபங்கொண்டு] யாரடா! தாறுமாருய்ப் பேசுகிறது?

உத்தரன்:—அவன் கிடக்கிருன், சிறுபயல்.

தர்மகர்த்தா:—சாப்பாடெல்லாம் மத்தியானமே ஆய்விட்டதே!

உத்தரன்:—இங்கே சாப்பாட்டுத்திட்டமுண்டோ?

சித்திரன்:—இவர்களுக்கில்லாமலா இருக்கும்?

தர்மகர்த்தா:—எய்! கண்டபடி பேசாதே. [உத்தரனே நோக்கி] உங்களுக்குச் சாப்பாடு கிடையாது. சாயங்காலம்வரை பொங்கி வைத்துக்கொண்டு நீங்கள்வரும்வரை காத்திருப்பார்களோ? இங்கே பணத்துக்கும் சாப்பாடு கிடையாது; போங்கள்.

சித்திரன்:—சமையல்செய்ய இடமிருக்கிறதா?

தர்மகர்த்தா:—நீ அதிகப்பிரசங்கி; என்னோடு பேசாதே.

சித்திரன்:—இல்லை; அதர்மகர்த்தாவான உங்களால்தான் இந்தச்சத்திரம் நடந்துவரவேணும்.

தர்மகர்த்தா:—நடந்துதான்வருகிறது.

சித்திரன்:—சத்திரத்துத் திட்டத்திலுள்ளதை நீங்களே சமைத்துச் சாப்பிட்டுவிட்டுப் பிராமணபோஜனமாக்கிவிடுகிறீர்களாக்கும்.

தர்மகர்த்தா:—அதெல்லாம் உமக்கென்ன? கிடக்கிறதென்றால் என்ன மேலேமேலே பேசுகிறீர்?

சித்திரன்:—ஒன்றுமில்லை. அதர்மத்தைப் பரிபாலித்தல் மிகவும் கஷ்டமையா!

தர்மகர்த்தா:—சும்மாபோகிறீரா என்ன?

சித்திரன்:—சத்திரத்தில் வந்தவர்கள் சும்மாபோவார்களா? அதர்மகருத்தாவை வைதுவிட்டுத்தான் போவார்கள்.

[உத்தரனும் சித்திரனும் வெளியில் வரல்]

விகலன்:—என்தாயார் சமையல்செய்துபோடுவதாகச் சொன்னாள். சற்றுப் பொறுங்கள்.

உத்தரன்:—அவள் மிகவும் கிழவியாயிற்றே!

விகலன்:—குற்றமில்லை. நான் ஜலமுதலானவை கொண்டுவந்து கொடுத்துவிட்டேன். உண்டுபோகலாம்.

சித்திரன்:—(உத்தரனைநோக்கி) இந்தச்சத்திரத்திலும் சமைத்துப்போட ஒருவரிருக்கிறார் பார்த்தாயா!

உத்தரன்:—நீங்கள் எவ்விடம்?

விகலன்:—நாங்கள் யாத்திரைக்காரர்கள்; பாடலீபுரத்திலிருந்து வருகிறோம்.

உத்தரன்:—நாங்கள் பாடலீபுரத்துக்குத்தான் போய்க்கொண்டிருக்கிறோம்.

விகலன்:—எங்கிருந்து வருகிறீர்கள்?

உத்தரன்:—பாஞ்சாலநாட்டிலிருந்து வருகிறோம்.

விகலன்:—உங்களைப்பார்த்தால் அரண்மனையுத்தியோகஸ்தர்கள்போல்தோன்றுகிறதே!

உத்தரன்:—ஆம். நாங்கள் அரண்மனைச் சேவகர்களே.

சித்திரன்: — அரண்மனையுத்தியோகஸ்தர்சேவகர்கள்; அவர் காரியமாய்ப்போகிறோம்.

விகலன்:—பாஞ்சாலநாட்டு அரண்மனையுத்தியோகஸ்தருக்குப் பாடலீபுரத்தில் என்னகாரியம்?

உத்தரன்:—அவன் கிறுக்குப்பயல். அவன்சொல்வதை நம்பாதீர்கள்.

சித்திரன்:— இவர்கள் பாடலீபுரமென்றுசொல்வதால் நாம் போகுங்காரியமாய் ஏதேனும் விசாரணை இங்கேயே செய்துகொள்வது நல்லதென்று சொன்னேன்.

உத்தரன்:—நீங்கள் பாடலீபுரத்தில் எங்கே வசிப்பது?

விகலன்:—நாங்கள் இருப்பது நேபாளஞ்செகுத்த நிருமலகுப்தர் அரண்மனைக்கு அடுத்த ஒரு சந்தில்.

சித்திரன்:—கோபாலமெடுத்த குப்பையபாகவதர் வீடோ?

உத்தரன்:—நீ சற்று வாயைமூடிக்கொண்டிருக்கமாட்டாயா?

சித்திரன்:—நான் வாயைமூடிக்கொண்டிருந்தால் நீ ஒரு விசாரணையும் செய்யமாட்டாய்; சும்மா இருப்பாய்.

உத்தரன்:—அந்தச் சந்தில் யார்வீடு?

விகலன்.—அங்கே என் தமயன் சாகரர் இருக்கிறார். நாங்களிருவருந்தான் இருக்கிறோம்.

சித்திரன்:—பார்த்தாயா? நாம்போகிற வீடு இங்கேயே வந்து விட்டது.

உத்தரன்:—சாகாரிடம் மிகுந்த அன்புடையவர் எம் தலைவர். அவர் ஒரு ஓலைகொடுத்து அதைச் சாகாரிடம் சேர்க்கும்படி எங்களுக்குக் கட்டளையிட்டுள்ளார்.

விகலன்:—ஓலையில் என்ன எழுதியிருக்கிறதோ?

சித்திரன்:—அதிற்கண்டிருப்பதை யார்கண்டார்கள்? ஓலை இதோ சட்டையிலிருக்கிறது.

விகலன்:—சரிதான். தாயார் கூப்பிடுகிறாள். சாப்பிடவாருங்கள். [என்று அவர்களை உள்ளேயழைத்துக்கொண்டுபோய்விட்டுத் தான் மாத்திரம் வெளியில்வந்து சட்டையிலிருந்து ஓலையையெடுத்து வாசித்தல்.]

"என் அன்புள்ள சாகரனுக்கு. ஈசன்செயலை எவரால் அறியமுடியும்? பாடலீபுரத்தைவிட்டு வரும்வழியில் மிகவும் எச்சரிக்கையாய்க் காலங்கழித்துத் தக்ஷசைல மடைந்தேன். அங்கே சேனைத்தலைவரான சத்துருஜித்தின்பால் வேலையில் அமர்ந்தேன். அவர் என்னிடத்தில் அதிக அன்புபாராட்டி வருகிறார். குறுநாட்டுப்போரில் என்னை ஒரு மகாரதனுக்கி, மெய்காவற் சேனைக்கு இரண்டு அர்த்தரதரையும் அனுப்பிவைத்தனர். என்கீழிருக்கும் வீரர்களெல்லாம் என்னிடம் மிகுந்த வாஞ்சையுடையவரும் என்னாணையை மறுது ஆற்றுவோருமாயிருக்கிறார்கள். நான் போரில்வென்று சிறைப்படுத்திய சிற்றரசர்களை அலக்ஷயேந்திரன்படைவீட்டிலிருக்கும் புருஷோத்தமராஜரிடம் சேர்ப்பிக்க நானே அழைத்துப்போகிறேன். இக்கடிதம் கண்டவுடன் நீயும் உன்தங்கையும் தாயார் யமுனையும் இதுகொண்டுவரும் சேவகர்களோடு தக்ஷசைலம் வந்துசேரவேண்டும். இன்னும் பதினைந்துநாளில் நான் தக்ஷசைலத்துக்குத் திரும்பிவிடுவேன்".

இப்படிக்கு உனது அன்புள்ள

'சந்திரன்'

[என்று படித்து, ஓலையைச்சுருட்டிப் பையிற் போட்டுவிட்டு ஆநந்த மிகுந்து நகைத்துநின்று கண்களில் ஆநந்தபாஷ்பம் பெருகத் தனக்குள்] என்னன்புக்கரசர் உயர்பதவியடைந்தார். அடைந்தும் என்னை மறவாமலிருக்கிறார். ஆதலின் யான் அவரைச் சென்றடைய

வேண்டியது முறைமை. [என்று நினைந்து, காவற்காரனைக் கூப்பிட்டு ஒரு ஓலேயும் எழுத்தாணியும் வாங்கி, ஒரு ஓலையெழுதிச் சுருட்டி ஒட்டி, உத்தரனும் சித்திரனும் வர அவர்களைநோக்கி,] நீங்கள் போஜனம் செய் தாய்விட்டதா? நான் ஏதோ சிறுபிள்ளைத்தனமாய் யோசனைசெய்து கொண்டிருந்தேன். உங்களைத் தனியே உண்ணும்படி விட்டு விட்டேனென்று வருந்தாதீர்கள்.

சித்திரன்:—ஒருவரும் பேச்சுக்கொடுத்துத் தொந்தரவுசெய் யாமல் சாப்பாடே ஞாபகமாய் நன்றாய்ச் சாப்பிட்டோம்.

உத்தரன்:—[சித்திரனைக் கோபித்துநோக்கி விகலனைப்பார்த்து] அத ஞல் குற்றமில்லை.

[உத்தரனும் சித்திரனும் சட்டைகள்போட்டுத் தயார்செய்துகொள்ளல்.]

விகலன்:—உங்களுக்குக் கொஞ்சம் சிரமம் கொடுக்கிறேன். நீங்கள் சாகரரிடத்தில் உங்கள் தலைவர்கொடுத்த ஓலையைக்கொடுக் கும்போது இந்த ஓலையையும் கொடுக்கவேண்டும்.

உத்தரன்:—ஆகா. அப்படியே செய்கிறேன்.

---

## அங்கம் - III.

### களம் - 3.

---

[அலக்ஷயேந்திரன் படமாடத்தினருகில் ஒரு கருடிக்கூடத்திற் சுற்றி லும் ஜனங்கள் சூழ நடுவிற் கச்சைகட்டிக்கொண்டு சந்திரன் நிற்றல்]

அலக்ஷயேந்திரன்:—(உட்புகுந்து) சந்திரரே! இந்தக்கூட்டத்தி லுள்ள என் சேனைத்தலைவர்பலரில் யாரோடு பொருவீர். அல்லது என்னேடு மற்போர் புரிவீரா?

சந்திரன்:—யாரையனுப்பினாலும் சரி. அது உங்கள் நோக்கப் படியென்று நேற்றே தெரிவித்துக்கொண்டேனன்றோ?

அலக்ஷ்யேந்திரன்:—எனக்கு உம்மோடு மற்போர்புரியவேண்டு மென்று ஊற்றமுண்டாகிறது. ஆதலின் நாமிருவருமே விளையாடு வோம்.

புருஷோத்தமன்:—[அலக்ஷ்யேந்திரனைக்கிட்டி] அரசே! சந்திரன் சிறுபிள்ளை. மேலும் உங்கள் சக்கரவர்த்திப்பதவிக்கும் அவன் பதவிக்கும் வெகுதூரம். உங்கள் வல்லமையை இந்தச் சிறுபைய னிடம் காட்டுதல் தகுமா?

அலக்ஷ்யேந்திரன்:—இருந்தாலும் இந்தச் சிறுவன்திறத்தைப் பார்க்கவேண்டும்.

புருஷோத்தமன்:—சந்திரன் உறுதியைக்கண்டு யாரும் சிறிது அஞ்சவேண்டியதுதான். நீங்கள் ஜயம்பெறுவீர்களென்று நாங்க ளெல்லாம் பூரணமாய்நம்பினாலும், காரியமுடிவில் எப்படியாகுமோ? உங்களைத் தவிர வேறு யாராயிருந்தாலும் சந்திரன் கையால் தோல்வியடைவதிற் குற்றமில்லை.

அலக்ஷ்யேந்திரன்:—யானே தோல்வியடைவதாகவைத்துக் கொள்வோமே? அதிலென்ன குற்றம்?

புருஷோத்தமன்:—தங்கள் சித்தத்தில் அங்ஙனம்பட்டால் இனி யான் சொல்லக்கூடியது ஒன்றுமில்லை.

அலக்ஷ்யேந்திரன்:—சந்திரரே! உஷார். மற்போர்தொடங்கு வோமா?

[இருவரும் மல்யுத்தஞ்செய்ய, யமுனையும் விகலனும் தம்முள் உரையாடுதல்.]

விகலன்:—அம்மா! அங்கே நடக்கும் போர் மிகவும் அநியாய மானது.

யமுனை:—ஏன்?

விகலன்:—தன்னினும் பத்துவயது இளையவனோடு எந்தச் சுத்தவீரனாவது மல்யுத்தம் செய்வானா? அந்த அயல்நாட்டு வீரன் ராக்ஷஸசொரூபியாகவும், முரட்டுத்தனமாகவும், சாஸ்திர விரோதமாகவும் கண்டவிடங்களிலெல்லாம் தாக்கிப் பொருகிறான்.

இச்சிறுபிள்ளையோ அப்படியின்றிச் சாஸ்திரப்படி அடிகள், பிடிகள், குத்துக்கள், உறுப்புக்கள் முதலியவற்றைத் தெரிந்து நிதானமாகப் பாய்கிறான். தன்னைக் காத்தலையே முதன்மையாகக்கொண்டு பின் எதிராளியை வீழ்த்துவதற்கு முயல்கிறான்.

யமுனை:—அப்படிச்செய்வதுதான் சாஸ்திரீயமோ?

விகலன்:—ஆம். ஏனெனில் எதிராளியை வெல்லாவிட்டாலும் தான் தோல்வியடையாமலிருக்கவேண்டியது முக்கியமன்றோ?

யமுனை:—ஆகா! அந்தப்பெரியவன் கெலித்துவிடுவான். சிறியவனுடைய இருகால்களையும் கட்டிப்பிடித்துவிட்டான்; இனி இழுத்துப் புரட்டவேண்டியதுதான்.

விகலன்:—சிறியவன் சாமர்த்தியத்தைப் பார்த்தீர்களா! நாகப்பாம்பு வாலைப்பிடித்துத் தூக்கினால் இரட்டையாய் மடித்துக்கொண்டு உயர்வதுபோல் வளைந்துயர்ந்து பெரியவன் தோளிற் குத்திக் கால்களை விடுவித்துக்கொண்டான்.

யமுனை:—உண்மைதான். இவன் குத்துக்காற்றமாட்டாமல் கைவலியற்ற பெரியவன் தரையிற் குப்புறப்படுத்துக்கொண்டான். சிறியவன் எப்படி அவனைக் கிளப்புவான்? பார்ப்போம்.

விகலன்:—கிளப்பமுடியாதென்றுதான் எனக்கும் தோன்றுகிறது.

யமுனை:—அவசரப்படாதே. பார்ப்போம்.

விகலன்:—இச்சிறுவன் சாமர்த்தியம் வியக்கத்தக்கதே! இவன் மனவலியும் மேம்பட்டது. இவன் சாமர்த்தியம் பலிக்காது போலிருக்கிறது.

யமுனை:—பார்த்தாயா! புரட்டிவிடுவான். இன்னும் சற்றுப் பொறு.

விகலன்:—ஆகா! புரட்டிவிட்டான். [கரகோஷம்]

அலக்ஷ்யேந்திரன்:—[உடனே எழுந்து உடைவாளையுருவிக்கொண்டு சந்திரனையணுகி] மல்லில் வென்ற மைந்தரே! வாளால் விளையாடுவோம் வருக.

[புருஷோத்தமன் முதலியோர் கொட்டடியுள் வரல்]

புருஷோத்தமன்:—அரசே! இனி வேண்டாம். இத்துடன் நிறுத்திவிடுங்கள். இச்சிறுவன் செயல்களால் நீங்கள் சந்தோஷமடைந்து அவனை ஆசீர்வதிக்கவேண்டும். [சந்திரன் தலையைத் தடவி] பிள்ளாய்! சுத்தவீரனென்னும் பெயர் உனக்குத் தகும்.

அலக்ஷயேந்திரன்:—சந்திரா! உலகெலாம் வென்ற என்னை ஒரு நொடியில் வென்றனை. அதனால் மகிழ்ந்தேன். என்னாலியன்றதைை நீ கேட்டாலும் தருவேன்.

சந்திரன்:—[தலைவணங்கி] "அரசே! தாங்கள் எங்கள் தேசத்தின்மேற் படையெடுத்துச் செல்லாமல் திரும்பிப்போகவேண்டும்."

அலக்ஷயேந்திரன்:—[சேனாபதிகளை நோக்கி] இச்சந்திரர் சொல்லுகிறபடி நடக்கலாமா? உங்கள் அபிப்பிராயம் என்ன?

பிரதமசேனாபதி:—இறைவ! என்சிற்றறிவுக் கெட்டினமட்டில் அப்படியே செய்யலாம். நம் படைஞரும் அவரவர் வீடுவாசல்களை விட்டுவந்து வெகுநாளானபடியால் ஊருக்குத் திரும்பிச்செல்லுவதில் மிகுந்த ஆவலுடையவராயிருக்கிறார்கள். மகதனோடு யுத்தம் செய்தாலும் சாதாரணத்தில் முடியாது.

2-ஆம்சேனாபதி:—அரசே! அவர்சொல்வது சரிதான். நாங்களெல்லாரும் ஊரையும் உறவினரையும் விட்டுவந்து வெகுகாலமாயிற்று. உலகில் ஒரு பாதிக்குமேல் வென்ற உங்களுக்கு மற்றதை வெல்வது பெரிதல்ல. இச்சமயம் நம் தேசத்துக்குத் திரும்பிப் போய்விட்டு மறுபடியும் புதிய படைகளைத் திரட்டிக்கொண்டு வருவதுதான் உசிதமென்று தோன்றுகிறது. பின்பு, அவ்விடத்துச்சித்தம்போல் நடக்கக்காத்திருக்கிறோம்.

அலக்ஷயேந்திரன்:—நம்படைகளின் அபிப்பிராயமும் இவ்விஷயத்தில் அறியவேண்டும். [படையினர் கரகோஷம்.] இவர்கள் கரகோஷத்தால் நாம் திரும்பிவிடுவதையே அபேக்ஷிக்கிறார்கள். [சந்திரனைநோக்கி] சந்திரரே! நீர் கேட்டவரத்தைத் தந்தேன்.

சந்திரன்:—அரசே! இந்தவரத்தை எந்நாளும் மறவேன். உங்கள் பெருந்தன்மை வியக்கத்தக்கது.

அலக்ஷயேந்திரன்:—[நந்தன் தூதரைநோக்கி] தூதர்களே! உங்களரசன் இன்றுதான் நற்றவப்பயன் பெற்றான். நாம் ஊருக்குத் திரும்பிப்போய்வருவோமென்று சொல்லுங்கள்.

தூதர்தலைவன்:—அப்படியே.

[கூட்டம் முழுதும் கலைந்து எல்லோரும் போய்விட,
புருஷோத்தமன் சந்திரன் யமுனை விகலன்: இவர்கள்மட்டும் இருத்தல்.]

யமுனை:-[சந்திரனைக்கிட்டிக்கட்டி முத்தமிட்டுக்கொண்டு] பிள்ளாய்! பெரியோர்தவப்பேற்றால் உன்னைத் திரும்பக் கண்டுகொண்டேன்.

சந்திரன்:—[தரையில்விழுந்து தாயை வணங்கிக் கண்களில்நீர் ததும்ப] தாயே! உம்மிடம் நான் மிகவும் அபராதியானேன். சொல்லாதுவந்ததுமன்றி நீங்கள் என்னைத் தேடி இடர்ப்படுதற்கும் காரணமாயினேன். [புருஷோத்தமனைநோக்கி] எம்மரசே! இவர் என் அன்னை!

புருஷோத்தமன்:—தெரிந்தது; நீர் இவ்வளவு அறிவுடையவராயிருந்தும் தாயாரிடம் சொல்லாமல் எங்ஙனம் ஊரைவிட்டுவந்தீர்?

விகலன்:—தம்பி விகலனையும் கைவிட்டுவந்தார்.

சந்திரன்:—[தனக்குள், ஓகோ! சுலோசனையே இவ்வாறு ஆண்வேடம் பூண்டு மாறுபெயர் தரித்திருக்கிறாள் என்று நினைந்து விகலனையடுத்து] அப்பா! விகல! நான் உன்னிடத்தும் அண்ணனைப்போல் நடந்துகொள்ளவில்லை. [என்று கையால் வாரியெடுத்து முத்தமிட்டு உச்சிமுகந்து, பின் இருவரையும் நோக்கி,] இருந்தாலும் ஈசன்செயலால் நீங்கள் சுகமாயிருந்தது என்பாக்கியந்தான்.

புருஷோத்தமன்:-சந்திரரே! இன்று நம் படமாடத்தில் நாமெல்லாம் உண்போம், வருக. பாரதமாதாவின் உண்மையான புத்திரசிகாமணிகளில் நீர் ஒருவர். மகதநாட்டில் வீசக்கிளம்பிய பெரும் புயலை உம்முடைய தோள்வலியால் தடுத்தீர். நீர் சத்துருஜித்தும் மெச்சக்கூடிய வீரரே!

[எல்லோரும் செல்லுதல்.]

## அங்கம் - III.

### களம் - 4.

இடம்:—தர்மசிலராரண்மனே மேன்மாடத்து நடுக்கூடம்.

பாத்திரங்கள்:—தர்மசீலர், சாணக்யர், பிரபுக்கள், சேவகர்கள்.

தர்மசீலர்:— ஆரடா! சேவகன்.

சேவகன்:—எஜமான்!

தர்மசீலர்:—வாயில்காப்போனிடம் ஒருவரையும் உள்ளே விடக் கூடாதென்று சொல். எச்சரிக்கையாயிருக்கச்சொல். தடுக்கக் கூடாதவர் யாரேனும் வந்தால் ஓடிவந்து முதலில் தெரியப் படுத்தச்சொல்.

சேவகன்:—அப்படியே. எஜமான்! (செல்லல்)

முதற்பிரபு:—தர்மசிலரே! நராதிபதிகளில் நந்தரைப்போன்ற வர் யாரேனும் உண்டா?

இரண்டாம்பிரபு:—சந்திரனுக்கும் அதிஜயனுக்கும் அடிதடி நேர்ந்தால், பாவம், சும்மா இருந்த சாகரனென்னும் சிறுவன் என் செய்வான்? அவனைச் சிறைச்சாலையிலடைத்துவைத்து அநேக க்ஷ்டங்களுக்கு உள்ளாக்கக்கூடாதென்று உங்களைப்போன்ற பெரி யோர்கள் எடுத்துச்சொல்லக்கூடாதா?

தர்மசீலர்:—தர்மத்தைச்சொன்னல் கேட்கக்கூடிய அரசர்கள் காலம் முன்னமேயே போய்விட்டது.

முதற்பிரபு:—அந்தக் காலங்களெல்லாம் போய் இந்தக்காலம் ஆச்சரியமாயிருக்கிறது. என் இளவயதில் என்தகப்பனர்சொல்லக் கேட்டும் நான் நேரில் கண்டும் இருக்கிறேன். அரசனென்ருல் மநு நெறிபிறழலாமா? தன்னுயிரைக் கொடுத்தும் மன்னுயிரைக் காப்பார்களே! இப்பொழுதெல்லாம் வலிமையுள்ளவன் வலிமை யற்றவர்களை வருத்துதலும், அதனல் பெரும் கீர்த்தியும் அடை வதுமாயல்லவோ இருக்கிறது. அரசன்செய்வதைத்தான் இந்தக் கிரமத்தில் குடிகளும் அநுசரிக்கிருர்கள். நேபாளஞ்செகுத்த நிர்மலகுப்தருக்கு இவர் பாட்டனர்காலத்தில் விட்டிருந்த மான்யம் முழுவதையும் பிடுங்கிக்கொண்டு அவரை ராஜ்பத்திலிருக்கக்கூடா தென்று விரட்டிவிட்டாராம்.

தர்மசீலர்:—ஆ! அப்படியா! எதற்காக?

இரண்டாம்பிரபு:—சாகரனென்பவனை அநியாயமாய்ச் சிறையில் அடைத்துவைக்கக்கூடாதென்று அவர் சபையில் நேற்றுச் சொன்னாராம். இன்றுகாலை ராஜாஜ்ஞை பறக்கிறது.

முதற்பிரபு:—அவருடைய சகல ஜங்கமசொத்துக்களுங்கூட அட்டவணையெழுதப்பெற்று அரண்மனைக்குப் போய்ச்சேர்ந்து விட்டனவாமே?

தர்மசீலர்:—ஏனையா! நாமும் நாளைக்கு ஒரு நியாயத்தைச் சொன்னால் இப்படித்தானே.

முதற்பிரபு:—ஆனால் இதைச் செய்தது நந்தன் நலத்துக்கன்று. நிர்மலகுப்தர்பெயர்கேட்டால் யாரும் நடுங்குவார்கள். அவரிடத்துப் போர்த்தொழில்பயிலாத சிற்றரசர் இந்த மகதநாட்டில் இல்லை. படைத்தலைவரனைவரும் அவரைத் தெய்வமாகவன்றோ பாவித்திருக்கிறார்கள். அவரிடத்தில் அரசனுக்கு இவ்விதம் புத்தி வந்தது அவன் நாசத்துக்குத்தான்.

தர்மசீலர்:—இந்தச் சந்திரன்தான் எங்கேபோயிருப்பான்? இவ்விடத்தில் அவனுக்கு உறவாயிருந்தார் யாருமில்லையோ?

சேவகன்:—வாயிலில் இரண்டு சேவகர்கள் எஜமானவர்கள் சமயத்தை எதிர்பார்த்துநிற்கிறார்கள்.

தர்மசீலர்:—அவர்கள் யாரென்று கேட்டனையா?

முதற்பிரபு:—நாம் பலவாறு பிரிந்துவிடுவது நலம். நாம் இங்குப் பேசிக்கொண்டிருக்கும்விஷயம் அரசன்காதுக்கு எட்டியிருக்கக் கூடும். அளவிறந்த ஒற்றர்களால் நாம் உண்ணும் உணவுமுதல் எண்ணும் எண்ணம்வரை யாவும் அரசனுக்கு அப்போதைக்கப் போது தெரிந்துகொண்டிருக்கின்றன.

சேவகன்:—அவர்கள் பாஞ்சாலதேசமாம். அவர்களுடைய தலைவரான சந்திரரென்பவர் அனுப்ப வந்தவர்களாம்.

தர்மசீலர்:—நண்பரே! இது நீர்சொல்லியவண்ணமின்றி நல்லதுபோ விருக்கிறது. [சேவகனைநோக்கி] அவர்களை இங்கே அழைத்துவா.

முதற்பிரபு:—சந்திரரென்பது நம் சந்திரனாயிருக்குமோ?

[சேவகன் இரண்டு வீரருடன்வர இருவீரரும் கைகூப்பித் தொழுதல்]

உத்தரன்:—[தர்மசீலரைநோக்கி] தர்மசீலரென்னும் எஜமான் தாங்கள்தானோ?

தர்மசீலர்—ஆம். நீங்கள் யார்?

உத்தரன்:—பாஞ்சாலர்படைத்தலைவர் சந்திரருடைய சேவகர்கள். அவரன்பர் சாகாருக்கு இவ்வோலைகொணர்ந்தோம். [ஓலைகளைக் கொடுத்து] அவர் சிறைப்பட்டிருப்பதால் பெரியோராகிய தங்களிடத்திற் கொடுத்துவிடலாமென்று பக்கத்துவீட்டிற் சொன்னார்கள். இக்கடிதத்தில் உள்ள விஷயத்தை அவருக்குத் தெரிவித்து எங்களுக்குப் பதில்வாங்கித்தரும்படி தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தர்மசீலர்:—இரண்டு ஓலைகள் இருக்கின்றனவே.

சித்திரன்:—ஒன்று எங்கள் தலைவர்கொடுத்தது. மற்றொன்று நாங்கள் வரும்வழியில் எங்களைச் சந்தித்த சாகாருடைய தம்பியார் அவர் தமயனாருக்குக்கொடுத்தார்.

தர்மசீலர்:—சாகானுக்கு ஒரு தம்பியுண்டோ?

முதற்பிரபு:—ஏதோ? தம்பியோ? தங்கையோ? இளையது ஒன்று உண்டென்றுதான் கேள்வி.

தர்மசீலர்:—இவைகளை நாம் பார்ப்பது தகுதியன்று. ஆயினும், [சேவகர்களைநோக்கி] உங்கள் தலைவர் பாஞ்சாலனிடத்தில் என்ன வேலையிலிருக்கிறார்?

சித்திரன்:—அவர்தான் எங்கள்நாட்டுச் சேனைத்தலைமை வகித்திருக்கிறார். குறுநாடுவென்ற கோளரியென்றும், அலக்ஷியற்செற்ற விலக்ஷணரென்றும், வேற்றரசறுத்த கூற்றுவரென்றும் யாவரும் புகழும்படி பலவித விருதுகளுடன் எங்கள் சைநியத்தின் நாயகமணியாய் விளங்குகிறார். அவரால் நடத்தப்பட்டு நாங்கள் சென்ற களமெல்லாம் வென்றியொடு மீண்டுளேம். பொருதிடுகளமெலாம் விருதுகொண்டெழுவோம்.

முதற்பிரபு:—[தர்மசீலரிடத்தில் தனித்து] சரி. இவர்கள் நல்ல வேளையில் இங்கு வந்துசேர்ந்தார்கள். இவர்களை இனி நாம் கேள்வி கேட்டுக்கொண்டிருத்தல்கூடாது. இந்தச்சமயத்தில் உண்மையை இவர்களிடத்திற்சொல்லிச் சங்கதிகளைச் சந்திரனுக்குத் தெரிவித்து விட்டால் பிறகு தெய்வச்செயல்போல் ஆகிறது.

தர்மசீலர்:—அப்படியே; இவர்களுக்குச் சொல்லலாம்.

முதற்பிரபு:—சேவகர்களே! உங்கள்வரவால் நாங்கள் மிகவும் மகிழ்ந்தோம். உங்கள் தலைவராகிய சந்திரர் எங்கள் சக்கரவர்த்திக்கு மிக விரோதி. அதனால்தான் சாகரனும் சிறையிலிருக்கிறான். அவருடைய மேன்மையையும் கீர்த்தியையும் நீங்கள் இந்நகரத்திற் பிரஸ்தாபித்தல் தகுதியன்று. நீங்கள் உடுப்புக்களை மாற்றிக் கொண்டு எங்களைப்போன்ற நடையுடைகளுடன் இன்றேயிரவுகழியு மட்டும் சும்மா இருந்தால் இன்றிரவில் இக்கடிதங்களைச் சாகருக் குக் காட்டி நாளைக்காலை உங்களுக்குப் பதில்வாங்கித்தருவோம்.

சித்திரன்:—அப்படியே ஆகட்டும்.

தர்மசீலர்:—[சேவகனையழைத்துச்] சேவகா! இவர்களைக் கீழே அழைத்துப்போய் நம் சேவகர்களைப்போல் உடைமுதலானவை யுதவி உணவளித்துவைத்திரு.

[சேவகன் அழைத்துக்கொண்டுபோதல்]

முதற்பிரபு:—தர்மசீலரே! காலத்தைப் பார்த்தீரா? நம் அரச ருக்குக் கேடுகாலம் கிட்டிவிட்டது.

தர்மசீலர்:—இல்லாவிட்டால் இவர்கள் வருவானேன்? இருக் கட்டும். நீர் எவ்விதம் இவைகளைச் சாகருக்கு அனுப்புவீர்?

முதற்பிரபு:—அதை நான் பார்த்துக்கொள்கிறேன். இனிமேலே ஆகவேண்டியதைப் பார்க்கவேண்டியதுதான். போய்வருகிறேன்.

தர்மசீலர்:—நீங்கள் உங்களைப்பற்றினமட்டில் ஜாக்கிரதையா யிருங்கள்.

[எல்லாரும் விடைபெற்றுப் போதல்.]

## அங்கம் - III.

### களம் - 5.

---

இடம்:—சாணக்கியர்குடிசை.

பாத்திரங்கள்:—மாணவர்கள், வித்துவான்கள்.

[நியாயவகுப்புப்பாடங்கள் நடக்கின்றன.]

ஆசிரியர்:—

𑌅𑌦𑌣𑍍𑌡𑍍𑌯𑌾𑌨𑍍 𑌦𑌣𑍍𑌡𑌯𑌨𑍍 𑌰𑌾𑌜𑌾 𑌦𑌣𑍍𑌡𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚𑍈𑌵𑌾𑌪𑍍𑌯𑌦𑌣𑍍𑌡𑌯𑌨𑍍।
𑌅𑌯𑌶𑍋 𑌮𑌹𑌦𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌨𑌰𑌕𑌂 𑌚𑍈𑌵 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿॥

இது ராஜதர்மத்தில் முக்கியமானது. குற்றஞ்செய்தவர்களைத் தண்டிக்கவேண்டியது மிகவும் அவசியம். அவ்விதம் தண்டியாவிட்டால் உலகத்திற் குற்றம் மலிந்து பொல்லார் மிகுந்து நல்லோர் நலிவடைவர். ஆனல் அபராதம் செய்யாதவர்களை எவ்விதத்திலும் ஒறுத்தல் மஹாபாபமாகும். ஆதலால், குற்றத்தைத் தீரவிசாரித்து அதன் உண்மை நிரூபிக்கப்பெற்றபிறகுதான் தண்டிக்கவேண்டும். அரசனுக்கு இம்மையிற் பழியும் மறுமையில் நரகமும் நிரபராதிகளைத் தண்டித்தலால் உண்டாகும்.—என்றுசொல்லி, அபராதிகளைத் தண்டியாமல்விட்டாலுங்கூட இவைகள் உண்டாம் என்று "ச" காரத்தாற் சூசிப்பித்தார்.

[தர்க்கவகுப்பு ஆசிரியர் வெளியே சென்றிருக்க மாணவர்களுக்குள் பேச்சு.]

முதல்மாணவன்:—அப்பாக்குட்டிரயம் ஸாதுঃ

2-ஆவது மாணவன்:—அதெப்படி?

முதல்மாணவன்:—குட்டித்வாத்; பூனைக்குட்டிவத்.

3-ஆவது மாணவன்:—பாம்புக்குட்டி ஸாதுவோ?

முதல்மாணவன்:-பாம்புக்குட்டியில் அதிவ்யாப்தி. தத்பின்னத்வம் விசேஷணம்.

ஆசிரியர்:—அடே! என்னடா அரட்டை. [என்று சொல்லிக் கொண்டுவருதல்.]

[தர்மசீலர் வருதல்.]

வாயிலிலிருக்கும் ஒரு வித்வான்:—மங்களாணிபவந்து. வர வேணும்.

தர்மசீலர்:—குரு இருக்கிறாரோ?

வித்வான்:—உள்ளே க்ரந்தம் பார்த்துக்கொண்டிருக்கிறார்; போகலாமே.

[தர்மசீலர் உள்ளே மற்றொருபுறம் சென்று சாணக்கியரை வணங்கல்]

சாணக்கியர்:—தர்மசிலரே! வரவேணும். உமக்கு ஸகல மங்களமும் உண்டாகுக.

தர்மசீலர்:—குருநாதா! எங்கள் இடர்ப்பாட்டைத் தங்கள் அருளால் தீர்த்துக்கொள்ளநினைத்தோம். அதன்பொருட்டு வந்தேன்.

சாணக்கியர்:—நிர்மலகுப்தர் இங்கிலனிறந்துசென்றதும் மற்றவையும் தெரிந்தேன். சாமம் சாதுக்கள்பாற் செல்லும். தானம் பொருள்வேட்கையுள்ளவிடத்துச் செல்லும். பேதம் சற்றேறக்குறைய ஓரே தகுதியுடைய இருவரிடத்தன்றிச் செல்லாது. தண்டம் வலிமைமிகுதியாலன்றி நடவாது. நம் மன்னர்செருக்கு நாளடைவிலேதான் திருந்தவேணும்.

தர்மசீலர்:—ப்ருஹ்மசிரேஷ்டரே! காத்தற்றொழிலைக் கடைப்பிடித்துநில்லா மன்னவன் தன்னிலையின் இழிந்தவனன்றோ? அரசுரிமை அன்பின்பாற்பட்டதன்றோ? வீரமும் படைகளும் அறங்காத்தற்பொருட்டேயன்றோ? தன்னை மறக்கினும் கருமத்தை மறக்கலாகாதே. மறந்து தொடினும் சுடும் தீப்போல வழுவியவரை ஒறுக்குந்தன்மைத்தன்றோ அறம்? 'கொடுங்கோன்மன்னன் வாழு நாட்டிற் கடும்புலிவாழுங் காடுநன்'றென்று கருதி நிர்மலகுப்தர் நாடிறந்து காடடைந்தார். அடக்கியாளுதலாவது: தீயோரையடக்கி நல்லோரை ஆளுதலாம். இப்பொழுதோ நல்லோர் அறத்தைச் சொல்லாமற் போக்கித் தீமையையாள்வதாயிற்றே!

சாணக்கியர்:—தர்மசீலரே! அரசன் அறந் திறம்பினல், குடிகள் கோல்கடிதலும் உண்டு. அதற்கும் சாஸ்த்ரப்ரமாணமும் சாது சரித்திரங்களும் உள. ஆனல் அதற்கு ஒற்றுமையுணர்ச்சியும் தன்னலம்வெறுத்துத் தாய்நாட்டின் நலனுணர்தலும் வேண்டுமே.

தர்மசீலர்:—தங்களிடமும் தங்களைப்போன்ற பெரிய குருக்களிடமும் பயின்ற நம் தேசத்துமக்களுக்குப் பொதுஜனநன்மையே போற்றும்பொருளன்றோ. பெருங்கோவின் திறம்பற்றி நிற்கும் மன்னர்களுக்கும் பிரபுக்களுக்குங்கூட அவரவர்நிலை எப்பொழுது என்னவாகுமோ என்று அறியமுடியாதநிலைமை வந்திருக்கிறது. அவர்களும் நீதியுள்ள ஒருவரால் இதற்கு விமோசனம்வரவேண்டுமென்று நினைக்கிறார்கள்.

சாணக்கியர்:—அப்படியா! ஸர்வேசுவரன் எல்லாவற்றிற்கும் வழிவிடுவான். அவன், 'மிகைசெய்வார் வினைகட்கெல்லாம் மேற்செயும் வினயம்வல்லா' னன்றோ? இப்பொழுது உங்களுக்கு என்னபலமிருக்கிறது?

தர்மசீலர்:—சாகரனைச்சிறையிலிட்டதில் வாலிபர்குழாம் கறுப்புற்றிருக்கிறது. நிர்மலகுப்தரை நாட்டைவிட்டோட்டியதில் பண்பாளரும் படையாளரும் மன்னருக்குப் பகையாளராகியுள்ளார்கள். இங்கிருந்தேகிய தங்கள் அடியான் சந்திரன் பாஞ்சாலர்சேனையில் பெரும்படைத்தலைவனைப் விளங்குகிறனும்! அவன்வீரம் அளவிடற்கரிதென்று அவனிடமிருந்து சாகரனுக்குக் கடிதங்கொண்டு வந்திருக்கும் இரண்டுசேவகர்களும் சொல்லுகிறார்கள். கடிதங்களைச் சாகரனிடம் சேர்ப்பித்து விடைபெறவேண்டிய ஏற்பாடு செய்துள்ளேன்.

சாணக்கியர்:—சாரணர்தொகுதி எங்ஙனமுளது?

தர்மசீலர்:—அவர்களுக்கு நிர்மலகுப்தர் தலைவரல்லரா? அவரைப்பிரிந்ததுமுதல் அப்படையினரெல்லோரும் அரசனைபொழிக்க வழிதேடுகிறார்களே.

சாணக்கியர்:—அப்படியாயின், சந்திரனைப் படைத்துணையோடு இங்கு வருவித்து, அவன் வரும்வழியிலுள்ளவர்களை அவனுக்கு உதவியாயிருக்கச்செய்து பட்டணத்தைக் கைப்பற்றி அவன்வச மாக்கி முடிசூட்டுவதே நலம்.

தர்மசீலர்:–அப்படியாயின் இவ்விடத்து எல்லாவிவரங்களையும் சந்திரனுக்குத் தெரிவிக்கவேணும். அது தங்கள் கட்டளையாக விருந்தால் அவன் உடனே உடன்படுவான்.

சாணக்கியர்:—[ஒரு கடிதமெழுதி] "சிரஞ்சிவி சந்திரனுக்குச் சகல சௌபாக்கியமும் உண்டாவதாக. இவ்விடம் அரசு குலைந்து அன்பர்கள் உன்னை நாடியுள்ளார்கள். சரியான படைத் துணையுடன்வரின் அரசுபெறலாம். மற்றெல்லாம் உனக்கு உதவி யாயிருக்க ஆண்டவன் அருள்புரிவான்" சாணக்கியர். [என்று வாசித்தல்]

தர்மசீலர்:—போதும்; எல்லாம் இதில் அடங்கியிருக்கிறது. அவனும் புத்திமானாதலால் எஞ்சியவற்றை ஊகித்துக்கொள்வான். மற்றவைகளை நான் பார்த்துக்கொள்ளுகிறேன்.

[குனிந்து வணங்கி விடைபெற்றுக் கடிதத்துடன் போதல்.]

---

## அங்கம் - IV.

### களம் - 1.

---

இடம்:—தக்ஷசைலத்தில் ஒரு தோட்டம்.

பாத்திரங்கள்:—விகலன், சித்திராங்கி.

விகலன்:—[கையில் ஓர் ஓலையுடன் தனக்குள்] என்னைப்போல் ஒரு பைத்தியக்காரி உலகில் இன்னொருத்தி இருக்கிறாளா? என்னி னும் பைத்தியமென்றாலும் தகும்; நானாவது ஓர் உண்மையான புருஷனிடம் என் மனத்தைவைத்து ஆசைப்பட்டேன். இவள் புருஷவுடுப்பிலன்றோ ஆசைவைத்துவிட்டாள்! ஜகத்தைப் பிரும்ம

சிருஷ்டியென்பதுகூட யோசித்துப்பார்த்தால் சரியன்றென்று தோன்றுகிறது. ஜகத்துமுழுதும் அது பிரதிபலிக்கும் ஒவ்வொரு மனத்தின் சிருஷ்டியே. இல்லாவிடில் என்மேல் ஒருபெண் காதல் கொண்டு என்னை மணஞ்செய்துகொள்ளவேண்டுமென்று நினைக்க நியாயமுண்டா! அதிருக்கட்டும். இந்தப்பெண்கள் பேதைமை நகைக்கத்தக்கது. இந்த ஓலையை இன்னொருதரம் வாசிப்போம். [என்று ஓலையைப் பிரித்து]

'என் மனதேற்ற மன்னவருக்கு: உங்களைத் தரிசித்தநாள்முதல் நான் உங்கள்நினைவாகவே இருக்கிறேன். என்னுயுள் முழுதும் தங்களைத் தவிர மற்றொருபுருஷரை நினையேன். உங்களோடு உரையாட வேண்டுமென்று நான் பலசமயங்களில் நெருங்கியும் நீங்கள் என்னை எப்படியாவது ஒதுக்கிக்கொண்டேவந்துவிட்டீர்கள். அவ்விதம் நீங்கள் செய்ததனால் என்னுடைய காதல் வளர்கிறதேயொழியக் குறைகிறதாயில்லை. இன்று உங்களை எப்படியும் நேரில் கண்டுபேசத் துணிந்துவிட்டேன். பெண்கள்மனம் புண்படச்செய்தல் ஆடவருக்கு அழகல்லவே. ஆதலால் இன்றும் என்னைத் தட்டிக் கழித்துவிடாமல் எனக்கு அருள்புரிவீர்களென்று நம்பும் சித்திராங்கி'

[என்று வாசித்து] பெண்கள் தங்கள்மனத்தைத் தாங்களே புண்ணாக்கிக்கொண்டால் ஆடவர்கள் அதற்கு என்னசெய்வார்கள்? என்னைப் புருஷனாக அடையவேண்டுமென்று இவள் தானே தன்மனத்தைப் புண்ணாக்கிக்கொண்டால் அதற்கு யார்தான் என்னசெய்யமுடியும்? எல்லாம்வல்ல ஈசனுக்கும் இது சாத்தியமென்று தோன்றவில்லை; ஆனால் அவன் ஒரு வழிவிடாமல் இப்படிச் செய்யமாட்டான். தோற்றமெல்லாம் சத்தியமென்றெண்ணி மனம் சலிப்பதனாலன்றோ பல கேடுகளும் உண்டாகின்றன. உள்ளே ஓர் உண்மை இருக்க, வெளியில் தோன்றும் வேற்றுமையால் திரிபுணர்ச்சியேற்பட்டன்றோ மனிதர் துன்பந்தருவனவற்றில் ஆசையும் இன்பந்தருவனவற்றில் வெறுப்பும் வைத்துக் கெட்டுப் போகிறார்கள். விட்டில்கள் விளக்கைப் பழமெனக்கருதி அதை உண்ணவிழுந்து உயிர்மாய்கின்றன. மனிதர்கள் தெய்வமார்க்கத்தைவிட்டு உலகமார்க்கத்திற் பற்றுக்கொண்டு உழல்கின்றனர்;

மருந்துண்ணற்கு அழும் மதலேகளேப்போல் மற்றையோர்சொல்லி னும் மனங்கொள்ளாதிருக்கிருர்கள். அது இருக்கட்டும். இவளுக் கென்ன இப்படிப்பயித்தியம்! என் காதலரைக்கண்டு ஆசைகொள் ளாமல் இம்மட்டில் நேர்ந்ததும் என்பாக்கியந்தான்! சத்ருஜித்தின் ஒரே மகளும் அவருடைய சகல செல்வத்தையும் அடைய வேண்டியவளும் ஆன இவள் என்பேரில் ஆசைகொள்ள என்ன காரணம்? நாற்புறமும் உற்றுநோக்கி அதோ சித்திராங்கி வருகி ருள். நம் சங்கதி அவளுக்குத் தெரிந்துவிடப்போகிறது. நாம் முற்றிலும் புருஷனேப்போலவே நடிப்போம்.

[சித்திராங்கி வருதல்.]

விகலன்:—இந்த ஓலே நீங்கள் அனுப்பினதுதானே?

சித்திராங்கி:—நீங்கள் என்னேக் கௌரவித்துப் பேசலாமா? ஓலேயை இன்னும் வாசிக்கவில்லேப்போலிருக்கிறது?

விகலன்:-வாசித்துவிட்டேன்; இருந்தாலும் உங்கள் நிலேமைக் கும் என் நிலேமைக்கும் அதிக ஏற்றத்தாழ்விருப்பதால் மரியாதை தவறுதல் சரியல்லவென்று நினேத்தேன்.

சித்திராங்கி:—என்கடிதத்தில் நான் பெண்புத்தியால் என் னுள்ளம் முழுவதையும் வெளியிட்டுவிட்டேன். நீங்கள் புருஷரான படியால் என்னே இன்னும் பரீக்ஷிக்கிறீர்கள்போலிருக்கிறது.

விகலன்:-நான் இங்கேயிருப்பது உனக்கு எப்படித்தெரிந்தது?

சித்திராங்கி:—அரண்மனேயில் நீங்கள் முதன்முதல் விருந் துண்ணவந்தவன்று உங்களேப்பார்த்ததிலிருந்து இந்த நிமிஷம் வரை நீங்களிருக்குமிடங்களேயும் செய்யுங்காரியங்களேயும் அப் போதைக்கப்போது நான் தெரிந்துகொண்டுதான் வருகிறேன். உங்களே உத்தேசித்தே நான் இதுவரை செல்லாதவீடுகளுக்குச் சென்றும், வராத இடங்களுக்கு வந்துமிருக்கிறேன்.

விகலன்:-சித்திராங்கி! நீ செய்யுங்காரியம் தவறற்றதாக என் மனத்தில் தோற்றவில்லே.

சித்திராங்கி:—ஏன்?

விகலன்:—உன் தாய்தந்தையர் பார்த்து உன்னை யாருக்கு விவாகஞ்செய்துகொடுக்கிறார்களோ அவரிடம் அன்புவைத்து நேசிப்பதுதான் நெறி. நீயாக என்னை நேசிப்பது நெறியன்று.

சித்திராங்கி:—நீங்கள்சொல்லுவது இனி மனம்வைத்து நேசிக்கவேண்டியவர்களுக்குப் பொருந்தும்; ஆனால் நீங்கள் சொல்லும் புத்தியைக்கொண்டு என்மனத்தைத் திருத்திக்கொள்ளக் கூடியகாலம் வெகுநாளைக்குமுன்பே போய்விட்டது.

விகலன்:—நீ என்பேரில் அன்புபூண்டிருப்பது உன் தாய் தந்தையருக்குத் தெரியுமா?

சித்திராங்கி:—அவர்களுக்கு எப்படித்தெரியும்?

விகலன்:—அவர்களுக்குத் தெரிந்தால் நான் இங்கே இருக்கக் கூட முடியாமற்செய்துவிடுவார்கள்.

சித்திராங்கி:—அவர்கள் அப்படிச்செய்யும்வரை நாம் இங்கே இருப்பானேன்?

விகலன்:—(தனக்குள்) ஆ! பெண்களுக்கு இந்த நெஞ்சுத் துணிச்சல் கூடாது. (வெளிப்படையாக) என் அன்பரான சந்திருக்குக்கூடக் கெடுதிவிளைவிக்கும் காரியத்தை உத்தேசம் செய்திருக்கிறாற்போலிருக்கிறதே!

சித்திராங்கி:—நான் நதியில்விழுந்திறந்துவிட, நீங்கள் விடைபெற்று ஊர்போய்ச்சேர்ந்தால் நம் இருவர்நினைவும் நிறைவேறும். யாருக்கும் யாதொருகெடுதலும் வராது.

விகலன்:—நான் விடைபெற்று ஊருக்குப்போகுங்காலம் இன்னும் வரவில்லை. நீ நதியில்விழுந்திறந்ததும் நிலைநிற்காது. உண்மை எப்படியும் வெளியாய்விடும். ஆகலால் அதை விட்டுவிடு. அது இருக்கட்டும்; நம்மனதென்று உன்மனத்தோடு என்மனத்தையும் சேர்த்துக்கொண்டது என்ன துணிவு?

சித்திராங்கி:—இவ்வளவுநேரமாவது இப்போது நீங்கள் என்னைப் பொருட்டாய் எண்ணிப் பேசினது போதாதா?

விகலன்:-என்னை விவாகஞ்செய்துகொள்ளமுடியாமல்நேர்ந்து விட்டால் என்னசெய்வாய்?

சித்திராங்கி:—போகாதஊருக்கு வழிதேடுவதில் யாரேனும் பொழுதுபோக்குவார்களா? அவ்விதம் ஒருநாளும் நேராதே!

விகலன்:-நான் வேறொருவரை மணந்துகொள்ளும்படிநேர்ந்து விட்டால்?

சித்திராங்கி:—என்னையும் ஒரு மனைவியாக ஏற்றுக்கொள்ளுங் கள். புருஷர்கள் சித்தந்தான் ஸ்திரமில்லையே! அதன் சலனங்க ளில் என்னிடத்திலும் ஒருநாள் சலிக்காமலாபோகிறது. பார்த் துக்கொள்வோம். எனக்கு உங்களை மணாளராக அடைந்த மகிழ்ச்சி ஒன்றே போதுமானதாகும்.

விகலன்:—என்னை விவாகஞ்செய்துகொண்டும், மற்றொருவ ருக்கு நான் படிந்துநடக்கும்படிநேர்கிறதென்றுவைத்துக்கொள்; அப்பொழுது என்னசெய்வது?

சித்திராங்கி:—அப்பொழுதும் உங்கள் மனம்போல் நடக்கச் சித்தமாயிருக்கிறேன். அவளைப்போல் நானும் ஒரு மனைவியான தால் நீங்கள் எனக்கும் படிந்துநடந்தாலும் சரி. அல்லது உங்கள் உத்தரவின்படி அவளுக்குப் படிந்துநடக்கச் சொன்னாலும் சரி.

விகலன்:—நான் ஒரு பெண்பிள்ளையென்றுவைத்துக்கொள். அப்பொழுது என்னசெய்வாய்?

சித்திராங்கி:-நான்தான் ஆண்பிள்ளையாய்ப்போய்விடுவேனே?

விகலன்:—சித்திராங்கி! உன் செல்வத்துக்கும் பிறப்புக்கும் தகுந்தபுருஷனைத் தேடிக்கொள்வதுதான் உனக்கு அழகு.

சித்திராங்கி:—எனக்கு நீங்கள்தான் அழகு. இளமையும் வனப்புமே பெண்கள்கண்ணுக்குச் செல்வம். உங்கள்பிறப்பு முகத்தில் எழுதியிருக்கிறது. ஆதலின் என்னை நீங்கள் விசேஷ மாய்ப் பரீக்ஷிப்பதில் என் பேதைமைதான் வெளிவருமேதவிர வேறில்லை.

விகலன்:—அவ்வாறாயின் நீ உன்கருத்தை வெளியிடாமல் மனத்தில் வைத்திரு. உன் விருப்பம் நிறைவேறுங்காலம்வரும் பொழுது சொல்லுகிறேன். உன் தாய்தந்தையரிடத்தில் இதை வெளியிட்டு அவர்கள் சம்மதத்தின்மேல் நாம் மணஞ்செய்து கொள்வோம். உன்னைப் பலரும் தேடக்கூடும். அதிகநேரம் தாமதித்துவிட்டாய். உடனே போய்வா.

சித்திராங்கி:—இதுவும் தட்டிக்கழிக்கிறவழியில் ஒன்றுதானே?

விகலன்:—என்னை நீ புருஷனாக அடையும்படி தெய்வசங்கற்பம் இருந்தால் அதை யாரும் மாற்றமுடியாது.

சித்திராங்கி:—இந்த வேதாந்தங்கேட்கவா நான் உங்களைத் தேடிக்கொண்டு இங்கேவந்தது?

விகலன்:—நமக்குப் பிராப்தமில்லாவிட்டால் நாம் எவ்வளவு முயன்றும் பயன்படாது.

சித்திராங்கி:—நம்மால் இயன்றவரை நாம் முயன்றுவிட்டு அதன் பிறகுதான் பிராப்தமுண்டா? இல்லையா? என்பதைச் சோதிக்க வேண்டும். பறிக்கமுயலாமலே மாங்காயும் தேங்காயும் உடைத்துத் தின்னமுடியுமா?

விகலன்:—தோட்டத்தின்கதவு ஓசைப்படுகிறது.

சித்திராங்கி:—என்மனத்தை உங்களிடம் விட்டுவிட்டு வெற்றுடலைச் சுமந்துகொண்டுபோகிறேன். அது இருக்க உங்களருகே சற்றிடங்கொடுங்கள். [போதல்.]

விகலன்:—[தனக்குள்] இவள் மனவுறுதி வியக்கத்தக்கது. தன் தாய்தந்தையர்க்கு என்ன துக்கம்விளையினும், என்னையே கணவனாக அடைவதாய்த் தீர்மானித்துவிட்டாளே! மகா சுத்த வீரர்களுக்கும் அருமையான மனவுறுதியை இவள்போன்றசிறுமியருக்கும் கொடுக்கும்படியான மன்மதனைக் கரும்பால் வில்லும் சுரும்பால் நாணும் அரும்பால் அம்பும் உடையவனென்பது அறியாமையோ? இல்லை. அவைகள் மனத்தை வசீகரிக்கும் கருவிகளின் இயல்பான மென்மையைக் காட்டுகின்றனவோ!

---

## அங்கம் - IV.

### களம் - 2.

இடம்:—காடு.

பாத்திரங்கள்:-கருப்பன், சப்பாணி, வீரன், இருளன் என்னும் திருடர் நால்வர்.

கருப்பன்:—[பாடுதல்.]

1 இமயமலைச் சாரலிலே எங்களுடை ஊரு
எங்கள்குலம் பரம்பரையாய்க் கள்ளரென்று பேரு.

2 கழியெடுத்துச் சுற்றிவரக் கற்றிடுவோம் நன்றாய்
விழியெடுத்துப் பார்ப்பவர்க்கு வேற்றுருவாய்க் காண்போம்.

3 கல்லினைக் கவணில்வைத்துக் காதவழி யெறிவோம்
மல்வலியால் மடக்கிடுவோம் மாறிவரு பவரை.

4 கத்தியிரு கையெடுத்துச் சுத்திவரும் போது
எத்தனைபேர் வந்தாலும் சத்தியமாய்க் கொல்வோம்.

5 சரக்குப்பழங் கள்வைத்தெம் சாமிதனைத் தொழுவோம்
இறக்கும்பொழு தேஎனினும் எண்ணிடுவோம் அவரை.

6 கன்னக் களவிடுவோம் காட்டுக்கொள்ளை யடிப்போம்
சின்னத் திருட்டுக்களிற் சேராமல் இருப்போம்.

சப்பாணி:—அதெல்லாம் ரொம்ப ஒளுங்குதான். நம்ம வீரஞ் செஞ்சவேலை எதிலே சேந்ததுரா?

கருப்பன்:—அதென்னடா மனிசஞ் செய்யர வேலையா? அவுக வீட்டுச் சோத்தைத் தின்னூட்டுப் புள்ளைமாதிரி பளகிட்டு அவுக நம்பிக்கையாய்ப் போயிருக்கச்சையா அம்பிட்டையும் தூக்கிக்கிட்டு வருவாக.

சப்பாணி:—அந்தப்பய செஞ்சது நம்ம சாதிக்கி எளப்பமின்னு இந்த இருளன்கிட்டச் சொன்னேண்டா! அந்தப்பய அடிக்க வர்ரான்.

இருளன்:—நீங்க அடித்த கொள்ளை ரொம்ப ஒளுங்காக்கும்.

கருப்பன்:—மனுசனை எதிர வெச்சுக்கிட்டுத் தீவட்டிபோட்டு எடுத்துக்கிட்டுவர்ரது எப்படி? பொறத்தாண்டை தூக்கிக்கிட்டுப் பயந்து ஓடிவர்ரது எப்படி? அது களவாணிப்பயலுக செய்யர வேலையல்ல? சாதிக்கள்ளப்பயலுக்குப் பொறந்தபய செய்யர வேலையா?

வீரன்:—'கன்னக்களவிடுவோம்' என்று பாடினையே. எதிர வெச்சுக்கிட்டுத்தான் எடுத்துக்கிட்டுவர்ரியோ?

கருப்பன்.—அடே! சொத்துக்காரன் வீட்டுலே இருக்கச்சே தானே எடுத்தாரம். அவென் தூங்கின அவனை வேறெ எளுப்பச் சொல்றியோ?

இருளன்:—முளிச்சிக்கிட்டாத்தான் ஓடுரீங்களே! அப்போ?

கருப்பன்:—அவன் நமக்குப் பயந்து வெச்சிருக்கரத்தைத் தானேடா தைரியமாய்ப் போய் எடுத்தாரம்? இந்தப்பயமாதிரி நம்பினவுகளையா மோசஞ்செய்பரம்?

வீரன்:—காட்டிலே வர்ரவங்களைக் கொள்ளையடிக்கிறீங்களே! அதுமாத்திரம் ஒளுங்கோ.

கருப்பன்:—சொத்தெவெச்சுக் காப்பாத்தமுடியாதவன் அதை வெச்சிருக்கப்படாது. அதானேடா நம்ம கச்சி? காப்பாத்தமுடியாதபய காட்டுக்கேன் கொண்டுவர்ரான்?

வீரன்:—எங்கிட்டக் கொடுத்தபய ரொம்பக் காப்பாத்தத் தெரிஞ்சபயலாக்கும்.

கருப்பன்:—உன்னை வீரன் இன்னு தெரிஞ்சிருந்தா அவன் வீட்டுக்குள்ளேயே விடுவான? [சத்தங்கேட்டு] எய்! என்னமோ சத்தம் கேக்குதுடா! ஒளிஞ்சிருப்போம் வாடா.

## அங்கம் - IV.

### களம் - 3.

---

இடம்:—காட்டின் மற்றொருபுறம்.

பாத்திரங்கள்:—உத்தரனும் சித்திரனும்.

உத்தரன்:—ராஜாங்கத்திற் புகுந்துவிட்டால் அரசர்களுக்குத் தலைகொழுத்துப்போகுமோ?

சித்திரன்:—அப்படியில்லை; பிரஜைகளின் நன்மையைக் கருதுவதை மறந்து தம்முடைய அதிகாரத்தைச் செலுத்துவதிலேயே நோக்கமுண்டாய்விடும்போலிருக்கிறது.

உத்தரன்:—இவர்களுக்கு அதிகாரம் எதற்காக? இவர்கள் அக்கிரமத்தில் தங்கள் சாமர்த்தியத்தைக் காட்டவா? அல்லது பிரஜைகளின் நன்மைக்கா?

சித்திரன்:—பருத்திக்காய்களிற் பஞ்சு எதற்காக ஏற்பட்டிருக்கிறது?

உத்தரன்:—மனிதன் உடைகள்செய்துகொள்ள.

சித்திரன்:—மனிதனை உடைகள் தரித்துக்கொள்ளவேண்டுமென்றே தெய்வம் படைத்ததோ?

உத்தரன்.—இல்லை அதனால் உடைசெய்கிறார்களே! அதனால் தான் சொல்லுகிறேன்.

சித்திரன்:—அப்பொழுது மனிதனையும் புலி முதலான மிருகங்கள் தின்று ஜீவித்திருப்பதற்கு ஆகாரமாகத்தான் கடவுள் படைத்திருக்கவேண்டும்.

உத்தரன்:—இல்லாவிடிற் பஞ்சை ஏன் படைத்தானென்கிறாய்?

சித்திரன்:—பருத்திவிதைகள் காற்றால் பல இடங்களுக்கும் அடித்துக்கொண்டுபோகப்பட்டு விழுந்த இடங்களில் முளைத்து விருத்தியாகவேண்டி.

உத்தரன்:—அந்தப் பஞ்சைப் பிச்செடுக்கிற பாவத்துக்காகத் தான் இவனும் ஊரூராய்த்தேடி நல்லவிதை வாங்கிக்கொண்டுவந்து போட்டுத் தண்ணீர்விட்டு வளர்த்துச் சாகுபடிசெய்கிறுன்.

சித்திரன்:—இவனை அடித்துத் தின்னுகிற பாவம் தீரத்தான் புலிகளையும் மனிதன் கொல்லுகிறுன்.

உத்தரன்:—அந்தமாதிரி அவர்களுக்கும் உண்டோ? இல்லையோ? அதிருக்கட்டும். தன் மனமறியத் தன்கண்ணெதிரே தனக்குத் தீங்கு யாரேனும் தேடிக்கொள்வார்களோ?

சித்திரன்:—மனதில் மதமேறிவிட்டால்தான் நன்மை தீமைகளைப் பகுத்தறியும் விவேகம் கெட்டுப்போகிறதே.

உத்தரன்:—அதன்று. இந்த அரசன் தன்னுடைய சைந்யத்திலிருந்த மகாவீரர்களான தளகர்த்தர்களையும் சுத்தவீரர்களையும் தேசத்தைவிட்டோடும்படியும் மந்திரிகள் இவனை வெறுத்து யோசனைசொல்ல மறுத்துவிடும்படியும் பிரபுக்களெல்லாரும் நாட்டைவிட்டுக் காடடையும்படியும் செய்திருக்கிறுனே! இதனுல் இவனுக்கு க்ஷேமமுண்டாகமுடியுமா?

சித்திரன்:—அகம்பாவம் அதிகரித்து அக்கிரமத்தை ஆரம்பிப்பவர்கள் எந்தவிதத்திலும் தாம் பிடித்ததையே கொண்டு செலுத்துவார்கள். அதனுல் என்னநேரிடினும் மதியார்கள்.

உத்தரன்:—அப்பொழுது அகம்பாவம் ஒரு பைத்தியமோ?

சித்திரன்:—அதற்குச் சமானந்தான். பகுத்தறிவிழந்து மனிதன் நடந்துகொள்ளும் மனோநிலைமைகளில் அது ஒன்று.

உத்தரன்:— பாடலீபுரத்தைவிட்டுவந்த நிர்மலகுப்தர் முதலான வீரர்களும் பிரபுக்களும் இந்த வழிதான் போயிருப்பார்களோ?

சித்திரன்:—அவர்கள் பலவழிகளால் இந்தத்தேசத்தைவிட்டே வெளியேறிவிட்டனரென்று தெரிகிறது. சற்றிரு; ஏதோ ஓசை கேட்கிறதே! கவனிப்போம். கள்வர்கள்கூச்சலோ?

---

## அங்கம் - IV.

### களம் - 4.

இடம்:—காட்டின் மற்ருெருபுறம்.

நிர்மலகுப்தர்:—[தனக்குள்] நான் போர்முகத்தெறியும் புன் மதிச்சடமாம். இவர் யோஜனையில் வல்லவராம்! அப்படியானுல் இவர் விதித்த வரிகளையும் சிற்றரசர் பௌருஷங்களைக் குறைத்த தையும் மந்திரிகள் ஒப்புக்கொள்ளட்டுமே! அவர்களும் என் போன்ற ஜடங்கள்தானே! பரம்பரையாய் உயர்பதவியிலிருந்த உத்தமர்களையெல்லாம் ஒழித்து இழிபிறப்பாளர்களையும் வித்தை செல்வம் செயல் யாதொன்றுமில்லாதவர்களையும் உன்னதநிலைமை களில் ஏற்றினுல் நாயைக் குளிப்பாட்டி நட்டுள்ளில்வைத்தது போல்தான். அவர்கள்புத்திதானே அவர்களுக்கிருக்கும். நியா யங்களும் ராஜாங்கமும் தலைகீழாகத்தான் நடக்கும். சிம்மங்கள் இருந்தஇடத்தில் நாயைப்போல் இவன் அரசுபுரிகிருனே. ஆனுல் அவன் என்னசெய்வான். மனிதன் மனம் கெட்டால் மற்றெல்லாம் கெடுமன்ருே? இவன் சஹவாஸதோஷம் இவனை இப்படிச்செய் தது. நல்லது; இருக்கட்டும். இந்தப் புண்ணியபூமியில் இவன் ராஜ்யபாரம் எவ்வளவுநாள் நடக்கிறதென்று பார்ப்போமே!

---

## அங்கம் - IV.

### களம் – 5.

இடம்:—காட்டின் ஒருபுறம்.

பாத்திரங்கள்:—

கருப்பன் (தடியன்), சப்பாணி (குடியன்), வீரன் (மடையன்), இருளன் (வெறியன்), உத்தரன், சித்திரன், நிர்மலகுப்தர் என்போர்.

கருப்பன்:—ஏலே! குடியா! ஓடியாடா.

சப்பாணி:—ஏலே! மடையா! வெறியா! ஓடியாடா, தடியங் கூப்பிடரான்.

[திருடர் நால்வரும் காட்டினுட் புதரில் ஒளிந்துகொள்ளுதல். உத்தரனும் சித்திரனும் வருதல்.]

உத்தரன்:—நாம் இன்று திருடர்கள்கையில் அகப்படப் போகிறோம். அங்கே அவர்கள் கூப்பிட்டுக்கொண்டதைப் பார்த்தால் திருடர்கள் என்பதிற் சந்தேகமேயில்லை.

சித்திரன்:--அப்படி அகப்பட்டுக்கொள்ளப் பிராப்தமிருந்தால் விட்டுவிடுமா?

உத்தரன்:—ஏண்டா! தப்பித்துக்கொள்ள ஏதேனும் வழி பார்க்கிறதா? விதியை நினைத்துக்கொண்டு அவர்கள்கையிற்போய் மாட்டிக்கொள்கிறதா?

சித்திரன்:—இப்படி எங்கேயானும் வழிபாரேன். நானும் வருகிறேன்; என்னால் ஆக்ஷேபணையா?

உத்தரன்:—பக்கங்களில் மிகவும் அடர்ந்த காடாயிருக்கிறதே.

சித்திரன்:—பின்னை வெட்டவெளியில் ஓடிப்போக நாலுபுறமும் வழியிருக்குமிடத்தில்தான் திருடர்கள் வந்து பிடிப்பார்களாக்கும். அவர்களுக்குப் புத்தியில்லையென்று நினைத்துக்கொண்டையோ?

[திருடர்கள் காட்டிலிருந்து திடீரென்று கிளம்பி முன்னால் இரண்டுபேரும் பின்னால் இரண்டுபேருமாய் நிற்றல்.]

கருப்பன்:—நில்லுங்கள். கையிலுள்ளதைக் கொடுத்துவிடுங்கள் முதலில்.

[பின்னாலுள்ள இருவரும் உத்தரன்கையிலும் சித்திரன்கையிலுமிருந்த கழிகளைப் பிடுங்கிக்கொள்ளுதல்.]

வீரன்:—தோளில் என்ன மூட்டை? எடுங்கள்.

உத்தரன்:—நாங்கள் வழிப்போக்கர்கள். எங்களிடத்தில் ஒன்றுமில்லை.

இருளன்:—ஒண்ணுமில்லாமே வழியோடே போவாங்களாக்கும்? அப்போ நாங்க என்னத்துக்குக் காத்திருக்கம்? வெட்டிக்கா?

[என்று சொல்லிக்கொண்டே அவைகளைப் பிடுங்குதல்]

சித்திரன்:—எங்கள் கையிலுள்ளதைக் கொடுத்துவிடுகிறோம். எங்களைத் தொந்தரவுசெய்யாமலிருங்கள்.

கருப்பன்:—இனி நீங்களென்ன கொடுக்கிறது?

[எல்லோரும் மூட்டையை அவிழ்த்தல்.]

[நிர்மலதுப்தர் வருதல்.]

நிர்மலகுப்தர்:—எண்டா பயல்களா வழிப்போக்கர்களைக் கொள்ளையிடுகிறீர்கள்? அவர்கள்மூட்டையைக் கொடுத்துவிடுங்கள்.

இருளன்:—ஒங்கமூட்டையை எங்கே வெச்சுட்டு வந்தீங்க? அதையும் கொண்டாருங்களேன்.

[நிர்மலகுப்தர்:—திருடர்களில் ஒருவன்தடியைப் பிடுங்கிக்கொண்டு திருடர் நால்வரையும் அடிக்கத்தொடங்கத் திருடர்கள் சற்றுச் சண்டை செய்து இருவர் கீழேவிழ, மற்றிருவரும் ஓடிவிடுதல்]

உத்தரனும் சித்திரனும்:—[நிர்மலகுப்தரைத் தொழுது] இன்று எங்களை இவர்கள் கையினின்றும் ரக்ஷித்த உங்கள் வயிற்றில் நாங்கள் மறுபிறப்புப் பிறந்தோம்.

நிர்மலகுப்தர்:—நீங்கள் யார்? எங்கே போகிறீர்கள்?

உத்தரன்:—பாஞ்சாலதேசத்திற் சேனைத்தலைவராயிருக்கும் சந்திரர் என்பவருடைய சேவகர்கள். அவர் நண்பர் யாரோ சாகரராம். அவருக்கு ஒரு ஓலைகொண்டு பாடலீபுரத்திற்குப் போய் விட்டுத் திரும்புகிறோம்.

நிர்மலகுப்தர்:—எந்தச் சாகரன்?

சித்திரன்:—நேபாளஞ்செகுத்த நிர்மலகுப்தர் என்று ஒரு பெரிய தளகர்த்தராமே! அவர் அரண்மனைக்கடுத்த சந்தில்.

நிர்மலகுப்தர்:—[தனக்குள்] நம் சந்திரனா இப்பொழுது பாஞ்சாலதேசத்துக்குச் சேனாபதியாயிருக்கிறான்! நம்தேசத்துக்கு நல்ல காலந்தான்.

சித்திரன்:—நீங்கள் இவ்விதம் எங்களை ரக்ஷித்ததைக்கேட்டு எங்கள் தலைவர் மிகவும் மகிழ்ச்சியடைவார். நீங்கள் இந்தக்காட்டில் தனியாயிருக்கிறீர்களோ?

நிர்மலகுப்தர்:—ஆம்.

உத்தரன்:—நீங்களும் எங்களுடன் வாருங்களேன்? எங்கள் தேசத்தைப் பார்த்துவிட்டுவரலாம்.

நிர்மலகுப்தர்—உங்கள்தேசத்தில் என்ன விசேஷம்?

சித்திரன்:—இந்தமாதிரியாய்த் திருடர்முதலானோர் எங்கள் தேசத்தில் உண்டா? எந்த வழியில் எப்பொழுதுவேண்டுமானு லும் சிறுகுழந்தைகூட நிர்ப்பயமாய்ப் போகலாம். எங்களரசர் பிரஜைகளுக்கு இந்த விருத்தியே தெரியாது.

நிர்மலகுப்தர்:—இந்தராஜ்யம் அதற்குமேல் இருந்ததாக்கும். இப்பொழுது சொற்பகாலமாய்த்தான் ராஜரீகத்தின் கெடுதலால் இவ்விதம் ஆய்விட்டது.

சித்திரன்:—அது முந்தின சங்கதியல்லவா? இப்பொழுது அப்படியிருக்கும் ராஜ்யத்தைப் பார்த்துவிட்டுவரலாம் வாருங்க ளேன்.

நிர்மலகுப்தர்:—அதென்ன ஆச்சரியம்? சிலவருஷங்களுக்கு முன் இங்கேயிருந்ததுபோலத் திருடர்களைப் பிடிக்கவும் தண்டிக்க வும் சொத்துக்களை வாங்கி ராஜாங்கத்துக்கனுப்பவும் கிராமப்பஞ்சா யத்தாருக்கும் நாட்டுத்தலைவர்களுக்கும் அதிகாரம் இருந்தால் திருட்டேன் நடக்கிறது? அதைப்பார்க்க அவ்வளவுதூரம் வர வேண்டியதில்லை. இந்த அரசன் தன்னைச் சூழ்ந்துகொண்டு தனக்கு இழிதொழில்கள்செய்யும் கவைக்குதவாதவர்களுக்கெல்லாம் பெரியபதவிகளைக் கொடுத்திருப்பதனாலல்லவா ராஜ்யம் இப்படிக் கெட்டுப்போயிருக்கிறது?

உத்தரன்:—அதைப்பற்றி எங்களுக்காகவேண்டியதில்லை. நாங் கள் இந்தத்தேசமா? நீங்கள் எங்களோடு வாருங்கள். போவோம்.

நிர்மலகுப்தர்:—(தனக்குள்) சந்திரனைப் பார்த்துவிட்டுவருவோம். (உத்தரனைநோக்கி வெளிப்படையாய்) அப்படியே செய்வோம்.

[எல்லோரும் போதல்.]

---

## அங்கம் - V.

### களம் - 1.

இடம்:—தக்ஷசைலத்திற் புருஷோத்தமன் அரண்மனையில் கொலுவிருக்கைமண்டபம்.

பாத்திரங்கள்:—சத்ருஜித், சந்திரன், பிரபுக்கள், சேவகர்கள் முதலியோர்.

[புருஷோத்தமன் பிரவேசிக்க எல்லாரும் எழுந்து தொழுதல்.]

அந்தணர்:—[*பஞ்சாதி சொல்லி அக்ஷதை தூவல்.]

புருஷோத்தமன்:—[வணங்கி அதைத் தலையிலேந்திச் சிங்காஸநமேறி வீற்றிருந்து] மந்திரப்பெரியாரே! உங்கள் மறையருண் மலிய நம் கவலைகளெல்லாம் ஒழிந்து அவைகளைக் கைதுடைத்துவந்தோம்.

அந்தணர்பெருமான்:—அரசே! நீதிநெறிவழாத தங்களுக்கு எப்பொழுதும் யாதொருகுறையும் வாராது. ப்ரஜைகளாகிய எங்கள் குற்றங்களிற் பாகமுடையார் அரசராதலின் அவைகள் சிறிது இடர்ப்படுத்தலாம். குடிகளிடம் குற்றங்கடிந்து அவர்களையும் நல்லொழுக்கமுடையராகச்செய்து காத்தல், அரசர் தம்நலங்கருதியேனும் செய்யவேண்டிய கடமையென்று பெரியோர் கூறுவர். மேல்நாட்டுமன்னர் மிகுபடையோடேறிச் சிறிது நம் நாட்டையொறுத்ததும் நமக்கு நன்மையே பயந்துளது.

புருஷோத்தமன்:—[சத்ருஜித்தைநோக்கி] வீரர்சிங்கமே! இனி நம் நாடு அமைதியடைந்து அருள்பெற்றுவாழுமன்றோ?

சத்ருஜித்:—ஆம். மன்னர்பெருமானே! மகதநாட்டின் மன்னர் செருக்குக் கணிகலமாகி நேபாளஞ்செகுத்து நிலைநின்ற கீர்த்தியினராகிய நிர்மலகுப்தர் தம் சீடராகிய சந்திரரைப் பார்க்கவந்தார். தங்கள் தரிசனத்துக்குக் காத்திருக்கிறார்.

---

* பஞ்சாதி எழுதாக்கிளவியாதலின் இங்கே வரையப்பெற்றிலது. அந்தணர் அரசராசியாயுள்ளதைச் சொல்லக்கடவர்.

புருஷோத்தமன்:—அழையுங்கள்.

[நிர்மலகுப்தர் வந்து புருஷோத்தமனை வணங்கச் சந்திரன் நிர்மலகுப்தரை வணங்குதல்.]

புருஷோத்தமன்:—குப்தர்சிகாமணியே! நீர் இன்றுதான் இவண்வரினும், உம்முடைய கீர்த்தியும் சீர்த்தியும் வெகுகாலத்துக்குமுன்னமே இந்நாட்டிற் பரவியுள்ளன. உம்மைப்போன்ற பெருந்தகையாளர் வரவால் இந்நாடு பெரும்பேறுடையதாயிற்று. நீரும் மற்ற வீரசிகாமணிகளும் நிறைந்து காக்கும் மகதத்தை நினைத்ததும் அலக்ஷியேந்திரனும் திகைத்தேகினனன்றோ.

நிர்மலகுப்தர்:—அரசர்பெருமானே! என்றும் நின்றுநிலவும் ஒளியுடைக்கதிரவனையும் ஒருசிறிதுபொழுது மேகமும் நிழலும் மறைக்கவில்லையா? அதனால் அவனொளி மழுங்குவதும் இல்லை. எவ்விதத்தினும் பாதிக்கப்படுவதும் இல்லை. ஆனால் அதன்பயனை நுகர்வார்க்குமட்டில் சிறிது தடை உண்டு. நற்காலம் வந்தவாறே அத்தடைநீங்கி அவர் நலனுகர்வர். தங்களைப்போன்ற அரசர்பெருமக்களின் ஆட்சியாகிய செல்வமும் குடிகளுக்கு அவ்வண்ணமே அமைந்துளது. அவர்கள் பாக்கியக்குறைபால் சிறிதுகாலம் கவலை நேர்ந்தது. எல்லோருக்கும் நற்காலம் பிறக்க அது ஒழிந்தது.

புருஷோத்தமன்:—உம்முடைய சீடனாகிய சந்திரனும் உதித்துத்தான் அவ்விருள் விலகிற்று.

சத்ருஜித்:—அவர்களுடையநாட்டிலும் ஏதோ கோல்கோடி இருள் பரந்திருக்கிறதாம். சந்திரன் மறுபடி அங்கு உதயமாக வேண்டுமாம். அழைத்துச்செல்ல வந்திருக்கிறார்.

புருஷோத்தமன்:—நம்நாட்டில் உண்டான பரபரப்புக்கள் நீங்கி அமைதிமுற்றும்வரை யார்தான் எவ்விதம் அவரவர் ஸ்தானத்தை விடமுடியும்?

நிர்மலகுப்தர்:—அரசர்சிங்கமே! இந்நாட்டில் எப்பொழுதும் பரபரப்பே யிருக்க நியாயமில்லையே. அடுத்துக் கொடும்போர்நடக்க அதை நாடகமெனக் கண்டுகொண்டு உழவர் வயலில் தொழில் நடத்திவருகின்றநாடன்றே இது! இங்கே நீதியும் தருமமும் நெறி தவறாதுநடக்கின்றனவே. பாதியுலகை வென்று வந்த மேல்நாட்டு மன்னனும் இம்மண்ணை மிதித்ததும் கர்வமடங்கியும் ஆசை யொடுங்கியும் நன்மனமுடையவனுகித் தன்தேசம்நோக்கித் திரும்பி னுன். இங்குள்ள பெரியார் ஸந்நிதானமும் அவன்மனத்தையும் செய்கையையும் தூய்மையடையச்செய்தது. ஸத்யமும் தர்மமும் யாரால் எவ்வளவு அலைக்கப்படினும் தம் நிலை கெடா. அவைகட்குத் தீங்கிழைக்கப்புறப்படுவனவெல்லாம் தம் தீமையினுல் தம்மைத் தாமே கொன்று சாவன. எப்பொழுதும் ஒன்றுபோலிருத்தல் அவைகளின் முக்கியத்தன்மையாகும். அவை இந்நாட்டில் மலிந்து கிடத்தலின் அவைகளையுடைய தங்களையும் தங்கள் நாட்டையும் யாரும் அசைக்கமுடியவில்லை. எங்கள் நாட்டில் அம்மரபு சிறிது காலமாகத் தவறிக்கிடக்கிறது. அதை ஒழுங்குபடுத்தப் புருஷோத்தமனருள் வேண்டுகிறோம்.

புருஷோத்தமன்:—மந்திரீ! இதுவிஷயத்தில் நாம் ஏதேனும் செய்யத்தகுந்ததுண்டோ?

மந்திரி:—ஆம் அரசே! அடுத்துள்ள நாடுகளில் அறம் செவ்வனே நடந்துவரவேண்டியது நம் நாட்டுக்கும் மிகவும் முக்கியமானது. அண்டைநாட்டில் அறம் தவறினுல் நம்முடைய பிரஜைகளுக்கும் நலிவுகள் வரும். ஆதலின் இவர்களுக்கு வேண்டிய உதவிசெய்ய நாமும் கடப்பட்டுள்ளோம்.

புருஷோத்தமன்:—சேனைத்தலைவரே! நாம் செய்யத்தக்க உதவி என்ன?

சத்ருஜித்:—மன்னவரே! சந்திரனும் அவன்கீழுள்ள படைகளும் நம்நாடு கடந்து மகதநாட்டுக்கு வரவேண்டுமாம். அங்குள்ள

சகல சிற்றரசர்களும் திசைகாவலர்களும் அவர்களை நன்கு வரவேற்றுத் தலைநகருக்கு அழைத்துப்போவார்களாம். சில கையாள்களைத் தவிர மற்று யாரும் அரசன்பக்கத்தில் இல்லையாம். எத்தகைய போரும் நடவாமல் அரசுபடியுமென்று சொல்லுகிறார்கள்.

புருஷோத்தமன்:—நம் சேனையில் எந்தப்பாகமும் நம்நாட்டெல்லைகடந்து பிறநாடு புகுந்தால் அது யுத்தத்தொடக்கமாகுமன்றோ?

சத்ருஜித்:—அவ்வாறு எண்ணவே இடமில்லாமல் நிர்மலகுப்தர் ஏற்பாடுசெய்திருக்கிறார். அவர் முன்னால்போய்த் திசைகாவல் தளகர்த்தரோடிணங்கி அவர்கள் அரசகுமாரர் சந்திரர் தங்கள் நாட்டில் சீரும் சிறப்பும் பெற்றுவருவதால் அவருக்கு எல்லைப்புறத்தில் வரவேற்புவிழா நடத்த ஏற்பாடு செய்துவைப்பார்; அவ்வாறு அவர்கள் வரவேற்கப் படை ஒரு அங்கமாகக்கொண்டு சந்திரன் செல்வான்; மேலுள்ளவற்றை அவர்கள் பார்த்துக்கொள்வார்கள்.

நிர்மலகுப்தர்:—தங்கள் படைத்தலைவராகிய சத்ருஜித்தும் அவருடைய படையங்கத்தோடு எங்களுடன் வரவேண்டுமென்று கோரியுள்ளோம். சமுகம் உத்தரவை எல்லோரும் எதிர்பார்க்கிறோம்.

புருஷோத்தமன்:—அவ்விதமானால் இவர்கள் என்ன யுக்தி செய்தாலும் இது நிச்சயமாக யுத்தமென்றுதானே கருதப்படும்?

நிர்மலகுப்தர்:—மகாராஜரே! அங்குள்ளவர்களெல்லாரும் நம் கட்சியினர். ஆதலின் எவ்வகைப்போர்க்கும் இடமில்லை.

மந்திரி:—ஒருக்கால் நேர்ந்தபோதிலும் இந்த மூன்று சிம்மங்களும் சேர்ந்தவிடத்து வானுளோரும் மண்ணுளோரும் முற்றும் திரண்டுவந்தாலும் வெற்றி இவர்கள்பக்கந்தான் அரசே!

புருஷோத்தமன்:—அப்படியாயின் நல்லது. போய்வாருங்கள்.

சந்திரன்:—[வணங்கிநிற்றல்.]

புருஷோத்தமன்:—சந்திரரே! நம்நாட்டுப் படையை உமக்குப் பரிசாகக் கொடுத்தோம். அதை என்றும் நன்கு பரிபாலித்துப் பேரும் பெருமையும் உடையதாகச்செய்ம்மின்!

நிர்மலகுப்தர்:—[வணங்கிநிற்றல்.]

புருஷோத்தமன்:—குப்தரே! உங்கள்நாடு அறம்முற்றி நீதி முறையில் நிற்க ஆண்டவன் அருள்புரிவான்.

சத்ருஜித்:—[வணங்கிநிற்றல்.]

புருஷோத்தமன்:—சேனைத்தலைவரே! ஐந்து புண்ணியநதிகளின் புனல்வளமுள்ள இந்நாட்டிற் பிறந்து வளர்ந்தார் யாரும் மிதித்த இடமெல்லாம் ஸத்யமும் தர்மமும் வளர்ந்தோங்கவேண்டும். அறவோர் அன்புவைக்குமாறும், மறவோர் மனமழியுமாறும் சீலமும் வீரமும் சிறந்துவிளங்கும் சேனைத்தலைவர் நீராதலின், அறமுயர் நெறியிலாற்றலைநிறுவி மறம்படுத்தொழித்து மநுமுறைவளர்த்துச் சீலம் பெருக்கிச் சினமொழித்தகற்றிக் கோலந்தவிர்த்துக் குடிமை கைக்கொண்டு காலந் தருவதே கைபடையாகச் சீக்கிரத்தில் திரும்பிவருவீரென்று நம்புகிறேன்.

[எல்லோரும் தொழல்]

புருஷோத்தமன்:—போய்வாருங்கள். உங்களெல்லோருக்கும் மங்களமுண்டாகுக.

---

## அங்கம்-V.
### களம்-2.

---

இடம்:—சத்ருஜித்தின் அரண்மனையில் ஓர் அறை.

பாத்திரங்கள்:—சத்ருஜித், சித்திராங்கி.

சித்திராங்கி:—[தொழுது] அப்பா! நானும் வரத்தான் வருவேன். என்னை நீங்கள் அழைத்துக்கொண்டுபோகத்தான்வேண்டும்.

சத்ருஜித்.—குழந்தாய்! பருவமடைந்த இளம்பெண்ணுகிய நீ யுத்தஸங்கத்தனைகப்போகும் என்னேடு வருதல் தகுதியா? போர் முனையில் நடப்பவற்றை நீ கண்டால் உன்மனங் கலங்காதா?

சித்திராங்கி:—தங்கள் வயிற்றிற் பிறந்த என் மனம் எதற்கும் கலங்குமா? விளையாட்டுக்குழந்தையாகவே அரிய பெரிய பல போர்களையும் உடனிருந்து பார்த்திருக்கிறேனே!

சத்ருஜித்:—அப்பொழுதெல்லாம் உனக்கு நினைவுதெரியுமா? அச்சமுண்டா? குழந்தை. இப்பொழுது அப்படியா? நினைவு தெரிந்துவிட்டால் ஸ்திரீகள் கொடியகாரியங்களைப்பார்த்தல் தகுதி யன்று.

சித்திராங்கி:—எனப்பா! நேற்று நீங்கள் அம்மாவோடு பேசிக் கொண்டிருந்தபோது நிர்மலகுப்தர் முன்னல் போய்க்கொண்டிருப் பார். சந்திரர் பின்னல் போவார். அவர்கள் அதிதியாகத் தாங்கள் கூடப்போவதைத்தவிர வேறு யாதொரு விசேஷமும் இல்லையென் றீர்களே. அப்படியானல் தானும் கூடவருவதாகத் தானபதிக ளோடு அம்மாகூடப் பேசிக்கொண்டிருந்தாளே.

சத்ருஜித்:—அது உண்மைதான். ஆனல் நாங்கள் எதிர்பாராத படி எங்கேயாவது தடை நேர்ந்தால் எங்கள்வீரத்தைக் காட்ட நேரும். நாங்கள் முன்னேருமல் பின்னிடுகின்றவர்களா?

சித்திராங்கி:—உங்களுக்குத்தான் வெற்றி நிச்சயமாயிற்றே. நாங் கள் வருவதில் என்னதடை? அம்மாவும் வருகிருள். எல்லோரும் போவோம்.

சத்ருஜித்:—ஆமாம்! உனக்குமாத்திரந்தானே உடன்வர அனுமதிகேட்டாய்! இதென்ன? அம்மாசெய்த யுக்தியோ?

சித்திராங்கி:—நீங்கள் அம்மாவைவிட்டுப்போவீர்களா? நான் குழந்தையாயிற்றே! ஏமாற்றிவிடலாமென்று பார்த்தீர்களோ!

சத்ருஜித்:—எல்லாரும் வாருங்கள். நாம் மங்களகாமாகத் தானே போகிறேம். யுத்தத்துக்கல்லவே.

---

## அங்கம்-V.

### களம்-3.

---

ஒருதளகர்த்தன்:-[பாடலீபுரத்துக் கோட்டைக்குவெளியில் உருவிய வாளுடனும் துடிக்கும் மீசையுடனும்] கடமையென்றுலென்ன? அரசன் அங்கக்காப்புப்படைக்கு நான் தளகர்த்தன். நேபாளஞ்செகுத்த நிர்மலகுப்தரின் சிஷ்யன். இந்த வாள், நான் இப்பதவியடையும் போது அரசர் அங்கத்தை என்னுயிருள்ளவரை காப்பேனென்று ஆணையிட்டுப் பெற்றது. அவரைக் காப்பதற்கன்றி நானில்லை. போர்முகத்தில் குருவும் விரோதிதான். இப்பொழுது நம்மரசனை எல்லோரும் கைவிட்டார்கள். கொடுங்கோன்மன்னனென்று லென்ன? கோலைச்செலுத்தல் அவன் காரியம். நம் கடமையைச் செலுத்தல் நம் காரியம். சுத்தவீரனுக்குத் தன் ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றுவதைத்தவிர வேறு செய்யத்தக்கதில்லையே. இது நம் குருவாகிய குப்தர் கற்றுவைத்த பாடமன்றோ? இனி யோசிக்க லாகாது. உடனே போர்முகத்துச்சென்று என்னுயிருள்ளவரை கடமையைச் செலுத்தவேண்டும். வீரனுக்கு உயிர்துறத்தலே வெற்றி. (போதல்)

---

## அங்கம்-V.

### களம்-4.

---

பாத்திரங்கள்:—இரண்டுவீரர்கள்.

முதல்வீரன்:-தம்பி! நம் நாட்டுக்குவந்தது நல்லதா? தீயதா?

இரண்டாம்வீரன்:—நன்மை தீமை நமக்கென்ன தெரியும்?

முதல்வீரன்:—நம் நாட்டிலும் மாற்றரசர்சேனை புகுமா?

இரண்டாம்வீரன்:—புகுந்ததுமட்டுமேயொழியப் பொருத தெல்லாம் நம் சேனைகள்தானே?

முதல்வீரன்:—நிர்மலகுப்தர் நடத்திவந்தது பாஞ்சாலர்சேனை யன்றோ?

இரண்டாம்வீரன்:—நம் குறுநிலமன்னர்சேனைகளல்லவா?

முதல்வீரன்:—பாஞ்சாலர்தளகர்த்தர், சந்திரர்: இவர்களுடைய படைகள் பொருகளம் காணவேயில்லையோ?

இரண்டாம்வீரன்:—நம்மரசர் சந்திரனைச் சிறைபிடிக்கவேண்டு மென்று மெய்காப்புச்சேனையுடன் சென்று சந்திரன் படையை மோதினர். பாஞ்சாலர்சேனை பலத்த போர்புரிய இவர்கள் யாரு மின்றி மாண்டனர். தன்தலை விழும்வரை மன்தலை காத்துத் தள கர்த்தரும் விழுந்தார். அடுத்து அரசனும் விழுந்தான். அச் சேனை கலையவே மற்றுள்ள நம்மெல்லாச் சேனைகளும் கூக்குர லிட்டுச் சிதறின.

முதல்வீரன்:—முதலிற் போர்தொடங்கின நிர்மலகுப்தர் சேனை யைத் தொலைத்துவிட்டுப் பிறகு நம்மரசர் சந்திரர்மேற் செல்லக் கூடாதா? சும்மா இருந்தவர்களை இவர்போய் என் வம்புக்கிழுக் கிறார்?

இரண்டாம்வீரன்:—மாற்றரசர்சேனை நம்நாடுபுகக் கண்டு நம் மரசர் மனம் சகிப்பாரா?

முதல்வீரன்:—திசைகாவலரும் குறுநிலமன்னரும் மற்றெல் லோரும் தனக்கு விரோதமாய்விட்டதால் இனி உயிர்வாழ்வதில்லை யென்று நம் மன்னர் துணிந்துவிட்டார்போலும்.

இரண்டாம்வீரன்:—தன்னடிபணிந்தவர்களான தளகர்த்தரையும் குறுநிலமன்னரையும் எதிர்த்துப் பொருது வெற்றிபெறுதலைவிட மாற்றரசர்சேனையைத் தாக்கி மாய்தல் மேன்மையென்று மனக்கொண்டாரென்றே சொல்லவேண்டும். அவர் பொருததிறம் போற்றற்பாலது.

முதல்வீரன்:—என்ன? பேரிச்சத்தம் கேட்கிறதே?

இரண்டாம்வீரன்:—நிர்மலகுப்தர் முதலியோர் வெற்றியோடு கோட்டைக்குட் புகுமொலி. நாமும் நம் வியூகங்களிற் போய்ச்சேர்வோம். [போதல்]

---

## அங்கம் - V.

### களம் - 5.

---

இடம்:—பாடலீபுரத்தில் அரண்மனைத்தோட்டம்.

பாத்திரங்கள்:—சித்திராங்கியும் சாகரனும்.

சித்திராங்கி:—உங்கள்தேசம் வந்துவிட்டால் என்னைத் திரும்பியும் பார்க்கக்கூடாதோ?

சாகரன்:—அம்மணீ! உங்களை யாரென்று தெரியவில்லையே? நீங்கள் இப்படித் தோட்டத்தில் தனித்துவரலாமா?

சித்திராங்கி:—இப்பொழுது என்னை உங்களுக்கு அடையாளம் தெரியுமா? எங்களூரானல் தெரியும்.

சாகரன்:—உங்களூர் எது? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே!

சித்திராங்கி:—இதுவும் எங்களூர்தான் என்கிறீர்களோ? அது உங்களை மணந்தல்லவா ஆகவேண்டும்?

சாகரன்:—[தனக்குள்] இதென்ன? விபரீதமாகவிருக்கிறதே! இவள் பேசுவதைப்பார்த்தால் நான் ஏதோ இவளை மணப்பதாக வாக்களித்திருப்பதுபோலன்றோ இருக்கிறது!

சித்திராங்கி:—என்ன யோசிக்கிறீர்கள்! உங்கள்நாடு வந்துவிட்டால் இங்கே யாரேனும் மணமுடித்தவரோ முடிக்கவேண்டியவரோ இருப்பார்களென்றுதான் என்னிடம் முன்னமேயே அவ்வளவுகேள்விகள் கேட்டுக்கொண்டீர்களோ?

[விகலன் தூரத்தில்வர, சாகரனும் விகலனும் ஒருருவாயிருப்பதைச் சித்திராங்கி உற்றுநோக்கிப் பிரமித்துநிற்றல்.]

விகலன்:—[சமீபத்தில் வந்து] சித்திராங்கி! ஒன்றும் கவலைப்படாதே. நீ நேசித்தது என்னைத்தான். இவர் என் தமயன் சாகரர். நாங்களிருவரும் ஒருபடிப்பட்ட உருவமுடையவர்களே. ஆனால் நான் ஆண்வேடம் பூண்ட பெண். இவர்தான் ஆண்.

சித்திராங்கி:—ப்ருஹ்மஸ்ருஷ்டியில் இதுவும் ஒரு அற்புதமா? நான் பெண்ணைக்கண்டா ஆசைகொண்டேன்?

விகலன்:—இல்லையில்லை. மெய்யான ஆணுருவைத்தான்.

சித்திராங்கி:—நீயும் ஒரு பெண்ணாயிருந்தா அதற்கும் இடங்கொடுத்தாய்? ஆனால் ஆணென்றுசொல்லத்தக்கவளே.

விகலன்:—வேஷத்துக்குத்தக்க நடிப்பு வேண்டாமா?

சித்திராங்கி:—எனக்கு ஒன்றும் குறைந்துபோகவில்லை. இவருருவமேதான் அங்கேவந்து என்னை இங்கே அழைத்துவந்திருக்கிறது.

விகலன்:—ஆனால் இன்றுதான் மணமும் அமையும் நாள். சிறிதுநேரத்துக்குமுன்தான் சந்திரர் என் தமயனைத் தளகர்த்தராக்கியதாய் உத்தரவிட்டார். அதனாலும் அவர் உனக்கு ஒத்த கணவனாவார்.

[யமுனை வருதல். விகலன் மறைதல்]

சித்திராங்கியும் சாகரனும்:—(யமுனையைத் தொழல்.)

யமுனே:—தீர்க்காயுசாய் நித்தியமங்களமாய் இருவரும் வாழக் கடவீர்கள். [சாகரனைநோக்கி] குழந்தாய்! உனக்குப் பதவியும் பாரியும் ஒருங்கேவாய்த்தது இறைவனருளப்பா!

சாகரன்:—அம்மா! தங்கள் பாதம் தந்த பாக்கியம். இதன் மேலும் எனக்கென்னவேண்டுமானாலும் அது தராதோ?

---

## சந்திரன் கொலுவிருக்கை

### பட்டாபிஷேகம்.

நிர்மலகுப்தர், கர்மசீலர், சத்ருஜித், சாணக்கியர் முதலாயினோர் ஆசிகூறல்.

கட்டியம்:—ராஜாதிராஜ ராஜசேகர ராஜமார்த்தாண்ட ராஜ வல்லப ஸ்ரீரவிகுலதிலக சந்திரசக்ரவர்த்தியவர்கள் மறையவரேத்த மன்னவர்போற்ற—ஸுலோசனைப்பெருந்தேவியாருடன் அரியாஸனத்தேறி மணிமுடிபுனைந்தனர். அவருடைய வுயிர்நண்பரான சாகரர் தளகர்த்தராயினர். அவர், மந்திரப்பெரியாரும் வரன்முறைப் பெரியாரும் தத்தம் பெற்றியில் நிலைபெறவும் அறமும் திறமும் வளமும் நலமும் அகலிடமெங்கும் புகலிடமாகவும் நீடூழி நாடு காத்து வாழ்க! வாழ்க! வாழ்க!

வாழ்க நல்லறம் வாழியர் அந்தணர்
வாழ்க ஆனினம் வாழிய தண்புனல்
வாழ்க மன்னவன் வைபக மோங்குக
தாழ்க வல்லவை தாவில நாடரோ.

ஸுஹிஸ்து.

---

ஸ்ரீ:

# சூடிக்கொடுத்தநாய்ச்சியார் தோத்திரப்பாமாலை

# மூலமும் உரையும்.

சேற்றூர்ச்சமஸ்தானவித்வானும்
மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினருளொருவரும்
அப்புவையங்காரேன்று பெயர்விளங்குகின்றவருமாகிய
கவிபூஷணம்,
நரசிம்மாசாரியர்
இயற்றியவை.

"செந்தமிழ்"ப்பிரசுரம்—௬௫.

மதுரைத்தமிழ்ச்சங்க முத்திராசாலை,
மதுரை.

1936.

# முன்னுரை.

இந்நூல், ஸ்ரீவில்லிபுத்தூரில் பின்னானார் வணங்கும் ஜோதியாய்க் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கிற ஸ்ரீ ஆண்டாளாகிய கோதைசூடிக்கொடுத்தநாய்ச்சியார்விஷயமான தோத்திரப்பாடல்களின் தொகுதியாகும்.

இது, தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்ப்பென்னும் ஈரிரண்டு நூல்யாப்பினுள் மொழிபெயர்ப்பான வழிநூல்.

இதன் முதனூல் கோதாஸ்துதியென்னும் ஒரு வடமொழிப் பிரபந்தமாகும்.

இதனையருளிச்செய்தவர் ஸ்ரீவைஷ்ணவ சமயாசாரியர்களுளொருவராகிய கவிதார்க்கிககேசரியென்னும் ஸ்ரீநிகமாந்தமகாதேசிகரென்ப. இதுவிஷயமாக, கர்ணபரம்பரையான ஓர் ஐதிஹ்யம் கேட்கப்படுகின்றது. அதாவது: தேசிகர் திவ்யதேசயாத்திரையாக ஸ்ரீவில்லிபுத்தூருக்கெழுந்தருளிய சமயத்தில் அவ்வூரில் ஸ்ரீ ஆண்டாளுக்கு வைசாக வசந்தோத்ஸவம் நடந்துகொண்டிருந்ததாகவும், அந்த உத்ஸவங்கண்டருளுவதற்காக ஸ்ரீ ஆண்டாள் நாடகசாலைத்தெருவிலிருக்கும் திருவேங்கடமுடையான் ஸந்நிதிக்கு முன்பாக இருக்கிற வசந்தமண்டபத்துக்கு எழுந்தருள வீதிகண்டருளும்பொழுது ஆண்டாளை தேசிகர் மங்களாசாசனஞ்செய்ததாகவும், அதனால் உண்டாகிய ஆநந்தபரீவாகம் உள்ளடங்காமல் அதிகரித்ததனாலே, அதற்குப் போக்குவீடாக இந்தப்பிரபந்தத்தை ஸ்ரீ ஆண்டாள் அந்த மண்டபத்துக்குள் எழுந்தருளுவதற்கு முன்பே செய்தருளியதாகவும், அதனாலே அதுமுதற்கொண்டு ஸ்ரீ ஆண்டாள் வைசாகவசந்தோத்ஸவத்தில் நாடகசாலைத்தெரு வீதிகண்டருளும்போது முன்னே கோயிற்கிரமப்படி பெரியாழ்வார் திருவம்சஸ்தராகிய வேதப்பிரான்பட்டராலே ஆரம்பிக்கப்பட்டு அத்யாபகர்களனைவருங்கூடி இந்தப் பிரபந்தம் சேவிக்கப்பட்டு வருவதாகவும் சொல்வதேயாம்.

விஷயவைலக்ஷண்யத்தையும் வக்த்ருவைலக்ஷண்யத்தையும் உத்தேசித்து ஸ்ரீவைஷ்ணவர்களனைவரும் இந்தப் பிரபந்தத்தை அதிக ப்ரீதியோடு பாராயணஞ்செய்துகொண்டுவருகிறார்கள்.

இந்தப் பிரபந்தமானது அருமைபெருமையமைந்த கற்பனை அலங்காரங்கள் குணம் தொனி முதலியவைகளோடு விளங்குதலால் இரசிகசிரோமணிகளாகிய வித்வஜ்ஜனசேகரர்களனைவருக்கும் பரமாநந்தத்தை விளைவிக்கத்தக்கதாயிருக்கிறது. இந்தப்பிரபந்தத்தின் ஹலச்ருதிஸ்லோகத்தில் இந்தக் கோதாஸ்துதியை பக்தியோடுபாராயணஞ்செய்வோர்கள் ஸ்ரீரங்கராஜனுடையபரமகிருபையாலே எங்குந்திருவருள்பெற் றின்புறுவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது நிற்க.

ஸ்ரீவில்லிபுத்தூர் ஹிந்து ஹைஸ்கூலில் சுமார் இருபத்தெட்டு வருடங்களுக்குமுன் ஹெட்மாஸ்டராகவிருந்த மகா-ா-ா-ஸ்ரீ ரங்கசாமி ஐயங்காரவர்கள் ஒருநாள் என்னைப்பார்த்து 'சகலஜகன் மாதாவாகிய ஸ்ரீ ஆண்டாள்விஷயமாக ஒரு சுருக்கமான தோத்திர நூல் தமிழில் ஏதாவது இருந்தால் அதனை யெனக்குப் பாராயணஞ் செய்துகொண்டுவருவதற்குக்கொடுக்கவேண்டு'மென்றுகேட்டார். 'அப்படிப்பட்ட நூலொன்றும் இவ்வூரில் இப்போதில்லை; ஆயினும், தங்களைப்போன்றவர்கள் சுலபமாகப் பாடம்பண்ணிப் பாராயணம் செய்வதற்குரிய இருபத்தெட்டுச் சுலோகங்களாலாகிய கோதாஸ்துதியென்னும் வடமொழிப்பிரபந்தம் ஒன்றிருக்கிறது' என்றுசொல்லி, அதில் இரண்டு மூன்று சுலோகங்களைச் சொல்லி அவற்றின் அர்த்தத்தையும் சொன்னேன்.

அவற்றைக் கேட்டவுடன் அவர்கள் இரசிககுலசேகரராகையாலே போரவுவந்து 'இந்தப்பிரபந்தம் முழுவதையும் எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தமாக நீரே மொழிபெயர்த்துத்தரவேண்டு' மென்று நியமித்தனர். அவரது வேண்டுகோட்கிணங்கி அவ்வாறே ஒருவாரத்திற்குள் மொழிபெயர்த்து, அதற்கு, சூடிக்கொடுத்த நாய்ச்சியார் தோத்திரப்பாமாலை என்று பெயரிட்டு அவர்களிடம் அந்தப் புஸ்தகத்தைக் கொடுத்தேன்.

அதைப்பார்த் தின்புற்ற ஐயங்காரவர்கள் முகமலர்ந்து இந்நூலை எல்லாரும் பார்த்தின்புறும்படி அச்சிடுவிக்கிறேனென்று வாக்களித்தார்கள். ஆனால் அவ்வாறுசெய்துமுடிக்குமுன் ஸ்ரீவில்லிபுத்தூரைவிட்டு அதிகச்சம்பளத்தை உத்தேசித்து குண்டூர் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டராக அவர்கள் போகநேர்ந்தது. அப்பால் சில அசௌகரியங்களால் தாங்கள் வாக்களித்தபடி தோத்திரப்பா

மாலையை அச்சிடுவிக்கவேண்டுமென்று நான் அவர்களுக்கு ஞாபகப்படுத்தவில்லை. அதுமுதல் அந்நூலை அச்சிடுவதற்கு ஒரு முயற்சியும் செய்யவில்லை. முயன்றால்தான் என்? எதுவும் ஆகும்போது தானே ஆகும்.

பின்னர் சிலவருஷங்கள் சென்றபின் இந்நூலைக்கேட்ட சில நண்பர்கள் 'இதற்குத் தெளிவாக ஒருரை நீரே இயற்றிவிடின் எம் போலியர்க்கு மிகவும் சுலபமாகப் பொருள்தெரியும்' என்றனர். அதற்கிணங்கி அவ்வாறே ஒருரையெழுதி அவர்களபிப்பிராயப்படி நடந்துகொண்டேன். அவ்வுரையுடன் பாமாலையை நான் அச்சிட முயற்சிசெய்தும் அதுவும் காலவிபரீதத்தாலே பயன்படாமற் போயிற்று.

பின்னர் இவ்வுரையோடுகூடிய இத்தோத்திரப்பாமாலையைக் கேட்ட சில ஸம்ஸ்கிருதவித்வான்கள் 'இந்நூலுக்கு முதனூலாகிய கோதாஸ்துதிக்குத் திருக்குடந்தையிலெழுந்தருளியிருக்கும் ஒரு ஸ்வாமி ஸம்ஸ்க்ருதவியாக்யாநமொன்று அருளிச்செய்திருக்கின்றனர். அதற்கிணங்க ஒருஸ்வாமி தமிழிலும் உரை எழுதியிருக்கின்றனர். அவ்விரண்டும்சேர்த்து அச்சிடப்பட்டுள்ளன. அவற்றுக்கும் உமதுரைக்கும் சிற்சிலவிடங்களில் விரோதம் காண்கின்றனவே; நீர்செய்த பாட்டும் உரையும் முதனூலுக்குச் சரியான மொழிபெயர்ப்போ, அல்லது வழிநூலிலக்கணந்தழுவியதோ?' என உசாவினர்.

அவர்கள் சரியான மொழிபெயர்ப்புத்தானென ஒப்புவதற்காக அந்தக் கோதாஸ்துதிக்கு நான் அநேகபெரியவர்களிடங்கேட்டறிந்தபடி தத்வார்த்தபோதினியென்னும் மணிப்பிரவாளவியாக்கியானமொன்றுசெய்து அந்த வியாக்கியானத்தை இந்தத் தமிழ் நாட்டெல்லையிலெழுந்தருளியிருக்கிறவரும் ஸ்ரீ வைஷ்ணவ சமயாசாரதுரந்தரர்களுமாகிய ஸ்வாமிகளிடத்தில் விஜ்ஞாபனஞ்செய்து அவர்கள் ப்ரீதிபூர்வமாக அநுக்கிரகித்தருளிய அபிநந்தனபத்திரங்களைப் பெற்றேன். அந்த அபிநந்தனபத்திரங்களில் அநேகம் மொழிபெயர்ப்பாகிய தோத்திரப்பாமாலைக்கும் தத்வார்த்தபோதினிக்கும் பொதுவாக இருந்தாலும் அவைகளெல்லாம் ஸம்ஸ்க்ருத சுலோகங்களாக இருப்பதால் சீக்கிரத்தில் அச்சிற் பதிப்பிக்கப்பெறும் தத்வார்த்ததீபிகையோடுகூடிய கோதாஸ்துதியிற் காணப்படும்.

இங்குவெளியிட்டவைகளெல்லாம்தோத்திரப்பாமாலையையும் அதன் உரையையும்பற்றிய அவசியமானவைகளாதலால் ஒன்றன் பின் ஒன்ருக விளக்கி எழுதலாயினேன். மற்றென்றுவிரித்தலாகத் திருவுள்ளம்பற்ருது அங்கீகரித்தருளவேண்டும்.

பலவகையான இடையூறுகளாலே அச்சிடமுடியாமல் உள்ளே வைத்திருந்த இந்தப் பாமாலையை அதன் உரையுடன் அச்சிட்டு வெளிப்படுத்தும்படி புருஷகாரஞ்செய்த செந்தமிழ்ப்பத்திராசிரியர் ஸ்ரீ. உப. வே. திரு. நாராயணையங்கார் ஸ்வாமியும், அச்சிடும்படி அநுமதிகொடுத்த மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் உப அக்கிராசனுதிபதி மகா-ா-ா-ஸ்ரீ டி. ஸி. ஸ்ரீநிவாஸையங்கார் அவர்களும் அவர்களநுமதிப்படி திருத்தமாக அச்சிட்டு வெளிப்படுத்திய செந்தமிழ் உதவிப்பத்திராசிரியர் இராமாநுஜையங்காரும் சகலசௌபாக்கியமும் பெற்று அரோகதிடகாத்திரர்களாய்ச் சிரஞ்சீவிகளாய் நீடாழியுலகத்தில் நீடூழி வாழும்படி, அகிலஜகன்மாதாவாகிய ஸ்ரீ ஆண்டாளுடைய உபயசரணாரவிந்தங்களையும் மனோ வாக்குக் காயமென்னும் திரிகரணங்களாலும் தியானித்துத் துதித்து வணங்குகின்றனன்.

ஸ்ரீவில்லிபுத்தூர்,<br>தாதுஸு ஆடிமீ 22உ

ரெ. அப்புவையங்கார்.

---

# அபிநந்தனம்.

மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலைத் தலைமையாசிரியரும்<br>'செந்தமிழ்' ப்பத்திராசிரியருமான ஸ்ரீ. உப. வே.<br>திரு. நாராயணையங்கார் ஸ்வாமி<br>அருளிச்செய்தது.

---

வேத விதிதவரு வேதாந்த தேசிகன்செய்<br>
கோதை துதிதமிழாற் கூறினன்—ஓதரிய<br>
நற்றமிழ்நூன் முற்றும் நவைதீர் வடமொழியும்<br>
கற்றநர சிம்ம கவி.

---

# OPINIONS.

Pandit Mr. R. Appu Iyengar of the local Hindu High School, an erudite scholar both in Tamil and Sanskrit literature has brought out a rendering of Sri **Vedanta Desika's Gothasthuthi** into Tamil Stanzas. Copious annotations with the intrinsic meanings of important expressions and a critical analysis are added to each stanza. The Tamil Stanzas contain line by line the meaning of the Sanskrit slokas. He has also compiled the Sthalapuranam of this important centre of religious sanct ty and of reputed antiquity. He has taken enormous pains in bringing out these two works, which every reader will certainly admire. To most of us who have neglected oriental studies, works of this type will be of immense value in giving an impetus to religious knowledge.

C. S. DESIKAM IYENGAR, PLEADER,
*Srivilliputtur.*

---

I have spent sometime to understand the amount of time and trouble taken to fully bring out the force of **Gothasthuthi** recitedup to date in a festival in Srivilliputtur. The author, who I know, is an accurate and well informed scholar has written a learned Sthalapuranam of this place, and has explained the inter-relation of the slokas and the Sastrams implied by the study. It is sure to be a rare production.

K. RAMAIYANGAR.
Advocate, Madura.

ஸ்ரீ:

# சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை.

## காப்பு.

### நம்மாழ்வார்.

செங்கயல்பாய் பூந்தடஞ்சூழ் தென்புதுவைக் கோதைபத
பங்கயமேற் றோத்திரப்பாப் பாடுவாம்—தங்க
வுருக்குருகூர் மாற னுபயபத மாந்தென்
றிருக்குருகூர் மாறன்றுள் சேர்ந்து. (க)

### பெரியாழ்வார்.

விரியாழ்வார் சூழ்பார்வான் மெச்சுயர்வார் சீரார்
பெரியாழ்வா ரென்றிசைகொள் பேரார்—உரியார்சேர்
விண்டுசித்த மாமுனிவர் மென்மலர்த்தாள் தாழுயர்பே
றுண்டுசித்த மானெஞ் சுனக்கு. (உ)

### இராமாநுஜன்.

இராமா நுசனடியை யெப்பொழுதுஞ் சிந்தித்
திராமா நுசனெவனு மெய்தான்—இராமாநு
சன்மங் களவடிவத் தாமோ தரனருளாற்
சன்மங் களைந்திவருஞ் சார்பு. (ங)

### மணவாளமாமுனிகள்.

தனமுந் திரியும் தரணியும் வெஃகித்
தினமுந் திரியுந் திரிபார்—மனமே
குணவாள மாமுனியை கொண்டன்றுண்ட னூநம்
மணவாள மாமுனியை வாழ்த்து. (ச)

### கோயிற்கந்தாடையண்ணன்.

சேத்திரங்க ளுட்சிறந்த தென்புதுவை வாழ்கோதை
தோத்திரப்பா மாலை சொலத்துணையாம்—கூத்தரவு
கந்தாடை யண்ணன்மலர்க் கண்ணருள்வா யுங்கோயிற்
கந்தாடை யண்ணன் கழல். (ரு)

---

ஸ்ரீ:

# சூடிக்கொடுத்தநாய்ச்சியார் தோத்திரப்பாமாலை மூலமும் உரையும்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

1. திருவளர் முகுந்த நந்தனனினமாந்
தேம்பொழிற் கற்பகக் கொடியைக்
குருவள ரரங்கத் தரசெனுந் தருவிற்
குலவலாற் காண்டகை யாளை
யுருவளர் பொறையை யருளினாற் பிறிதோ
ரொண்மலர் மடந்தைபோன் றுளாளை
மருவளர் குழற்பூங் கோதையைப் புகலோர்
மற்றிலேன் புகல்புகு கிறேனால்.

பதவுரை:—திருவளர் முகுந்த நந்தனன் இனமாம்—(கல்வியறிவொழுக்கமென்னும்) செல்வம் மிகுந்த பெரியாழ்வாரது திருவம்சமாகிய; தேம்பொழிற்கற்பகக்கொடியை-நந்தனவனத்துக்குக்கற்பகக்கொடிபோன்றவரும்; குருவளர்—மேன்மைமிக்க; அரங்கத்தரசெனுந்தருவில்—திருவரங்கமன்னனாகிய அரிசந்தனவிருக்ஷத்தின்கண்ணே; குலவலால்-சேர்ந்துவிளங்குதலாலே; காண்தகையாளை—சேவிக்கத்தக்கவரும்; உருவளர்—அழகு அதிகரிக்கின்ற; பொறையை—பூமிப்பிராட்டியின் பூர்ணவதாரமாயிருப்பவரும்; அருளினால்—கருணையினாலே; பிறிதோர் ஒண்மலர் மடந்தைபோன்றுளாளை—மற்றோரலர்மேன்மங்கையையனையவரும்(ஆகிய);மருவளர்-பரிமளம் விருத்தியடைகின்ற; குழற்பூங்கோதையை—திருக்குழற்கற்றையினையுடைய அழகிய சூடிக்கொடுத்தநாய்ச்சியாரை; புகலோர்மற்றிலேன் — வேறுகதியில்லாதயான்; புகல்புகுகிறேன்—சரணமாக அடைகிறேன். ஆல் அசை.

*

**கருத்து:**—பெருங்கொடையும் பெருஞ்செல்வமும் காட்சிக்கெளிமையும் பொறுமையும் கருணையும் ஒருங்கேயுடைய நாய்ச்சியாரை நிர்க்கதியாயிருக்கிற யான் உய்யுமாறெண்ணிச் சரணமடைகிறேன் என்பதாம்.

**விசேடக்குறிப்பு:**—திருவென்னும் பலபொருளொருசொல்லை ஸ்ரீயென்னும் வடசொற்றிரிவென்பர் சிலர். அதற்குப்போலவே இதற்கும் மேன்மை ஒளி அழகு என்னும் பொருளுண்மையில், திருவளர் என்பதற்கு மற்றைய ஆழ்வார்களைக்காட்டிலும் மேன்மைமிக்க ஞானாநுட்டானங்களால்வந்த தேசுமிகுந்த சமதமாதிகுணங்களால் விளங்கும் அழகுவிஞ்சிய என்றும் பொருள்கொள்ளலாம்.

திரு என்பதற்குப் பேராசிரியர் கண்டோரால் விரும்பப்படுந்தன்மை நோக்கம் என்று பொருள்கூறுவர்.

இத்திருவை, இனம் தேம்பொழில் கற்பகக்கொடி என்பவற்றுக்கும் அடைமொழியாகக்கொண்டு, அததற்குத் தக்கவாறு பொருள்கொள்க.

ஸ்ரீவில்லிபுத்தூரிலே வேணுகுலமாகிய விரிதிரைக்கடலுக்குக் கலைமதியாய்விளங்கிக்கொண்டிருந்த முகுந்தரென்னுந்திருநாமமுடைய விப்பிரேந்திரராகிய விபுதசிகாமணிக்குப் பாற்கடலிற் பள்ளிகொண்டருளிய பரமசுவாமியின் நியமனப்படி ஐந்தாவது திருக்குமாரராகத் திருவவதரித்ததனாலே பெரியாழ்வாரை முகுந்தநந்தனனென்று சொல்லியிருக்கிறது.

இனம் என்றது வேயர்குலத்தையும், மயர்வறமதிநலமருளப்பெற்ற தூயர்குலத்தையும் குறிக்கும்.

தேம்பொழிலென்பதற்கு நந்தனமெனப் பொருள்கொண்டது, தே என்பது தெய்வப்பொதுவையும் பொழில் என்பது உய்யானத்தையும் குறிக்குமாகலின். தேவோத்தியானத்திற்கே நந்தனமென்னும் பெயருண்மையுணர்க. இஃது ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். மெலித்தல்விகாரமுற்றுளது. இதுவன்றி, வண்டு மது மணம் என்னும் பலபொருள்குறிக்கும் தேன் என்பது பொழில் என்னும் வருமொழியுடன் புணருமிடத்து, "தேன்மொழி மெய்வரின்" என்ற சூத்திரவிதிப்படி வேற்றுமைவழியில் 'தேம்பொழில்' என ஆயிற்றென்றும் கொள்ளலாம். கொண்டால் மேல்வரும் கற்பகக்கொடி என்ற குறிப்பினால் நந்தனவனத்தைக் குறிக்குமென்க.

கற்பகக்கொடி நந்தனவனத்திருத்தல் வெள்ளிடைவிலங்கலாம்.

தேம்பொழிற் கற்பகக்கொடி யென்றது கற்பகப் பூஞ்சோலைக்குக் கற்பகப்பூங்கொடிபோலே ஆழ்வார்திருக்குலத்துக்கு அழகை விளைத்தருள் பவரென்பதற்கு;—அல்லது நந்தனவனத்துத்தோன்றிய காமவல்லி அதன் மேலிவர்ந்து விளங்குவதுபோல "அஞ்சுகுடிக்கொரு சந்ததியா யாழ்வார்கள் தஞ்செயலை விஞ்சிநிற்குந் தன்மை"யாராய் எழுந்தருளியிருக்கும் பெருமையை விளக்குகைக்காக என்றுமாம். கற்பகக்கொடி என்றது அழகு வண்மை முதலிய உத்தமகுணங்களையுடைமையின்.

முகுந்தநந்தனனினமாந் தேம்பொழிற் கற்பகக்கொடி என்றது சுவர்க்க கற்பகம் போலாது இவர் அதிகாரிகளை யுண்டாக்கி அவர்க்கு நாற்பயனையும் பயக்குமவரென்னும் சீர்மையைத் தெரிவித்தற்கு.

திருவரங்கமன்னனுரை அரிசந்தனதருவாக உருவகப்படுத்தியது; கற்பகக்கொடிமருவிப் பெருமைபெறுதற்குரியதரு அதுவேயாதலின்.

அரங்கத்தரசெனுந்தருவிற் குலவலால் என்றது இருவருமான சேர்த்தியே, உய்யுமாறெண்ணி யுவந்துவந்தடைகின்றவர்களுக்குக் கார்யஞ்செய்யு மென்கைக்கு.

'விகுதியின்றியும் விளங்கு முயர்திணை' என்பவாகலின் அரசன் என்னுது அரசு எனச் சொல்லப்பட்டது.

தருவென்பது மரங்களுக்குப் பொதுப்பெயராயிருந்தாலும், கற்பக விருக்ஷத்துக்குச் சிறப்புப்பெயருமாகும்.

உருவளர் என்றது திருத்துழாய்மூலத்தில் திருவவதரித்தலால் வந்த புதுக்கணிப்பு.

உருவளர்பொறையென விசேடித்தது, பூமிப்பிராட்டியாரின்கூறுகத் திருவவதரித்த சத்தியபாமை முதலியவர்களைக்காட்டிலும் இவர் மேம்பாடுடையாரென்பதற்கு; பின்னும் உருவளர்பொறையென்றதற்குப் பொறுமையென்னுங் குணமே ஒரு திருவுருவுகொண் டுவந்துவந்து எழுந்தருளியிருப்பவர் என்றும் பொருள்கூறலாம்.

அருளினுற் பிறிதோர் ஒண்மலர்மடந்தைபோன்றுளாளை என்றது புருடகாரத்துக்குவேண்டிய தண்ணளி முதலிய குணங்களாற் சிறந்தவரென்கைக்கு.

பொறையென்பது அபராதமனைத்தையும் பொறுத்தலை.

அருளென்றது பிறர்துயரங்கண்டு அதைத் தன்றுயரெனக்கொண்டு ஒருங்கே யொழித்தலை.

மருவளர் குழற்பூங்கோதையென்றதனால் பெரியபிராட்டியாரைக் காட்டினும் இவரிடத்தில் சுதந்திரனாகிய சர்வேச்சுரன் தனது சத்தியசங்கற்பத்தையும்விட்டு இவர் புருவநெறிப்பின்படி நடக்கிறவனாகச்செய்து காரியஞ் செய்விக்கைக்குரிய சிறந்த சாதனமுண்மை வெளியிடப்பட்டது.

பெரியோர் கோதையென்னும் திருநாமத்துக்குப் பெரியபெருமாளுக்குப் பாமாலைபாடிப் பூமாலை சூடிக் கொடுப்பவரென்று பொருள் கூறுவர். அடியார்களுக்கு மதுரமானவாக்கை யளித்தருள்பவர் என்றும் பொருள் கூறலாம். பூமியைப் பிளந்துகொண்டு திருவவதரித்ததனாலே வந்த திருநாமமென்றும் சொல்வர்.

இந்நூன் முழுவதுக்கும் திணை - பாடாண். துறை - கடவுள்வணக்கம்.

பாடாண் என்பது 'ஒளியு மாற்றலு மோம்பா வீகையும், அளியு மென்றிவை யாய்ந்துரைத்தன்று' என்றதனால் ஒருவருடைய கீர்த்தி வலி கொடை தண்ணளி முதலியவற்றை ஆராய்ந்துசொல்லுதலாம். இது, பாடுதல்வினையையும் பாடப்படுமவரையும் நோக்காது அவரது ஒழுகலாறாகிய திணையையுணர்த்தினமையின் இப்பெயர்பெற்றதென்பர். இது, வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக்காரணப்பெயர். திணை—ஒழுக்கம். மற்றது வெளிப்படை. இதற்கு வேறுவிதமாகவும் பொருள் கூறுப.

இந்நூலில் ஈற்றிலுள்ள இரண்டுசெய்யுளன்றி மற்றைய செய்யுட்களெல்லாம் (ஒவ்வோரடியிலும் ஆசிரியவுரிச்சீர் எவ்வேழுவந்த) எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தங்கள்.

இம்முதற்செய்யுள், "இழுமென்மொழியும் இனியபொருளும் - தழுவுவது வைதருப்பம்" என்றபடி மெல்லென்ற விழுமிய இனியபொருளும் உறுதிப்பொருளும் பொருந்தியிருத்தலில் வைதருப்பமென்னும் ரீதியாம்.

ரீதியெனினும் நெறியெனினும் ஒக்கும். அதாவது: சொற்களியைவதற்குக் காரணமாகிய சொற்போக்கு. இந்நெறி, வீரம் மானம் வென்றி முதலிய குணங்கள் உயிரைச் சிறப்பிப்பனபோலக் கவிகளைச் சிறப்பிப்பனவாகிய செறிவு முதலிய பத்துக்குணங்களையும் உயிராகக்கொண்டு விளங்குவதாம். அப்பத்துக்குணங்களாவன: 'செறிவே தெளிவே சமநிலை யின்பம், ஒழுகிசை யுதாரம் உய்த்தலில் பொருண்மை, காந்தம் வலியே சமாதி யென்றாங்,

காய்ந்த வீரைங் குணனும் உயிரா, வாய்ந்த வென்ப வைதருப் பம்மே' என்னும் இச்சூத்திரத்துக் கூறிய பத்துமாம். இச்சூத்திரம் வாமனர்மதம்பற்றி வந்தது.

பாமகர் குணத்தை மூன்றென்றும், போஜராஜன் இருபத்துநான்கென்றும் கூறுவர்.

அவற்றுள் இப்பாட்டு, சொற்கள் ஒன்றையொன்று தழுவி யிறுக்கமுடையதாகத் தொடுக்கப்பட்டிருத்தலிற் செறிவென்னுங் குணத்தின் பாற்படும். 'செறிவெனப்படுவது நெகிழிசையின்மை' என்பர் தண்டியாசிரியர். அநுப்பிராசமென்னும் வழியெதுகைபெற்றுவருவதனைச் செறிவென்பர் கௌடர். இதனை வடநூலார் சிலிட்டமென்பர்.

இச்செய்யுளுள் அமைந்த அணிகளாவன:—

முகுந்தநந்தனன், நந்தனனினம், புகல்புகுகிறேன்: இவற்றில் வழியெதுகையென்னுஞ் சொல்லணியுண்மை யுணர்க. இதனை அநுப்பிராசமென்ப.

அரசெனுந்தருவென்னுமிடத்துச் சொற்சித்திரமுண்மை உற்றுநோக்குக.

திருவளர் முகுந்த நந்தனனினமாந் தேம்பொழிற் கற்பகக்கொடியென்றது முகுந்தநந்தனனினத்தை நந்தனமாகவுருவகப்படுத்தி, அதற்கேற்ப நாய்ச்சியாரைக் கற்பகக்கொடியாக உருவகப்படுத்தியிருத்தலால் இஃதொரு வகையுருவகவணியாம். 'உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித், தொன்றெனமாட்டினஃ துருவக மாகும்' என்று பொதுவாக இலக்கணங் கூறுவர் தண்டியாசிரியர். இவ்வுருவகத்தை வடநூலார் அச்சிலிட்டகேவல பரம்பரிதருபகமென்பர்.

அரங்கத்தரசெனுந் தருவென்றது அரங்கத்தரசாகிய உபமேயத்தில் தருவாகிய உபமானத்தை அபேதமாக ஆரோபித்திருத்தலாலே அவைவயிலொற்றுமையுருவகவணியென்பர். வடநூலார் இதனை அநுபயாபேதருபகாலங்காரமென்பர்.

உருவளர்பொறையென்றது நிரவயவமாகிய பொறையென்னுங் குணத்தில் அவயவமுடைமை அதிகமாகச் சொல்லப்பட்டிருத்தலில் மிகையொற்றுமையுருவகவணியென்பர். இதனை வடநூலார் அதிகாபேதருபகாலங்காரமென்பர்.

அருளினல் பிறிதோ ரொண்மலர் மடந்தைபோன்றுளாளை யென்றது அருளுடைமை காரணமாகப் பெரியபிராட்டியாரதுதன்மை நாய்ச்சியாரிடத்திற் சம்பாவிக்கப்படுதலால் ஏதுத்தற்குறிப்பணியாம். 'பெயர்பொருளல்பொருளெனவிரு பொருளினும்,இயல்பில் வினைதிற னன்றியய லொன்று, தான்குறித் தேற்றுதல் தற்குறிப்பேற்றம்' என்பர் தண்டியாசிரியர். தற்குறிப்பு உத்பிரேக்ஷை அத்தியவசாயம் சம்பாவனை யென்பன ஒருபொருட்சொற்கள். இதனை வடநூலார் ஹேதூத்பிரேக்ஷாலங்காரமென்பர்.

இப்பாட்டு, எள்ளும் அரிசியும் போல வேறுபட்டியைந்துவிளங்கும் பல அணிகளையுடைமையிற் சேர்வையணியாம். சங்கீர்ணமென்றும் சொல்வர். 'மொழியப்பட்ட வணிபல தம்முட்-டழுவ வுரைப்பது சங்கீரணமே' யென்பர் தண்டியாசிரியர். இதனை வடநூலார் சம்சிருட்டி யலங்காரமென்பர்.

'திருவளர்' என்ற இம்முதற்பாட்டின் முதற்சீரில், 'பகர்செய்யுண் மங்கலஞ் சொல்லெழுத்துத் தானம் பாலுண்டி வருணநாட் கதியே யென்ருப், புகரில்கண மெனப்பத்தும் பிறங்கு கேள்விப் புலவர்புகழ் முதன்மொழிக்குப் புகல்வர்' எனப் பாட்டியலுடையார் கூறியபடி பொருந்தியிருக்கவேண்டிய பத்துவகைப்பொருத்தங்களும் பொருந்தியிருக்கின்றனவென்பதை எடுத்துக்காட்டி விளக்குதும்.

1. மங்கலப்பொருத்தம்: — அதாவது: பாட்டுடைத்தலைவன் இயற்பெயர்முதலெழுத்துக்குப் பொருந்திய மங்கலமொழியை வழுவுருது முதற்சீரில் அமைத்தலாம்.

வழுவுறுதலாவது: 'முதற்பாட்டெடுப்பின் முதலீ ரசைச்சொல் - சொற்பான் மங்கலச் சொல்லொடு தோன்றி - னிற்பினுங் கொள்ளார் நெறியுணர்ந் தோரே' என்றபடி தேமா புளிமா என்னும் முதலீரசைச்சொற்களில் மங்கலமொழி வந்திருப்பினும் மங்கலமாகாமை போல்வனவாம்.

மங்கலமொழிகளாவன: 'திருப்பொன் பூமி புனன்மணி கடல்யா - றெழுத்தமு தெழின்மழை பசுங்கதிர் செஞ்சுடர் - நாள்சொல் ஞெண்டு நாட்டிய பரிமலை-கருட னருந்ததி மற்றிவை யென்ப-நிலைபெறு மங்கல நெறி நிற் பனவே' எனப் பொய்கையார் கூறியனவும் பிறவுமாம்.

பாட்டுடைத்தலைவியாரியற்பெயராகிய கோதையென்பதன் முதலெழுத்தாகிய கோவென்பதற்குத் திருவென்னும் மங்கலமொழி பொருத்தமுடையதென்பதனை, 'திங்கள் திரு நீர் கொக் கோக்காகும்' என்ற வரையறுத்த பாட்டியலால் உணர்க. திருவளர் என்ற முதற்சீரில் வரலாகாவென விலக்கிய தேமா புளிமா இல்லாமை காண்க.

2. சொற்பொருத்தம். அதாவது: பொருத்தமாகக் கொண்ட மங்கல மொழியில் 'நாமவகையுளி சேர்தல் பொருளதின்மை நலமிலதாய்வைத்தல் பலபொருளாய்த்தோன்றல், ஆமினிய சொல்லீறு திரிதல் போலு மாதி மொழிக் காகா வாரந்தமாமே' என்றபடி வகையுளிசேர்தன்முதலிய ஆநந்தம் முதலெடுத்த மங்கலமொழியில் வாராதிருத்தல்.

வகையுளியாவது: 'கூம்பவும் கூம்பாதலரவும் கொண்டியற்றல், வாய்ந்த வகையுளியின் மாண்பு' என்றவாறு அவ்வச்சொன்முடிபையே சீர்முடிபாக்கித் தளைகொள்ளாது வேண்டியவிடத்துச் சீர்முடிவுசெய்து தளைகோடலாம். மற்றவை வெளிப்படை.

இம்முதற்சீரில் மேற்கூறிய *ஆநந்தம் ஒன்றும் இன்மையறிக.

3. எழுத்துப்பொருத்தம். அதாவது: 'ஆனவெழுத் தொன்பதே யைந்து மூன்றங் காகாவெட்டாறுநான் காதிச் சீர்க்கே' என்றபடி இம்முதற்சீரில் ஐந்தெழுத்தே அமைந்துள துணர்க.

4. தானப்பொருத்தம். அதாவது: 'ஊனமிலா அ ஆ வும் இ ஈ ஐ யும் உ ஊ வும் எ ஏ யும் ஒ ஓ தானும் - தானமிதை வகையாமந் தாதிதன்னில் தலைவன்பேர் முதலெழுத்துப் பாலனுதி - மேனிரையெண் ணிற்பால குமார ராசர் வேண்டிடும் வேண்டா விருத்த மரணந்தானே' என்றபடி பாட்டுடைத் தலைவனியற்பெயர் முதலெழுத்தைப் பாலனாகவைத்து எண்ணுங்கால் மங்கலமொழியின் முதலெழுத்து விருத்த மரணத் தானமாக வாராதிருத்தலாம். இப்பாட்டுடைத்தலைவியாரின் இயற்பெயர்முதலெழுத்தாகிய கோவுக்கும் மங்கலமொழியின் முதலெழுத்தாகிய 'தி' என்னும் எழுத்துக்கும் இராஜத் தானமாக இருத்தல் தெளிக.

5. பாற்பொருத்தம். அதாவது: 'அவ்வவ்வெழுத்தே யப்பாற் குரிய-மயங்கினும் வரையா ரலியெழுத் தொழித்தே' என்றபடி பாட்டுடைத்தலைவன் ஆண்பாலாயின் ஆண்பாற்குரிய எழுத்துக்களும், பெண்பாலாயிற் பெண்பாற்குரிய எழுத்துக்களும் மங்கலமொழியின் முதலெழுத்தாய் வருதலாம். 'உயிரீராறும் ஆணென மொழிப, உயிர்மெய் யெல்லாம் பெண்ணென மொழிப, உடம்பெழுத் தெல்லாம் நபுஞ்சக மாகும்' என்றபடி பாட்டுடைத் தலைவியாரின் பாலுக்கேற்ப முற்சீரின் முதலெழுத்தாகிய 'தி' என்பது பெண்பாலாதல் அறிக.

---

* ஆநந்தம் - பாக்குற்றங்களிலொன்று.

6. உண்டிப்பொருத்தம். அதாவது: 'உணவே யமுதம் விடமு மாகும்' என்றபடி அமுதம் விடமென்னும் இருவகையுண்டிகளில் அமுதவுண்டியமையப் பாடுதலாம். 'உயிர்க்குறினேன்கொடு கசதநபமவ-மயக்கறு மமுத வெழுத்தாகு மென்ப' என்றபடி 'தி' என்னும் முதற்சீரின் முதலெழுத்து அமுதவுண்டியாதல் உணர்க.

7. வருணப்பொருத்தம். அதாவது: 'மக்கட் சாதி நான்கிற்கும் வகுத்த-தத்தஞ் சாதி யெழுத்தே யவரவர்க்கு-வைத்துமுன் னெடுப்பி னது மாண் புடைத்தே', 'மயங்கினும் வரையார் பயன்பட வரினே' என்றபடி பாட்டுடைத்தலைவர் என்ன வருணத்தினரோ அவ்வருணத்துக்குரிய எழுத்துக்களில் ஒன்று மங்கலமொழியின் முதலெழுத்தாக இருத்தலாம். 'தநபமயரவெனச் சாற்றிய வாறும்-மனமகி ழரசர் வருண மாகும்' என்றபடி 'தி' என்பது அரசவருணத்துக்குரிய எழுத்தாகலின் ஸ்ரீரங்கராஜாது தேவியாராயிருக்கிற தலைவியாருக்குப் பொருத்தமாயிருத்தல் காண்க. பிராமணகுலோத்தமராகிய பெரியாழ்வாரது திருமகளாரென்று வைத்துக்கொண்டாலும், 'மயங்கினும் வரையார்' என்று விதந்தோதியிருத்தலிற் பொருந்துமென்க.

8. நாட்பொருத்தம். அதாவது: "சிறந்தசீர்த் தலைவன் பிறந்தநாளாயினும்-பெயர்நாளாயினும் இயல்புறவுணர்ந்தபின்-ஒன்றற்கேனும் இரண்டுக்குமேனும் - முன்றிகழ் பொருத்த மொழிவது கடனே" என்றபடி பாட்டுடைத்தலைவன் பிறந்தநாளுக்காவது பெயர்நாளுக்காவது இவ்விரண்டுக்குமாவது மங்கலமொழியின் முதலெழுத்துக் குரியநாள், இரண்டு நான்கு ஆறு எட்டு ஒன்பதாவது நாளாக இருத்தலாம். பாட்டுடைத்தலைவியார் திருவவதரித்தருளிய நாள் திருப்பூரம். 'ககர வருக்க வகைநாள் விரிக்கில் - நான்குமிரண்டு மூன்று மூன்றும் - ஓண மாதிரை புனர்பூசம் பூசம்' என்ற விதிப்படி பெயர்நாள் பூசம். மங்கலமொழியின் முதலெழுத்தாகிய 'தி' என்பதற்கு, 'தகர வருக்கத் திரண்டேழ் மூன்றற்கு - வகைநாள் சோதி விசாகம் சதையம்' என்ற விதிப்படி விசாகமாகும். இது, பூரத்துக்கு ஆறுவதுநாளும் பூசத்துக்கு ஒன்பதாவதுநாளுமாகப் பொருந்தியிருக்கின்றது. 'இரண்டிரண்டா றெட்டொன் பானெனத் - திரண்டநாளேற் செல்வம் புகுதரும்' என்று இப்பொருத்தத்துக்குப் பயனும் கூறப்பட்டது பார்க்கத்தக்கது.

9. கதிப்பொருத்தம். அதாவது: 'தேவர் மக்கள் நரகர் விலங்கென - மேவிய நான்கே யெழுத்தியல் கதியே' என்றும், 'மன்னுவர் தேவர் மக்கள் செய்யுளில் - மன்ன விலங்கொடு மக்கள் கதியே' என்றும் கூறியபடி நால்

வகைக் கதிகளுள், பின்னுள்ள இரண்டுகதியையொழித்து, முன்னுள்ள இரண்டுகதிகளுள் ஒன்றுவரப் பாடுதலாம். 'உயிர்க்குறில் வல்லினம் ஈற் றெழுத் தொழியப் - பயிர்ப்புறு வானவர் கதியெனப் படுமே' என்றபடி 'தி' என்பது தேவகதியாயிருத்தல் தெளிக.

10. கணப்பொருத்தம். அதாவது: 'நீரே நிலனே வானே நீண்மதி - சீரிய மானன் செந்தீ தெறுகதிர் - காற்றெனச் சிறந்த கூற்றன வென்ப' என்றபடி மூவசைச்சீர்களினாகிய இருநான்குகணங்களுள், 'நேரசை மூன் றிய மானன் னிரைப்பின்பு நேரிரண்டு - சேர்வன திங்கள் நிரையசை மூன் றுஞ் செழுநிலமாம் - நேரசைப் பின்னர் நிரையிரண் டாய்வரின் நீர்க்கண மாம் - தேரிய லல்குற் றிருவே யிவைநல்ல சீர்க்கணமே' என்றபடி இய மானன் திங்கள் நிலம் நீர் என்னும் நாற்கணங்களில் ஏதாவதொன்று முதற் சீராகவரப் பாடுதலாம். ஆயின், 'திருவளர்' என்ற முதற்சீர் கருவிளம் என்னும் வாய்பாட்டதாகிய ஈரசைச்சீரன்றோ? பொருந்துமாறென்னை யென்னிற் புகலுதும். 'நேரீற் றியற்சீர் வெண்சீர் முன்னும் - நிரையீற் றியற் சீர் கனிச்சீர்ப் பின்னும் - தெருங் காலைச் சிறப்புறு மவையே', 'அயன் றிருக் கோ கருடன் கணமெனப் - பயின்றிடு மியற்சீர்ப் பரிசுரைத் திடலே' என்ற படி தேமா புளிமா என்னும் இயற்சீரிரண்டும் தேமாங்காய் புளிமாங்காய்ச் சீர்கள்போல முறையே இயமானன்கணமும் திங்கட்கணமும் ஆகுமென் றும், கருவிளம் கூவிளம் என்னும் இயற்சீரிரண்டும், கருவிளங்கனி கூவிளங் கனிபோல நிலக்கணமும் நீர்க்கணமும் ஆகுமென்றும் கூறுப. ஆதலால், 'திரு வளர்' என்ற முதற்சீர் (கருவிளம்) கருவிளங்கனிபோல நிலக்கணமாதலிற் பொருந்துமென்க. 'நிரையசை மூன்று நிலக்கண மதற்குத் - தகுநாள் கேட்டை திருமிகத் தருமே' என்றபடி கொள்ளப்பட்ட கணத்துக்கு நாளும் பயனும் கண்டுகொள்க. இக்கணத்தின் நாளாகிய கேட்டை பூரத்துக்கு எட் டாவதுநாளும் பூசத்துக்கு அநுசன்மத்தில் இரண்டாவது நாளுமாகப் பொருந்தியிருப்பது காண்க.

'இறைவனுட்கு மேவு கணநாட் பொருத்தம் வேண்டும்' என விதித்த வில் அப்பொருத்தமும் அமைந்திருத்தல் எடுத்துக்கூறப்பட்டது.

அன்றியும், 'மங்கல மமைந்த சொல்லொடு பொருந்திய - ஈரசை நான் கினுள் நேரீ றொழித்து - நிறையீற் றியற்சீர் முதற்க ணிற்பினும் - வரையார் மூவசை வாராக்காலே' என்ற சிறப்புவிதியும் 'திருவளர்' என்ற ஈரசைச்சீர் பொருத்தமுடையதென்பதை நன்கு விளக்கியது காண்க.

'நிரைநிரை கொற்றவை நேர்நிரை சாத்தன், அவைதாம், மிகுதரு திருவும் புகழும் செய்யும்' என்றபடி 'திருவளர்' என்ற ஈரசைச்சீர்க்குக் கொற்றவையென்ற கணமும், 'மிகுதரு திருவும் புகழும் செய்யும்' என்று பயனும் கூறுமாறு குறிக்கொள்க.

இதுகாறும் கூறிய சிறப்புவிதிகளால், 'கணமே மூவசைக்கூட்டமாகும்', 'யாவர்செய்யுட்கு மினமொடு புணரும் - மூவசைச் சீரே முதனிற்பனவே' என்பவை போன்ற பொதுவிதிகள் மறுக்கப்பட்டமை காண்க. (க)

2. அளவியின் மறைவாக் கிற்குமெட் டருநின்
னரும்பெறற் பெருமையென் னனோர்தன்
கிளவியிற் கிளக்குந் தகையதன் றன்றே
கேழ்கிளர் கோதையே யிங்ஙன்
உளவிய லுணரு மென்னையு முடனே
யோதுமோ னப்பகை யாகும்
வளவிய மகிமை வாயுநின் குணங்கள்
வாய்முழங் குவித்திடு மன்றே.

பதவுரை:—கேழ்கிளர் கோதையே - ஒளியினால் விளங்குகின்ற கோதை சூடிக்கொடுத்தநாய்ச்சியாரே!; அளவியில் மறைவாக்கிற்கும் - எண்ணருஞ் சுருதிவாக்கியங்களுக்கும்; எட்டரும் நின் அரும்பெறற் பெருமை - எடுத்தியம்புதற்குமுடியாத தேவரீருடைய பிறராற் பெறுதற்கருமையான மகிமையானது; என் அனோர் தன்கிளவியில் - அடியேனையனையவர்கள் சொல்லும் வாக்கியங்களிலே; கிளக்குந்தகையது அன்றன்றே - துதிக்குந்தன்மையதல்லதல்லவா? இங்ஙன் - இவ்வாறு; உளஇயல் - இருக்குந்தன்மையை; உணரும் - அறியும்; என்னையும் - (அறிந்து வாயடங்கியிருக்கும்) அடியேனையும்; உடனே - அப்பொழுதே; ஓதும் - யாவருங் கொண்டாடும்படியான; மோனப்பகையாகும் - மௌனவிரோதிகளான; வளவிய மகிமைவாயும் - சிறந்த பெருமைமருவிய; நின்குணங்கள் - தேவரீருடைய கலியாணகுணங்கள்; வாய்முழங்குவித்திடும் - தேவரீரது தோத்திரவிடயத்திலேமிகுதியாகப் பேசும்படி செய்கின்றன; எ-று. அன்று, ஏ அசைகள்.

கருத்து:—தேவரீரது மகிமையை வர்ணிக்கும்வல்லமையில்லாமையையறிந்து மௌனமாயிருந்தவென்னையும் தேவரீரது சௌலப்பியாதிகுணங்கள் அவற்றின்மகிமையை வர்ணிக்கும் விடயத்திலே பிரவர்த்திக்கும்படி தூண்டுகின்றன என்பதாம்.

**விசேடக்குறிப்பு:**—அளவி - அளவு. 'அளவியை யார்க்கு மறிவரியோன்' என்றார் திருக்கோவையாருடையார். துறவு துறவியென நின்றாற்போல அளவு அளவியெனநின்றதென்பர் அதனுரையாசிரியராகிய பேராசிரியரும்.

மறை - சுருதி. ஓதுதற்குரியார் ஓதுவித்தற்குரிய ஆசிரியர் ஓதுவிக்க ஓதியுணரவேண்டுமேயன்றிக் கண்ணாற்கண்டு கற்றுணரும்படி ஏட்டில் எழுதி வைக்கக்கூடாதென்று மறுக்கப்பட்டதனால் மறையெனப் பெயரெய்திய தென்ப. சுருதி, எழுதாக்கிளவி என்னும் பெயரும் இதனை வலியுறுத்தும். அன்றியும், அந்தணரல்லாதார் காதுகளாற் கேட்கவும் கூடாதென்று மறுக்கப்பட்டதனால் மறையென்று பெயரெய்தியதென்றும் சொல்லுப. இவ்விரண்டுபொருளிலும் மறு-பகுதி. ஐ-செயப்படுபொருண்மைவிகுதி. உகரக்கேடு-சந்தி. அன்றித் தம் அரும்பெரும்பொருள்களை எளிதிலுணரவொண்ணாதபடி மறைத்துக்கொண்டிருத்தலால் மறையெனப் பெயரெய்தியதென்றும் சொல்லுப. இப்பொருளில் மறை - பகுதி. இ - வினைமுதற்பொருண்மை விகுதி. இது புணர்ந்துகெட்டது. இவ்வாறு கெடுதலை, 'செய்யாயென்னு முன்னிலைவினைச்சொல்' என்ற சூத்திரவுரையில் மொழிந்தபொருளோ டொன்ற அவ்வயின் மொழியாததனையும் முட்டின்றுமுடித்தலென்னும் உத்தியாற்கொள்க என்பர்.

வாக்கு - சொல்; இது ஆகுபெயராய் வாக்கியத்தைச் சொல்லுகிறது. குவ்வுருபு வினைமுதற்பொருளது. 'ஒன்று மூன்றுநான் காறே ழுருபொடு - வருமே வினைமுத லெனவகுத் தனரே' என்பர் இலக்கணக்கொத்துடையார். 'அவருக்குச்செய்யத்தகும் அக்காரியம்' என உதாரணமும் காட்டுவர். உம்- உயர்வுசிறப்பு.

எட்ட அரும் என்பது எட்டருமென ஈறு தொகுத்தலாய் வந்தது. கிளவி வாக்கியத்திற்கு ஆகுபெயர். அன்றே பிரசித்தியைக் குறிப்பதோரிடைச்சொல். இதனைப் பலரறிதேற்றமென்ப.

கேழ்கிளர்தலாவது—'கோடிசூர்யசமப்ரப:' என்று கொண்டாடப்படுகின்ற திருவரங்கமன்னரது திருமேனியொளியும் சுருங்கித்தோன்றும்படி சிறந்துவிளங்குதல். இங்ஙனமென்றது இங்ஙன் எனக் கடைகுறைந்துநின்றது.

பலபொருள் பயக்குந் திரிசொற்கள்வாராமல், கவியாற் கருதப்படும் பொருள் விரைவில் வெளிப்படையாய்ப் புலப்படுதலையுடைமையால் இப்பாட்டுத் தெளிவென்னுங் குணத்தையுடையதாகும். இதனை வடநூலார்

பிரசாதமென்ப. இதற்குக் களங்கமில்லாதது அல்லது வெளிப்படையென்பது பொருள். 'தெளிவெனப்படுவது பொருள்புலப்பாடே' என்பர் தண்டியாசிரியர். (௨)

3. உன்பெருங் காதற் காதலன் காதிற்
குயாமு தினையனை யதுவும்
மின்பொழி நின்கா லணிமணிச்சிலம்பின்
மேதகு சிலம்பினின் னிசைத்தும்
இன்பொடு தெளிவு மேய்ந்தது முன்ற
னின்றுதி யதற்கியைந் ததுமாம்
அன்புறு வாக்கை யடியனேற் கருள்க
வன்னையே கோதையே நீயே.

**பதவுரை:**—கோதையே - நாய்ச்சியாரே; அன்னையே - தாயே; நீயே - தேவரீர்தாமே; மின்பொழி - ஒளியைவீசுகின்ற; நின்காலணி - தேவரீர் திருவடிகளில் அணிந்த; மணிச்சிலம்பின் - இரத்தினகசிதமான நூபுரத்தினது மேதகுசிலம்பின் - மேன்மையாகிய தொனியைப்போல; இன்னிசைத்தும் - இனிய ஓசையையுடையதும்; (அதனாலே) உன் பெருங்காதற் காதலன் காதிற்கு - தேவரீரது பேரன்பிற்குரிய பிரியநாயகனாகிய திருவரங்கமன்னனாரது திருச்செவிகளுக்கு; உயாமுதினையனையதுவும் - மேன்மையாகிய தேவாமிர்தத்தையொத்ததுவும்; இன்பொடு தெளிவும் - மாதுர்யமென்னுங் குணத்துடனே பிரசாதத்தையும்; ஏய்ந்ததும் - பொருந்தியதுவும்; உன்தன் இன்துதியதற்கு - தேவரீருடைய இனிமையான தோத்திரத்திற்கு; இயைந்ததும் ஆம் - தகுதியானதுமாகிய; அன்புறுவாக்கை - பத்திமிக்க வாக்கியத்தை; அடியனேற்கு - தாசபூதனாகிய எனக்கு; அருள்க - கொடுத்தருளவேணும்; எ-று.

**கருத்து:**—அடியேன் விரும்பியவற்றையெல்லாங் கொடுத்தருள்வதற்குரிய குடர்த்தொடக்கையுடையவரும் அடியார்களுக்கு மதுரமான வாக்கைக் கொடுத்தருளுதலால் வந்த கோதையென்னுந்திருநாமத்தையுடையவருமான தேவரீரே அடியேன் பிரார்த்தித்தபடி விலக்ஷணமானவாக்கைத் தந்தருளவேணுமென்று வேண்டுகிறாரென்பதாம்.

**விசேடக்குறிப்பு:**—உயாமுதென அடைகொடுத்தது, அமுதென்பது பால் நீர் முதலிய பலபொருள் குறிக்குமொருசொல்லாதலின் மற்றையவற்றைவிலக்கித் தேவாமிர்தத்தைமாத்திரம் குறித்தற்கு. உயர்மரம் என்றாற்

போல நாடோறுமுயரும் புடைபெயர்ச்சிவினை காட்சிவகையானும் கருத்து வகையானும் இன்மையிற் காலம்பற்றிய புடைபெயரும் வினையுருபுகளை விரியாது பண்புருபைவிளக்கும் மொழியை விரித்துப் பொருள்கூறப்பட்டது.

'தன்முகமாகத் தானழைப்பதுவே', 'உறக்கத்தே நீத்ததுவும்' என்றாற்போல, "அனையதுவும்" என உகரங்கெடாது உடம்படுமெய்பெற்றது. இவ்வாறு வருவதனை, நன்னூலுரையாசிரியர் 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டுக்கேடும் என்னாது 'ஓடும்' என்பதனாற்கொள்க' என்பர்.

நின்காலணி மின்பொழி மணிச்சிலம்பெனக் கூட்டிப் பொருள்கொள்க. இரண்டாவது சிலம்பு - ஓசை. இதில் வினைமுதற்பொருண்மைவிகுதியாகிய இ - புணர்ந்துகெட்டது. முதற்சிலம்பிலுள்ள இன்னுருபு ஒப்புப்பொருளது.

இன்னிசைத்து: அஃறிணையொன்றன்பாற்படர்க்கைக் குறிப்புவினையாலணையும்பெயர். 'இன்பமொடு' என்பது இன்பொடு என ஈறுகுன்றிவந்தது.

இது, பத்துக்குணங்களுள் ஒன்று. இதனிலக்கணம், 'சொல்லினும் பொருளினுஞ் சுவைபடலின்பம்' (தண்டியலங்காரம்) என்பது. இதனை வடநூலார் மாதுர்யமென்பர். சொற்கள் சுவைபடுவதற்குக்காரணம்: வழுவின்மை செவிக்கினிமைபயத்தல் நன்மொழிபுணர்த்தல் மோனைச்சிறப்பு முதலியனவாம். பொருள் சுவைபடுதற்குக்காரணம்: அருவருப்பு அமங்கலம் நிந்தை முதலியனவாகாத நற்பொருளமைதலாம்.

சுவையாவது: தேனுண்டற்கண் வண்டுகளுக் குண்டாகுங் களிப்புப் போலச் சொற்பொருள்களை ஆராய்தற்கண் பண்டிதர்களுக் குண்டாகும் களிப்புக்குக் காரணமாகக் கவிகளில் அமைந்திருக்குங் குணவிசேடங்களேயாம்.

தெளிவு என்பதும் ஒரு குணத்தின் பெயராம். இதனிலக்கணம் இரண்டாம்பாட்டினுரையிற் காட்டப்பட்டிருக்கிறது.

அருள்க: வேண்டிக்கோடற்பொருட்கண்வந்த முன்னிலையொருமை வியங்கோள்வினைமுற்று.

இப்பாட்டுத் தொகைநிலைத் தொடர்மொழிகளை மிக்குடைத்தாயிருத்தலில் வலியென்னும் குணமுடையதாம். 'வலியெனப் படுவது தொகைமிக வருதல்' என்பது தண்டியலங்காரம். வடநூலார் இதனை ஓஜமென்பர். ஓஜம் - சாமர்த்தியம்.

அணி:—காதற் காதலன் காதிற்கு, தினையனை, அணிமணி, உன்றனின் றுதி: இவற்றில் வழியெதுகை (அநுப்பிராசம்) என்னும் சொல்லணி வந்தமை காண்க.

கோதையென்னுந் திருநாமத்திற்கு வாக்கையருள்பவரென்னும் பொருளுண்மையில் இப்பாட்டுக் கருத்துடையடையணியாம். 'கருத்தொடு பொருந்தடை கருத்துடை யணியே' என்பர் சந்திராலோகநூலார். வடநூலார் பரிகராலங்காரமென்பர். 'கோதையே நீ' என வருதல் காண்க. (௩)

4. யாதவர் தலைவ னன்பினு டலினல்
யமுனையி னியல்பினை வகிக்குஞ்
சோதியே நினது சரச்சுவ தியினைத்
துறையினன் முறையினு லாடி
மேதகு முணர்வேய் கவிஞரின் வாக்கு
மேவுநின் கடைக்கணேக் கதனற்
போதவு மதுர மாகிய மதுவைப்
பொழிவன வாய்விளங் கிடுமால்.

பதவுரை:—சோதியே - (சூடிக்கொடுத்த) சுடரே! யாதவர் தலைவன் அன்பின் ஆடலினல்—(1) யதுகுலத்தவர்களுக்கிறைவனுகிய கண்ணபிரான் பிரீதியோடு (கோபிகைகளுடன்) நீர்விளையாட்டைச் செய்தருளியதனுலே; (2) கண்ணபிரானிடத்துள்ள மோகத்தினுலே திருவாய்மலர்ந்தருளியதாதலாலே; யமுனையின் இயல்பினை வகிக்கும் - காளிந்திபோலே பாதகங்களைப் போக்கிப் பரன்பத முதவும் பான்மையைக் கொண்டிருக்கும்; நினது சரச்சுவதியினை—(1) தேவரீருடைய (திருப்பாவை முதலிய திவ்யப்பிரபந்த ரூபமான) சரஸ்வதியை (வாக்கை), (2) சரச்சுவதீநதியை; துறையினல்—(1) குருமுகமாக, (2) இறங்குதுறைவழியே; முறையினுன்—(1) கேட்கவேண்டிய முறைப்படி, (2) ஸ்நாநவிதியிற்கூறியபடி; நாடி - ஆராய்ந்து; ஆடி - நீராடி; (அதனுலே) மேதகும் உணர்வு ஏய் - மேன்மையான ஞானத்தைப் பொருந்திய; கவிஞரின் - கவிகளுடைய; வாக்கு - பிரபந்தங்கள்; மேவும் - அருளைப்பொருந்திய; நின் கடைக்கண் நோக்கதனல்-தேவரீருடைய கடாட்சவீட்சண்ணியத்தினுலே; போதவும் - மிகவும்; மதுரமாகிய மதுவை - இனிமை வாய்ந்த தேனை; பொழிவனவாய்-பெய்கின்றனவாய்க்கொண்டு; விளங்கிடும்-பிரகாசிக்கும்; எ-று. ஆல் அசை.

கருத்து:—பிறகாரணங்களாலேயும் கவிகளுக்கு வாக்கமையுமாயினும் தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய திருப்பாவை முதலிய திவ்யப்பிரபந்தங்களைக் குருமுகமாகக் கிரமப்படி காலக்ஷேபஞ்செய்து அதனாலே தெளிவாக விளங்குகின்ற ஞானத்தையுடைய கவிகளுக்கே தேவரீர் க்ருபாகடாக்ஷத்தாலே மிகவும் மதுரமாகிய வாக்கமையும் என்பதாம்.

விசேடக்குறிப்பு:—இப்பாட்டிலுள்ள சிலேடையினாலே சரஸ்வதிநதியில் துறையறிந்திறங்கி முறையறிந்தாடுகின்றவர்களுக்கு மதுரமாகக் கவி சொல்லும்வல்லமையுண்டாகு மென்னும் ஐதிஹ்யம் சூசிக்கப்பட்டது.

நின்று சரச்சுவதியை யென விதந்துகூறப்பட்டிருத்தலாலே வாக்தேவதையாகிய சரஸ்வதிதேவியின் பிரசாதம் முதலிய பிற காரணங்களாலேயும் பிறர்க்கு வாக்கமையுமாயினும் தேவரீர் அருளிச்செய்த அருளிச்செயல்களைக் கிரமமாக அத்தியயனம்பண்ணி அதன்பொருளையுணர்ந்தவர்களுக்கே மதுரவாக் கமையுமென்பது கூறப்பட்டதாயிற்று.

துறை யென்பதற்கு இறங்குதுறையென்பதன்றி இடமென்னும் பொருளும் உண்மையின் சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி ஆசிரியனிடமிருந்தென்று பொருள்கொள்ளப்பட்டது. நீதிநெறிவிளக்கநூலாரும் ஆசிரியனிடத்தி லென்று சொல்லவேண்டியவிடத்து 'இடமறிந்துய்த் துணர்வில்லெனினில்லாகும்' என்றார்.

இப்பாட்டு மூவினமும் விரவத் தொடுக்கப்பட்டிருத்தலாலே சமநிலை யென்னும் குணவணியுடையதாம். 'விரவத்தொடுப்பது சமநிலையாகும்' என்பர் தண்டியாசிரியர். வடநூலார் சமதை யென்பர்.

அணி:—துறையினன் முறையினன் என்பது: வழியெதுகை (அநுப்பிராசம்).

கவிகளின் வாக்கிலுள்ளதாக வர்ணிக்கவேண்டிய மாதுர்யத்திற்குச் சரச்சுவதியைத் துறையினன் முறையினனாடி என்ற வாக்கியப்பொருளைக் காரணமாக்கிச் சமர்த்திக்கப்படுதலில் இப்பாட்டுத் தொடர்நிலைச்செய்யுட் குறியணியாம். இது, பலபொருட்சொற்றொடரணியைத் துணையாகக்கொண்டு விளங்குதலாலே உறுப்புறுப்பிக் கலவையணியாம். 'மன்னிய பொருளை வாக்கியார்த் தத்தி, னுயினும் பதார்த்தத் தாயினு மிரண்டி, னுயினு நாட்டற் கமைவது தொடர்நிலைச், செய்யுட் குறியெனச் செப்பினர் புலவர்', 'பல் பொருள் தருஉம்பல் பதங்கள் புணர்த்துச், சொல்வது பல்பொருட் சொற்றொடரணி' என்பர் சந்திராலோகநூலார். இதனை வடநூலார் சிலேடோத்தாபித காவியலிங்காலங்கார மென்பர்.

(ச)

5. அன்னையே பொல்லாங் கெவர்க்குமெஞ் ஞான்று
மாற்றிடு மறிவிலி யாகும்
என்னையே யனையார்க் கிவ்விறை விரைவில்
இன்னருள் செயலெதி லதுநின்
தென்னையேய் குழலி லிசைதொடை யலினும்
திவவுயா ழிசையினு மினிய
பொன்னையேய் தமிழி லிசைதொடை யலினும்
புரிந்துகட் டுண்ணலாற் றிடனே.

பதவுரை:—அன்னையே - தாயே; இவ்விறை - இந்த முகுந்தன்; எஞ்ஞான்றும் - எக்காலத்தினும்; எவர்க்கும்-யாவருக்கும்; பொல்லாங்கு - அபராதத்தை; ஆற்றிடும்-செய்கின்ற; அறிவிலியாகும் - மந்தமதியாகிய; என்னையே யனையார்க்கு - அடியேனைப்போன்றவர்களுக்கு; விரைவில் - அதிசீக்கிரமாக; இன்னருள் - நல்ல கருணையை; செயல் - செய்தருளுதல்; எதில் - என்ன காரணத்தினாலேயென்றால்; அது - அக்காரணம்; நின் - தேவரீருடைய; தென்னையேய் - கருமையைப்பொருந்திய அல்லது அழகையமைந்த; குழலிலிசை - திருக்குழற்கற்றையிற்சூட்டிய; தொடையலினும் - பூமாலையினாலும்; திவவுயாழிசையினும் - வலிக்கட்டினையுடையவீணைகானத்தைக்காட்டினும்; இனிய - இனிமைவாய்ந்த; பொன்னையேய் - (அருமை பெருமையால்) செம்பொன்னையனைய; தமிழிலிசைதொடையலினும் - தமிழ்மொழிகளாற்றொடுத்த பாமாலையினாலும்; புரிந்து கட்டுண்ணலால் - விரும்பித் தானே கட்டுப்பட்டிருத்தலாலேதான்; திடம் - நிச்சயம்; எ-று. ஏ ஈற்றசை.

கருத்து:—இத்திருவரங்கமன்னனூர் அடியேனைப்போன்ற மகாபராதிகளையும் நிக்கிரகிக்காமல் அநுக்கிரகித்தருளுதல் தேவரீர் சூடியும் பாடியும் கொடுத்த பூமாலை பாமாலைகளாலே தேவரீருக்குக் கட்டுப்பட்டிருத்தலாலேதான்; இது நிச்சயம். என்பது.

விசேடக்குறிப்பு:—இவ்விறையெனச்சுட்டியது நாய்ச்சியாரது இடப்பக்கத்தில் ஏகாசனத்தில் திருமணக்கோலத்துடன் எழுந்தருளியிருத்தலாலே. எவர்க்குமென்றது பிரியத்தையும் இதத்தையும் செய்யும் தாய் தந்தையர்க்கும் என்றபடி. எஞ்ஞான்றும் என்றது தானாக ஒரு தொழில் செய்யவல்ல எக்காலத்தும் என்றபடி. பொல்லாங்கு - அபகாரம். தென் - கருமை; அழகுமாம். முதல் 'ஏய்'க்குப் பொருந்திய என்றும் மற்றதற்கு ஒத்த என்றும் பொருள். முதல் 'இசை'க்குச் சூட்டிய என்றும், நடு 'இசை'க்குக் கானம்

என்றும், கடை 'இசை'க்குத் தொடுத்த என்றும் பொருள்கொள்க. தமிழ் என்றது அதிலுள்ள மொழிகளுக்கு ஆகுபெயர். கட்டுண்ணலால்: இதில் உண் செயப்பாட்டுவினையுருபு; தற்பொருட்டுப்பொருளதென்றும் ஆம்.

இப்பாட்டு, செவிக்கினிதாய்ச்செல்லும் மெல்லியவோசையையுடையதா யிருத்தலின் ஒழுகிசையென்னும் குணவணியது. மென்மையான எழுத்துக்கள் பலவும் வன்மையான எழுத்துக்கள் சிலவுமாக அமைந்திருத்தல் இக்குணத் திற்குக் காரணமாம். 'ஒழுகிசையென்பது வெறுத்திசையின்மை' என்பர் தண்டியாசிரியர். ஒழுகிசை - செவிக்கினியதாய்ச்செல்லும் மெல்லிசை. இதனை வடநூலார் சுகுமாரதை யென்பர். சுகுமாரதை - மிருதுத்தன்மை. வெறுத்திசை - செறிந்திசைக்கும் இசை. வெறுத்தல் - செறிதல். இதுவே கௌடருக்கும் உடன்பாடாம்.

அணி:—எவர்க்கும் பொல்லாங்கியற்றுதல் தடையாக இருக்கவும் இறை யருள்செயல் கூறப்பட்டிருத்தலில் இது மூன்றாவதாகிய பிறிதாராய்ச்சியணி யாம். அன்றியும், இறை அருள்செய்தற்கு நாய்ச்சியாருக்குக் கட்டுப்படுதலில் எதுத்தன்மைசம்பாவிக்கப்படுதலின் உளபுலஏதுத்தற்குறிப்பணியாம். இங்கு, தற்குறிப்பணியின் உருபாகிய திடனென்பது விரிந்துநிற்றல் காண்க. இவ் விரண்டணிகளிற் பின்னது தலைமைத்தாய் முன்னது அஃதின்றிவருதலால் உறுப்புறுப்பிக்கலவையணியாம்; 'காரியம் பிறத்தற் காந்தடையுள்ள - தாக வதுதானுதித்தலும்' என்றும், 'பொருளை மற்றொரு பொருளியற் றொடர்பால்- இஃதஃ தன்றென வெண்ணியு மதுவென் - றத்திய வசித்தல் தற்குறிப்பணி' என்றும் இதற்கு இலக்கணங் கூறுவர் சந்திராலோகநூலார். வடநூலார் இதனை விபாவனையும் உத்பிரேக்ஷையும் ஒன்றற்கொன்றுதவியாய்வந்த அங் காங்கீபாவசங்கராலங்காரமென்பர். (ரு)

6\. இதழதிற் சோணை யாயுநீ ங்கிலத்
திணையிறுங் கபத்திரை யாயும்
சிதகறு கோவின் பெருக்கெனும் பெருக்கிற்
சிறந்தசீர்ச் சரச்சுவதி யாயும்
விதலைசெய் பகுதி தோய்விலாச் சுவையில்
விரசையா யும்மியல் பானே
முதல்வியே கோதை யாயுநர் மதையா
முதல்வனுக் காகுகின் றுயால்.

பதவுரை:—முதல்வியே! - ஜகத்காரணவஸ்துவாகிய திருவரங்கமன்னனாரது தேவியாரே!; நீ - தேவரீர்; முதல்வனுக்கு - அவ்வழகியமணவாளனுக்கு; இதழதில் - திருவதரத்தினிடத்திலே; சோணையாயும் - சோணாநதியாக இருந்தும் (அருணவருணத்தையுடையராயிருந்தும்); நருமதையா - நருமதாநதியாக (இன்பத்தை விளைப்பவராக); ஆகுகின்றாய் - ஆகுகின்றீர்; நகிலத்து - திருமுலைத்தடங்களில்; இணையில் - ஒப்பில்லாத; துங்கபத்திரையாயும் - துங்கபத்திராநதியாக இருந்தும் (பெருமையும் பேரழகும் உடையராயிருந்தும்); நருமதையா ஆகுகின்றாய்; சிதகு அறு - குற்றங்களைப் போக்குகின்ற; கோவின்பெருக்கெனும் பெருக்கில் - தீர்த்தப்பிரவாகமென்னும் செல்வத்திலே (வாக்கின்பெருமையென்னும் வைபவத்திலே); சிறந்த - மேலான; சீர் - மகிமையுடைய; சரச்சுவதியாயும் - சரஸ்வதீநதியாக விருந்தும் (வாகீசுவரியின் றன்மையையுடையராயிருந்தும்) நருமதையா ஆகுகின்றாய்; விதலைசெய் - நடுக்கத்தைவிளைக்கின்ற; பகுதிதோய்விலா - ப்ரக்ருதி சம்பந்தமில்லாததாயிருக்கிற; சுவையில் - தீர்த்தத்தினாலே (பகவத்பக்தி ரசத்தாலே); விரசையாயும் - விரஜாநதியாயிருந்தும் (இராஜஸ தாமஸ குணங்களால்வரும் குற்றமற்றவராயிருந்தும்); நருமதையா ஆகுகின்றாய்; இயல்பானே - சுபாவத்திலே; கோதையாயும் - கோதாவரிநதியாயிருந்தும் (பூமாலை சூடியும் பாமாலை பாடியும் கொடுப்பவராகவிருந்தும்); நருமதையா ஆகுகின்றாய் எ-று. ஆல் அசை.

கருத்து:—திருப்பவளத்தில் அருணவருணத்தையுடையராயிருந்தும், திருமுலைத்தடங்களில் பெருமையும் பேரழகும் உடையராயிருந்தும், வாக்கின்பெருமையென்னும் வைபவத்திலே வாகீசுவரியின் தன்மையையுடையராயிருந்தும், பகவத்பக்திரசத்திலே இராஜச தாமத குணங்களால் வரும் குற்றமில்லாதவராயிருந்தும், இயல்பிலே கோதையாயிருந்தும் இன்பத்தை விளைப்பவராகுகின்றீர் என்பது.

விசேடக்குறிப்பு:—இப்பாட்டில் ஆயும் என்பதற்கெல்லாம் ஆகவிருந்தும் என்று பொருள்கொள்ளவேண்டும். சோணா என்பதற்கு ஆருண்ணியவதி என்று பெயர். (அதாவது—செம்மையான காந்தியையுடையவள் என்பது.) துங்கம் பத்திரம் என்னுஞ் சொற்கள் முறையே உயர்வு, அழகு என்னும் பொருளுடைமையின் பெருமையும் பேரழகு முடையராயிருந்தும் எனப் பொருள்கொள்ளப்பட்டது. சிதகு - குற்றம். கோ - நீர், பெருக்கு என்னும் இரண்டில் முன்னது வெள்ளம். பின்னது விபவம்; அதாவது—செல்வம். விதலை - நடுக்கம். இது காரிய ஆகுபெயராய்ப் பிறவிப்பெரும்பிணியைச் சாட்டுகிறது. பகுதி—பிரகிருதியின்றிரிபு. சுவை பண்பாகுபெயராய்த்

தீர்த்தத்தைச் சொல்லுகிறது. இதற்குப் பிரதிபதமாகிய இரசம் என்னும் சொல்லுக்கு இப்பொருளுண்மையுணர்க. கோதையென்னும் மொழிக்குச் சூடிக்கொடுத்தநாய்ச்சியாரென்ற பொருளேயன்றிக் கோதாவரிநதியென்னும் பொருளு முண்மையின் அதற்கேற்ப இரண்டுபொருள்படும். சோணை முதலிய சொற்களையமைத்துப் பல அலங்காரங்களமையும்படி சமத்காரமாக முதனூலிற் சுலோகஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இந்நூல் மொழிபெயர்ப்பு நூலாதலின் தமிழிலமையாத சொற்களை முதனூலிலிருந்தபடியே அமைத்திருக்கிறது.

கருத்திற் காட்டிய பொருள் குறிப்பாகத்தோன்றுதலாலே இப்பாட்டு உதாரமென்னுங் குணவணியாம். "உதார மென்ப தோதிய செய்யுளிற், குறிப்பி னொருபொருள் நெறிப்படத் தோன்றல்" என்பர் தண்டியாசிரியர். இதற்கு வடமொழிப் பெயரும் இதுவே. குறிப்பாவது புத்தியால் ஊகித்தறிதல்.

அணி:—பெருக்கெனும்பெருக்கு: அனுப்பிராசமென்னுஞ் சொல்லணி. சோணையாயும் நருமதையாகுகின்றாய் என்பது முதலிய ஐந்துவாக்கியங்களிலும் ஓரிடத்துள்ளனவும், காரணகாரியங்களாகாதனவுமாகிய இரண்டுதருமங்களுக்குப் பகைமை தோன்றியழியுமாறு சொல்லப்படுதலாலே முரண்விளைந்தழிவணியாம்! எங்ஙனமெனில் சோணையாயும் நருமதையாகுகின்றாயெனவே முரண்விளைந்து அருணவருணத்தையுடையராயிருந்தும் அழகியமணவாளனுக்கு இன்பத்தை விளைக்கின்றீ ரென்று பொருள்பட்டு அஃது தழிந்துவிடுதலினென்க. இதுபோலவே மற்றைய நான்குவாக்கியங்களையுங்கொள்க. இவ்வாறன்றிச் சோணையாயும் துங்கபத்திரையாயாகுகின்றாய்;—துங்கபத்திரையாயும் சரச்சுவதியாய் ஆகுகின்றாய்; சரச்சுவதியாயும் விரஜையாயாகுகின்றாய்; விரஜையாயும் கோதையாயாகுகின்றாய்; கோதையாயும் நருமதையாயாகுகின்றாய்: என்று இடையே சிலசொற்களைவிட்டுத் துங்கபத்திரைமுதலிய நான்கினுமிருந்த ஆயும் என்பதைப் பிரித்து ஆகுகின்றாயென்பதைக் கூட்டித் துங்கபத்திரைமுதலிய நான்கையும் ஆவர்த்தித்து மேற்கூறிய அணியாகவே கொள்ளலாம்! இதில் உள்ளவாறேயுரையாமல் பிரித்தல், கூட்டல் ஆவர்த்தித்தல், விடுதல் முதலிய பிரயாசமுண்மை உணரத்தக்கது. "கருதுமோ ரிடத்தவாய்க் காரணங் காரியம், எலாத் தருமமிரண்டன் மேலும், தோன்றி யழியும் பகைமை தொடுத்து, மொழித லென்ப முரண்விளைந் தழிவே" என்பர் சந்திராலோகநூலார்! வடநூலார் இதனை விரோதாபாசாலங்காரமென்பர்.

இரண்டாவது அர்த்தம்:—முதல்வியே! நீ முதல்வனுக்கு இதழதிற் சோணையாகவும், நகிலத்தில் துங்கபத்திரையாகவும், கோப்பெருக்கெனும் பெருக்கில் சரச்சுவதியாகவும், பகுதிதோய்விலாச்சுவையில் விரஜையாக வும், தாமானதன்மையினாலே கோதையாகவும் இன்பத்தை விளைப்பவராகு கின்றீர் என்றுமாம். இங்கு ஆயும் என்பதற்கு ஆகவும் என்று பொருள் கொள்க.

கருத்து:—பலபடியாலும் பர்த்தாவுக்குப் பரமாநந்தத்தை விளைக்கிறீ ரென்பது.

அணி:–இப்படிப்பொருள்கொள்ளும்போது இப்பாட்டு விடயபேதத்தா லே ஒருவரே முதல்வியென்னும் ஒருபொருளினிடத்திற் சோணைமுதலிய பல பொருள்களை யாரோபித்திருத்தலாலே பலபடப்புனைவணியுமாம். இது பலபொருட்சொற்றொடரணியின் றுணைபெற்றுவந்திருக்கிறது. இதனிலக்க ணம் முன் சொல்லப்பட்டது. "பல்லோ ரொன்றிற் பல்லியல் பானும், அறி பல் பொருள்களை யாரோ பித்தலும், பின்னரும் விடய பேதங்க ளாற்பல், பொருள்களை யொருவரே புகட்டுத லும்மென, இருபா லாகும் பலபடப் புனைவே" என்பர் சந்திராலோகநூலார். இதனை வடநூலார் சிலேடோத்தாபி தோல்லேகாலங்காரமென்பர்.

மூன்றாவது அர்த்தம்:—முதல்வியே! நீ இயல்பிலே சூடிக்கொடுத்தநாய்ச் சியாராயிருந்தும் திருவதாரத்திலே பெரியபிராட்டியாராகவும், திருமுலைத் தடங்களிலே நீளாதேவியாராகவும், வாக்கினது பிரவாகவிபவத்திலே வாகீ சுவரியாகவும், பிரகிருதி சம்பந்தமற்றதாயிருக்கிற பகவத்பத்திரசத்திலே விரஜாதேவியாராகவும் ஆகி, அழகியமணவாளனுக்கு ஆநந்தத்தை விளைக் கின்றவராகின்றீரென்றும் பொருள்கூறலாம்.

அணி:–இவ்வாறு பொருள்கொள்ளும்போது இப்பாட்டு, புகழ்பொருளை யுணர்த்தும் சோணை முதலியசொற்களாலே சோணாநதி, துங்கபத்திராநதி, சரச்சுவதிநதி, விரஜாநதி, கோதாவரிநதி, நருமதாநதியென்று குறித்தறி தற்குத் தகுதியாகியபொருள் காணப்படுதலாலே குறிநிலையணியுமாம். "புகழ்பொரு ளுணர்த்தப் புகூஉஞ் சொற்களாற், கூர்ந்தறி பொருளைக் கூறல் குறிநிலை" என்பர் சந்திராலோகநூலார். வடநூலார் இதனை முத்திரா லங்காரமென்பர்.

சோணைமுதலிய சொற்கள் பெரியபிராட்டியார்முதலிய தேவிமார் களைக் குறிக்குமோவென்னிற் கூறுதும். சோணையென்பதற்குச் செய்யாள்

என்பது பொருள்— "செய்யாள் திருமார் பினிற்சேர் திருமாலே" என்றும், "செய்யவ ணின்னகலஞ் சேம மெனக்கருதி" என்றும் அருளிச்செயல்களில் பெரியபிராட்டியாருக்குச் செய்யாள், செய்யவள் என்ற திருநாமம் வந்தன காண்க. நகிலத்து இணையில் துங்கபத்திரை என்பதற்கு நீளாதேவியா ரென்பது பொருள். இவரையே நப்பின்னைப்பிராட்டியாரென்பர். "மடப் பின்னை முலையணைவான் பொருவிடையே மடர்த்துகந்த" என்றும், 'நப்பின்னை கொங்கைமேல் வைத்துக் கிடந்த மலர்மார்பா' என்றும் அருளிச்செயல்களில், திருமகள்மார்பன் திருவுள்ளமுகக்கும்படியான பெருமையும் பேரழகும் நப்பின்னைப்பிராட்டியார் திருமுலைத்தடங்களில் மிக்கிருத்தல் குறிப்பிடப்பட்டிருத்தல் காண்க. "நீளாதுங்கஸ்தநகிரிதடீசுப்த" மென்பர் பெரியாரும். பொன், பூமி முதலிய பொருள்களுக்கும் வாக்கு முதலியவைகளுக்கும் ஒவ்வொரு அதிதேவதையுண்டென்றும், அவ்வதி தேவதைகளே எம்பெருமானுடைய சக்திகளென்றும், சக்திகளெல்லாம் அந்தச் சர்வேச்சுரனுக்குத் தேவிமார்களென்றும் அகிலநிகமாகமாதிகளுஞ் சொல்லுதலாலே இங்குச் சொல்லப்பட்ட வாகீசுவரி, விரஜை என்பவர்களும் தேவிமாரேயென்பது திண்ணம். நாய்ச்சியார் எல்லாத்தேவிமார்களுடைய அம்சமாகவும் திருவவதரித்தருளியிருக்கின்றனரென்பதை, "பூமாது நில மடந்தை பொதுவர்குலக் கொழுந்தும், பூதலத்து ளொருதிருவாய்ப் பொலிந்தா ரென்றே, நாமாது புகழ்பரப்ப வில்லி புத்தூர் நயந்தவள்" என்னும் ஸ்ரீஆண்டாள்பிள்ளைத்தமிழ்வாக்கியம் விளக்குவது காண்க.

எடுத்துக்காட்டிய முரண்விளைந்தழிவணியும், பலபடப்புனைவணியும், குறிநிலையணியும், பல்பொருட்சொற்றொடரணியும்: திலமும் தண்டுலமுஞ் சேர்ந்திருந்தாற்போல இப்பாட்டிற் சேர்ந்துவிளங்குதலாலே சேர்வையணி யாம். இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது. (சா)

7\. புவியுரு வாமுன் செவியெனப் புகலும்
 புற்றினின் றுற்றவத் தவத்தோன்
கவிஞருக் கரசர்க் கரசெனப் புகழுங்
 கௌரவ மெய்தின னெனினின்
செவியதாந் திருவாய் மலரினில் வருமித்
 தேனுறழ் தருதிரு மொழிகள்
அவிருமன் பருக்கின் பளிப்பவா மென்ப
 தன்னையே யென்னையே வியப்பே.

பதவுரை:—அன்னையே - தாயே; புவி உருவாம் - பூமியின் வடிவமாகிய; உன் - தேவரீரது; செவியென - திருக்காதுகளென்று; புகலும் - சொல்லப்படுகிற; புற்றினின்று - வன்மீகத்திலிருந்து; உற்ற - தோன்றிய; அ தவத்தோன் - அந்த வான்மீகமுனிவன்; கவிஞருக்கரசர்க்கரசென - கவிச்சார்வபௌமனென்று; புகழும் - கொண்டாடப்படுகின்ற; கௌரவம் - கண்ணியத்தை; எய்தினனெனில் - அடைந்தானேயானால்; செவ்வியதாம் - செந்நிறமுடையதாகிய (அல்லது அழகியதாகிய); திருவாய்மலரில் - சிறந்தமுகாரவிந்தத்திலிருந்து; வரு - பெருகிய; தேன் உறழ்தரும் - மகரந்தத்துக்கு ஒப்பான; இ திருமொழிகள் - இந்தத் திருப்பாவை முதலிய திவ்யப்பிரபந்தங்கள்; அவிரும் அன்பருக்கு - தேவரீர்பக்கத்துவிளங்குகின்ற திருவரங்கமன்னனாருக்கு; இன்பு அளிப்பவாமென்பது - மனமகிழ்ச்சியைச்செய்வனவாகுமென்றுசொல்லுவது; என்னேவியப்பு - என்ன அற்புதம் (ஒன்றுமில்லை) எ-று. ஏ - அசைகள்.

கருத்து:—தேவரீருடைய புவியுருவிற்குச் செவியென்றுசொல்லப்படுகிற புற்றினின்றுந்தோன்றிய ஒருமுனிவன் கவிசார்வபௌமனெனக் கொண்டாடப்படுங் கௌரவத்தைப்பெற்றானென்றால் சாக்ஷாது தேவரீருடைய திருவாய்மலரினின்றுந் தோன்றிய பிரபந்தங்கள் திருவரங்கமன்னனாருடைய திருவுள்ளத்துக்கு மிகவும் மகிழ்ச்சியைச்செய்வனவாகுமென்பதில் என்ன ஆச்சரியமென்பது.

விசேடக்குறிப்பு:—புவியுருவென்பது அதிட்டானமான பூமியை. புற்று, புவியின்செவியென்பது சுருதிப்பிரசித்தம். அகரச்சுட்டு புராணவக்தாக்களாகிய வியாச பராசராதிகளுக்கும் முற்பட்டவரென்பதைக் குறிக்கும். பிரசித்தியைக் குறிக்கின்றதென்றுங் கொள்ளலாம். கௌரவமெய்தியதாவது: வேதவேத்தியனான பரமபுருடன் சக்கிரவர்த்தித்திருமகனாகத் திருவவதரித்தருளியபொழுது வேதம் வான்மீகிமுனிவரதுவாக்கிலிருந்து ஸ்ரீராமாயணரூபமாகத் திருவவதரித்ததென்றும் அதனைப் பெரியபெருமாள் திருவோலக்கங்குலையாதபடி ஒருவருமறியாமல் குசலவர்களருகிலிருந்து அசுவமேதமகாமண்டபத்திலே பிரீதியோடு கேட்டருளினரென்றும் பெருமையைப்பெற்றமையேயாம். செவ்வியது என்பது செவியது என இடைக்குறைந்தது. இதனைத் தேனுக்கடையாக்கி நாவிற்குமட்டுஞ் சுவையை விளைத்து உட்கொண்டவுடன் மதிமயங்கச்செய்யும் பிராகிருதமான தேனைப் போலாது காதிற்கும் இனிமையை விளைத்து உட்கொண்டவுடன் மதிமயர்வொழிக்கும் அழகியதான தேனெனவும் பொருள்கொள்ளலாம். இத்திருமொழிகளெனச் சுட்டியது சகலவேதாந்த சாரார்த்தத்தையும் சுருக்கமாக

விளக்கிக்காட்டுமவையாய்ப் பெண்களும் பேதைகளுங்கூட எளிதிலுணர்ந் துய்யுமாறு செவ்விய மதுரஞ்சேர்ந்த செந்தமிழ்ப்பாடல்களாலே விளங்கு வனவாயிருக்கின்றனவென்று யாவருங் கொண்டாடும்படியான பிரசித்தியை யுடையனவென்று தோற்றுவிக்கைக்கு. உத்தமவர்ணத்தில் திருவவதரித்த வர்களாய், உபயவேதாந்தப்பிரவர்த்தகர்களாய், உயர்ந்த பத்தியையுடைய வர்களாயிருக்கிற அத்தியாபகர்கள் உபய பார்சுவங்களிலும் திருவோலக்க மாயிருந்து தேவரீர் திருவுள்ளமுவந்தருளும்படி அதிமதுரமாய்ச் சேவிக் கின்ற இந்தத் திருமொழிகளென்று அண்மைகுறிக்கின்றதென்றுங் கூற லாம். திருமொழிகளென்றது திருப்பாவை திருமொழி யென்ற இரண்டு பிரபந்தங்களையும். இதனை அடையடுத்த கருவியாகுபெயரென்றுவஃது பண்புத் தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக்காரணப்பெயரென்றுவது கொள்க. வியப்பு என்னை யென்றது தேவரீர் தமப்பன்மார்களைப்போலே பெண்மையை யநுகரியாதே தாமானதன்மையாலே யனுபவித்த சிங்காரரச பரிதமாயிருப்பவைகளும் சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல் முதலிய பத்தழகோடுகூடியவைகளுமாயிருக்கிற தேவரீரருளிச்செய்த திவ்வியப்பிர பந்தங்கள் ரசிகசிரோரத்தினமாகிய திருவரங்கமன்னனுருக்கு இன்பம் பயப் பனவாக ஆகுதல் இயல்பேயாமென்றபடி.

இப்பாட்டும் செறிந்திசைக்குமிசையிலதாகத் தொடுக்கப்பட்டிருத்த லின் ஐந்தாவதுபாட்டைப்போலவே ஒழுகிசையென்னுங் குணமுடையதாம்.

அணி:—புற்றினின்றுற்ற, அரசர்க்கரசன், எனினின், தருதிரு, அன் பருக்கின்ப, அன்னையே என்னையே: இவற்றில் வழியெதுகை யென்னுஞ் சொல்லணியுள்ளன காண்க. நாய்ச்சியாரது புவியுருவிற்குச் செவியுருவாகச் சொல்லப்படும் புற்றினின்றுண்டாகிய அம்முனிவன் கவிசார்வபௌம னென்று கொண்டாடும்படியானுனெனில், அவரது திருவாய்மலரிலிருந்து நேரேதோன்றிய செவ்விய மதுரஞ்சேர்ந்த நற்பொருளிற்சிரிய திவ்வியப் பிரபந்தங்கள் மற்றைய அருளிச்செயலெல்லாவற்றிலும் மேன்மையதாய்த் திருவரங்கமன்னனுரது திருவுள்ளத்துக்கு மிகவும் மகிழ்ச்சியை விளைக்கு மென்பதில் என்ன ஆச்சரியமென்று கைமுதிகநியாயாநுசாரமாகப் பொரு ளமைந்திருத்தலின் இப்பாட்டுத் தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணியாம். இந்த நியாயத்தைத் தண்டாபூபிகாநியாயமென்றும், கிம்புநர்நியாயமென் றுஞ் சொல்லுப. "பொருளொன் றுரைக்கத் தண்டா பூபிகை, வழக்கான் மற்றொரு வண்பொரு டோன்றல், தொடர்நிலைச் செய்யுட் பொருட்பே றணியே" என்பர் சந்திராலோகநூலார். இதனை வடநூலார் காவ்யார்த்தா பத்தியலங்காரமென்பர். (எ)

8. அநுபவித் திடநின் னன்பனை யுனைப்போ
லன்னையே யுன்னுடை முன்னோர்தம்
புனிதபத் தியினை யிரத்திய தாகப்
புத்திசெய் துற்றிடும் பிரிவில்
துனிதவிர் புணர்விற் றோன்றிய வற்றைச்
சொலும்பல துறைத்தொடர் புகளால்
மனதினை யின்பச் சுவைமய மாக
வனைதரு கின்றன ரன்றே.

பதவுரை:—அன்னையே - தாயே; உன்னுடைமுன்னோர் - தேவரீர் திருத்தமப்பன்மார்களாகிய பட்டநாத பராங்குச பரகாலாதிகள்; நின் அன்பனை - தேவரீருடைய அழகியமணவாளனை; உனைப்போல் - தேவரீரைப்போல்; அநுபவித்திட - இன்பநுகரவேண்டுமென்று; தம் புனிதபத்தியினை - தமது சுத்த சாத்விகமயமான பத்தியை; இரத்தியதாக - அநுராகமாக; புத்திசெய்து - பாவித்து; உற்றிடும் - அவசியமான சில காரணங்களா லேற்படுகிற. பிரிவில் - விரகவேதனையையடைந்திருக்கும் பொழுதினும்; துனிதவிர் - (பிரிவினிலுண்டாகிய) துன்பத்தைப் போக்குகின்ற; புணர்வில் - சங்கமகாலத்தினும்; தோன்றியவற்றை - தமக்குண்டான துன்பத்தையும் இன்பத்தையும்; சொலும் பல வினைத்தொடர்புகளால் - எடுத்துரைக்கின்ற அநேகவிதமான அகப்பொருட்டுறைகளமைந்த பாசுரங்களாலே; மனதினை - அழகியமணவாளனது திருவுள்ளத்தை; இன்பச்சுவைமயமாக - சிங்காரரசபரிதமாக; வனைதருகின்றனர் - அலங்கரிக்கின்றூர்கள்; அன்றே - அல்லவா (இவ்விடயம் தேவரீருக்கும் தெரிந்ததே) எ-று.

கருத்து:—தேவரீரைப்போலே தேவரீர் தமப்பன்மார்களாகிய ஆழ்வார்களும் தேவரீர் பிரியதமனாகிய திருவரங்கமன்னனாரையநுபவிக்கைக்குப் பெண்தன்மையை யநுகரித்துத் தமது பக்தியை ரக்தியாகப்பாவித்து விரக சங்கம காலங்களிலுண்டாகிய துன்பத்தையும் இன்பத்தையும், பலவகைப்பட்ட அகப்பொருட்டுறைகளாக அமைத்துப் பாசுரமிட்டே அவ்வழகியமணவாளன் திருவுள்ளத்தை இன்பச்சுவைமயமாகச்செய்தார்களெனில், தேவரீர் தாமானதன்மையினாலே அநுபவித்தவைகளையமைத்துத் திருவாய்மலர்ந்தருளிய திவ்யப்பிரபந்தங்கள் அவ்வாழ்வார்கள் அருளிச்செய்தபிரபந்தங்களைக் காட்டிலும் மேலாகி யெம்பெருமானை மகிழ்விக்குமென்பதில் இறும்பூதென்னையோ வென்பதாம்.

விசேடக்குறிப்பு:—பிரிவிற்ரேன்றும் அவத்தையின்வகைகளை விப்பிரலம்பசிங்காரமென்றும், புணர்விற்ரேன்றும் அவத்தாபேதங்களைச் சம்போக சிங்காரமென்றும் வடநூலார் கூறுப. அவற்றுள் முன்னது, கல்வி செல்வம் முதலியகருதி நாயகன்பிரிவுற்றகாலத்தில் தம்மில் நிகழ்வனவாகிய வேதனைகளை அந்நாயகனுக்குச்சொல்லும்படி சுகம் பிகம் முதலியவற்றைத் தூதுவிடுதன்முதலியவைகளாம். பின்னது நாயகன்கூடியகாலத்து அவனை முன்னிலையாக்கி உமதுபிரிவில் எவைகள் மிக்கதுன்பத்தைவிளைத்தனவோ அந்த இந்து மந்தமாருதாதிகள் இப்பொழுது மிக்க இன்பம்விளைக்கின்றனவென்பது போல்வனவுமாம். பிரிவு, ஒருவழித்தணத்தல் வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதல் எனக் களவிலும், பரத்தையிற்பிரிவு ஓதற்பிரிவு, காவற்பிரிவு, தூதிற்பிரிவு, துணைவயிற்பிரிவு, பொருள்வயிற்பிரிவு எனக் கற்பிலும் வருவனவாம். புணர்ச்சி, இயற்கைப்புணர்ச்சி இடந்தலைப்பாடு பாங்கற்கூட்டம் பாங்கியிற்கூட்டம் எனக் களவிலும், குரவரிற்புணர்ச்சி வாயிற்கூட்டம் எனக் கற்பினும் வருவனவாம். இதில் முன்னது வதுவையானபின் னிகழ்வது. பின்னது தலைவியின் ஊடலைப் பாணன், பாடினி முதலிய வாயில்களாற் றீர்த்துக் கூடுவது. இவ்விரண்டினும் ஒவ்வொன்றிற்கும் பலதுறைகளுண்டு. ஆகமொத்தம் துறைகள் ஐந்திணைக்கோவைகளில் நானூறுமுதல் ஐந்நூறுவரை காணப்படுகின்றன.

இது முற்கூறியபடி குறிப்பாக (அருத்தாபத்தியாக) ஒரு பொருள் தருதலாலே (ஆறுவதுபாட்டைப்போல) உதாரமென்னும் குணத்தின் பாற்படும்; இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

இப்பாட்டும் ஏழாவதுபாட்டுப்போலவே அருத்தாபத்தியாற் பொருள் தோன்றுதலாலே தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணியாம். (அ)

9. விண்டு சித்தமு னிவர்தர லானும்
மேவிய நிலவுல கெல்லாம்
கொண்டுவந் துய்ய நிலவிடு மமுதங்
கொடுத்திடும் வாய்மையி னானும்
மண்டுவெப் பொழித்த லானுமற் றொருவாண்
மதிநிக ரன்னையே நின்னைப்
பண்டுபாற் கடல்வந் தவளுடன் பிறப்பாம்
பாவையென் றறிவரா நல்லோர்.

பதவுரை:—விண்டுசித்தமுன் இவர்தரலானும் - (1) எம்பெருமானது திருவுள்ளத்திலே முன்பு தோன்றி விளங்குதலாலும்; (விண்டுசித்தமுனிவர் தரலானும்-) (2) பெரியாழ்வார் தம் திருமகளாராகப் பெற்றிடுதலாலும்; மேவிய நிலவுலகெல்லாம் - (1) பொருந்திய நிலவுலகிலுள்ள பொருள்களெல்லாம்; (2) யாவரும் விரும்பும்படி விளங்குகின்ற பெரியோர்களெல்லாம்; கொண்டு உவந்து உய்ய - (1) ஏற்று இன்பமடைந்துபிழைக்க; (2) குருமுகமாக அத்தியயனம்பண்ணி ஆநந்தமெய்தி நன்குவாழ; நிலவு இடும் அமுதம் - (1) சந்திரிகையைச்செய்கின்ற அமுதகிரணத்தை; (நிலவிடுமமுதம் -) (2) எங்கும் விளங்குகின்ற அமிர்தத்துக்கு ஒப்பான இனிமைவாய்ந்த திருப்பாவை முதலிய திவ்யப்பிரபந்தங்களை; கொடுத்திடும் வாய்மையினும்- (1) தருகின்ற உண்மையுடைமையாலும்; (2) அருளியசாமர்த்தியத்தினும்; மண்டுவெப்பு ஒழித்தலானும் - (1) (வெய்யில் முதலியவற்றாலுண்டாகிய) மிக்க வெப்பத்தையெல்லாம் போக்குதலாலும்; (2) நெருங்குகின்ற தாபத்திரயங்களையும் போக்கியருளுதலாலும்; மற்றொரு மதிநிகர் - வேறொரு அமுதகிரணனைப்போன்ற; அன்னையே - தாயே!; நின்னை - தேவரீரை; விண்டுசித்தமுன் இவர்தரலானும் எம்பெருமானது திருமார்பில் இறையும் அகலகில்லாது விளங்கிக்கொண்டிருத்தலாலும்; மேவிய நிலவுலகெல்லாம் - தம்மையடைந்த லீலாவிபூதியிலுள்ளாரெல்லாரும்; கொண்டு உவந்து உய்ய- பெற்று மகிழ்ந்து வாழ; நிலவிடும் அமுதம் கொடுத்திடும் வாய்மையினும்- திவ்வியதேஜோமயமாய்விளங்குகின்ற பரந்தாமத்தைத் தந்தருளுஞ் சொல்வன்மையுடைமையாலும்; மண்டுவெப்பு ஒழித்தலானும் - (மகாபராதிகள் விடயத்திலே யெம்பெருமானுக்கு) மிகுகின்ற சீற்றத்தை மாற்றுதலாலும்; பண்டு - அமுதமதனகாலத்து; பாற்கடல் - பயோததியில்; வந்தவள் - திருவவதரித்தருளியவராகிய பெரியபிராட்டியாருக்கு; உடன்பிறப்பாம் பாவையென்று -(1) கூடத்திருவவதரித்தவராகிய (சகோதரியாகிய) திருமகளாரென்று; (2) சமானமாகிய உத்தமியாரென்று; நல்லோர்-பரமசாதுக்கள்; அறிவர் - (எக்காலத்தும்) அறிந்துகொள்ளுகிறார்கள் எ-று. ஆல் - அசை.

கருத்து:—தேவரீரை அடியேன்மாத்திரமன்று, பரமபாகவதர்களாகிய சாதுக்களும் பெரியபிராட்டியாருக்குச் சமானமான அழகு, குணம், சீலமுமுடையீரென்று தெரிந்துகொண்டிருக்கின்றன ரென்பது.

விசேடக்குறிப்பு:—சந்திரபரமாகப் பொருள்கொள்ளும்போது சித்தமுன் என்பதைச் சித்தத்தில் முன்பு என விரித்து ஏழாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடராகவும், பெரியபிராட்டியார்பரமாகப் பொருள்கொள்ளும்போது ஏழாம்வேற்றுமை விரியாகவும் கொள்க. இங்கு முன் ஏழாம்

வேற்றுமையுருபு. சித்தமென்பது இதயத்தையன்றி நெஞ்சென்பதுபோலத் தானியாகுபெயராய் மார்பையும் குறிக்குமென்க. மேவிய என்பதைப் பெயரெச்சமாகக்கொண்டு முதலில் பொருந்தியவென்றும், இறுதியில் அடைந்தவென்றும், இடையில் செய்யியவென்னும் வினையெச்சமாகக்கொண்டு விரும்பும்படியென்றும் பொருள்கொள்ளப்பட்டது. சந்திரபரமாகப் பொருள் கொள்கையில் நிலவு இடும் எனப் பிரித்துப் பொருள்கூறுக. அமுதம் என்பது காரியவாகுபெயராய்க் கிரணத்தையும், உவமையாகுபெயராய்த் திவ்யப்பிரபந்தத்தையும், இயல்பானே பரந்தாமத்தையும் குறித்தது. வாய்மையென்பது - உண்மை, வன்மை, சொல் என்னும் பலபொருள்தருஞ்சொல். இங்கு வன்மையாவது: சத்திய சங்கற்பனுகிய வெம்பெருமானது குளிர்ந்த திருவுள்ளத்திலே சீற்றம்பிறவாதபடிசெய்கின்ற சாமர்த்தியாதிசயம். சொல்லாவது: சுதந்திரனுய்ச் சேதநர்களை அவரவர்கள்செய்துள்ள அபராதங்களுக்குத் தக்கபடி தண்டிக்கப் பிரயத்தனப்படுகிற சர்வேச்சுரன் அவ்வாறு செய்யாது பொறுத்தருளும்படிசெய்யவல்ல இன்சொல். இதனைச் சாத்வவாதமென்ப. வெப்பு என்பதற்கு இங்கு வெம்மை, வருத்தம், கோபம் என்று பொருள்கொள்ளப்பட்டது. வெயில் முதலியவைகள் நெருப்பு, மின்னல், விடம் என்பனவாம். தாபத்திரயமாவது: ஆத்யாத்மிகம், ஆதிதெய்விகம், ஆதிபௌதிகமென்பனவாம். இவற்றுள் முதலது: தன்னுல்வருது; அதாவது.- பலவகையுடற்பிணிகளாலும், மனவருத்தத்தாலும் வருவனவாம். இரண்டாவது: இடி மின்னல் முதலியவற்றுல் வருவனவாம். மூன்றுவது: புலி, கரடி, பாம்பு முதலிய துஷ்டஜந்துக்களால் வருவனவாம். பூமண்டலத்துக்குண்டாகும் வெப்பங்களெல்லாம் சந்திரனுடைய அமுதகிரணங்களாலே தணிகின்றனவென்பதை, "மண்டலம்பயி லுரகர்பே ருயிர்ப்பினுன் மயங்கி, மண்டலம்பொர வருந்திய பெருந்துயர் மாற, மண்டலந்தனை நிழலெனு மரபினுற் றனது, மண்டலம்பொழி யமுதின்மெய் குளிரவே வைத்தோன்" என்னும் பாரதப்பாடலுணர்த்த லோர்க. மண்டுவெப்பென்றதற்கு, சாபராதிகள்விடயத்தில் மிகுகின்ற கோபமென்று பொருள்கொள்ளலாயிற்று. பாவை - உவமையாகுபெயர். திருப்பாற்கடலிற் ருேன்றியதனுலே சந்திரனைப்பெரியபிராட்டியாருக்குச் சகோதரனுகச்சொல்வதுபோலே சிலேடையினுலே சந்திரனுகச்சொல்லப்படுகிறநாய்ச்சியாரைச் சகோதரியாகச் சொல்லியிருக்கிறது. ஞாதி, பந்து, சோதர சப்தங்களை வடநூலார் உவமவுருபாகக் கொண்டாள்வர்.

இப்பாட்டு, நெடிலும், ஒற்றடுத்தும் அடாமலும் வரும் வல்லினமும் வந்து நெகிழிசையின்றியிருத்தலாற் செறிவு என்னுங் குணவணியாகும்.

இதனிலக்கணம் முதற்பாட்டிலே சொல்லப்பட்டிருக்கிறது. நெகிழிசையாவது: வல்லினம்வராது மற்றையஇனங்கள் பெரும்பாலும் வருதலையுடையது.

அணி:—நிலவுலகு, அன்னே, நின்னே: இவை வழியெதுகை யென்னும் சொல்லணியாம். இப்பாட்டுச் சிலேடையுவமையணி; "இருபொருட் கொப்புமை யியம்புவ துவமை" என்பர் சந்திராலோகநூலார். "அற்புதஞ் சிலேடை யதிசயம் விரோதம், ஒப்புமைக் கூட்டந் தற்குறிப் பேற்றம், விலக்கே யேதுவென வேண்டவும் படுமே" எனத் தண்டியாசிரியர்கூறியபடி இது சிலேடையுவமையெனப்பட்டது. (கூ)

10. கோதைநின் கோதை விரைகமழ் நலனுர்
கோதையைக் கொண்டுபோய்க் கொடுத்துத்
தாதையோ வெனினின் றுதிசிறி தான்வ
சமாமிறை யவனிட மிருந்து
காதினுக் கமுதாந் துதிபல நூறு
களாலுமுன் னம்மடை யாத
மேதகும் பதவிக் குத்தகு தியதாம்
வியனருண் மேயின னன்றே.

பதவுரை:—கோதை - நாய்ச்சியாரே!; நின்கோதை விரைகமழ்நலனுர் கோதையைக்கொண்டுபோய்க்கொடுத்து – தேவரீரது திருக்குழற்கற்றையின் பரிமளம் கமழ்தலாலே இன்பம்பொருந்திய திருமாலையைக்கொண்டுபோய்ச் சமர்ப்பித்து; தாதையோவெனில் - தேவரீர் திருத்தமப்பனுரோவென்றால்; நின்துதிசிறிதான் - தேவரீருடையதோத்திரலேசத்தினலே; வசமாம் இறையவனிடமிருந்து - வசியனுகிய பகவானினின்றும்; காதினுக்கு அமுதாம் - கர்ணமிருதமாயிருக்கிற; துதி பலநூறுகளாலும்-அநேகசதந்தோத்திரங்களாலும்; முன்னம் அடையாத - முன்புபெறுத; மேதகும்பதவிக்குத்தகுதியதாம் - மகத்தரபதத்துக் கநுகுணமாகிய; வியனருள் - மேலான அநுக்கிரகத்தை; மேயினன் - அடைந்தனன்; அன்றே - அல்லவா எ-று. அன்று ஏ அசைகளுமாகும்

கருத்து:—தேவரீருடைய திருத்தமப்பனுருங்கூட உமது தோத்திரலேசத்தாலே சர்வசுவாதீனனுயிருக்கிற பகவானிடத்திலிருந்து கர்ணமிர்தமாயிருக்கிற துதிசதங்களாலேயும் முன்படையப்பெறுததாயிருக்கிற பெரியாழ்வாரென்னும் பதவிக்குத் தகுதியாகிய பிரசாதத்தைத் தேவரீர் திருக்குழற்கற்றையிற் சூட்டி வாசமூட்டிக்கொடுத்த திருமாலையைக்கொண்டு

போய்ச்சமர்ப்பித்துப் பெற்றனரென்றால் அடியேனையனையார் யாருடைய புருஷகாரபலத்தாலே உஜ்ஜீவிப்பார்கள். இது தேவரீருக்குத் தெரியாத விடயமன்றே! என்பது.

விசேடக்குறிப்பு:—கோதை: அண்மைவிளி. நின் துதி - நின்விடயமான துதி; நின்னாற்செய்யப்பட்டதுதியென்றுமாம். நலனுர்தல் - திருவுள்ளத்து இரம்மியமாயிருத்தல். கோதைமூன்றில் முதலது திருநாமம், இரண்டாவது திருக்குழற்கற்றை, மூன்றாவது திருமாலை. நின் என்பதைத் தாதையோடுங் கூட்டிப் பொருள்கொள்ளப்பட்டது. இறையவன் - துட்டநிக்கிரக சிட்ட பரிபாலனஞ்செய்பவன். மேதகும் பதவி - பகவத்விடயத்தில் பொங்கு பரிவாலே வந்த பெரியாழ்வாரென்னும் பதவி. தகுதியாம் வியனருள் - அநுகுணமான பிரசாதம்; அதாவது: நித்யசூரிகளும்வந்திக்கத்தக்க மாமனாராக் கொள்கை; மேதகுபதவியாவது: உண்டிராக்கிடக்கும்போது முடலுக்கே கரைந்துநையும் சம்சாரிசேதனரைக்காட்டிலும், செய்தவமுடைய இருடிகள் உயர்ந்தவராவர்; அத்தவமகிமையாலே ஆன்மஞானம் கைவந்த பரம விருடியர் நனியுயர்ந்தவராவர்; அவர்களைக்காட்டிலும் மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார்கள் நனிதவவுயர்ந்தவராவர்; அவர்களைக்காட்டிலும் பொங்கும்பரிவாலே தன்நன்மையைப்பேணாதே எம்பெருமானுக்குப் பல்லாண்டுபாடிய பெரியாழ்வார் உயர்வறவுயர்ந்தவராவர்;—இதுவேயாம்.

இப்பாட்டு, மூவினமும் விரவிவரத்தொடுக்கப்பட்டிருத்தலிற் சமநிலையென்னுங் குணவணியாம். இதனிலக்கணம் நாலாவதுபாட்டில் எழுதப் பட்டிருக்கிறது. (௧௦)

11. தெக்கண திக்கும் பக்குவ மாநற்
செய்கையா லேயுநின் பிறப்பால்
திக்கனைத் தினுக்கு முத்தர மாகிச்
சிறந்தததத் திசைதனி லேயே
மிக்கசீர்க் கோதா யறிதுயி லமரும்
வியனரங் கமன்னவ னாலும்
தக்கதா கியநன் மதிப்பொடு கடைக்கண்
சந்ததம் வைத்திடப் படுமால்.

பதவுரை:—மிக்கசீர்க்கோதாய் - (தேவிமாராவார் பலரினும்) மேலான சிறப்புவாய்ந்த சூடிக்கொடுத்தருள்நாய்ச்சியாரே!; தெக்கணதிக்கும் - தென் திசையும்; பக்குவம் ஆம் நற் செய்கையால் - பலோன்முகமான புண்ணியத்தாலே; ஏயும் - லபித்ததாகிய. நின்பிறப்பால்-தேவரீர் திருவவதாரத்தாலே;

திக்கனைத்தினுக்கும் - திசைகளெல்லாவற்றிற்கும்; உத்தரமாகி - (1) வடதிசையாகி; (2) மேலானதாகி; சிறந்தது - சிறப்புற்றது; அத் திசைதனிலேயே - அந்தத் தென்திசையிலேதானே; அறிதுயிலமரும் - யோகநித்திரை செய்தருளுகின்ற; வியன் - பெருமைபெற்ற; அரங்கமன்னவனாலும் - ஸ்ரீரங்கராஜனாலேயும்; தக்கது ஆகிய நன்மதிப்பொடு - தகுதியான வெகுமானத்தோடு; சந்ததம் - எப்பொழுதும்; கடைக்கண் வைத்திடப்படும் - கடாக்ஷிக்கப்படும். எ-று. ஆல் - அசை.

கருத்து:–தேவரீர் திருவவதரித்தருளுவதற் கிடமாயிருந்ததொரு சம்பந்தத்தாலே அசேதநமான தெற்குத்திக்கும் சர்வோத்தரமாக ஆகியதுமன்றி அறிதுயிலமர்ந்தருளுகின்ற அழகியமணவாளனது கடாக்ஷவீக்ஷணத்திற்குப் பாத்திரமாக ஆகுமேயானால் தேவரீர் திருவடிசம்பந்தம்பெற்ற அடியேன் சர்வோத்கிருஷ்டனாகி, பகவத்கடாக்ஷவீக்ஷணத்திற்கும் யோக்கியனாக ஆவேனென்பதற் கென்னகுறை (ஒன்றுமில்லை) என்பதாம்.

விசேடக்குறிப்பு:—தெக்கணம் என்பது தட்சிணாவென்னும் வடசொல்லின் றிரிவு. பக்குவமாம் நற்செய்கையென்றது பலோன்முகமான புண்ணியவிசேடத்தை. இங்குப் பக்குவமா நற்செய்கையென்றது பிராட்டியாருடைய நிர்ஹேதுக பரமகிருபையை. நின்பிறப்பால் என்பதற்குத் தேவரீர் திருவவதரித்தருளுவதற்கிடமாயிருத்தலாகிய ஒரு சம்பந்தமாத்திரத்தாலேயென்று பொருள் விரிக்கப்பட்டது. உத்தரம் - வடதிசை; மேன்மையுமாம். மிக்கசீர்க்கோதாய் என்றது, தன்னடியார்களைச் சர்வேசுவரனனுக்கிரகத்திற் கருகராம்படி செய்தருளுவதில் புருஷகாரபூதையான பெரியபிராட்டியாரைக் காட்டிலும் சிறப்புவாய்ந்தவராதலானே.

இப்பாட்டு,வல்லினவெழுத்துக்களேமிகுந் திறுக்கமுடையதாக இருத்தலாலும், பல வழியெதுகையமைந்திருத்தலாலும் முதற்பாட்டைப்போலச் செறிவு என்னுங் குணவணியதாம். வெளிப்படையாகத்தோன்றும்பொருளேயன்றிக் குறிப்பினாலும் ஒருபொருடோன்றுதலாலே ஆறுவதுபாட்டைப் போல உதாரமென்னுங் குணவணியையுடையதுமாம். இவற்றினிலக்கணம் முன்னே சொல்லப்பட்டன.

அணி:-தெக்கணதிக்கும்பக்குவம்: வழியெதுகையென்னுஞ்சொல்லணி. தெக்கணதிக்குத் திக்கனைத்தினுக்கு முத்தரமாகிச் சிறந்ததென்னுமிடத்து

மூரண்விளைந்தழிவணியாம்; வெளிப்படையாகத்தோன்றும் பொருளன்றிக் குறிப்பினால் வேறொருபொருள் சிறப்புப்படத் தோன்றுதலாலே இப்பாட்டு, தொடர்நிலைச்செய்யுட் பொருட்பேறணியாம். தெக்கணதிக்கு உத்தரமாகிச் சிறந்ததென்பதையும், அத்திக்கு அறிதுயிலமர்ந்தருள்கின்ற அரங்கநாயகனாலும் அநவரதமும் பகுமானபூர்வகமாகக் கடாக்ஷிக்கப்படுகிறதென்பதையும் சாதிக்கிறதற்கு நாய்ச்சியாரது திருவவதாரரூபபதார்த்தம் ஹேதுவாக்கப்பட்டிருத்தலாலே இப்பாட்டுப் பதப்பொருட்செய்யுட் தூறியணியாம். இவற்றினிலக்கணமெல்லாம் முன்னமே சொல்லப்பட்டன. அறிதுயிலமர்ந்தருளும் அரங்கமன்னனாலும் சந்ததம் கடைக்கண்வைக்கப்படுமென்னுமிடத்துத் துயிலமர்ந்தருளுதலாகிய தடையுளதாகவும் கடாக்ஷிப்பதாகிய காரியம்பிறத்தல் சொல்லப்பட்டிருத்தலால் மூன்றுவது பிறிதாராய்ச்சியணியுமாம். இவ்வாறு பல அலங்காரங்களமைந்திருத்தலாலே சேர்வையணியுமாம்.

12. கோதையே கோதா வரிநின்றன் பெயரின்
கூட்டத்தி னலிந்த வுலகைப்
போதவும் புனலாற் புனிதம தாகப்
புரிந்திடும் புகலுமெந் நதியில்
மேதகுங் கங்கை யாதிய வாகும்
வியன்னதி பலவும்வந் துவந்தே
ஓதிடும் பருவத் துறைதலா லென்றும்
முயர்புண்ய நதிகளா யினவால்.

பதவுரை:—கோதையே - நாய்ச்சியாரே; கோதாவரி - கோதாவரியென்னும் நதியானது. நின்றன்பெயரின் கூட்டத்தினால் - தேவரீருடைய திருநாமசம்பந்தமாத்திரத்தாலே; இந்தவுலகை - இச்சகத்தை; போதவும் - மிகவும்; புனலால் - தன்னுடைய தீர்த்தத்தினாலே; புனிதமது ஆகப் புரிந்திடும் - பரிசுத்தமாகும்படிசெய்யும்; புகலும் எந்நதியில் - சொல்லப்பட்டயாதொரு கோதாவரிநதியில்; மேதகும் - மேன்மையாகிய; கங்கையாதியவாகும் வியன் நதிபலவும் - பாகீரதிமுதலியவைகளாகிய மகிமைவாய்ந்த நதிகள் பலவும்; ஓதிடும் பருவத்து - மேளாவென்று சொல்லப்படும் சமயங்கடோறும்; வந்துவந்து-சேர்ந்துசேர்ந்து; (வந்து உவந்து என்றுமாம்); உறைதலால் - தங்குதலாலே; என்றும் - எக்காலமும்; உயர் புண்ணிய நதிகளாயின - (தம்மில் வந்து நீராடுபவர்களையெல்லாம்) புனிதவான்களாகச் செய்யும் மேலான நதிகளாயின. எ-று. ஆல் அசை.

கருத்து:—கோதாய்! தேவரீர் திருநாமசம்பந்தமாத்திரத்தாலேயே கோதாவரியென்னும் நதியானது தன்னுடைய தீர்த்தத்தினாலே இம்மண்ணுலகத்தைப் பரமபாவனமாகச்செய்கின்றது. இதுமாத்திரமோ! கங்கை யமுனை முதலிய மகாநதிகளும் யாதொரு கோதாவரிநதியில் பருவகாலங்கடோறும் வந்துவந்து தங்குதலாலேயே தம்மில்வந்து நீராடுகின்றவர்களை யெல்லாம் நெடுங்காலமாகப் புனிதவான்களாகச் செய்யவல்லமையுடையவைகளாயினவெனில், தேவரீர் திருவடிசம்பந்தம்பெற்றிருப்பதாலேயே அடியேன் மிகவும் இவ்வுலகத்துள்ளார்க் குபகாரியாயிருக்கிறேன் என்பதற்கும் அடியேனை யடுத்தவர்களும் அவ்வாறு ஆயிருக்கிறார்களென்பதற்கும் ஆட்சேபமென்னையென்பதாம்.

விசேடக்குறிப்பு:—கோதாவரிநதிக்கும் கோதையென்னும் பெயருண்மை காண்க. கோதையென்னும் தேவரீர் திருநாமமாகிய இரண்டு அக்கரங்களைக் கோதாவரிநதி முதலிற் கொண்டிருக்கிற ஒரு சம்பந்தமாத்திரையானே யென்றுஞ் சொல்லலாம்.

பருவமாவது: பன்னிரண்டுவருடத்துக்கு ஒருதடவை, கும்பகோணத்திற் கொண்டாடப்படும் மகாமகம்போலப் பஞ்சவடிக்கும் நாசிகைக்கும் மத்தியிலுள்ள கோதாவரிநதியில் ஆடிமீ முதல் ஒருவருடம் மேளாவென்னும் உற்சவங் கொண்டாடப்பட்டுவருகிறது (அந்தப்பருவகாலங்களில் கங்கைமுதலிய நதிகளெல்லாம் அந்தவிடத்திற் போயிருந்து பரிசுத்திபெறுகின்றனவென்பது புராணவரலாறு); இந்த உற்சவசமயமாம். வெவ்வேறிடங்களில் வெவ்வேறுகாலங்களில் மேளாவென்னும் உற்சவம் நடந்துகொண்டுவருகிறது.

மேற்கூறியபடி குறிப்பினால் மற்றொருபொருடோன்றுதலாலே இப்பாட்டு, முற்பாட்டுப்போல உதாரமென்னுங் குணவணியதாம். இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

அணி:—இப்பாட்டும் முற்கூறியபடி அருத்தாபத்தியாற் பொருடோன்றுதலாலே தொடர்நிலைச்செய்யுட் பொருட்பேறணியாம். கோதாவரிக்கு இயல்பாகவே யுளதாகிய மகிமைக்குக் கோதாவென்னும் நாமசம்பந்தத்தை யேதுவாகச் சம்பாவித்தலாலே ஏதுத்தற்குறிப்பேற்றவணியுமாம். இவற்றின் இலக்கணங்கள் முன்னே சொல்லப்பட்டன.

(கஉ)

13. மல்லிநா டாளும் மெல்லிய லினக்கு
வலியரா வயிற்றுயில் பயில்வோன்
சொல்லுமா சுகமா விரதமே யவன்
றொல்லையம் புமான்சுயம் வரத்தில்
வல்லவ னுனெ னெங்ஙனென் றென்றும்
மருவுதோ ழியர்சொலு நகைப்புப்
புல்லிய மொழிகள் நின்பெருங் காதல்
போதவுந் தகுமெனல் புகலும்.

பதவுரை:— மல்லிநாடு ஆளும் மெல்லியல் - திருமல்லிவளநாட்டைப் பரிபாலித்தருளும் மிருதுவான சுபாவமுடையீர்; நினக்கு - உமக்கு; வலியராவயில் துயில்பயில்வோன் - வலிய பாம்பின்மீது எப்பொழுதும் நித்திரை செய்துகொண்டிருப்பவன்; எங்ஙன்-எப்படி; சுயம்வரத்தில்-நீயாகவே வரித்துக்கொள்ளுங் கல்யாணத்திலே; வல்லவன் ஆனுன் - பதியாக ஆயினுன்; சொல்லும் - சிறப்பித்துச் சொல்லப்படும்; ஆசுகம் ஆ - பட்சியாகிய; இரதம் மேயவன் - தேரையுடையவன் (வாகனத்தையுடையவன்); [ஏயவன் என்று பிரித்தாலும் பொருள் இதுவே]; எங்ஙனம் சுயம்வரத்தில் வல்லவனுனுன்; தொல்லையம்புமான்-புராணபுருஷன் (மிகவும் வயோதிகன்), எங்ஙனம் சுயம் வரத்தில் வல்லவனுனுன்; என்று என்றும் மருவுதோழியர்-என எக்காலமும் பிரியாத உயிர்த்தோழியர்கள்; சொலும் - சொல்லுகின்ற; நகைப்புப்புல்லிய மொழிகள் - பரிகாசத்தைப்பொருந்திய வார்த்தைகள்; நின் பெருங்காதல் - தேவரீருடைய பிரணயம்; போதவும் - மிகவும்; தகுமெனல் - உசிதமான தென்பதை; புகலும் - சொல்லுவனவாகும் எ-று.

கருத்து:—சரீரசௌக்கியங்களையெல்லாம் அனுபவித்தற்குத் தகுதியான சகல சம்பத்துக்களையும் இளமைப்பருவத்தையுமுடைய உனக்கு அதற்குநேரே விரோதமான வறுமையைக்குறிக்கும் பாம்பைப் படுக்கையாகவுடையவன், பட்சியை வாகனமாகவுடையவன், முதுமைப்பருவத்தையுடையவன் நீயே தேடிக்கொண்ட மணவாளனுகிய தெவ்வாறு என்று தோழியர்சொல்லும் பரிகாசவார்த்தைகள், அநந்தசாயித்வமும், கருடவாகனத்துவமுமாகிய சர்வாதிகத்வலட்சணத்தையும், அகில ஜகத் ஜன்மாதி காரணத்வத்தையுமுடைய திருத்தக்கசெல்வரான திருவரங்கமன்னனுரை அழகியமணவாளனுக வரித்த நின் பெருங்காதல் மிகவும் தகுதியானதே யென்று தோத்திரமாக அமைந்தது என்பது. இங்ஙனேயன்றிப் பிறப்பே

காரணமாகப் பெரும்பகைமைபெற்றிருக்கிற பாம்பையும் கருடனையும் பகையில்லாமல் ஓரிடத்தில் நேசமாக வாழும்படி அவைகளை அடிமைகொண்டருளும் அகடிதகடனசாமர்த்தியத்தையும், அகிலபுவனஜன்மாதிகளுக்கு அகிலகாரணமாகவிருக்கையும் உடைய திருவரங்கமன்னனாரை நினக்குச் சுயம்வரபதியாகக்கொண்ட நின் பெருங்காதல் மிகுதியும் தகுதியானதேயென்று ஸ்தோத்திரமாக அமைந்ததென்பதுமாம்.

விசேடக்குறிப்பு:—மல்லிநாடு என்றது வராககேஷத்திரத்தை. இதிலுள்ள வடேச்சுரபுரம் என்னும் புராதனநகரத்தை ஸ்ரீவில்லிபுத்தூரென்று புதுப்பெயரெய்தும்படி ஜீர்ணோத்தாரணஞ்செய்த வில்லியென்னும் வேடராஜனுடைய தாயாகிய மல்லியென்பவளாலாளப்பட்டதாலே இது மல்லிநாடாயிற்று. ஆளும் என்றதினால் ஆளுகைக்குரிய ஞானசக்தியாதிகளாகிய ஆத்மகுணங்களும் மெல்லியலென்றதனாலே, சௌகுமார்யம், சௌந்தர்யம் முதலிய விக்கிரககுணங்களும் சொல்லப்பட்டன. பரிகாசமொழிகளாகக் கொள்ளும்போது முதலாவதற்கு, ஒருவரும் அருகிற்சென்று கூடுதற்குங் கூடாததாயிருக்கிற கொடிய விடத்தோடு கோபத்தையுங்கொண்டு சோளிழைக்கும்வன்மையையுடைய பையுடைநாகத்தைப் படுக்கையாகக்கொண்டதன்மேலே எப்பொழுதும் படுத்துறங்குகின்றவனென்றும், இரண்டாவதற்கு, மெல்லிய சிறைகளையும் கடிய வேகத்தையும் உடையதாய் ஆகாயத்திலே அலைந்துகொண்டுதிரிகிற ஒரு பட்சியைச் சிறந்தவாகனமாகவுடையவனென்றும், மூன்றாவதற்கு அளவிடமுடியாத வயதினையுடைய கிழவனென்றும் பொருள்கொள்க. ஸ்தோத்திரமாகக்கொள்ளும்போது முதலதற்கு எவ்விடத்திலும், எக்காலத்திலும், எல்லாக் குற்றேவல்களையும் அததற்குரிய வுருவமுடையனாய்ச் செய் தானந்திக்கும் வல்லமையையுடைய அரவரசப்பெருஞ்சோதியென்னும் வெண்மை, மென்மை, மன்றல், வனப்பு, தண்மையென்னும் ஐந்திலக்கணங்களோடுங்கூடிய அகன்றுயர்ந்துள்ள பரியங்கத்திலே பள்ளிகொண்டருள்பவனென்றும், இரண்டாவதற்கு அநுகூலர்களை ரக்ஷித்தருளுகிறதற்கும், பிரதிகூலர்களைச் சிக்ஷித்தருள்கிறதற்கும், சகாயமாய்த்தேசகாலோசிதமான சகலகைங்கர்யங்களையும் செய்பவரும், சௌர்யவீர்யாதி பராக்கிரமமுடையவரும், நினைத்தமாத்திரத்திலே நினைத்தவிடங்களுக்கெல்லாம் சென்று மீளுதல் முதலிய ஊர்தியிலக்கணங்களெல்லாம் ஒருங்கே அமையப்பெற்றவருமாகிய பெரியதிருவடியை வாகனமாகவுடையவனென்றும், மூன்றாவதற்கு ஆக்கலளித்தலாதியாகிய சகலகாரியங்களுக்கும் முதற்காரணம் துணைக்காரணம் முதலிய அகிலகாரணங்களுமாய், ஆதிமத்யாந்தரகிதனாய், நித்யயௌவனனாயிருப்பவனென்றும் பொருள்கொள்க.

பரிகாசமொழிகளாகக்கொள்ளும்போது முற்கூறியபடியன்றிச் செம்பொருளாகவும் அவ்விடயம் விளங்குவது காண்க. அது பின்வருமாறு:—

முதலாவதற்கு வலியர் ஆவயின் துயில்பயில்வோன் எனக் கண்ணழித்து, கோபிகைகள் வசிக்கும் அந்த ஆய்ப்பாடியில் அவர்களின்பத்தைவிரும்பி அவர்கள்தயையை யெதிர்பார்த்து அவர்கள்கடைத்தலையிற் காத்துக்கொண்டிருப்பவனென்றும், [வல்லியர் - ஆய்ச்சியர் இடைக்குறை. ஆவயின் - அவ்விடம்.] இரண்டாவதற்கு, சொல்லும், மாசு, உக, மா, விரதம், மேயவன் - (ஏயவன்)-எனப் பதம் பிரித்து இழிவாகச்சொல்லப்படுங் குற்றங்களெல்லாம் ஒழிய மேலான நோன்பினை மேற்கொண்டிருப்பவனென்றும், மூன்றாவதற்குத் தொல்லை அம்புமான் எனப் பதச்சேதம்பண்ணிக் கடுந்துன்பத்தை விளைக்கும் வில்லோடுகூடிய கணைகளைக் கையிற்கொண்டுள்ளவன், (கணையென்பது வில்லுக்கும் உபலக்ஷணம்.) என்றும் பொருள்படுதலாம். இப்படிப் பொருள்கொண்டாலும் தோத்திரமாகக்கொள்ளும்போது முற்கூறியவாறே கூறுக. இம் மூன்றுவிசேடணங்களும் பகவத்சொரூப நிருபணத்துக்குத் தக்க ஹேதுக்களாயிருத்தலாலே நின்பெருங்காதல் போதவும் தகுதியாகுமென்று புகழப்பட்டதாயிற்று. என்றும் மருவு தோழியரென்றது எக்காலத்தும் இணைபிரியாத பிரிய சகிகளை.

இப்பாட்டு, முற்பாட்டுப்போலே குறிப்பான் மற்றொருபொருள் கொடுப்பதினாலே உதாரமென்னுங் குணவணியேயாம். அன்றியும், செவிக்கினிய தாய்ச்செல்லும் மெல்லிய ஓசை யமையும்படி மென்மையானவெழுத்துக்கள் பலவும், அவற்றினிடையிடையே வன்மையானவெழுத்துக்கள் சிலவுமாக அமைந்திருத்தலால் ஒழுகிசையுமாம். இதனை வடநூலார் சுகுமாரதையென்பர். இவற்றினிலக்கணங்களும் முன்னமே சொல்லப்பட்டன.

அணி:—பரிகாசத்துக்கு ஏதுவாகிய பாம்புப்படுக்கையையுடையவன், பட்சிவாகனத்தையுடையவன், கிழத்தனத்தையுடையவனென்ற நிந்தனைமொழிகளாலே சர்வாதிகத்வசூசகமாயிருக்கிற அநந்தசாயித்துவமும், கருடவாகனத்துவமும், அகில ஜகத்காரணத்துவமுமுடைய உயர்வறவுயர்ந்தவனென்ற புகழ்ச்சி அப் பழிக்கப்பட்டபொருளிடத்தே தோன்றுதலாலே வஞ்சப்புகழ்ச்சியணியாம். "பழிப்பிற் புகழ்ச்சி புகழ்ச்சியிற் பழிப்புப், புகழ்ச்சியிற் புகழ்ச்சி யெனமுப் பாலாப்,போந்தது வஞ்சப் புகழ்ச்சி யாகும்" என்பர் சந்திராலோகநூலார். இதனை வடநூலார் வியாஜஸ்துதியலங்காரமென்பர். மாறனலங்காரநூலார் நிந்தாஸ்துதியலங்காரமென்று "இகழ்வது போன்ற வியற்கையின் வண்புகழ் - நிகழ்தர வுரைப்பது நிந்தாத் துதியே" என்று இலக்கணங்கூறுவர். (கஅ)

14. இறைவியே சிறைவண் டினந்தின முன்ற
னெழிற்குழல் புனைநனை மலரால்
நிறைதரு நறையேய் முடியினை யுடைய
நின்னிறை யின்னிற மருவி
உறையென நறைபெய் வைசயந் தியையு
மொருவிமீ தெழும்பொழு தொன்றிச்
சிறைகளி னறையான் மௌலிமேற் சுழன்று
செய்திடும் பிச்சநன் னிழலே.

பதவுரை:—இறைவியே - சர்வலோகநாயகியாரே; தினம் - ஒவ்வொரு நாளும்; உன்றன் எழில் குழல் புனை நனை மலரால் - தேவரீர் தேங்கோதையிற் சூடிக்கொடுத்த பூங்கோதையினாலே; நிறைதரு நறை எய் முடியினையுடைய - பரிபூர்ணமான பரிமளத்தைப்பொருந்திய மௌலியோடுகூடிய; நின் இறையின் நிறம் மருவி - தேவரீருடைய அழகியமணவாளனது திருமார்பைச் சேர்ந்து; உறையென நறைபெய் வைசயந்தியையும் ஒருவி-மழைபோல மகரந்தத்தைப்பொழிகின்ற வனமாலையையும்விட்டு; சிறைவண்டினம் - இறகுகளையுடைய வண்டின்கூட்டங்கள்; மீதெழும்பொழுது - (அவ் வழகியமணவாளனது திருமுடியை மருவிய திவ்விய பரிமளத்தை யங்கடைந் தனுபவிக்க விரும்பி யெமக்கென்று) மேலே கிளம்புங்காலையில்; ஒன்றி - ஒன்றோடொன்றுராய்ந்து; சிறைகளின் அறையால் - சிறைகளினெருக்கடியினாலே; மௌலிமேற் சுழன்று - (திருமுடியிலிறங்கி மொய்க்கவும் முடியாமல் விலகிப் போகவும் முடியாமல்) திருமுடியின் மேற்புறத்தே சுற்றிக்கொண்டேயிருத்தலாலே; பிச்சம் நன்னிழல் செய்திடும் - மயிலினிறகுகளாற்செய்த குடையினது காந்திபோலுங் காந்தியைச் செய்யாநிற்கும் எ - று. ஏ - அசை.

கருத்து:—நாய்ச்சியார் சூடிக்கொடுத்த மலர்மாலைகள் மார்பில் எப்பொழுதும் அணிந்துகொண்டிருக்கும் வனமாலையினும் நனிதவவுயர்ந்த நறுமணமுடையதென்பது. நாய்ச்சியார் திருக்குழற்கற்றையிற் சூட்டி நறுமணமூட்டிக்கொடுத்த மலர்மாலையை அன்போடு வன்னந்திருத்தலாலே வனமாலையைக்காட்டிலும் மேலான திவ்விய பரிமளத்தையுடைய திருவரங்கமன்னனாரது திருமுடியையடைந்து அதனை நுகர்ந்து ஆநந்திக்கவிரும்பி அவ்வனமாலையையும் விட்டு எமக்கென்று ஒருமிக்க மேலே கிளம்பிய மதுகரநிகரங்கள் ஒன்றுக்கொன்று சிறகுகளி னெருக்கடியினாலே திருமுடியை யடையவுமுடியாமல், நறுமண நுகருநசையாலே விலகி வேறிடம்புகவுமுடியாமல் அத்திருமுடியின்மேல் இடைவிடாமல் வட்டமிட்டுச் சுற்றிக்கொண்டிருத்தலாலே அவ்வாறு சுழன்றுகொண்டிருத்தல் அவ்வழகியமணவாளனது திருமுடிக்குப் பீலிக்குடைபோன்றிருக்கின்றதென்பதாம்.

விசேடக்குறிப்பு:—நனை-தேன். "நனையென் பதுவே மதமுங் கள்ளும், பூமொட்டெனவும் புகலுமுப் பெயரே" என்பது அகராதிச்சூத்திரம். நறை - வாசனை, தேன். "நறையென்பதுமது நறுநாற்றமுமாம்" என்பதும் அது. பிச்சம் - பீலிக்குடை. "பிச்சமாண் மயிரும் பீலிக் குடையும்வெண் குடையு மாகும்" மண்டலநிகண்டு. உறை - மழை. அறை - அடி. இங்கு நெருக்கத் தாலே வண்டுகள் ஒன்றுக்கொன்று சிறகுகளாலடித்துக்கொள்ளுதலைக் குறிக் கின்றது. பொருளமைதிக்கேற்றவாறு பதவுரையில் வருவித்துரைக்கப்பட் டனவெல்லாம் இசையெச்சமென்க. "அதிகாரத்தா லவாய்நிலைதன்னால், ஓர்சொற்பொருளை யுறுத்தற்பொருட்டால் - இன்னும்பலபல வேதுவினாலும், மொழிவரு வித்து முடித்தனர் கொளலே" என்பர் இலக்கணக்கொத்துடை யார்.

இப்பாட்டு மூவினமும் விரவத் தொடுக்கப்பட்டிருத்தலாலே சமநிலை யென்னுங் குணவணியின்பாற்படும். இதனிலக்கணமும் வடமொழிப்பெயரும் முன்னே சொல்லப்பட்டன. இதனைப் பாஞ்சாலநெறியார் அடிகடோறும் வழியெதுகையென்னும் அநுப்பிராசம் பெரும்பாலும் வந்திருத்தலாலே சொல்லின்பமென்னுங் குணவணியென்பர்.

அணி:—அழகியமணவாளன் திருமுடிக்குமேலே மண்டலாகாரமாக வண்டினங்கள் சுழன்றுகொண்டிருத்தலாகிய உபமேயத்திலே பீலிக்குடை யாகிய உபமானத்தின்றன்மை ஆரோபிக்கப்பட்டிருத்தலால், இப்பாட்டு பதப்பொருட்காட்சியணியாம். "ஒன்ற னியன்மற் றொன்றிடை யேற்றிடல், பதப்பொரு ளென்னப் பாத்தனர் புலவர்" என்பர் சந்திராலோகநூலார். வடநூலார் பதார்த்தவிருத்திநிதர்சனாலங்காரமென்பர். (கச)

15\. நறுமணம் புணர்ந்து நாளுநெஞ் சமர்ந்து
நயப்புறு செம்மை மேவுற்றும்
உறுவதற் குரிய குணமமைந் திருந்து
மோவரும் மெல்லியல் வாய்ந்தும்
மறுவறு வைச யந்திதென் னரங்க
மன்னனார் மௌலிசேர் நின்னோர்
பெறுகுழற் கோதை யாற்றிருக் கோதாய்
பெரிதுந்தாழ்த் திடப்படு மன்றே.

பதவுரை:—கோதாய் - கோதைசூடிக்கொடுத்தருள்நாய்ச்சியாரே!; தென்னரங்கமன்னனுர் மௌலிசேர் - அழகிய அரங்கநாயகரது திருமுடியையடைந்திருக்கிற; நின் ஏர்பெறு குழற் கோதையால் - தேவரீருடைய பூங்குழற்கோதையினலே; மறு அறு வைசயந்தி-குற்றமற்ற வனமாலிகையென்னும் பூங்கோதை; நறு மணம் புணர்ந்தும் - (1) நன்மையான வதுவையயர்ந்திருந்தும்; (2) நல்ல வாசனையையமைந்திருந்தும்; நாளும் - எப்பொழுதும்; நெஞ்சமர்ந்தும் - (1) எம்பெருமானது இதயத்துப் பொருந்தியிருந்தும்; (2) திருமார்பிலமைந்திருந்தும்; நயப்புறு - விரும்புதற்குக்காரணமாகிய; செம்மை மேவுற்றும் - (1) நல்லொழுக்கத்தைப் பெற்றிருந்தும்; (2) செவ்விய தளங்களை யியைந்திருந்தும்; உறுவதற்குரிய - பொருந்தத்தகுதியான; குணம் அமைந்திருந்தும்; (1) நற்குணங்களெல்லாம் அமைந்திருந்தும்; (2) நாரோடு கூடியிருந்தும்; ஒவு அரும் - ஒருகாலத்தும் மாருத; மெல்லியல் வாய்ந்தும் - (1) சௌகுமார்யத்தைப் பெற்றிருந்தும்; (2) மென்மைத்தன்மையை மேவியிருந்தும்; பெரிதுந் தாழ்த்திடப்படும் - (1) மிகவுங் கீழாகச்செய்யப்படும்; (2) மிகவுந்தாழ்வாகச்செய்யப்படுகின்றது; அன்றே - அல்லவா எ-று.

கருத்து:—இயல்பாகவே குற்றமற்ற வனமாலிகையென்னுந் தேங்கோதை நறுமணம்புணர்தன்முதலிய நற்குணங்களெல்லாம் நண்ணியிருந்தும் திருவரங்கமன்னனுரது திருமுடியையடைந்துள்ள தேவரீர்தேங்குழற்பூங்கோதையினலே கீழாகச்செய்யப்படுமென்பதாம். சூடிக்கொடுத்த மாலை எம்பெருமானுல் சிரசாவகிக்கப்பட்டதென்பதுமாம்.

விசேடக்குறிப்பு:-தாழ்த்திடப்படுமென்றது எம்பெருமான் திருமுடியிற் புனைந்துள்ள சூடிக்கொடுத்தமாலைக்குத் திருமார்பிலணிந்திருக்கிற வனமாலை தாழ்வான இடத்திலுள்ளதை. இது கவிசமத்காரம். உம்மை யாவும் உயர்வு சிறப்புப்பொருளன. அன்றே - பலரறிதேற்றம். பெரிது என்பதன்பின் ஒரும்மை வருவித்துப் பொருள்கொள்ளப்பட்டது. உயர்வுசிறப்பும்மையோடு கூடிய வினையெச்சங்களெல்லாம், தாழ்த்திடப்படும் என்னும் முற்றுவினையைக்கொண்டு முடிந்தன. வைசயந்தி கோதை யென்னும்பெயர்கள் மாலைகளைக் குறிப்பதன்றி மாதர்கள்பெயர்களாகவும் வழங்கப்படுதலாலும், தாழ்த்திடப்படுமென்னுஞ் செய்யுமென்னும் வினைமுற்றும் அஃறிணையொன்றன்பாலாகவும் உயர்திணைப்பெண்பாலாகவும் பொருள்கொள்ளத்தக்கதாதலாலும், தொனியாக வேறொரு பொருள்படுவதற்கேற்ப வினையெச்சங்களுக்கெல்லாம் இரண்டுபொருண்மை யெடுத்துரைக்கப்பட்டன. எல் இயல்வாய்ந்தும் எனப் பிரித்துக் காந்தியையும் இலக்கணங்களையும் அமைந்தும் என்றும், செம்மை மேவுற்றும் என்பதற்கு இலக்ஷணமமைந்திருந்தும் என்றுஞ் சொல்லலாம்.

இப்பாட்டுக் குறிப்பால் மற்றொருபொருள் தோன்றும்படி அமைக்திருத்தலாலே உதாரமென்னுங் குணவணியாம். இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

அணி:—இங்குச்சொல்லப்படுகின்ற மாலையின் வர்ணனையாகிய புகழ்பொருட்செய்தியிலே மிகவுயர்வுபெற்றிருக்கிற ஒருபெண்ணினாலே நற்குண நற்செய்கையையுடைய மற்றொருபெண் தாழ்த்திடப்படுமென்ற அல்பொருட் செய்தி தோன்றுதலாலே இப்பாட்டுச் சுருங்கச்சொலலணியாம். "அடைமொழி யொப்புமை யாற்றலி னல்பொருட், செய்தி விளங்கப் புகழ்பொருட் செய்தியைச், சிலேடை பொதுவடை யெனுமிரு திறத்தினும், தோன்றக் கூறல் சுருங்கச் சொலலே" என்பர் சந்திராலோகநூலார். இதனை வடநூலார் சமாசோக்தியென்பர். இது சிலேடையோடு கூடிவந்தது. சிலேடையில்லாமலும் வரும். (கரு)

16. வயங்குநின் மௌலி வனைந்தருண் மாலை
மான்முடி வகித்திடு மளவில்
இயங்கதன் மதுவை யிச்சையின் படிதே
னினங்களி கொண்டுகூட் டுண்டு
நயங்குல விடுமின் குரலின வாகி
நம்பெரு மாட்டியே நின்மின்
முயங்குமுன் றிலிற்செய் மன்றலின் முழங்கும்
முதன்மைசேர் முழவென முழங்கும்.

பதவுரை:—நம்பெருமாட்டியே - நம்பெருமாளது திவ்வியமகிஷியாரே!; தேன் இனம் - மதுகரநிகரங்கள்; வயங்கும் நின் மவுலி வனைந்தருள் மாலை - வயங்குகின்ற தேவரீர் திருக்குழற்கற்றையிற் சூடிக்கொடுத்த திருமாலையை; மால் - நம்பெருமாள்; முடிவகித்திடும் அளவில் - தம் திருவபிஷேகத்தில் அணிந்துகொண்டபொழுது; இயங்கு அதன் மதுவை - பெருகிவருகின்ற அந்தத்திருமாலையின் தேன்பெருக்கை; இச்சையின்படி - இட்டப்பிரகாரம்; கூட்டுண்டு - கொள்ளைகொண்டுண்டு; அல்லது கூட்டமாகக்கூடியிருந்து குடித்து; களிகொண்டு - களிப்படைந்து; நயங் குலவிடும் - இன்பம் விளைக்கின்ற; இனிமைக்குரலினவாகி-இனிய இசையையுடையனவாய்; நின் மின்முயங்கும்- தேவரீரது ஒளிதழையும்; முன்றிலில் - முத்துடைத்தாமநிரை தாழ்ந்த பந்தலில்; செய் மன்றலில் - கண்டருளுகின்ற திருக்கலியாணமகோற்சவத்தில்; முழங்கும் - ஒலிக்கின்ற; முதன்மைசேர் - உத்தமமாகிய; முழவென - மங்கலகீதத்தைப்போல; முழங்கும் - ஒலிக்கும் எ-று.

கருத்து:—நாய்ச்சியார் சூடிக்கொடுத்து மன்னனார் திருமுடியிற் சூடிக் கொண்டிருக்கும் திருமாலைகளிலிருந்து பெருகிவருகிற மதுவைப் பானம் பண்ணிக் களித்து அதனாலே மதுரமானதொனியையுடைய மதுகரங்கள், மன்றல்முன்றிலில் முழங்கும் முழவம்போல முழங்குமென்பதாம். இதனால் நாய்ச்சியார்சூடிக்கொடுத்து மன்னனார் திருமுடியிற் சூடிக்கொண்டிருக்கிற மலர்கள் தத்தமிடத்திலிருக்கும்பொழுதிற்காட்டிலும் மிகவுஞ் செழிப்புற்று வாசனைமிக்கு அதிகமாகத் தேனைப்பொழிதலாகிய பெருமையையுடைமை சூசிக்கப்பட்டது. அன்றியும், வண்டினங்களும் அம்மலர்களினின்றும் மிகுதியாகப்பெருகிவருகின்ற மதுவைக் கூட்டுண்டு முன்னிலும் இனிமையான குரலினைப்பெற்றுக்களிப்போடுமுழங்குகின்றனவென்பதும்குறிப்பிக்கப்பட்டது.

விசேடக்குறிப்பு:—மால் என்னும் திருநாமத்துக்கு அடியார்களை ஆட்கொண்டருளுவதில் மிக்க ஆர்வமுடையவனென்றும், மாயையையுடையவனென்றும், திருமாமகளிடத்தில் மிக்க மோகத்தையுடையவனென்றும், கருமையான திருமேனியையுடையவனென்றும், பெருமையையுடையவனென்றும், எவரினும் உயர்ந்தோனென்றும் பலபொருள்கூறுவர். இங்கு முதலாவதாகச்சொல்லப்பட்ட பொருளே கொள்க. கூட்டுண்டல் என்பதை வடநூலார் சகபானகேளியென்பர். சபீதி, துல்லியபானமென்றுஞ் சொல்லுகின்றனர். அதாவது உத்யானவனம்முதலிய மனதுக்கினிமைவாய்ந்த இடங்களில் வந்து புத்திரர்மித்திரர்களுடன் கூடியிருந்துண்ணல்; "புலவர்களியமுதொழுகு புதுமொழிகூட் டுணைத்தமிழாற் புனைதல்செய்தான்" என்பர் நைடதச்சிறப்புப்பாயிரத்தார். மின்முயங்குமுன்றிலென்றதனால் பொன்னினும் மணியினும் புனைந்ததென்க.

கவியாற்கருதப்படும்பொருள் விரைவிற் புலப்படுமாறு விளக்குதற்கு வேண்டும், சொற்களையுடையதாயிருத்தலால் இப்பாட்டு உய்த்தலில் பொருண்மையென்னுங் குணவணியின்பாற்படும். "கருதிய பொருளைத் தெரிவுறவிரித்தற்,குரிய சொல் லுடைய துய்த்தலில் பொருண்மை" என்பர் தண்டியாசிரியர். இதனை வடநூலார் அர்த்தவியக்தி என்பர். திருவரங்கமன்னனார் திருமுடிமேற்புனைந்திருக்கிற நாய்ச்சியார்சூடிக்கொடுத்த மாலைகளிலிருக்கிற மலர்கள், தத்தம் பிறப்பிடங்களிலிருக்கும்பொழுதினும், மிகவுஞ் செழிப்புற்று மிகுதியாகத் தேனைப் பொழிகின்றதென்றும், அத்தேனையுண்ணுதலாலே வண்டினங்களுக்கு இயல்பாயமைந்த இன்குரலைக்காட்டினும் நயங்குலவிடுமின்குரலும், எப்பொழுதும் முழங்கிக்கொண்டிருக்கைக்கேதுவான மிக்ககளிப்பும் உண்டாயினவெனக் குறிப்பாற் றோன்றுதலாலே உதாரமென்னுங் குணவணியுமாம். இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

அணி:— மதுகர நிகரங்களின் ரீங்காரத்தொனியிலே மங்கலமுழவின் றன்மை சம்பாவிக்கப்படுதலால் இப்பாட்டுத் தற்குறிப்பேற்றவணியாம். இதனிலக்கணமும் வடமொழிப்பெயரும் முன்னே சொல்லப்பட்டன. (கசு)

17. இலஞ்சியி லுலக மாகுமொண் பராக
மேந்திய சரோருகத் தாலும்
நலந்திகழ் மார்பிற் றிருமங்கை கொங்கை
நண்ணறுங் கலவையி னாலும்
பொலங்கழ லிணையின் மறைமல ராலும்
பொலங்கொடி வாசித னுயும்
வலம்பெறு நெடுமா னின்குழன் மாலை
வணங்கிய முடிகொடு வகிக்கும்.

பதவுரை:—பொலங்கொடி - அழகிய பூங்கொடிபோன்றவரே!; வலம் பெறுநெடுமால் - வெற்றி அல்லது சர்வசக்தியையுமுடைய திருவிக்கிரம ரூபியான அழகியமணவாளன்; இலஞ்சியில் - திருநாபியில்; உலகமாகும் ஒண்பராகம் - அகிலாண்டங்களாகவும் பரிணமிக்கத்தக்க ஒள்ளிய மகரந் தங்களை; ஏந்திய சரோருகத்தாலும் - வகித்துக்கொண்டிருக்குஞ் செங்கமல மலரினாலும்; நலந்திகழ்மார்பில் - அழகுவிளங்குகின்ற திருமார்பினில்; திருமங்கைகொங்கைநண் - பெரியபிராட்டியாரது திருமுலைத்தடங்களிலணிந் துள்ள; நறுங்கலவையினாலும் - நல்ல வாசனைமிகுந்த சந்தனக்குழம்பினாலும்; பொலம் கழல் இணையில் - அழகிய வீரகண்டையணிந்த திருவடித்துணைகளில்; மறைமலராலும் - மந்திரபுஷ்பத்தினாலும்; வாசிதனுயும் - வாசனையுடையவ னாகச் செய்யப்பட்டிருந்தபோதிலும்; நின் குழல்மாலை - தேவரீர் திருக்குழற் கற்றையிற் சூடிக்கொடுத்தருளிய திருமாலையை; வணங்கிய முடிகொடு - வணங்குதலைப்பெற்ற திருவபிஷேகத்தினாலே; வகிக்கும் - தாங்காநிற்கும். எ-று.

கருத்து:—சகலவேதங்களாலும் சர்வகந்தனெனக் கொண்டாடப்படும் திருவரங்கமன்னனார் நாபீகமலம் கமலாசனையின் தனசந்தனம் முதலிய வற்றாலே வாசனையூட்டப்பட்டவனாயிருந்தும் நாய்ச்சியார் சூடிக்கொடுத்த திருமாலையிலுள்ள திவ்வியபரிமளத்திலே போர விருப்புடையனாய் அம்மாலை யைத் தலைவணக்கத்தோடு பெற்று வகிக்கின்றனென்பதாம்.

விசேடக்குறிப்பு:— இலஞ்சி-கொப்பூழ். உலகு அண்டத்துக்குச் சினை யாகுபெயர். உலகமாகுமொண்பராகமென்றது, நாபீகமலத்துள்ள ஒவ்வொரு

பூந்துகளும் ஒவ்வோரண்டமாகப் பரிணமிக்கின்றதென்னும் பகவானுடைய விராட்சொரூபத்தின் பெருமை விளக்கியவாறும். மறை - மந்திரம்; மறைக்கப்படுவது மறையெனச் செயப்படுபொருள்விகுதி புணர்ந்துகெட்டது. மந்திரம் வேதத்தின் ஓர்பாகமாகலின் முதலாகுபெயருமாம். மறைமலர் என்றது புருடசூக்தாதி மந்திரங்களைக்கொண்டு அர்ச்சிக்கின்ற மலர்களை; மந்திரபுஷ்பமென்பதுமிது. இது திருவாராதனக்கிரமத்திலொன்று; "இந்திரனோடு பிரம னீச னிமையவ ரெல்லாம், மந்திர மாமலர் கொண்டு" என்பது பெரியாழ்வார்திருமொழி. பொலங்கொடி - உவமையாகுபெயர்; அண்மைவிளி; பொலம் என்பது பொன்னையுங் குறிக்கும். "பொன்னென் கிளவி யீறுகெட முறையின் - முன்னர்த் தோன்றும் லகார மகாரம் - செய்யுண் மருங்கிற் றொடரிய லான" என்னும் விதிப்படி பொன் என்னும் பலபொருளொருசொல் பொலமெனவாயிற்றென்ப.

செவிக்கினியதாய்ச்செல்லும் மெல்லிய இசையுடன் கூடியிருத்தலால் இப்பாட்டு ஒழுகிசையென்னுங் குணமுடையதாம். இதில் ஆவியாற்கருதப்பட்டபொருள் வெளிப்படையாய் விரைவிற் புலப்படுதலுண்மையில் தெளிவு என்னுங் குணமுடையதுமாகும். இவற்றின் இலக்கணம்முதலிய முன்னமே சொல்லப்பட்டன.

அணி:—'வலம்பெறுநெடுமால் வணங்கியமுடிகொடு வகிக்கும்' என்றதனால் திருவரங்கமன்னனுருக்கு மற்றையபொருள்களிற்காட்டிலும், நாய்ச்சியார் சூடிக்கொடுத்தமாலையிலே மிகவும் ஆர்வமுடைமை விளங்குதலாலே மற்றையவற்றைக்காட்டிலும் சூடிக்கொடுத்தமாலைகளுக்குத் திவ்யபரிமளமுடைமை தெரிதலாலே இப்பாட்டுத் தொனியாலே வந்த வேற்றுமையணியாம். "ஓதிய பொருள்களு ளொன்றுயர் வுடைத்தென், றறைவது வேற்றுமை யணியெனப்படுமே" என்பர் சந்திராலோகநூலார். இதனை வடநூலார் வியதிரேகாலங்காரமென்பர். (கஎ)

18. ஓங்குமிவ் வரங்கத் துத்தம னுன்ற
னுத்தரீ யத்தையுங் குழலிற்
பாங்குறச் சூட்டிப் பரிமள மூட்டிப்
பரிந்தருள் பசுந்தெரி யலையும்
வீங்குசீர்க் கோதா யுத்தமாங் கத்தின்
மிசைமிலை தலிற்பெரும் பாலும்
தாங்குமங் களநீள் செல்வமா முடியைத்
தாங்கிடுந் தகைமைசார்ந் தனனால்.

பதவுரை:—வீங்குசீர்க்கோதாய் - யாவரினும் மேலான சிறப்புவாய்ந்த நாய்ச்சியாரே!; ஓங்கு - ஞானசக்தியாதிகுணங்களா லெவரினு முயர்ந்த; இ அரங்கத்து உத்தமன் - இந்தத் திருவரங்கமன்னனூர்; உன்றன் - தேவரீருடைய; உத்தரியத்தையும் - திருமுலைத்தடங்களிற் புனைந்துதந்த உத்தராசங்கத்தையும்; குழலில் - திருக்குழற்கற்றையில்; பாங்கு உற - செவ்வையாக; சூட்டி - அணிந்து; பரிமளம் ஊட்டி - மிக்க வாசனையுறும்படிசெய்து; பரிந்து அருள் - விருப்பொடுகொடுத்த; பசுந்தெரியலையும் - செழுமையான மலர்மாலையையும்; உத்தமாங்கத்தின்மிசை - திருமுடியின்மேல்; மிலைதலில் - அணிந்துகொண்டதனாலேதான்; பெரும்பாலும் - மிகவும்; தாங்கு - சகல புவனங்களையும் பரிபாலனஞ்செய்தற்குரிய; மங்கலம் - சுபகரமான; நீள் - நீண்ட; செல்வமாமுடியை - பரமைச்சுவரிய சூசகமான திருவபிடேகத்தை; தாங்கிடும் - வகிக்கும்; தகைமை - மகாதிகாரமாகிய பெருமையை; சார்ந்தனன் - அடைந்தனன் எ-று. ஆல். அசை.

கருத்து:—நாய்ச்சியா ருடுத்துக்களைந்த நன்பீதகவாடையையும் சூடிக்கொடுத்த துழாய்த்தொடையலையும் பிரீதிபூர்வகமாகச் சிரசாவகித்தலாலே திருவரங்கச்செல்வனூர் மிகவும் சௌபாக்கியசம்பத்துக்குச் சார்வபௌமனாகத் திருமுடிபுனைதற்குரிய மகாதிகாரத்தைப் பெற்றனரென்பது.

விசேடக்குறிப்பு:—ஓங்கு - வாத்சல்யாதி குணகணங்களால் எவரினு முயர்ந்த என்றுமாம். இத்திருவரங்கத்துத்தமனெனச் சுட்டியது சமர பூபாலனென்னும் ஆசனத்தில் நாய்ச்சியாருடன் எழுந்தருளியிருத்தலாலே. உத்தமன் என்றது, உயர்வறவுயர்ந்தவனென்றபடி; புருஷோத்தமனென்றுமாம். உத்தரீயமென்றதற்குக் "குங்குமமப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து வளர்ந்த திருமுலைத்தடங்களின்மேற் புனைந்த உத்தராசங்கமென இசையெச்சமாக விரித்துப் பொருள்கொள்க. அல்லது திருக்குழற்கற்றையிற் போலே யியற்கையாயமைந்த திருமேனியினது திவ்யபரிமளத்தாலே பரிமளிதமாயிருக்கிற உத்தரீயமென விரித்துப் பொருள்கொள்ளலுமாம். வீங்குசீர் என்றது, "கோதைகுழற் சுற்றுத தாரணியார்"! என்று எம்பெருமானைக் கொண்டாடும்படி யெவற்றினுமுயர்ந்த சிறப்புடைமையை. அங்கங்களிலெல்லா முயர்ந்ததாதலிற் திருமுடி உத்தமாங்கமெனப்பட்டது. தாங்குதல் - காப்பாற்றுதல். நீள்முடியென்றதற்கு - சர்வாதிகத்வ சூசகமான நீண்டமுடியென் றர்த்தமருளிச்செய்வர் பூர்வாசார்யர்கள். தகைமை - தகுதியான அதிகாரம். பெரும்பாலுமென்றது, ஸ்ரீய:பதித்வாதிகளும் சிறிது காரணமாயிருந்தாலுமெனக் காட்டுதற்கு.

இப்பாட்டு, கவியாற் கருதப்பட்டபொருள் வெளிப்படையாய் விரைவில் விளங்குதலால் தெளிவென்னுங் குணத்தைச் சேர்ந்ததாகும்.

அணி:—திருவரங்கமன்னனுருக்கு இயல்பாகவேயமைந்துள்ள தாங்கு மங்கள நீள் செல்வமாமுடியைத் தாங்கிடுந் தகைமைக்கு ஏதுவாகாத நாய்ச்சியார் தனுத்தரீயத்தையும் சூடிக்கொடுத்த மாலையையும் சிரசாவகித்தலில் ஏதுத்தன்மை சம்பாவிக்கப்படுதலாலே இப்பாட்டு ஏதுத்தற்குறிப்பேற்ற வணியாம். (கஅ)

19. சரதமா மறைக ளுயர்ந்ததம் முடியாற்
சருவகந் தன்னென வெவனைப்
பரவுமன் போடு பகர்ந்திடு மந்தப்
பசுந்துழாய் முகுந்தனும் மன்றல்
விரவுநின் குழலா னறுமணம் வாய்ந்த
விரிமலர் மாலைக ளாலே
வரசரோ ருகமா மலர்த்திரு முகத்தாய்
மற்றொரு மன்றலுற் றிடுமால்.

பதவுரை:—வரசரோருகமா மலர்த்திருமுகத்தாய் - சிறந்த செந்தாமரையின் பெருமைபெற்ற புட்பத்தைப்போலப் பொலிவுற்ற திருமுக மண்டலத்தையுடைய நாய்ச்சியாரே! சரதமாமறைகள் - மெய்ம்மையாகிய மேன்மைபொருந்திய வேதங்கள்; உயர்ந்ததம் முடியால் - சிலாக்கியமாகிய தமது மௌலியென்னும் உபநிடதத்தாலே; பரவும் அன்பொடு - மிக்க ஆதரத்துடனே; எவனை - யாரை; சருவகந்தன் என - சகல பரிமளசொரூபனென்று; பகர்ந்திடும் - கொண்டாடுகின்றதோ; அந்த - அப்படிப்பட்ட; பசுந்துழாய்முகுந்தனும் - (அங்குரிக்கும்பொழுதே வாசனையோடு கூடியிருக்கிற) பசுமையான திருத்துழாய்மாலையையணிந்த புத்தி முத்திப்பிரதனுன அழகியமணவாளனும்; மன்றல்விரவு - இயற்கைவாசனையையுடைய; நின்றன் குழலால் - தேவரீரது திருக்குழற்கற்றையினாலே; நறுமணம்வாய்ந்த - திவ்ய பரிமளமமைந்த. விரிமலர்மாலைகளாலே - விகசிதமான புட்பத்தொடையலாலே; மற்றொருமன்றல் - பிறிதொரு திவ்வியபரிமளத்தை; உற்றிடும் - சேரும். எ-று. ஆல் - அசை.

கருத்து:—திருவரங்கமன்னனுருக்கு உபநிடதங்களாலே சருவகந்தனென்று கொண்டாடப்படும் பெருமையைக்காட்டிலும், நாய்ச்சியார் சூடிக்கொடுத்த திருமாலையைச் சூடிக்கொண்டதனாலே உண்டான வேறொரு அதிவிதீயமான பரிமளமுடைமையாலுண்டான பெருமை மேலானதென்பதாம்.

விசேடக்குறிப்பு:— சரதமாமறையென்றது, உண்மைப்பொருளையே யுணர்த்துவனவாய், முக்குணவசத்தால் முறைபிறழ்ந்தலைகின்ற சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினையுடைய புருடர்களாலே புனைந்துரைக்கப்படாதன வாய் முழுமுதற்கடவுள்போலே நித்தியமாய் முக்கியப்பிரமாணமாய்ப் பெருமைவாய்ந்து விளங்குதலாலே. மறைமுடி - வேதாந்தம். இதனையே யுபநிடதமென்ப. சருவகந்தன் என்றது சகலவிதமான பரிமளச்சொரூபனாக விருத்தலில். "சர்வகந்த: சர்வரச:" என்பது உபநிடதம். துழாய் மாலைக்குக் கருவியாகுபெயர். வரம் - மேன்மை; சரோருகம் - குளங்களின் முளைப்பது. மலர்களுக்கெல்லாஞ்சிறந்ததாதலின் மாமலரெனப்பட்டது. மா - என்பது திருமகளுக் கொரு திருநாமமாதலின் திருமகள்வாசஞ்செய்யும் மலரென்றுமாம். "பூவிற்குத் தாமரையே" "பூவெனப் படுவது பொறிவாழ் பூவே" என்பது காண்க. ஒருமன்றலென்றது - அத்விதீயமான திவ்யபரிமளத்தை.

இப்பாட்டு, மூன்றினமும் ஆதிமுத லந்தம்வரை சமமாகக்கலந்து வந்திருத்தலாலே சமநிலையாம். "விரவத் தொடுப்பது சமனிலை யாகும்" என்னும் விதிக்கு வல்லெழுத்துக்களாலாகிய தொடை, மெல்லெழுத்துக்களாலாகியதொடை, இவ்விருவகை எழுத்துக்களாலாகிய தொடையென்றும் பொருள்கூறுவர்.

அணி:—முகுந்தன் இயற்கையாலும் செயற்கையாலு மமைந்த பரிமளத்தைவிட்டுச் சூடிக்கொடுத்தமாலையினாலே மற்றொரு அத்விதீயமான திவ்ய கந்தத்தைப் பெற்றானென்கையால் பிறிதின்நுணம்பெறலணியாம். இதனிலக்கணம் 22-வது பாட்டுரையிற் காண்க. (௧௯)

20. கோதையே நினது கோதையிற் சூடிக்
கொடுத்தருள் கோதையை விரும்பி
மேதக நன்கு புனைதர லாலே
மிக்கநற் பேறுபெற் றிலகும்
ஆதியின் முடியில் வெகுமதிப் பொடுநின்
னன்பவிர் நோக்குவைத் திடுதல்
சீதநீர்க் குவளைத் தெரியலை மேலுஞ்
சிறப்புறச் சூட்டுதல் சிவணும்.

பதவுரை:—கோதையே - நாய்ச்சியாரே!; நினது கோதையில் - தேவரீர் திருக்குழற்கற்றையில்; சூடிக்கொடுத்தருள் - புனைந்து தந்தருளிய; கோதையை - திருமாலையை; விரும்பி - இச்சித்து; மேதக - மேன்மையாக;

நன்குபுனைதரலாலே - நன்றாகத் திருமுடியிலணிந்துகொண்டிருத்தலாலே; மிக்க நற்பேறு பெற்றிலகும் - மிகுந்த சௌபாக்கியத்தையடைந்து விளங்குகின்ற; ஆதியின்முடியில் - ஜகத்காரணவஸ்துவான அழகியமணவாளனது திருவபிஷேகத்தின்மேல்; வெகு மதிப்பொடு - மிகுந்த கௌரவபுத்தியோடு; நின் அன்பு அவிர் நோக்கு வைத்திடுதல் - தேவரீர் காதல்விளங்கும் கடைக்கண்ணால் நோக்கிக்கொண்டிருத்தல்; சீதநீர்க் குவளைமலர்கொடு தொடுத்த - குளிர்ந்த நீர்நிலைகளிலே தோன்றிய நீலோற்பலமலர்களைக்கொண்டு தொடுத்த; தெரியலை - மலர்மாலையை; மேலும் - மறுபடியும்; சிறப்புற - மேன்மை மிகும்படி; சூட்டிடல் - (அந்தத் திருவபிஷேகத்தின்மீது) அணிந்ததை; சிவணும் - ஒக்கும் எ-று.

கருத்து:—நாய்ச்சியார் தாம் சூடிக்கொடுத்த திருமாலையைத் திருமுடியின்மேல் அழகாக வணிந்திருத்தலாலே பெரும்பேறு பெற்றதாகிய அழகிய மணவாளனது திருமுடியை அடிக்கடி அன்போடு கடைக்கண்ணாற் பார்த்துக் கொண்டிருத்தல், அத்திருவபிஷேகத்தின்மேலே மற்றொரு இந்தீவரமலர் மாலையைப் புனைந்திடுதல்போலும் என்பதாம்.

விசேடக்குறிப்பு:—கோதை மூன்றுக்கும் முறையே நாய்ச்சியார், திருக்குழற்கற்றை, மாலை—யென்று பொருள்கொள்க. மிக்க நற்பேறு பெற்றிடுதல்- தந்யமாக ஆதல். இங்கு அன்பு அவிர் நோக்கு என்பது, ஆகேகரமென்னும் கடைக்கண்பார்வையை; அதாவது: பாதி மூடியும் பாதி மூடாமலுமிருக்கிற கடைக்கண்களையும், அடிக்கடி பிறழ்கின்ற கருமணியையுமுடைய கண்களாலே காதன்மைதோன்ற நோக்குதல்.

இப்பாட்டு, கருதியபொருளைத் தெரிவுறுதற்குரிய சொற்கள் விரிந்து விளங்குதலில் உய்த்தலில்பொருளுண்மையென்னும் குணமுடையதாம்.

அணி:—இப்பாட்டு முதலடியில் வழியேதுரை வந்திருத்தலின் அநுப்பிராசம் என்னும் சொல்லணியதாம். எம்பெருமானது திருமுடியில் வைத்திருக்கிற நாய்ச்சியாரது கடைக்கண்பார்வையினுடைய நீலநிறமுடைமையென்னுந் தருமசம்பந்தத்தாலே குவளைமலர்மாலையென்னும் பொருளினபேதம் சம்பாவிக்கப்படுதலாலே விரிபுலப்பொருட்டற்குறிப்பேற்றவணியாம். (உ0)

21. திருவரங் கேசன் றனக்குநின் றனக்குஞ்
சேர்தருங் கேண்மையி னாலே
ஒருவருக் கொருவர் மாலைமாற் றுதலை
யுவப்பொடு புனைந்துரை விபுதர்

மருவரு மளக வசுதையே குறைவு
மற்றுயர் வொப்பெனும் வழக்காற்
பொருவரு மார வாரமுள் ளனவாப்
புரிவராற் புவனமூன் றையுமே.

பதவுரை:—மரு வரும் அளக வசுதையே - இயற்கையாகிய திவ்யபரிமளந் தோன்றுகின்ற திருக்குழற்கற்றையோடு கூடிய பூரூபியாயிருக்கிற நாய்ச்சியாரே!; (பூதேவியாரின் பூர்ணம்சமாகத் திருவவதரித்தருளிய கோதையாரே! என்றுமாம்.) நின்தனக்கும் - தேவரீருக்கும்; திருவரங்கேசன் தனக்கும் - அழகியமணவாளனுக்கும்; சேர்தரு கேண்மையினலே - உண்டாகிய பிரணயத்தினலே; ஒருவருக்கொருவர் மாலைமாற்றுதலை - அந்நியோந்நிய மாலாபரிவிருத்தியென்னும் ஒரு மங்கலச்சடங்கை; உவப்பொடு - உள்ளத்து மிகுந்த சந்தோஷத்துடனே; புனைந்துரை - புகழ்ந்துபேசுகின்ற; விபுதர் - பரமரசிகர்களான வித்வான்கள்; குறைவு, உயர்வு, ஒப்பென்னும் வழக்கால்—இவற்றல் இவர்க்குத் தாழ்வு, இவற்றல் இவர்க்குமேன்மை, இவற்றல் இருவர்க்கும் ஒப்பு—என்னும் விவாதமொழிகளாலே; புவனம் மூன்றையும் - திரிலோகங்களையும்; பொருவு அரும் - ஒப்பில்லாத; ஆரவார முள்ளனவா - முழக்கத்தையுடையனவாக; புரிவர் - செய்வார்கள். எ-று. மற்று, ஆல் அசைகள்.

கருத்து:—வருடந்தோறும் நாய்ச்சியாருக்கும் மன்னனுருக்கும் நடக்கிற மாலைமாற்றலாகிய உத்ஸவத்தைச் சேவித்துப் பரமாநந்தபரிதர்களாயிருக்கிற ரசிகசிரோமணிகளாகிய விபுதர்கள், சிற்சில காரணங்களைக் கொண்டு நாய்ச்சியாரே எங்கலத்தானுமுயர்ந்தவரென்றும், மன்னனுரே மகிமையாலுயர்ந்தவரென்றும், இருவரும் இரண்டினுலும் ஒப்பானவரென்றும் சொல்லுகிற பூர்வபக்ஷ சித்தாந்தரூபமான வியவகாரமொழிகளாலே மூன்றுலகங்களையும் சப்தாயமானமாகச் செய்கின்றுர்களென்பது.

விசேடக்குறிப்பு:—மாலைமாற்று ஸ்ரீவில்லிபுத்தூரில் வருடந்தோறும் பங்குனியுத்தரத் திருக்கலியாண மகோத்ஸவத்திலும், ஸ்ரீரங்கம் உத்ஸவத்திலும் இன்றும் நடந்துவருகிறது. அரங்கேசன்—குணசந்தி. அளகவனிதை இரண்டாம்வேற்றுமையுருபும்பயனு முடன்றெக்கதொடர். வசுதை - பூமி; இது அதன் அதிதேவதையாகிய பூமிப்பிராட்டியாரை; பிராட்டியாரின் பூர்ணம்சசம்பூதையாரான நாய்ச்சியாரை யிங்குக் குறிக்கிறது. உயர்வு ஒப்பு-"முற்று மற்றெரோவழி" என்றதனுல் உயர்வொப்பு என்றாயிற்று. ரசிகர்

வியவகரிக்கும்பொழு தெழுகின்ற முழக்கம் கடல்முழக்கினும் மிக்கிருத்த லால், பொருவருமாரவார மெனப்பட்டது. புவனம் மூன்றென்றது, சுவர்க்க மத்திய பாதாளங்களை.

இப்பாட்டு, பலபொருள்பயக்குந் திரிசொற்களேயில்லாமல் கருதிய பொருள் வெளிப்படையாய்த் தெரிதலாலே தெளிவு என்னும் குணவணி யதாம். (உக)

22. அறுகெனும் பசிய புல்லினை யனைய
வனைநின தனுவொளி யாலும்
உறுநறுங் கோரோ சனைதனை யனைய
வொண்டிரு வுருநிழ லாலும்
நறுவிய மயிலின் கயிலியன் மருவி
நாயக னெழிற்றிரு மேனி
மறுவறப் பணிவார் தமக்குமங் களமாம்
வாழ்க்கையை யருள்வதா யினவால்.

**பதவுரை:**—அனை - அகிலலோகஜநநியான வசுதாதேவியாரே!; நாயகன் - சர்வலோக நாயகனுகிய அழகியமணவாளனது; எழில் - அழகிய; திருமேனி - திருமேனியானது; அறுகு எனும் பசும்புல்லினை யனைய - தூர்வா என்று சொல்லப்படும் பசுமையானபுல்லைப்போன்ற; நின தனு ஒளியாலும் - தேவரீருடைய திருமேனியின் காந்தியினுலும்; உறு நறுங் கோரோசனை அனைய - பொருந்திய கோரோசனையைப்போன்ற; ஒண் திருவுரு நிழலாலும் - ஒள்ளிய திருமேனியின் சோபையினுலும்; நறுவிய மயிலின் - நல்ல மயூரத்தினது; கயில் இயல் - கழுத்தினதுசாயலை; மருவி - சார்ந்து; மறுஅற - தீங்குகள் நீங்க; பணிவார்தமக்கு - வணங்குகின்றவர்களுக்கு; மங்களமாம் - சுபகரமாகிய; வாழ்க்கையை - பெருவாழ்வை; அருள்வதாயினது - கொடுத்தருள்வதாயிற்று எ-று. ஆல்-அசை.

**கருத்து:**—நாய்ச்சியாரது பொறுமையென்னுங் குணத்திற் கநுகுணமாயிருக்கிற புருவத்தின் அழகிய வொசிவினுலும், பெரியபிராட்டியாரின் கருணைக் கநுகுணமாயிருக்கிற இன்சொற்களாலும், துட்டநிக்கிரகபூர்வகமாகச் சிட்டபரிபாலனஞ் செய்தருளும் சர்வேச்சுரனது திருவுள்ளமானது தனக்கியல்பாயமைந்த சுவாதந்திரியத்தைவிட்டுத் தாட்சண்ணியத்தையும் காருண்யத்தையும் அமைந்து அடியார்களை அந்தமில்பேரின்பத்தை யடைந்துவாழும்படி செய்வதாகவாயிற் றென்பது.

**விசேடக்குறிப்பு:**—இதனால் நாய்ச்சியார் பெரியபிராட்டியாரோடு கூடிய எம்பெருமான் திருமருங்கி லெழுந்தருளியிராதபோது பெரியபிராட்டியாருடைய புருஷகாரமும் அவ்வெம்பெருமானது ரட்சணகாரியமும் சபலமாகாதென்பது சூசிக்கப்படுகிறது. நாயகன் எழில்திருமேனி தனக் கியல்பாயமைந்த மைவண்ணத்தைவிட்டுப் பசுமைநிறத்தோடுகூடிய சுவர்ணவர்ணத்தை மருவிப் பிறிதொருவண்ணத்தைப் பெற்றதென்கையாலே சர்வேச்சுரன் சுவாதந்திரியகுணத்தைவிட்டுப் பொறுமையையும் கருணையையும் பொருந்தி அடியார்களை அநுக்கிரகித்தருளுகிறுனென்ற விடயம் சூசிக்கப்பட்டது. திருமேனி லக்ஷணையாகத் திருவுள்ளத்தையும் சரீரியான சர்வேச்சுரனையும் குறிப்பதாகக்கொண்டு இவ்வாறு கொள்ளப்பட்டது. உள்ளவாறே பொருள் கூறலு மொன்று. திருமேனியே தன்னை உபாயமாக நினைக்கின்றவர்களுக்கு இன்பம்பயக்குமென்பதை அமுதனாரும், "கையிற் கனியெனக் கண்ணனைக் காட்டித் தரினுமுன்றன் - மெய்யிற் பிறங்கிய சீரன்றி வேண்டிலன்" என விளக்கியருளினர். அறுகு - தூர்வை. இளம்புல்; பதம்; சதபர்விகையென்ற பெயரும் இதற்குண்டு. கோரோசனை என்பது மேலான பசுவினிடத்துண்டாகும் ஒரு மருந்துப்பொருள்; வாசனைப்பொருளுமாம். பச்சைவண்ணத்துக்கும் பொன்வண்ணத்துக்கும் பல பிரசித்தமான உபமானப்பொருள்க ளிருப்பவும் இவற்றை இங்கு எடுத்துக்கூறியது,

"அறுகம்புல் வாதபித்த மையமோ டீளை
சிறுகவறுக் கும்பின்னுஞ் செப்பில் - அறிவுதரும்
கண்ணோ யொடுதலைநோய் கண்புகைச்சல் ரத்தபித்தம்
உண்ணோ யொழிக்கு முரை"

என்றும்,

"நீரிழிவு மேகசுர நீங்காக் கனல்வேகம்
சூரியவுன் மாதங் குழந்தைகணோய்—பாரகபம்
வீறும் மசூரியும்போம் வேதந் தனிவிரண்டாய்க்
கூறுங்கோ ரோசனைகட் கு"

என்றும் பதார்த்தகுணசிந்தாமணியார் கூறியபடி இவ்விரண்டு திரவியங்களும் உளத்திலும் உடலிலுமுண்டாகும் ஆதிவியாதியைப் போக்கி அறிவையும் ஆகத்தையும் விருத்திசெய்யுமாறுபோல இவ்விருவகையான காந்திகளும் அபராதிகள்பக்கலிலே எம்பெருமானுக் குண்டாகும் சீற்றத்தை மாற்றிக் குளிரக் கடாக்ஷிக்கும்படி காருண்ய தாட்சணியங்களை விருத்திசெய்யும் மகிமையுடையவை யென்பதைக் கருதியேயாம். அனை - அன்மைவிளி; இது அன்னையின்விகாரம். நினவென்பதன் அகரம் ஆறனுருபு. தனு - திருமேனி.

உரு - திருமேனி. நிழல் - காந்தி. நறுவிய - நறுமையென்னும் பண்படியாகப் பிறந்த குறிப்புப்பெயரெச்சம்; இங்கு அழகியவென்னும் பொருளது. கயில் - பிடரி; இது சினையாகுபெயராய்க் கழுத்தைக் குறித்தது. இயல் - சாயல்; நாயகன் என்றதனால் துட்டநிக்கிரக சிட்டபரிபாலனஞ் செய்பவனெனக் கொள்ளவேண்டியதாயிற்று. மங்கலமாம் வாழ்க்கையென்றது நித்தியசோபனத்தோடு கூடிய வைகுந்தவான்பெரும்போகத்தை.

இப்பாட்டுக் குறிப்பினால் ஒருபொருள் சிறப்புறத்தோன்றுதலாலே உதாரமென்னுங் குணமுடையதாம்.

அணி:—எம்பெருமான் திருமேனி நாய்ச்சியார் பெரியபிராட்டியார் திருமேனியொளியினாலே தன் மைவண்ணம் மறைபட்டு மயிலின் கயில் வண்ணம் பெற்றதாகச் சொல்லப்பட்டிருத்தலாலே பிறிதின்குணம்பெறலணியாம். "ஒருபொரு டன்னியல் பொழிந்து பிறிதின், குணம்பெறல் பிறிதின் குணம்பெற லணியே" என்பர் சந்திராலோகநூலார். வடநூலார் தத்குணலங்காரமென்பர். (உஉ)

23. அன்னைநின் னொடுபொன் னொடுமுறை யிறைவ
னாகுமா ராத்தியன் றன்னை
முன்னைமா மறையாம் மலரினா னன்கு
முறையினா ராதனை புரிந்து
மன்னிய மகிமை வாய்ந்தவா னவரும்
மனுமுத லானமா னவரும்
பன்னரும் புகழும் மன்னருந் தமது
பதிபுரந் தனர்பல பகலே.

பதவுரை:—அன்னை - தாயே; நின்னொடு - தேவரீரோடுகூட; பொன்னொடும் உறை - பெரியபிராட்டியாரோடும்வாசெழுந்தருளியிருக்கிற; இறைவன் ஆம் - நாதனாகிய; ஆராத்தியன்றன்னை - அர்ச்சிக்கத்தக்கவனாகிய திருவரங்கமன்னனாரை; முன்னை - பிரமலோகத்திலும், திருவயோத்தியிலும், திருவரங்கத்திலு மெழுந்தருளியிருக்கும்பொழுது; மன்னிய - நிலைபெற்ற; மகிமைவாய்ந்த - பெருமை பொருந்திய; வானவரும் - பிரமா முதலிய தேவர்களும்; மனுமுதலான மானவரும் - வைவச்சுதமனுமுதல் சக்கிரவர்த்தித்திருமகன்வரையுள்ள அம்மனுவின்வமிசத்திற்பிறந்த அரசர்களும்; பன் அரும் புகழ் அ மன்னரும் - சொல்லுதற்கருமையான பெரும்புகழ்வாய்ந்த பிரசித்திபெற்ற அந்தத் தன்மவன்மன் முதலிய சோளதேசத்தரசர் முதலிய

வர்களும்; முறையின் - கிரமப்படி; மாமறை ஆம் மலரினால் - பெருமை மருவிய புருஷசூக்தம்முதலிய வேதமந்திரங்களாலும், ஆராதனயோக்ய மான புட்பங்களாலும்; நன்கு ஆராதனை புரிந்து - நன்றாக ஆராதித்து; பலபகல் - சிரகாலம்; தமது பதி - தம்முடைய ராஜ்யங்களை; புரந்தனர் - பரிபாலனஞ்செய்தார்கள். எ-று. ஏ அசை.

கருத்து:—நாய்ச்சியாரே! தேவரீரோடு பெரியபிராட்டியாரோடும் வந்து ஏகாசனத்தி லெழுந்தருளியிருக்கிற ஆராதிக்கத்தக்கவனாகிய சர்வேச் சுரனை முற்காலத்திலே வானவரும் மானவரும் மன்னவரும் முறைப்படி மந்திரபுஷ்பங்களாலே ஆராதனைசெய்து வெகுகாலம் தங்கள் தங்களுடைய ஸ்தானங்களிலிருந்து தமது ராஜ்யங்களைப் பரிபாலித்துவந்தனர். இப்பொழுதோ அந்தத் திருவரங்கமன்னனாரோடுகூடி யெழுந்தருளியிருக்கிற தேவரீரைப் பணிந்து யாவரும் சர்வாபீஷ்டங்களையும் பெற்று எங்கும் திருவருள்பெற் றின்புறுகிறார்களென்பதாம்.

விசேடக்குறிப்பு:—அன்னே! அண்மைவிளி. ஆராத்தியன் - பூசிக்கத் தக்கவன். முன்னே - முந்தியகாலங்கள்; இவற்றைப் பதவுரையிலேயே விளக்கினோம். முறை - பிரமலோகம் முதலிய மூன்றிடங்களிலும் கிரமப்படி என்றாவது ஆராதனக்கிரமப்படி என்றாவது கொள்ளலாம். மாமறையென் றது, அபௌருஷேயமாய், நித்தியமாய், ஸத்தியமாய், எல்லாப்பொருள்களை யும் அறிந்ததாய் அறிவிப்பதாயிருக்கிற பெருமையோடுகூடிய வேதத்தி லுள்ள புருடசூக்தாதி மந்திரங்களை. மறையாம் மலர் - மந்திரபுட்பங்கள்; இது முன் விளக்கப்பட்டது. முன்னே என்ற குறிப்பினால் இப்பொழுது தேவரீரையே பணிந்து யாவரும் சர்வாபீஷ்டங்களையும் பெறுகின்றார்க ளென்று விரித்துப் பொருள்கூறப்பட்டது. பிரமாதிதேவர்களும் மனுமுதலிய வர்களும், தன்மவன்மா தொடக்கமானவர்களும் தேவரீர்நாதனை யாரா தித்து அபீஷ்டசித்தியையடைந்தனரென்பதை ஸ்ரீரங்கம் ஸ்தலபுராணம் ஸ்ரீராமாயணம் முதலியவைகள் விரிவாக விளம்புகின்றன.

இப்பாட்டு, சொல்லின்கண்ணும் பொருளின்கண்ணும் சுவையுடைய தாகத் தொடுக்கப்படுதலில் இன்பமென்னுங் குணவணியதாம். இத னிலக்கணம் முன்சொல்லப்பட்டது. (உங)

24\. ஈரமே புலரா விரும்பிழை யிழைத்த
விவரையு மளித்தரு ளுதனின்
பாரமே யென்று திருவரங் கருக்குப்
பரிவொடு பகர்ந்திடு மளவில்

வாரமே யவன்றன் மற்றொரு பானீ
வதிந்திலை யெனிற்பெரும் பாலும்
ஆரமே யனைய திருநகை முகத்தா
யவன்பரா முகஞ்செயு மன்றே.

பதவுரை:—ஆரமே யனைய திருநகைமுகத்தாய்! - முத்தின்பத்தியை யொத்த அழகிய குறுமுறுவலோடு கூடிய திருமுகமண்டலத்தையுடைய தாயே!; நீ - தேவரீர்; திரு - பெரியபிராட்டியார்; அரங்கருக்கு - திருவரங்க மன்னனாரிடத்தில்; பரிவொடு - பிரீதியோடு; ஈரமே புலரா இரும்பிழை யிழைத்த இவரையும் - (மறக்கவொண்ணாதபடி) சமீபகாலத்தில் மகாபரா தங்களைச்செய்த இந்தச் சேதநர்களையும்; அளித்தருளுதல் - கிருபையாலே காப்பாற்றுதல்;- நின் பாரமேயென்று - ரட்சகராயிருக்கிற தேவரீரது கடமையாகுமென்று; பகர்ந்திடும் அளவில் - விண்ணப்பஞ்செய்யுங்காலையில்; அவன்றன் மற்றொருபால் - அந்த எம்பெருமானுடைய மற்றொரு பக்கத்தில்; வாரம் மேய் - உரிமைவாய்ந்து; வதிந்திலையெனில் - எழுந்தருளியிராவிட்டால்; அவன் - அந்தச் சர்வேச்சுரன்; பெரும்பாலும் - மிகவும்; பராமுகஞ்செயு மன்றே - திருமுகத்தை மாறவைத்தருளுவனல்லவா எ-று.

கருத்து:—நாய்ச்சியார் பக்கத்திலெழுந்தருளியிராவிட்டால் பெரிய பிராட்டியாரது புருஷகாரத்துவமும் சர்வேச்சுரனது சர்வரட்சகத்துவமும் ஜீவியாதென்பது.

விசேடக்குறிப்பு:—ஈரமேபுலரா இரும்பிழை - மறக்கவொண்ணாதபடி சமீபகாலத்திற் செய்த பெரிய குற்றம். உம் - இழிவுசிறப்புப்பொருளது. வாரம் என்பது எம்பெருமானுக்கு வல்லபையாயிருக்கும்உரிமை, வாற்சலியம், அடியார்பக்கலுள்ள பட்சபாதமுமாம். ஆரம் - முத்து; அதன் வரிசைக்கு ஆகுபெயர். நகை - தந்தம்; முறுவலுமாம். முகம் மாறவைத்தல் - பிரார்த்தனைக் குடம்படாமை. செயும்—செய்யுமென்னும்வாய்பாட்டுவினைமுற்று. அன்று ஏ என்று பிரித்து அசையாகவும் கொள்ளலாம். பரிவொடு பகர்ந்திடு மளவிலென்றுங் கூட்டிக்கொள்ளலாம். பரிவு - பக்குவம்; வருத்தமுமாம்.

இப்பாட்டு, கவியாற் கருதப்பட்டபொருள் வெளிப்படையாய் விரைவிற் புலப்படுதலுடைமையில் தெளிவென்னுங் குணமுடையது.

அணி:—பெரியபிராட்டியாருடைய புருஷகாரம் பலிப்பதாகிய காரியம் முற்றுப்பெறுதற்குத்திருவரங்கமன்னனாரது மற்றொருபக்கத்தில் நாய்ச்சியாரெழுந்தருளியிருத்தல் ஊகிக்கப்பட்டிருத்தலால் இப்பாட்டு உய்த்துணரவைப்பணியாம். "இவ்வா றுயி னீதுறு மெனவொரு, காரிய முடிவைக் கருதலுய்த் துணர்வே" என்பர் சந்திராலோகநூலார். இதனை வடநூலார் சம்பாவனாலங்காரமென்பர். (உச)

25. என்னையே யின்பச் சுவைக்குத வியதா
யிருப்பதுங் குணங்களால் வணங்கும்
அன்பரின் பிழையை யொழிப்பதுமாகி
யவிருநின் னன்னுத லொசிவே
முன்வினைப் பயனீ வதில்விருப் புமிகும்
முதல்வனின் சுதந்திரத் துவத்துத்
துன்னிய துரபி மானத்தின் மருமந்
துளைப்பதின் முதற்கரு வியதாம்.

பதவுரை:—என்னையே - எனது தாயே; இன்பச் சுவைக்கு - போகரசத்திற்கு; உதவியதாயிருப்பதும்-அநுகூலமாகவுள்ளதும்; குணங்களால் - விவித விலாசரூபமான குணங்களினாலே; வணங்கும் - அடிபணியும்; அன்பரின் பிழையை - அடியார்களின் அபராதங்களை; ஒழிப்பதும் - போக்குவதும்; ஆகி - ஆய்; அவிரும் - விளங்கும்; நின் - தேவரீரது; நல் நுதல் - நல்ல புருவத்தினது; ஒசிவே - அசைவுதானே; முன்வினைப்பயன்ஈவதில் - பூர்வகன்ம பலங்களைக் கொடுக்கும்விஷயத்தில்; விருப்புமிகும் - ஆசையதிகரிக்கின்ற; முதல்வனின் - நாயகனாகிய திருவரங்கமன்னனாரது; சுதந்திரத்துவத்து - சுவாதந்திரியத்திலே வைத்துள்ள; துன்னிய - மிகுந்த; துரபிமானத்தின் - தகுதியல்லாத பிரீதியினது; மருமம் - உயிர்நிலையை; துளைப்பதில் - பிளக்கும் விஷயத்திலே; முதற்கருவியதாம் - முக்கியசாதனமாகுகின்றது எ-று.

கருத்து:—நாய்ச்சியாரது புருவங்களினசைவே அவரவர்களுடைய கருமாநுகுணமாக நிக்கிரகாநுக்கிரகங்களைச்செய்தலிற் போர விருப்புடைய சர்வேச்சுரனது சுவாதந்திரியத்தை மாற்றி அபராதிகளையும் அநுக்கிரக்கும்படிசெய்யவல்லதென்பது.

விசேடக்குறிப்பு:—என் அன்னை - என்னை. ஏ விளியுருபு. இன்பச்சுவை - போகரசம். குணங்கள் என்றது இங்குப் புருவங்களின் பலவகையான தொழிற்பண்புகளை; இவைகள் திருவுள்ளக்கருத்துக்களைக் குறித்துரைப்பனவாகும். நாய்ச்சியாரது நன்னுதலொசிவு, பெரியபிராட்டியாரின் இன்சொற்களைக் காட்டிலும் காரியஞ்செய்யவல்லதென்பது சூசிக்கப்பட்டது. அன்பரின் பிழையை யொழித்தலாவது - திருப்புருவத்தின் பலவகையான சிங்கார சேட்டிதங்களாலே அடியார்களின் அபராதங்களையெல்லாம் எம்பெருமான் மறக்கும்படிசெய்வது.

மூவினமெய்களும் ஆதிதொடங்கி அந்தம்வரை சமமாகத் தொடுக்கப்பட்டிருத்தலால் இப்பாட்டு, சமநிலையென்னுங் குணவணியதாம். (உரு)

26. அன்னையே மன்னு மரங்கமா மாகத்
தவிர்திரு மின்னமர் மாலாந்
தென்னையேய் மாலின் கருணைமா மழையாற்
றிகழ்வதுங் கொடுநர கென்னுங்
கொன்னையே விளைவெவ் விடமொழிப் பதுமாங்
குளிர்சுதா சிந்துவா முன்னைப்
பொன்னையேய் புனிதர் படிந்துவல் விரைவிற்
போக்குகின் றனர்மும்மை வெம்மை.

பதவுரை:—அன்னையே - தாயே; மன்னும் - நிலைபெற்ற; அரங்கம் ஆம் மாகத்து - வாசத்தானமான ஆகாயத்திலே; அவிர் - விளங்குகின்ற; திரு - பெரியபிராட்டியாகிய; மின் - மின்னலை; அமர் - பொருந்திய; மாலாம் - திருமாலாகிய; தென்னையேய் - கருமைவாய்ந்த; மாலின் - மேகத்தினது; கருணைமாமழையால்-கிருபையாகிய பெருமைபொருந்திய வருஷத்தினாலே; திகழ்வதும் - பெருகிவிளங்குவதும்; கொடுநரகென்னும் - கொடுமையான துர்க்கதியென்று சொல்லப்படுகின்ற; கொன்னையே விளை - பயத்தையேயுண்டுபண்ணுகின்ற; வெவ்விடம் ஒழிப்பதுமாம் - கொடிய விஷத்தைப் போக்குவதுமாகிய; குளிர் சுதா சிந்துவாம் உன்னை - குளிர்ந்த அமிர்தநதியாகிய தேவரீரை! பொன்னையேய் புனிதர் - பொன்னைப்போலப் போற்றத்தக்க சாதுக்கள்; படிந்து - வணங்கி; (மூழ்கி;) மும்மைவெம்மை - தாபத்திரயங்களையும் வல் விரைவில் - அதிசீக்கிரத்தில்; போக்குகின்றனர் - ஒழித்துவிடுகின்றனர் எ-று.

கருத்து:—சாதுக்கள் துர்க்கதியாகிய கொடுவிடத்திற் கமுதநதியாகிய நாய்ச்சியாரை யடிபணிந்து தாபத்திரயங்களையும் அதிசீக்கிரமாகப் போக்குகிறார்களென்பது.

விசேடக்குறிப்பு:—அரங்கம் மா மாகத்து எனப் பதம்பிரித்து, அரங்கமாகிய பெருமைபெற்ற ஆகாயத்திலென்றும், அரங்கம் ஆம் மாகத்து என்று பிரித்து அரங்கமாகிய ஆகாயத்திலென்றும் பொருள்கூறலாம். இங்கு அரங்கமென்றது சமரபூபாலனென்னும் திவ்யசிம்மாசனத்தோடுகூடிவிளங்கும் அர்த்தமண்டபத்தை. திருவரங்கமாநகரமன்று. இது வாசஸ்தானத்தைக் குறிக்குமென்பதை, "திருஅரங்காவுறைமார்பா" என்னும் திவ்வியகவி வாக்கானும் உணர்க. கோயிலுக்குப் பூலோகவைகுண்டமென்றுந் திருநாமமுண்மையால் திருவரங்கமாநகரமாகிய பரமாகாசத்தி லென்று பொருள் கூறலாமாயினும் இங்குப் பொருந்தாதாம். அரங்கு என்பது அம்முச்சாரியை பெற்று அரங்கமெனவந்தது. அவிர்திரு; அமர்மால்—வினைத்தொகைகள்.

அமர்ந்திருத்தல் முக்காலத்திலு மொத்தியல்வதாதலின் நிகழ்காலமாக வடநூலார்கொள்கைப்படி பொருள்கொள்ளப்பட்டது. அவிரென்பதுக்கும் இவ்வாறே கொள்க. தென் - கருமை. மால் என்பது எம்பெருமானுக்கும் மேகத்துக்கும் பெயர். கொன் - அச்சம். ஏ பிரிநிலை. சுதா - அமுதம். சிந்து - நதி. பொன்னையேய்தலாவது - பொன்னென்பது உலோகங்களுக்கெல்லாம் மேலான பெருமைபெற்றுவிளங்குவதுபோல அடியார்களுக்கெல்லாம் மேலாய்விளங்குதல். பொன் என்பது இங்குச் சுவர்ணத்தைக் குறிக்கின்றது, பொன்போலப் புனிதர் போற்றத்தக்கவரென்பது கருத்து. புனிதர் என்றது சாதுக்களை; அவர்களே மனம் மொழி மெய்களிற் பரிசுத்தமுடையவராதலின். படிதல் - வணங்கல்; மூழ்கலுமாம். மும்மைவெம்மையாவது— தன்னால்வருவது, தெய்வத்தால் வருவது, புலிமுதலிய துட்டஜந்துக்களால் வருவது. இவை முன்னமே விளக்கப்பட்டன.

இதுவும் இருபத்தைந்தாவதுபாட்டைப்போன்றிருத்தலிற் சமநிலையே யாம்.

அணி:—அன்னையே மன்னு, மும்மை வெம்மை—வழியெதுகை யென்னுஞ் சொல்லணி. அரங்கம், திரு, மால், கருணை, நரகு, நாய்ச்சியார் என்னும் உபமேயங்களிலே முறையே ஆகாயம், மின்னல், மேகம், மழை, விடம், சுதாநதி யென்னும் உபமானங்களை ஒற்றுமையினு லாரோபித்திருத்தலில், இப்பாட்டு அவையிலோற்றுமையுருவகமாம். மிகையும் குறையும் உபமானுபமேயங்களில் இல்லாமையாலே அவையில் என்று விசேடிக்கப்பட்டது. ஒற்றுமையென்று விசேடித்தது அவற்றின் செய்கையாலு முருவகப்படுத்தலுண்மையின். "ஒற்றுமை செய்கை யொன்றுற் புனைவுளி, தன்னிலல் பொருளைத் தாக்குத லுருவகம்" (புனைவுளி - உபமேயம். அல்பொருள் - உபமானம்.) என்பர் சந்திராலோகநூலார். வடநூலார் இதனை அபேதரூபகமென்றும், செய்கையால் வருவதைத் தாத்ருப்பிய ரூபகமென்றும் சொல்வர். மிகை, குறை யென்பதை முறையே அதிகம் நியூநமென்ப. "உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித், தொன்றென மாட்டினஃ துருவகமாகும்" என்பர் தண்டியாசிரியர். பொருள் - உபமேயம். ஒன்றென மாட்டுதல் - ஆரோபித்தல்; அதாவது—உபமானுபமேயங்களின் அபேதவுணர்ச்சி. இந்த அணியை வித்யாநாதர்முதலியோர் சமஸ்தவஸ்துவிஷய சாவயவ ரூபகாலங்காரமென்பர். (உசு)

27. குற்றமுற் றவுஞ்செய் குற்றவென் றனையுங்
குளிரளி யினுக்கிலக் காக்கிச்
செற்றமுற் றிடாம லளித்தரு டலைநீ
செய்தவ ளாகினை யானல்
நற்றவர் பற்றே நிற்கிது தகுமால்
நனிதவக் கடிபடு நகிலை
யுற்றவ ளாயும் பெற்றதாய் சுதனை
யுவந்தமு தூட்டியே வளர்க்கும்.

பதவுரை:—நற்றவர்பற்றே - நலந்தருவதான தவத்தினையுடைய பெரியோர்களுக்கெல்லாம் தஞ்சமாக விருப்பவரே!; நீ - தேவரீர்; குற்றம் முற்றவும் செய்குற்ற என்றனையும் - எத்தனைவிதமான அபராதங்களுள்ளனவோ அவையனைத்தையும் செய்திருக்கிறவனான அடியேனையும்; செற்றம் உற்றிடாமல் - கோபங்கொள்ளாமல்; குளிர் அளியினுக்கு இலக்கு ஆக்கி - தண்ணளிக்குப் பாத்திரனாகப்பண்ணி; அளித்து அருடலை - ரட்சித்தருளுதலை; செய்தவள் ஆகினையானல் - செய்தருளியவராக ஆவீரேயானல்; இது - இந்த ரட்சணகாரியம்; நினக்கு - சகலலோக ஜநநியாகிய தேவரீருக்கு; தகும் - உசிதமாம்; பெற்றதாய் - வருந்திப் பெற்றுவளர்த்த தாயானவள்; நனி தவக் கடிபடுநகிலினள் ஆயும் - பெற்ற குழந்தையினாலே மிகவும் அதிகமாகக் கடிபட்ட தனதடங்களையுடையவளாயிருந்தாலும்; சுதனை - தன்குழந்தையை; உவந்து - அதனல் வெறுப்புறாமல் பிரீதியோடு எடுத்து மார்பிலணைத்து மகிழ்ந்து; அமுதூட்டி - முலைப்பாலையருத்தி; வளர்க்கும் - காப்பாற்றுவாள் எ-று. ஆல் அசை.

கருத்து:—அகிலலோக ஜநநியாகிய தேவரீருக்கு அதிபாதகாதி பாதகங்களையெல்லாஞ் செய்துள்ள வென்னையும் கருணைக்கிலக்காக்கிக் காப்பாற்றுதல் கடமையேயாமென்பது.

விசேடக்குறிப்பு:—பற்று - தஞ்சம்; இதனைப் பற்றுக்கோடென்பர். நற்றவர் - பிரபந்நர்; இப்பாட்டிலுள்ள மூன்றும்மைகளில் முன்னது முற்றும்மை; இடையது இழிவுசிறப்பும்மை; கடையது உயர்வுசிறப்பும்மை. செய்குற்ற — செய் பகுதி; உறு துணைவினைப்பகுதி; கு - சாரியை; உகரக்கேடு சந்தி. செய்குறு — அனைத்தும் ஒரு பகுதி; பகுதி யிரட்டி யிறந்தகாலங்காட்டிற்று. அ பெயரெச்சவிகுதி; ஆதலால் இது செய்த என்னும் வாய்பாட்டு இறந்தகாலப் பெயரெச்சம்; என்னையென்னும் பெயரைக்கொண்டு முடிந்தது.

குணம்—செறிவு.

அணி:—இப்பாட்டில் வழியெதுகையென்னும் அநுப்பிராசம் பெரும்பாலும் வந்துளது காண்க. கடிபடுதனத்தினளாயும் பெற்றதாய் சுதனை உவந்தமுதூட்டிவிளர்க்குமென்னும் பொதுப்பொருளால் என்றனைக் காத்தருளுதல் பொறையுருவான உனக்குத் தகுமெனச் சிறப்புப்பொருள் சாதிக்கப்பட்டிருத்தலால் இது வேற்றுப்பொருள்வைப்பணியாம். "பொதுவாற் சிறப்புஞ் சிறப்பாற் பொதுவும், புகறல் வேற்றுப் பொருள்வைப் பணியே" என்பர் சந்திராலோகநூலார். "முன்னொன்று தொடங்கி மற்றது முடித்தற்குப் - பின்னொரு பொருளை யுலகறி பெற்றி, ஏற்றிவைத் துரைப்பது வேற்றுப்பொருள் வைப்பே" என்பர் தண்டியாசிரியர். (உஎ)

[இவ்விருபத்தேழுபாடல்களும் ஆசிரியவுரிச்சீரானே வந்த எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தங்கள். ஆசிரியவுரிச்சீர்:—நேர்நேர் - தேமா. நிரைநேர் - புளிமா. நிரைநிரை - கருவிளம். நேர்நிரை - கூவிளம். இவைகளாம்.

ஆசிரியத்தளை:—நேர்முன் நேர்வருவது நேரொன்றாசிரியத்தளை; நிரைமுன் நிரைவருவது நிரையொன்றாசிரியத்தளை. இவ்விருபத்தேழு பாட்டிலும் இவ்வாசிரியத்தளையன்றி மாமுன்னிரையும் விளமுன்னேரும் வரும் வெண்டளையும் விரவிவந்தமை காண்க.]

28. இந்திர நீல மணியினீ னிறத்தா
ளெழில்கொள்கல் லாரவண் கரத்தாள்
அந்தன பரத்தால் வணங்கிடு மெய்யா
ளரும்பெருங் கருணையங் கடலாள்
குந்தள வாச வாசிகை வசமாக்
கொண்டருள் கொழுநனை யுடையாள்
செந்தமிழ்ப் புதுவை யந்தணன் புதல்வி
சிறந்தில குகநம துளத்தே.

பதவுரை:—இந்திரநீலமணியில் நீல் நிறத்தாள் - சதமகமணிபோலே விளங்குகின்ற நீலமான தேககாந்தியையுடையவரும்; எழில்கொள் கல்லார வண் கரத்தாள் - அழகமைந்த செங்கழுநீர்மலரையேந்திய அழகிய திருக்கையையுடையவரும்; அந்தனபரத்தால் வணங்கிடு மெய்யாள் - அழகிய தனபாரங்களைப் பரிக்கிறதினாலே சிறிது வளைந்துதோன்றும் திருமேனியையுடையவரும்; அரும் பெருங் கருணையங்கடலாள் - பிறர்களுக் கடைதற்கருமையான பெருமைமருவிய கிருபாசமுத்திரமாயிருப்பவரும்; குந்தளம் -

திருக்குழற்கற்றையிற் சூட்டிய; வாசம் - பரிமளம் பொருந்திய; வாசிகை வசமா - திருமாலைகளாலே தமக்குச் சுவாதீனனாகச் செய்யப்பட்ட, கொழு நனையுடையாள் - நாயகனையுடையவளுமாயிருக்கிற; செந்தமிழ்ப் புதுவையர் தனன் புதல்வி - செவ்விய தமிழ் சிறந்துவிளங்குதற்கிடமான ஸ்ரீவில்லி புத்தூரில் திருவவதரித்தருளிய பெரியாழ்வாரது திருமகளாராகிய கோதை சூடிக்கொடுத்தருள்நாய்ச்சியார்; நமது உளத்தே - அடியார்களாகிய நம் முடைய இதயகமலத்திலே; சிறந்திலகுக - சிறப்பாக வீற்றிருந்து விளங் கக்கடவர் எ-று. ஏ - ஈற்றசை.

கருத்து:—ஸ்ரீவில்லிபுத்தூரிலே திருவவதரித்தருளிய பெரியாழ்வார் திருமகளாராகிய கோதைசூடிக்கொடுத்தருள்நாய்ச்சியார், இப்பொழுது இந்தத் திவ்வியதேசத்திலே திருவுளமுவந்து சேவைசாதித்தருளியது போலவே சர்வதேச சர்வகால சர்வாவஸ்தைகளிலும் நம்முடைய இதயத் திலே வீற்றிருந்து விளங்கிக்கொண்டிருந்தருளவேணு மென்பதாம்.

விசேடக்குறிப்பு:—கொழுநனையென்பதற்குச் செழித்த அரும்பு என் றும், மிகுந்த தேன் என்றும் பொருளுண்மையில் வாசிகைவசமாக்கொண் டருள் கொழுநனையுடையாளென்பதிற் சப்தசமத்காரமுண்மை யோர்க.

இப்பாட்டும் முன்கூறிய உஎ பாடல்கள்போலே அடியடிதோறும் எழுசீர்வந்து இயற்சீரும் ஆசிரியத்தளையும் வெண்டளையும் அமைந்து வேறு சீரும் தளையும் விரவாதிருப்பினும் ஓசைவேறுபாடுண்மை யோர்ந்துணர்க.

பொருள் வெளிப்படையாய் விளங்குதலில் இப்பாட்டும் தெளிவென் னுங் குணமுடையதேயாம்.

இப்பாட்டு, நாய்ச்சியார் சமரபூபாலனில் எழுந்தருளியிருக்குமியல்பை நேரே கண்ணுற்கண்டாற்போல உள்ளவாறுணர்த்தும் சொற்களாலே முறையே தொடுக்கப்பட்டிருத்தலால் தன்மைநவிற்சியணியாம். "எவ் வகைப் பொருளையும் மெய்வகை விளக்கும், சொன்முறை தொடுப்பது தன்மையாகும்" என்பர் தண்டியாசிரியர். "அதுவே, பொருள்குணஞ் சாதி தொழிலொடுபுலனும்" என்பர் பின்னும். "மேவியசாதி வினைகள தியற்கைத் தன்மை யுரைப்பது தன்மை நவிற்சி" என்பர் சந்திராலோகநூலார். இது "நீல மணிமிடற்றன் நீண்ட சடைமுடியன்" என்பதுபோன்ற பொருட் டன்மைநவிற்சி.

(உஅ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

29. தென்புதுவை யந்தணர்த நந்தனவ நந்தனில்வ
ளர்ந்ததுள வந்த னில்வரும்
பொன்பதயு கம்பரவு மன்பனுளி ருந்துவெளி
பொங்குதுதி யின்றமிழிதை
யன்பொடுப கர்ந்துதுதி முன்பரெவ ரிங்கவர்க
ளந்திருவ ரங்க னருளால்
மன்புகழு மின்பமுமமைந்துபின்வை குந்தமெனும்
வண்பதியி லின்பு றுவரே.

இது, இந்தப்பிரபந்தத்தை யன்போடு கற்றுணர்வார் பெறும் பயன் கூறுகிறது.

பதவுரை:—தென்புதுவ்வயந்தணர்தம் நந்தனவனந்தனில் - ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நிர்வாஹகரான பெரியாழ்வாரது திருநந்தனவனத்தில்; வளர்ந்த - தோன்றி விருத்தியடைந்திருக்கும்; துளவந்தனில் - திருத்துழாய்மூலத்தில்; வரும் - திருவவதரித்தருளிய; பொன் பதயுகம் பரவும் - பொன்போன்ற கோதைசூடிக்கொடுத்தருள்நாய்ச்சியார் திருவடித்துணைகளைத் துதிக்கும்; அன்பன் உளிருந்து - பக்தனான வேங்கடேசதேசிகனது திருவுள்ளத்திலிருந்து; வெளிபொங்கு (நாய்ச்சியாரது அநுக்கிரகத்தினாலே) வெளியே பிரவகிக்கிற; துதியின் தமிழ் இதை - கோதாஸ்துதியின் மொழிபெயர்ப்பு நூலாகிய சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலையென்னும் இந்தத் தமிழ்ப்பிரபந்தத்தை; அன்பொடு - பிரீதிபூர்வகமாக; பகர்ந்து - பாராயணஞ்செய்து; துதி - கொண்டாடுகின்ற; முன்பர் - பெரியோர்; எவர் - யார்; அவர்கள் - அம்மகாநுபாவர்கள்; இங்கு—இந்த நிலவுலகத்திலே; அம் திரு அரங்கர் அருளால் - அழகிய ஸ்ரீரங்கராஜனது கிருபையினாலே; மன் - நிலைபெற்ற அல்லது மேலான; புகழும் - கீர்த்தியையும்; இன்பமும் - சுகஹேதுக்களான சகலசௌபாக்கியங்களையும்; அமைந்து-பெற்றுச் சிரஞ்சீவிகளாக வாழ்ந்திருந்து; பின் - பின்பு - (அதாவது தேகாவசானத்தில்); வைகுந்தம் எனும் வண்பதியில் - ஸ்ரீவைகுண்டமென்னும் திவ்வியலோகத்திலே; இன்புறுவர் - நித்தியாநந்தபரிதராய் வாழ்ந்துகொண்டிருப்பார்கள் என்றவாறு. எ - று. (உகூ)

சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை
மூலமும் உரையும் முற்றும்.
ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

# பிழையும் திருத்தமும்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 27 | 27 | சாபராதிகள் | சாபராதர்கள் |
| 31 | 16 | மென் நதியில் | மந் நதியில் |
| ,, | 25 | எந்நதியில் | அந்நதியில் |
| ,, | 26 | யாதொரு | அந்தக் |
| 32 | 4 | யாதொரு | அந்தக் |
| 36 | 18 | யெமக்கென்று) | யெமக்கெமக்கென்று) |
| ,, | 30 | எமக்கென்று | எமக்கெமக்கென்று |
| 37 | 21 | பாத்தனர் | பகர்ந்தனர் |
| 41 | 13-14 | சர்வசக்தியையு முடைய திருவிக் கிரமரூபியான | சர்வசக்தியை யுடைய |
| 42 | 14 | ஆவியாற் | கவியாற் |